# லக்ஷ்மியின்

# மங்களாவின் கணவன்

# மங்களாவின் கணவன்

## 1

பகல் உணவு நேரம். பிரசாத் அண்ட் சன்ஸ் நிறுவனத்தின் அலுவலக சாப்பாட்டறையில் வழக்கம் போல் கூட்டம். பேச்சும் சிரிப்புமாக வெளிப்பட்ட சப்த அலைகள் மங்களத்தின் தலையைப் பிளந்தது. ஏற்கனவே அவளுக்குக் காலையிலிருந்து தலைவலி. வீட்டு வேலைகளினால் ஏற்பட்ட அயர்ச்சி. உடல் வேறு புண்ணாக நொந்து கொண்டிருந்தது.

பத்து நாள் லீவுக்குப்* பின் அலுவலகத்தில் தனது ஆசனத்தில் வந்து காலையில் உட்கார்ந்த போது மேஜையைப் பார்த்து ஒரு கணம் திடுக்கிட்டே போய்விட்டாள்.

அவள் கவனிக்க வேண்டியவை அனைத்தையும் தலைமை கணக்கர் பதஞ்சலி அவள் மேஜை மீது அடுக்கி வைத்திருந்தார். வருஷ முழுவதும் உழைத்ததின் ஊதியந்தானே அந்த விடுப்பு நாட்கள் அவள் அலுவலகத்தில் இல்லாத நாட்களில் ஏற்பட்ட வேலைகளை எல்லாம் திரும்பி வந்ததும் ஒட்டு மொத்தமாக அன்று கவனிக்க வேண்டுமா? இது என்ன நியாயம்? என் ஐயா இப்படி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீங்க...?' சந்தனப் பொட்டு மீது குங்குமப் பொட்டு மின்னக் காவிப் பற்களைக் காட்டிக் குழைந்து சிரிக்கும் அந்தத் தலைமைக் கணக்கர் பதஞ்சலி மீது சுள்ளென்று எரிந்து விழ வேண்டும் என்றுதான் அவளுக்கு எடுத்த எடுப்பிலே ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

ஏற்கனவே அவளுக்கு அந்த அலுவலகத்தில் பல பட்டங்கள், சண்டைக்காரி—சிடுமூஞ்சி—ஐயோ அவள் கிட்ட மனிதன் பேசுவானா? ஆள் கொல்லியா... பலாக்காமூடு... இத்தியாதிகள்.

'பத்து நாள் லீவுக்குப் பின் அலுவலகத்துக்கு வந்ததும் கணக்கர் பதஞ்சலியுடன் மோதல் ஏன்? அவர் போக்கில் போகட்டும்' என்று எண்ணியபடி வேலையைத் துவங்க பைல்கள் பக்கம் திரும்பியபோது அடுத்த தடுப்பிலிருந்து, கணக்கர் பேசியது கணீரென்று அவள் காதுகளில் விழ்ந்தது, பதிலளித்துவிட்டு மெல்லச் சிரித்த பெண் குரலைக் கேட்டு அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது குப்பென்று புரண்டெழுந்த கோப உணர்வு பார்வை அடைக்க, கண் இமைகளை நீர் சுட, கீழ் உதட்டைக் கடித்த வண்ணம் ஒரு கணம் வேலை செய்யத் தோன்றாத வளாக இருந்தாள்.

மங்களம் என்று அவளுக்கு அவளது பெற்றோர் அவளது பாட்டியின் பெயரை வைத்து விட்டிருந்தனர்.

பாட்டி மங்களம் எண்பது வயது வரை மஞ்சளும் குங்குமமுமாக சௌபாக்கியங்கள் நிறைந்தவளாக—பழுத்த சுமங்கலியாக நிறைவான வாழ்க்கையில் திளைத்த மகிழ்ந்த திருப்தியுடன்—ஒரு தலைவலி காய்ச்சல் என்று சொல்லாது ஆரோக்யமாக வாழ்ந்துவிட்டு—பக்கத்துத் தெருவில் நடந்த கதாகாலட்சேபத்தில் ராமாயணத்தை முழுவதும் கேட்டு விட்டு, பட்டாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டுவிட்டு வந்து வீட்டில் படுத்தவள். அப்படியே வைகுண்ட பதவியை எய்தி விட்டாள்.

ஆனால் பேத்தி...? பெயர்தான் மங்களம் என்ற நிலை.

சாப்பாட்டறையின் வாயிலில் வந்து எட்டிப் பார்த்தாள். பெண்களுக்கென்று அந்தப் பெரிய அறை ஒரு சிறு தடுப்பினால் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருந்தது.

மேஜையின் மீது டிபன் பொட்டலத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு பக்கத்திலிருந்த மற்றொரு பெண்ணுடன் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள் மாலினி.

புதிதாக வேலைக்கு வந்திருந்த டைப்பிஸ்ட் அவள். ஒரு மாதம் கூட முழுதாக ஓடவில்லை.



அதற்குள் அவளுக்கு அலுவலகத்திலே தெரியாதவர்கள் யாருமே கிடையாது. கண்களால் சிரித்துக் கலகலவென்று பேசுகின்ற அவளைப் பார்த்துப் பல்லைக் காட்டிப் பதில் பேசாத ஆளே அந்த அலுவலகத்தில் இல்லையென்ற நிலைமை உருவாகிவிட்டிருந்தது.

தலைமைக்கணக்கர் பதஞ்சலிக்குப் பெண் ஊழியர்களிடம் அதிகப்படியா பேசுவது ஓர் இனிமையான பொழுது போக்கு. நரைத்த கிராப்பு முடியும் அவர் வயதும் அவருக்கு அளித்திருந்த தனிப்பட்ட உரிமை இது என்ற எண்ணம்.

'நாகரத்தினம்? என்ன இன்னிக்கு ரொம்ப குஷியாக இருக்கியே? சங்கதியை நான் தெரிஞ்சுக்கக் கூடாதா?'

'சவிதா! உன் அண்ணா அமெரிக்காவிலிருந்து வரப் போவதாகச் சொன்னியே, வந்துவிட்டாரா? அது என்ன, அண்ணா வாங்கிண்டு வந்த ஃபாரின் வாட்சா? காட்டு பார்க்கலாம் அட இதென்ன கை மேலே சின்ன காயம்... நீ சமைச்சதின் அடையாளமோ?'

'லீலாவை எங்கே காணோம்? அவ பாட்டியை ஆஸ்பத்திரியிலே அனுமதிச்சிருக்காங்களாம்... பாவம் அந்தம்மா உடம்பு இப்போ எப்படி இருக்கோ?...ஸ்த்சோ... ஸ்த்சோ!'

'ஹலோ மேரி! உன்னை பஸ் நிலையத்திலே உன் பியான்சி வில்லியத்தோட நேத்தி சாயங்காலம் பார்த்தேனே? நீ எங்கே என்னைப் பார்க்கப் போறே? உன் நினைவு எல்லாம் வேறே லோகத்துலே இருந்துதே! ஓஹோ ஹோ—' பலத்த சிரிப்பு.

அலுவலகத்திலிருந்த பெண் டைப்பிஸ்டுகள்—கணக்கர்கள்—ரிஸப்ஷனிஸ்ட்— டெலிபோன் ஆபரேட்டர்... அத்தனை பெண் ஊழியர்களையும் ஒருமையிலே அழைக்கும் துணிவும், அவர்களது சொந்த விஷயத்தில் தலையிட்டுத் தூண்டித் துருவிக் கேட்கும் ஆதங்கமும் அவருக்கு உண்டு.

மங்களா மட்டும் அதற்கு விதிவிலக்கு.

அவள் அங்கு வேலைக்கு வந்த புதிதில், மங்களா! நீ அண்ணா நகரிலிருந்துதானே வரே? கௌசிகா கெமிகல்ஸ்லே தானே உன் அண்ணா வேலை பார்க்கிறார்?— நட்புரிமை பாராட்டி அவர் கேட்ட போது அவள் கோபத்துடன் வெடித்து விட்டாள். 'மிஸ் மங்களான்னு கூப்பிடுங்கோ சார்! ஒருமையிலே என்கிட்டே யாரும் பேசறதை நான் விரும்பலை. நான் இங்கே விட்டு வம்புகளைப் பரிமாற வரவில்லை. வேலை பார்க்க வந்திருக்கேன்!' தாழம்பூ நிறத்தில் ஒடிய உயரமாக, பளபளத்த கண்களோடு வந்து ஆசனத்தில் உட்கார்ந்த அந்த அழகான மங்களாவிடம் கொஞ்சம் பேச வேண்டும் என்ற ஆசை அவரது பிடரியைப்பிடித்து உந்தியது உண்மை, அந்த பைலை அவசரமாகத் திறந்து அவளது விண்ணப்பத்தாளில் கண்ட முகவரி இத்யாதிகளை கவனம் செய்து கொண்ட பின்னர்தான் பேச்சைத் துவக்கினார்.

தங்கமாக மின்னிய முகம்—குங்குமமாக மாறி கண்களில் நெருப்புக் கொட்டியதைக் கண்டு ஆள் அயர்ந்து தான் போய் விட்டார். ஆனாலும் ஒரு பெண்ணுக்கு இப்படியா கோபம் வரும்?—பத்திரகாளிபோல! சே சே.

அதிர்வேட்டாக அவள் வெடித்ததைக் கேட்டு அவர் அதிர்ந்து போய் விட்டார்.

அதனாலோ என்னவோ அவர் வேணுமென்றோ மானேஜர் பார்க்க வேண்டிய பைல்கள்—மற்றவர்கள் கவனிப்பில் வைக்க வேண்டிய வேலை எல்லாவற்றையும் அவள் மேஜைமீது குவித்து வைத்துப் பழி தீர்த்துக் கொள்வது வழக்கமாகி விட்டது.

இரண்டொரு தடவை அதைப்பற்றி அவள் சண்டை போட்டாள். 'என்னம்மா இப்படி வேலைக்குக் கணக்குப் பார்க்கறே? நான் பார்க்கறதில்லை. மகராஜன் கைநிறையச் சம்பளம் கொடுக்கிறான். உழைச்சுட்டுப் போவோமே? இந்தச் சரீரத்தை நிறுத்து வச்சுக் கணக்குப் பார்த்தா



சுடப்போறா?' என்று வேதாந்த விசாரணையில் இறங்கி விடுவார். கடைக்கண்ணால் அவள் மேனியைத் தழுவி நிற்கும் உல்லி—உல்லி அல்லது அமெரிக்கன் ஜார்ஜெட். தலையில் சூடியிருக்கும் மல்லிகைப் பூச்சரம் இவைகளை தோட்டம் விடுவார். அவரது உதடுகளில் தெளியும் ஏளனப் புன்னகையின் பொருளை அவள் புரிந்து கொண்டு விடுவாள்.

'பெயரைச் சொன்னாலே துரதிருஷ்டம் தூக்கிக் கொண்டு வருகிறது இந்த அலங்காரம் எல்லாம்யாருக்கு?'

சொல்லாமல் சொல்லும் அவர் பார்வை நெஞ்சில் நெருப்புத் துண்டாக விழ அவள் துடித்துப் பொங்கிப் போவாள்.

ஊர் வம்பைச் சேகரிப்பது அவருக்கு இன்னொரு இனிய பொழுது போக்கு. எப்படியோ அவளைப் பற்றிய அந்தத் துயரச் செய்திகளைத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார். அதோடு மட்டுமில்லாது அலுவலகத்திலிருந்த அத்தனை பேருக்கும் தெரிவித்து விட்டிருந்தார். அந்தப் புண்ணியம் அவருடையது.

'வயதாகியும் இப்படி விவேகம் இல்லாது ஏன் சிலர் இருக்கிறார்கள்? அவருக்கு இப்படி ஒரு பெண் இருந்திருந்தால்...' பொங்கி வந்த துயரத்தையும் ஆத்திரத்தையும் விழுங்கிக்கொண்டு அவள் அந்தப் புதிய டைப்பிஸ்டு மாலினியைப் பாராதவள் போல வேகமாக அறையைத் தாண்டி மாடிப்படிகளில் இறங்கித் தோட்டத்திற்குள் புகுந்தாள்.

அந்த அலுவலகத்தின் கட்டிடம் அந்தப் பகுதியில் ஒரு பெரிய தோட்டத்திற்குள் அமைந்திருந்தது.

பிரசாத் அண்ட் சன்ஸ்...காசியிலிருந்து கன்னியாகுமரி வரை பிரசித்தி பெற்ற பலதரப்பட்ட வியாபார நிறுவனங்களைக் கொண்டதொரு பிரம்மாண்டமான ஸ்தாபனம். பங்களூரில் விவசாய மின் விசை சாதனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, ஆந்திரப் பிரதேசத்தில் உப்புகளும்

உரங்களும் தயாரிக்கும் தொழிற்சாலைகள், சென்னை, பம்பாய், பங்களூரில் மொத்த வியாபாரக் கிடங்குகள், பங்களூர் தலைமை அலுவலகம், பம்பாய், சென்னையில்கிளை அலுவலகங்கள் என்று பரவிக் கிடந்த பிரபலமான தொரு அமைப்பு அது.

நுங்கம்பாக்கத்திலே இருந்த பெரியதொரு பங்களாவை வாங்கிச் சீர்திருத்தி அலுவலகமாக்கி விட்டிருந்தார் முதலாளி பிரசாத். பத்து கிரவுண்டுக்குள் கட்டப்பட்ட கட்டிடம் அது. சுற்றிலும் ஏற்கனவே அழகானதொரு தோட்டம் இருந்தது. அதை அவர் அப்படியே விட்டு வைத்திருந்தார்.

அதனால்தானோ என்னவோ அலுவலகத்திற்கு நுழையும் முன்பே இன்னும் கொஞ்சம் நேரத்தில் பைல்களுடன் ஒரு கம்ப்யூட்டராக மாறி யந்திரமாகிவிடப் போகிறோம் என்று நினைவே அவளுக்கு ஏற்பட்டதில்லை.

கார் பாதையின் இருமருங்கிலும் அழகு செய்ய, வண்ண மலர்களை விரித்துக் கொண்டு வரிசையாக நிற்கும் கானா வாழைகளையும், அதற்குப் பின்னால் பரவிக் கிடக்கும் புல் வெளியையும், இங்கு மங்கும் நிழல் கொடுக்க வளர்ந்து நிற்கும் செங்கொன்றை மரங்களையும், பல வண்ண போகன் வில்லா வேலிகளையும் பார்த்தபடி எங்கேயோ ஒரு வீட்டிற்குத் தேநீர் விருந்துக்குப் போவது போன்ற ஓர் இனிய நினைப்புடன்தான் அவள் உள்ளே செல்வது வழக்கம்.

தன் வீட்டுச் சூழ்நிலையில் இல்லாத அமைதியை அவள் அலுவலகத்தில் தேடினாள்.

ஆனால் அங்கே...? தலைமைக் கணக்கர் போன்று மனதைத் தைக்கும் முட்கள் சில இருக்கத்தான் செய்தன.

சுற்றுச் சுவர் ஓரமாக வளர்ந்திருந்த செங்கொன்றை மரத்தடியில் புல்தரைமீது வந்து உட்கார்ந்து கொண்டாள். அலுவலகத்திலிருந்து சிலர் வெளியே இருந்த ஓட்டலுக்குச் சாப்பிட விரைந்து கொண்டிருந்தனர். ஆபீஸ் பையன்கள்



இருவர் யாருக்கோ காப்பி வாங்கிவர பிளாஸ்குடன் ஓடிக் கொண்டிருந்தனர். அவள் யாரையும் பார்க்க விரும்ப வில்லை. தனிமையை நாடித்தான் அங்கே வந்திருந்தாள்.

கையோடு கொண்டு வந்த அந்த பிளாஸ்டிக் பையைத் திறந்தாள். பெங்களூருக்கு ஒரு சமயம் அவள் போன போது ஒரு கடையில் வாங்கிய பை அது. குழாய் வடிவில் அழுத்தமான பிளாஸ்டிக்கில் ஆனது. தண்ணீர் பாட்டில், காப்பி பிளாஸ்க், சின்ன டிபன் சம்படம் மூன்றையும் அடக்கமாக வைத்துக் கையில் தூக்கிக் கொண்டு பஸ்ஸில் பயணப்பட சுலபமாக இருந்தது.

டிபன் சம்படத்தைத் திறந்தாள். காலையில் அவளே தயாரித்து அடைத்துக்கொண்டு வந்த உப்புமா ஆறி களியாகக் கட்டி தட்டிப் போயிருந்தது. தொட்டுக் கொள்ள ஒரு ஓரத்தில் வைத்திருந்த எலுமிச்சங்காய் ஊறுகாய் துண்டத்தை விரலால் தொட்டு வாயில் வைத்தபோது... தலை முடியைக் குலுக்கி விட்டது போன்று காரம் உச்சந் தலைவரை ஓடியது.

அண்ணா பெண் ஷைலாவின் கல்யாணத்திற்குப் பரிசாரகன் தயாரித்த ஊறுகாயில் மீந்ததை மன்னி ஒரு ஜாடிக்குள் வழித்துப் போட்டுக் கல்யாண மண்டபத்திலிருந்து எடுத்து வந்து விட்டிருந்தாள். அது இப்போது வீட்டில் உபயோகத்திலிருந்தது.

ஷைலாவின் கல்யாணத்திற்கு மன்னிக்கு உதவ வேண்டும் என்று, அண்ணாதான் அவளை வேலையினின்று பத்துநாள் விடுப்பு எடுத்துக் கொள்ளச் சொல்லி உத்தர விட்டிருந்தார். அந்தப் பத்து நாட்களில் வீட்டு வேலைகள் அவளை நொறுக்கி தள்ளிவிடப்பட்டிருந்தது உடல்புண்ணாக நொந்தது. மனம் நெருப்பாகப் புழுங்கிக்குமைந்தது.

மன்னி அனுசுயா சுபாவத்தில் சோம்பேறி, மாப்பிள்ளையும் பெண்ணும் தேன் நிலவுக்கு உதகைக்குப் புறப்பட்டதும்

உடம்புக்கு முடியலை என்று படுத்தவள்—நாள் எட்டு ஆகியும் எழுந்திருக்கவேயில்லை. அப்படி ஒரு ஜாலம்.

அந்த ஒரு வாரகாலமும் மங்களாதான சமையலி லிருந்து வீட்டுக் காரியங்கள் அனைத்தையும் கவனிக்க வேண்டியிருந்தது. கல்யாணம் விசாரிக்க வந்தவர்களுக்கு காப்பி கலந்து கொடுத்து உபசரித்து வாய் ஓய்ந்து போய் விட்டிருந்தாள், ஓடிஓடி வீட்டு வேலைகளைக் கவனித்து உடல் ஓய்ந்து விட்டிருந்தது.

இன்று அவள் வேலைக்கும் போகும்நாள் என்ற நினைவு—விடியுமுன் விழிப்பைக் கொடுத்து விட்டது.

நடையில் கேட்ட காலடி சப்தம் அண்ணாவையும் எழுப்பிவிட்டது படுக்கையிலிருந்து தூக்கக் கண்களோடு வெளியே வந்தார். 'சீக்கிரம் நீ குளிச்சுட்டு சமையலை முடி. பன்னிக்கு ஒரே தலைவலி...பாவம் அவளால் எழுந் திருக்கவே முடியலை..."

குளியலறைக்குள் புகுந்து கதவைப் பிடித்துக்கொண்டு அதன் மீது சாய்ந்தபடி நின்ற மங்களாவுக்குக் கோபம் அடங்க வெகுநேரம் சென்றது. பெண்ணைத் தேன்நிலவுக்கு அனுப்பிவிட்டுப் படுக்கையில் விழுந்த மன்னிக்கு உடம்பு இன்னமும் குணமாகவில்லை. அப்படி ஒரு நாடகம், விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டிலே இருக்கிறாளே மங்களம், அவள் வேலை செய்யட்டுமே என்ற கெட்ட எண்ணம், ஓடி ஓடி வேலை செய்து தங்கையும் ஓய்ந்திருப் பாளே என்று அண்ணாவுக்குக் கொஞ்சமும் தோன்றவே யில்லை. மனைவிதான் அவருக்கு முக்கியம் மனைவி சணவன் வீடு குழந்தைகள் என்று ஒரு பந்தம் ஏற்பட்டதும் மனிதர்கள் எப்படி மாறிவிடுகிறார்கள்? உலகத்தில் சுய நலம் மிக்கவக்கள் தான் அதிகம் போலும்!

கசப்பான எண்ணங்களுடன் கண்ணீரை அடக்கிக் கொண்டு அவசரமாகக் குளித்து வேறு உடுத்திக் கொண்டு குக்கரை அடுப்பில் ஏற்றினாள். காப்பியைக் கலந்து அண்



ணாவுக்குக் கொடுத்துவிட்டு மன்னிக்கு ஓவலைக் கலந்து குடிக்கச் செய்து உபசரித்தாள்.

அண்ணாவுக்கு ஒன்பது மணிக்குள் சாப்பாடு தயாராகி விடவேண்டும். பரபரப்பாக இலை போட்டுப் பரிமாறி விட்டு அவர் சாப்பிட்டு முடிக்குமுன் பகல் உணவுக்கு அவருக்கு டிபன் கட்டிக் கொடுத்துவிட்டு, மேடையருகே நின்றபடி தட்டில் சாதத்தையும் குழம்பையும் வாரிப் போட்டுக் கலந்து ஒரே மட்டாக விழுங்கி முடித்தாள். தோளில் தொங்குபை கையிடுக்கில் குடை-வலது கையில் டிபன் பை என்ற கோலத் தில் ஓட்டமும் நடையுமாக ஓடி பஸ்ஸைப் பிடித்து-நிலையத் தில் இறங்கி வேகமாக நடந்து நெஞ்சு வெடிக்க, மாடிப் படிகளில் தாவி ஏறி தன் மேஜைக்குப் பின்னால் வந்து அமர் வதற்குள் அவளுக்கு மூச்சு திணறியது. போராகப் பிரமிக்க வைத்த கோப்புகளில் ஒன்றை எடுக்கத் திரும்பிய போது தான் பதஞ்சலி புதி டைப்பிஸ்ட் மாலினியிடம் உரக்கப்பேசிக் கொண்டிருந்தார்.

"இன்னிக்குத்தான் உதவி அக்கவுண்டண்ட் மிஸ் மங்களா வேலைக்கு வந்திருக்கா. பத்துநாளா ஹாய்யா வீட்டிலே நிம்மதியா இருந்துட்டு வரா. அவளே செய் யட்டும் நீ கவலைப்படாதே."

"குப்புசாமி சாரின் பைல்களைக்கூட அந்த மேஜை மேலேயே வச்சிருக்கீங்களே?"

"குப்புசாமி லீவில் போயிருக்கான். அவன் மச்சினி குழந்தைக்கு ஆண்டு நிறைவு. குருவாயூர்வரை போயிருக் கான். பாவம்! சுவாமி தரிசனம் பண்ணிக்கொண்டு வர ரெண்டு நாள் ஆகும். இவதான் கல்யாணச் சாப்பாடு சாப்டுட்டு திம்முனு வந்திருக்காளே, செய்யட்டுமே விடு."

"மங்களத்துக்குக் கல்யாணமா சார்?"

பதஞ்சலி இடி இடி என்று சிரித்தார். "அவள் அண்ணா பெண்ணுக்குக் கல்யாணம் மங்களத்துக்குக் கல்யா ணம்னு உரக்கச் சொல்லிடாதே."

"ஏன் சார்! அவனுக்கு அப்படி ஒண்ணும் வயசாயிட லையே?"

"என்கிட்ட கேள் சொல்றேன். அவனுக்கு இருபத் தெட்டு வயசாகிறது. இரண்டு தடவை கல்யாணம் நிச்சய மாகி..."

"நின்னு போச்சா? அடப்பாவமே!"

"இவனுக்கு அனுதாபப்படாதே! செத்துத் தொலைஞ் சான்களே அவன்களைப் பத்தி அனுதாபப்படு. கல்யாணம் நிச்சயமாகி நடக்கறதுக்கு இரண்டுதான் முன்னால் முதல் மாப்பிள்ளை திடீர்னு வயிற்றுவலி வந்து ஆஸ்பத்திரி ஆப ரேஷன் மேஜையில் ஆள் குளோஸ்! இரண்டாவது தடவை தடவை நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை பரதேச கோலத்தின் போது, மாரடைப்பில் பரலோகம் போயிட்டான்! இப்போ மங்களத்வைப் பார்த்து எந்த ஆம்பிளைகளாவது சிரித்தால் கூட போதும்...ஆபீஸ் நிலைப்படியில் தலையை இடிச்சுண்டு காயப்படுத்திக் கொண்டு விடுவான்கள். அப்படி அவனுக்கு ஒரு தரித்திர ஜாதகம். வேறு ஏதாவது பேசு. அவனைப் பத்திப் பேசினா எனக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடும். பிள்ளை குட்டிக்காரன். நான் பத்திரமா வீடு போய்ச் சேரணும்..."

அவரது சிரிப்பு தன்மீது நெருப்பாக எரிவதை உணர்ந் தாள். இன்னமும் அது எரிந்துகொண்டேயிருப்பது போன்ற தொரு திகைப்பு...

இப்போது அப்பா மட்டும் உயிருடன் இருந்தால் அவ ளுக்கு இப்படி ஒரு அவலநிலை ஏற்பட்டிருக்குமா?

துணிவும் சாமர்த்தியமும் நிறைந்த மங்களா திடீ ரென்று கோழையாகி, யாரும் காணாதபடி, அந்த மரத் தடியில் கட்டுப்படுத்த முடியாத கண்ணீரைக் கன்னங்களில் ஓடவிட்டு விசும்பி அழுதாள்.

# 2

திடீரென்று அவளுக்கு வேலையின் நினைப்பு வந்தது. மேஜை இன்னமும் குறையாது பயமுறுத்திக் கொண்டு அடுக்காக நிறைய பைல்களை நினைத்துக் கொண்டதும் விருக்கென்று எழுந்து விட்டாள். காப்பியை ஒரே வாயாக விழுங்கினாள். தண்ணீர் பாட்டிலைத் திறந்து வேகமாகக் கையைக் கழுவிக் கொண்டாள். பிளாஸ்டிக் பைக்குள் எல்லா வற்றையும் போட்டுக் கொண்டு ஆபீஸிற்கு விரைந்தாள்.

அவள், ஆசனத்தில் உட்கார்ந்தபோது அலுவலகம் துவங்க இன்னமும் அரை மணி நேரம் இருப்பதைக் கவனித்தாள்.

ஒரு வினாடியைக்கூட நிர்வாகத்திற்கு வீணாக வழங்கி விட விரும்பாத மற்ற ஊழியர்கள் எல்லோரும் இந்த இடை வேளையைத் தமக்கே பயன்படுத்திக் கொள்ள வெளியே போயிருந்தனர். அவளைத்தவிர அங்கு யாருமே இருக்க வில்லை. அதிகப்படியாகக் குவிந்து கிடந்த ஃபைல்களை ஆராய்ந்து அன்று மாலையே எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டுமென்ற ஆதங்கம் அவளுக்கு. அடுக்கு மேலேயிருந்த ஃபைல் ஒன்றை இழுத்து வைத்துக் கொண்டு வேகமாகப் புரட்டத் தொடங்கினாள்.

பதஞ்சலியின் மேஜை மீதிருந்த தொலைபேசி கிணு கிணுத்தது. எழுந்து சென்று அதை எடுத்தாள்.

"ஹலோ மங்களாவா! அந்தத் தொண தொண பதஞ்சலி வெளியே அரட்டையடிக்கப் போயிருக்கும். மங்களா உண்மையாக உழைப்பவள் என்ற சான்றிதழை வாங்க பாவம், சாப்பாட்டு நேரத்தில் கூட ஆபீசில்தான் உட் கார்ந்திருப்பான்னு தெரிஞ்சுதான் கூப்பிடறேன்..." கலகலவென்று மறுபக்கத்தில் தோழி லதா சிரித்தாள்.

"விஷயத்துக்கு வா. எதுக்காக கம்பெனி போனை அனாவசியமாக சிநேகிதர்களைக் கூப்பிட உபயோகிக்கி றேன்னு நான் திரும்பக் கேட்கட்டுமா?"

மங்களாவின் குரல் உற்சாகமாக ஒலித்தது. பல நாட் களுக்குப் பின்னர் தோழி பேசுவதைக் கேட்டதும் அவள் மனதிற்கு ஆறுதலாகத்தான் இருந்தது மகிழ்ச்சியாகவும்கூட இருந்தது.

லீவுக்குப் பிறகு இன்னிக்குத்தான் நீ வேலைக்கு வந்திருப்பேன்னு தெரியும். வேலை முடிந்ததும் சாயங்காலம் நீ என்னை சுவப்னா ஈட்டிங் ஹவுஸ் முன்னால் சந்திக்கணும் வாசலிலேயே உனக்காக நான் காத்துக் கொண்டிருப்பேன்... சரியா...?" — உத்திரவிட்டாள் லதா.

"என்ன விசேஷம்? அதைச் சொல்லிவிடு இல்லாட்டா எனக்கு வேலையே ஓடாது..." மங்களா மெல்ல சிரித்தாள்.

"சுவப்பனா ஈட்டிங் ஹவுஸ் தயிர் வடைக்குப் பெயர் போனது தெரியுமில்லையா? அங்கே நாம ரெண்டு பேரும் இன்னிக்கு சாயங்காலம் தயிர்வடை சாப்பிடப் போகிறோம். என்னுடைய டிரீட் உனக்கு..."

'விசேஷம் ஏதாவது இருக்கணுமே?'

"விசேஷந்தான். உன்கிட்டே சொல்லாட்டா தலை வெடிச்சுடுமே ஆபீஸ் முடிஞ்சதும் டக்கென்று கிளம்பிடு."

"என் மன்னிக்கு உடம்பு சரியில்லை. வீட்டுக்குச் சீக்கிரம் போகணும். ராத்திரி சமையலைக் கவனிக்கணும்.' இழுத் தாள் மங்களா.

"மங்களா! முட்டாள்! கொஞ்சம் சுயநலமாக இருக்கத் தெரிஞ்சுக்கோ. ஒரு நாளைக்கு வீட்டு வேலைகளை மூட்டை கட்டி வை. கட்டாயம் இன்னிக்கு சாயங்காலம் நாம ரெண்டு பேரும் சந்திக்கிறோம். உனக்காகக் காத்திருப்பேன்" தொலைபேசியை டக்கென்று வைத்து விட்டாள் லதா.



தன் ஆசனத்திலே வந்து உட்கார்ந்துகொண்டாள் மங்களா. ஏனோ உள்ளத்திலே பரபரப்பு. 'லதா விசேஷம் என்றாளே! என்னவாக இருக்கும்?' சிந்தனை அலைபாயத் தொடங்கவே ஃபைல்களில் இருந்த கடிதங்களின் எழுத்துக் கள் கண்முன் நடனம் ஆடின. கணக்குகள் மூளைக்குள்ளே பதியமறுத்தன. ஒரே ஃபைலை பலமுறை அவள் அலுப் புடன் புரட்டிக் கொண்டிருந்தாள்.

மிகவும் சிரமப்பட்டு ஒரு வழியாகத் தன் வேலையின் ஒரு பகுதியைச் செய்து முடித்துவிட்டு, அவள் நிமிர்ந்த போது அலுவலகம் முடியும் நேரம் நெருங்கிவிட்டிருந்தது. பதஞ்சலி தமது ஃப்ரீப் கேசைப் பட்டென்று மூடிவிட்டு வாயில் குதப்பிக்கொண்டிருந்த வெற்றிலையை உமிழ பின் பக்கம் நடையைக் கட்டினார். அருகில் யாரும் கவனிக்காத சமயம் மங்களா தன் கைப்பையைத் திறந்து பவுடர் காம் பாக்டை எடுத்தாள். மூடியிலிருந்த கண்ணாடியில் தன் முகத்தை ஆராய்ந்தாள். மூக்கின்மேல் பொடித்திருந்த வியர்வை முத்துக்களைச் சட்டென்று துடைத்துக்கொண்டு பவுடரை லேசாக முகத்தின்மீது ஒத்தியால் தடவிக்கொண் டாள். கூந்தலை சீராக்கிக் கொண்டு பையை வேகமாக மூடிக்கொண்டாள்.

பதஞ்சலி திரும்பிவந்து தமக்குள்ளே புன்னகைத்தபடி ஆசனத்தில் அமரவும், நிறுவனத்தின் மூடு நேரத்தை அறி விக்கும் மணியடிக்கவும் சரியாக இருந்தது. அலுவலகத்தில் ஒரே கலகலப்பு. மேஜை இழுப்பறைகளை மூடிவிட்டுக் கிளம்ப ஆயத்தமான ஊழியர்கள் சிலர் வாயைத் திறந்து விட்டதால் ஒரே பேச்சும்—சிரிப்புமாகச் சில வினாடிகளில் ஒரே கூச்சல்.

கைப்பை— டிபன்பாக்ஸ்— குடை இத்யாதிகளைச் சேகரித்துக்கொண்டு மங்களா மெல்ல இறங்கி கீழே வந் தாள்.

லதா அவளுடைய பள்ளிக்கூட நாள்தோழி-இன்னமும் நட்பை விடாது தொடர்ந்து கொண்டிருந்த அவளுக்கிருக் கும் ஒரே சிநேகிதி, மங்களாவைப் போலவே அவளுக்கும்

இன்னமும் திருமணமாகவில்லை. பிரசாத் அண்ட் சன்சிற்குக் கொஞ்ச தூரத்திலிருந்த சோப்பு-பவுடர் முதலிய பொருட்களை விநியோகிக்கும் ஒரு பிரபல மொத்த வியாபார ஸ்தாபனத்தில் அவள் டெலிபோன் ஆபரேட்டர்—ரிஸப்ஷனிஸ்ட் என்ற இரண்டையும் சேர்த்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

வெகு தொலைவிலேயே மங்களா தன் சிநேகிதியைப் பார்த்துவிட்டாள். பளிச்சென்று வீசிய மாலை மஞ்சள் வெயிலில் சுவப்னாவின் வாசலில் அவள் நின்றுகொண்டிருந்தாள், ஹைஹீல்ஸ் ஷூவிலே மிகவும் உயரமாக—பிரெஞ்ச் ஷிபான் சேலையிலே மிகவும் ஒல்லியாக-பாதசாரிகள் முறைத்துவிட்டு மறுபடியும் திரும்பிப் பார்க்கும் அளவு கவர்ச்சியாக—இடது கைவிரல் நகங்களைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

அவள் மாநிறம்தான். ஆரஞ்சு வண்ண ஷிபான் சேலையில், முகத்தில் பூசியிருந்த ஒப்பனையில் அந்த மஞ்சள் வெயில் அவளது நிறத்தை உயர்த்திவிட்டிருந்தது.

பதினெட்டு வயது கல்லூரி மாணவிபோல் அவள் அணிந்து கொண்டிருந்த கோ-கோ கருப்புக் கண்ணாடி பத்து வயதை விழுங்கிவிட்டு அவளை இளம் பருவ மங்கையாக்கி விட்டிருந்தது.

லதாவுக்கு எப்பொழுதும் கவர்ச்சியாகவும், அழகாகவும் உடுத்தத் தெரியும், வேடிக்கையாகப் பேசுவதிலும் கெட்டிக்காரி. அவளைவிட குறைந்த சம்பளத்தில் தான் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். அப்படியும் சதா சிரித்துக் கொண்டே மலர்ந்த முகத்துடன் இருக்க அவளால் முடிந்ததே, எப்படி?

குடும்ப அறை என்று ஒதுக்கப்பட்டிருந்த அறை ஒன்றுக்குள் சென்று இருவரும் அமர்ந்து கொண்டனர்.

பாதாம் கேக், தயிர்வடை, மசாலா தோசை, காப்பி என்று மளமளவென்று தேவையானவைகளை பையனிடம்



சொல்லிவிட்டு அறைக்குள் வீசிய மங்கிய விளக்கொளியில் தன் தோழியை உற்றுப் பார்த்தாள் லதா. மங்களா மிகவும் சோர்ந்து களைப்புடன் காணப்பட்டாள். அதைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாகத் தானிருந்தது.

"நீ ரொம்ப உடன் ஆரோக்கியத்தையும், அழகையும் அசட்டை பண்றே. என்னதான் வேலை செஞ்சாலும் நம்மையும் கொஞ்சம் நாம் கவனிச்சுக்கணும்'—லதா அதட்டலாகப் பேசிவிட்டுப் பையன் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போன தட்டுகளை அவள் பக்கம் நகர்த்தினாள்.

"சாப்பிடு! சாப்பிட்டுக் கொண்டே பேசுவோம்" என்றாள்.

மங்களா மௌனமாக தோசையைப் பிட்டு வாயில் போட்டு மென்று கொண்டிருந்தாள். 'வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான நிகழ்ச்சிகளின் பாதிப்பு கழுத்து மட்டிலும் நிற்கும் போது என்னத்தைப் பேசுவது" என்று தனக்குள்ளே குமைந்தாள்.

"நீ மனசை ரொம்பத் தளர விட்டுடறே! என்னைப் பார். உன்னை விட பல விதத்திலும் என் நிலைமை மோசமானதாகத்தான் இருக்கு அம்மா வயித்து வலி நோயாளி வசதியாக வாழ்கிற என் இரு தமக்கைகளுக்கும் அம்மாவை வச்சுக் காப்பாத்த மனம் இல்லை. பாவம், வயசு காலத்திலே அம்மா எங்கே போவான்னு பொறுப்பை நானே என் தலையில் போட்டுக் கொண்டு எனக்காகவும், அம்மாவுக்காகவும் வேலை பண்றேன். குறைஞ்ச சம்பளந்தான். ஆனாலும் நாமே சம்பாதித்து நம்மைக் காப்பாத்திக்கிறோமே என்கிற திருப்தியில் வாழ்கிறேன்."

"உனக்கு என்னைவிட துணிவு ரொம்ப அதிகம்.' மங்களா மெல்லியதாக முணுமுணுத்தாள்.

"துணிச்சல் ஒண்ணுதான் என் சொத்து. அதையும் உதறிவிடச் சொல்றியா? அது கிடக்கட்டும் என்ன விசேஷம்னு ஒரு வார்த்தை கேட்க மாட்டேங்கிறியே?"

"சொல்லு. பேசத்தானே இங்கே வந்து உட்கார்ந்திண்டிருக்கோம்."

"உங்க அண்ணா பெண் ஷைலாவுக்குக் கல்யாணமான தேதியிலேயே எனக்கும் கல்யாணமாகியிருக்க வேண்டியது. அந்தச் சந்தர்ப்பம் நழுவிப் போயிடுத்து."

"என்ன சொல்றே?" மங்களா வியப்புடன் நிமிர்ந்தாள்.

"என் அம்மா சதா என் கல்யாணத்தைப் பத்தி வாய் ஓயாது புலம்பிக் கொண்டு இருந்தாளா...யாரோ தூரத்து உறவு புண்ணியத்தைக் கட்டிக்கொண்டு என் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு அலைந்ததில் ஒரு வரன் கிடைச்சது. இது எத்தனாவது வரன்னு கேட்காதே. அம்மா என் பதினைந்தாவது வயதிலிருந்து வரன் வேட்டையில் இறங்கியிருக்கா வருஷத்துக்கு நாலு இடமாவது வரும். நீயே கணக்குப் போட்டுக்கோ."

"இந்த வரன் ஏன் நழுவிப் போச்சு?"

"அது நழுவலை நான் தான் நழுவ விட்டேன். பையன் பி.காம், தனியார் பாங்க் ஒன்றில் கணக்கரா வேலை பார்க்கிறான். பார்க்க சுமார்தான். ஏறக்குறைய என் சம்பளம் வாங்குகிறவன். அம்மா புலம்பறாளேன்னு ஒப்புக் கொண்டேன்.

ஜாதகத்தில் நம்பிக்கையில்லை. நாங்க பார்க்கிறதில்லை என்று சொல்லிக் கொண்டு பிள்ளை விட்டவர்கள் வந்தார்கள். பஜ்ஜி—சொஜ்ஜி சாப்பிட்டார்கள் சர்க்கரை கிடைக்கும் கஷ்டத்தில் இது தேவைதானான்னு கூட என் மனசு எண்ணியது. அம்மாவுக்காக தொலையட்டும்னு விட்டுக் கொடுத்தேன். பையன் என்னோட தனியா பேசணும்னான். தோட்டத்திலே வேப்பமரத்தடியிலே ரெண்டு நாற்காலியைக் கொண்டு போட்டேன்.

எத்தனை வருஷமா வேலை செய்கிறேன்னு எடுத்த எடுப்பிலேயே கேட்டு விட்டான்.



"ஆறு வருஷமா செய்கிறேன். 'நீங்கள் எத்தனை வருஷமா செய்கிறீங்கன்னு" நானும் பதிலுக்குக் கேட்டேன். விடுவேனா?

'நாலு வருஷமாத்தான் வேலை பார்க்கிறேன்'னு அடிக்குரலில் முனகினான்.

வேலை கிடைக்காது திண்டாடினேன்னு சொல்ல வெட்கமாக இருந்திருக்க வேண்டும்.

'இதுவரை நீ எத்தனை சேர்த்து வச்சிருக்கே?'- அவனது இரண்டாவது கேள்வி எனக்கு ஆத்திரத்தை மூட்டியது.

'நீங்க எத்தனை சேர்த்து வச்சிருக்கீங்க?' நானும் விடலை; கேட்டு விட்டேன்.

'எங்கள் குடும்பம் பெரிசு. சேர்த்து வைக்க முடியலை. எனக்கு மூணு சகோதரிகள் கல்யாணத்துக்கு இருக்கிறார்கள். அதனால் தான் வேலை செய்கிற பெண்ணாக நான் பார்த்துக் கொண்டிருந்தேன். என் சகோதரிகளின் கல்யாணத்திற்கு எனக்கு வரப்போகும் மனைவி உதவணும்னு நான் எதிர் பார்க்கிறேன்' என்றான்.

'அப்போ உங்கள் தங்கைகளுக்குக் கல்யாணமானால் போலதான்.'- நான் மனசுக்குள்ளேயே சிரிச்சுக் கொண்டேன். ஆனால் தலையை மட்டும் ஆமோதிக்கிறாப்பல பலமாக ஆட்டினேன். பிறகு எழுந்துட்டேன்.

'பையனுக்கு என்னை பிடிச்சிருக்கு. கல்யாணத்தை வருகிற மாதம் முதல் முகூர்த்தத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு கடிதம் போட்டிருந்தார்."

"அப்புறம்...?"

"அப்புறம் என்ன? 'உங்களைப் போன்ற நல்ல இடத்து சம்பந்தம் எங்களுக்கு கொடுத்து வைக்கவில்லை என்று வருந்துகிறேன். ஜாதகம் பொருந்தவில்லை—எங்களுக்கு ஜாதகத்தில் அபார நம்பிக்கை' அப்படின்னு அம்மா

எழுதுகிறாப்போல ஒரு கார்டை எழுதி அவர்களுக்கு அனுப்பி விட்டேன். இரண்டே வரியில் ஒரு கார்டு மூலம் அந்த வரனை நான் தட்டிக் கழித்து விட்டேன். எத்தனை பேர்கள் என்னை வந்து பார்த்துட்டு, பஜ்ஜி, சொஜ்ஜியெல்லாம் தின்னுட்டு கடைசியில் பெண் பிடிக்கலை, ஜாதகம் ஒத்து வரலை...அது.. இதுன்னு என்னை தட்டிக் கழிச்சார்கள். எனக்கு இந்த வரன் வேண்டாம்னு மறுக்க ஒரு சந்தர்ப்பம் கிடைச்சுதேன்னு சந்தோஷப்படறேன். அதைக் கொண்டாடத்தான் இந்தச் சந்திப்பு...'' உரக்க, பற்கள் அனைத்தும் தெரிய பயமின்றி சிரித்தாள் லதா.

'உன்னால் எப்பவும் எந்த நிலையிலும் சிரித்துக் கொண்டிருக்க முடிகிறது. ஆனால் நான் எனக்கே பட்ட அனுபவங்களால் மனசு பொடிப்பொடியாகி விட்டிருக்கிறேன். அப்போ தொய்ந்து போன என் உணர்வுகளை நிமிர்த்தி வைக்க தெரியாது சங்கடப்பட்டுக் கொண்டு என்னையே நான் சித்திரவதை செய்து கொள்கிறேன்''— பெருமூச்செறிந்தாள் மங்களா.

''வாழத் தெரியாத மக்கு நீ! அவ்வளவுதான் சொல்வேன் கல்யாணம் என்பது நம் வாழ்க்கையில் ஒரு பிரச்சனையாகப் போய் விட்டிருக்கிறது. ஒப்புக் கொள்கிறேன். அதுக்காக கல்யாணம் செய்து கொண்டால் தான் ஒரு பெண் வாழ முடியும்னு என் நமது வாழ்க்கையை ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே அடக்கிக்கணும்? படிக்கிறோம். வேலை பார்க்கிறோம். தனியாக நாமும் ஏன் நிமிர்ந்து நின்று வாழ கத்துக்கக் கூடாது? சம உரிமை வேணும்னு கோஷம் போட்டால் சரியாப் போச்சா? அதற்கு வேண்டிய தகுதிகளை நாம் தேடிக்க வேண்டாமா?''

''உன் சூழ்நிலை வேறு. என் சூழ்நிலை வேறு. உன் தாயார் உன் அனுபவங்கள் தரும் அதிர்ச்சியைத் தானும் பங்கிட்டுக் கொண்டு உனக்கும் ஆறுதல் சொல்கிறா. என் அண்ணாவும் மன்னியும் என் வாழ்வில் நேர்ந்து



விட்ட கசப்பான சம்பவங்களுக்கு நானே காரணம் போல மனம் நோகும்படி பேசிவிடுகிறார்கள். ஷைலா கல்யாணத்தின் போது நடந்த சிறு விஷயம் என்மனதை எப்படிப் புண்படுத்திவிட்டது தெரியுமா?''

''என்ன நடந்தது...?'' லதா ஆவலுடன் கேட்டாள்.

''கடைகடையாக அலைந்து அம்மாவும் பெண்ணும் கல்யாணப் புடவைகள் வாங்கிக்கொண்டு வந்து முன்னறை மேஜை மீது வைத்தனர். புடவைகளை நான் கண்களால் பார்த்துவிட்டேன். அவ்வளவுதான். 'முதலில் புடவைகளை எடுத்து பீரோவில் வச்சுப் பூட்டு. அவள் கையால் தொட்டு விட்டால் காரியம் உருப்படாது.' மன்னி ரகசியமாகத் தன் பெண்ணிடம் சொன்னது, என் காதில் விழுந்துவிட்டது. நான் திடுக்கிட்டுப் போனேன். மனம் ரொம்ப வேதனைப் பட்டது.

'ஆமாம். அத்தை துர் அதிருஷ்டம் பிடிச்சவ. எனக்குக் கூட அவள் வந்து புடவையைத் தொட்டுப் பார்த்து விடுவாளோன்னு கொஞ்சம் மனசிலே நெருடலாத்தான் இருக்கு.' சொல்லிக்கொண்டே ஷைலா புடவைப் பார்சலை வேகமாக பீரோவில் வைத்துப் பூட்டினாள்.

'என்னைவிட வயசில் சின்னவள் ஷைலா. என்னைக் குத்திக்காட்டி அம்மாவிடம் பேசினதைக் கேட்க எனக்கு சகிக்க முடியவில்லை. எனக்குத் தெரியக்கூடாது என்று ரகசியமாக அவர்கள் பேசியது, செய்தது எல்லாம் எனக்குத் தெரிந்து விட்டதால்தான் துக்கம் மனதை நெருப்பாகச் சுட்டது. அப்படி என் ஜாதகத்தில் ஒரு தரித்திரம் எவ்வளவு அளவிற்கு இருக்குன்னு தெரிஞ்சுக்க எனக்கு ஆவலாத்தானிருக்கு'' மங்களாவின் குரல் துயரத்திலே கரைந்தது.

''இதையெல்லாம் நீ நம்பறயா மங்களா?''

''இரண்டு தடவை என் வாழ்க்கையிலே ஏற்பட்ட அதிர்ச்சிகள் உனக்குத் தெரிந்ததுதானே? அதுக்குப் பிறகு

என்னைப் பார்க்க வந்த வரன்களெல்லாம் விஷயத்தைக் கேள்விப்பட்டு எப்படி விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள் என்பதும் உனக்குத் தெரிஞ்ச கதைதான். எங்க ஆபீஸ் பதஞ்சலி வரை என் துர் அதிர்ஷ்டத்தை வர்ணிக்கும்படி என் ஜாதகம் என்னதான் சொல்றது என்று தெரிஞ்சுக்கணும்னு சில சமயம் ஆவலா இருக்கு."

"உன் வருங்காலத்தைப் பத்தி ஜோசியம் பார்த்து தெரிஞ்சுக்க ஆசைப்படறே. இல்லையா...?"

"அப்படித்தான் வச்சுக்கோயேன். எதைத் தின்னால் பித்தம் போகும்னு ஒருத்தன் அலைஞ்சானாம். அதுபோல என்மனதிலே என்னைப்பற்றியே ஒரு கேள்வி...நடந்து போன எதிர்பாராத சம்பவங்களின் பாதிப்பில் ஏற்பட்ட ஒரு தாழ்வு மனப்பான்மை... அதை உதறிவிட நான் விரும்பறேன்."

"எனக்குத் தெரிஞ்ச ஒரு ஜோசியர் இருக்கிறார். அவரிடம் நான் எதுவும் கேட்டதில்லை. என்னைப் பொறுத்தவரை என் வருங்காலத்தைப் பற்றி எனக்கே ஓரளவு தெரியும் என்கிற நம்பிக்கை. உன்னை அங்கே அழைத்துக் கொண்டு போகிறேன். சனிக்கிழமை மாலை வேலை முடிஞ்சதும் இதே இடத்தில் சந்திப்போம் பிறந்த தேதி — மாசம் — நேரம் — வருஷம் மட்டும் சொன்னால் போதும். இருபது ரூபாய் செலவு ஏற்படலாம். ஒப்புக் கறியா?"

காப்பியைப் பருகியபடி மங்களா தலையை அசைத் தாள்.

வீட்டுக்குத் திரும்புமுன் இருட்டிவிட்டது. முன்னறையில் கூண்டுப் புலிபோல் அண்ணா முன்னும் பின்னும் உலவிக் கொண்டிருந்தார்.

"பஸ் தவறிப் போச்சா? ஏன் இத்தனை நாழி?" அதட்டினார்.

"என் சிநேகிதியைச் சந்திச்சேன்... அவளோட கொஞ்சம் பேசிக் கொண்டிருந்ததிலே..."



அவள் முடிக்கவில்லை...அண்ணா கோபத்தில் வெடித் தார்.

"மன்னிக்கு ஜுரம். படுத்துக் கொண்டிருக்கான்னு தெரிஞ்சும் நீ வீட்டுப் பொறுப்பு இல்லாம இருட்டற வரை பேசிண்டு நின்னியா? போ உள்ளே...போய் சீக்கிரம் சமையலைக் கவனி..." இரைந்தார்.

காலைக் கழுவிக் கொள்ள குளியலறைக்குள் புகுந்த அவளுக்கு மன்னி பேசுவது கேட்டது.

"கவனிச்சேளா?...சில நாளா உங்க தங்கை மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கா...தன்னைவிட வயசில் சின்னவளான ஷைலாவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதென்ற பொறாமை வேற என்ன, இவ அதிர்ஷ்டம் ஊரே தெரிஞ்ச கதையாக இருக்கு. பொறாமைப்பட்டு என்ன பண்றது?"

நெஞ்சில ஓங்கி சம்மட்டியால் அடித்த வேதனை. குளியலறைக் கதவைப் பிடித்துக் கொண்டு அழமாட்டாத துயரம் நெஞ்சைக் குலுக்க மங்களா தன் உணர்வைச் சமாளிக்க முயன்றாள்.

எல்லோரும் அவளை ஏன் இப்படிச் சொல்லால் அடித்து வதை செய்கிறார்கள்? ஏன்?

# 3

பௌர்ணமிக்கு அடுத்த நாள். வட்ட நிலா. பஞ்சுப் படலமாக மறைந்துக் கொண்டிருந்த மேகத்திரையினின்று வெளிப்பட்டு பனிச்சென்று காய்ந்து கொண்டிருந்தது. மங்களா களைப்புடன் தன் அறைக்குள் வந்து கதவைச் சாத்திக் கொண்டாள். படுக்கை விரிப்பின் மேல் முத்தொளிக் கோலமிட்ட நிலவை ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்தாள். அடுத்த வீட்டு மாடியறையில்

விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் வீட்டுப் பிள்ளை கல்லூரி மாணவன் பரீட்சைக்குப் படிக்கிறவன். மேஜை மீதிருந்த டேப் ரிக்கார்டரை ஓட விட்டிருந்தான். புத்தகத்தின் ஏடுகளைப் புரட்டிக் கொண்டு இடையே தாளம் போட்டுத் தலையசைத்தபடி அவன் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தான். படிக்கும் போது அவனுக்கு பாப் சங்கீதத்தைக் கேட்டாக வேண்டும், அப்படி ஒரு பழக்கம்.

சாதாரணமாக அந்தக் குடியிருப்புப் பகுதி இரவின் அந்த வேளையில் அமைதியில் மூழ்கி விட்டிருக்கும். ஆனால் அன்று பக்கத்து வீட்டுப்பிள்ளைக்கு, படிப்பு மண்டையில் ஏறவில்லை போலும். டேப் ரிக்கார்டரின் ஒலியை லேசாக உயர்த்தி விட்டிருந்தான்.

கல்யாணத்திற்கு என்று அவளுக்கு அப்பா இருந்த காலத்தில் வாய்ப்பட்டு சொல்லி வைக்கப்பட்டிருந்தது. அது இப்போது குளியலறையில் ஒண்டிக் கொண்டு விட்டது. தோழி லதாதான் அவளுக்கு பாப் சங்கீதத்தை ரஸிக்கச் சொல்லிக் கொடுத்தவள். லதாவுக்கு கர்நாடக சங்கீதம்—மெல்லிசை—பாப்மியூசிக் என்று அத்தனை மீதிலும் பற்றுதல் அந்தந்தப் பகுதியில் யார்யார் பிரபலமானவர்கள், எந்தெந்தப் பாட்டு,எங்கே. எப்போது பாடப்பட்டது என்றவளை அத்துப்படி டாம் ஜோன்ஸ், சார்லஸ் ஆசனாவா ஆண்டி வில்லியம்ஸ், ஆனந்த் சங்கர் என்ற பெயர்கள் எல்லாம் அவள் மூலந்தான் மங்களாவுக்கு அறிமுகம்.

பழைய பாட்டு. ஆனாலும் நிலவொளியில் மெல்லியதாக் வீசிய காற்றில் கலந்து மிதந்து வந்த டீன் மார்ட்டினின் உருக்கமான குரல் நெஞ்சைத் தொட்டது.

'தி கிரீன்...கிரீன்...கிராஸ் ஆப் தி ஹோம்...'

எங்கள் வீடு என்று உரிமை பாராட்டிக் கொண்டு வளைய வந்த அந்த நாட்களின் நினைப்பு உடனடியாக மனதிற்குள் சுமையாக அழுத்தவே... தலையணைமீது சாய்ந்தபடி...ஜன்னல் வழியாக...மீண்டும் வானத்தைப் பார்த்தாள்.



அண்ணா வேலை பார்த்து வந்த நிறுவனம், தன் ஊழியர்களுக்கு என்று வாடகைக்கு எடுத்துக் கொடுத்திருந்த வீடு அது. தேவையான வசதிகளுக்கு குறைவு இருக்கவில்லை, ஆனால் மனத்தில்தான் பழைய நாளின் நிறைவு இருக்கவில்லை, அண்ணா—மன்னி— ஷைலா... அப்போதைக்கப் போது...பிறந்தகத்துக்கு சீராட வரும் இரண்டு மூத்த சகோதரிகள்...அவர்களது குழந்தைப் பட்டாளம்...என்று வீடு நிறைய மனிதர்கள் இருந்தபோதிலும்...அவர்கள் நடுவே அவள் தனியாக ஒதுங்கியிருந்தது போன்ற துன்ப உணர்விலேதான் வாழ்ந்தாள். ஒரு நாளும் அந்த வீடு, வீடு என்ற உணர்வை அவளுக்குள் உணர்த்தியதே இல்லை...சம்பந்த மில்லாத ஒரு இடத்தில் சம்பிரதாயத்துக்காக ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு நினைப்பு...

'தி கிரீன் கிரீன்...கிராஸ் ஆப்...தி ஹோம்...' மறுபடியும் டீன் மார்ட்டினின் குரல் காற்றோடு கரைந்து காதில் குழைந்தபோது வேதனையுடன் படுக்கைமீது சாய்ந்து கொண்டாள். அப்பா உயிருடன் இருந்த காலத்தில் அவர்கள் வாழ்க்கை எப்படித்தான் இருந்தது?

சிறு வயதிலே தாயை இழந்துவிட்டவள் என்று தமது கடைக்குட்டி மகள் மீது அப்பா ஜகதீசன் உயிரையேதான் வைத்திருந்தார். உண்மையில் அப்படி ஒரு பாசம்...அதனால்தான் அவளுக்கேற்பட்ட அதிர்ச்சிகளின் சுமையை அவரால் தாங்கிக்கொள்ள இயலவில்லை, மாரடைப்பில் அவர் போய் விட்டார்.

'தி கிரீன்...கிரீன். கிராஸ் ஆஃப் தி ஹோம்...' மறுபடி அந்தக் குரல் காற்றோடு கலந்து வந்தபோது...அந்த நாளின் நினைப்பு நீர் வீழ்ச்சியாக நெஞ்சில் எழவே...கண்கள் கனக்க அவள் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள் ஜன்னலின் திரையைத் திரையை மெல்ல இழுத்து அறையை மறைத்துக் கொண்டாள். அதன்மேல் தாவிக் கொண்டு உள்ளே வந்து படிந்த நிலவொளியில் அவள்...

அந்தப் பையன் நீலகண்டனை கற்பனையில் பார்த்தபடி உணர்வுகளுடன் ஒன்றிப்போனாள்.

நீலகண்டனைத்தான் அப்பா அவளுக்குக் கணவனாகத் தேர்ந்தெடுத்து விட்டிருந்தார். அவர்களுக்கு சமமான குடும்பத்திலிருந்து வந்த பிள்ளை நீலகண்டன் அவன் தந்தையும் பிரபலமானதொரு பொறிஇயல் நிறுவனத்தில் உயர்ந்த பதவியிலிருந்தார். அவர்களும் பெரிய பங்களா—கார்—ஆட்கள்— அல்சேஷியன் நாய்கள் என்ற ஆடம்பரங்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். நீலகண்டன்தான் மூத்தபிள்ளை. என்ஜினீயர் பட்டப்படிப்புக்குப்பின்னர் அப்பாவேலை பார்த்தநிறுவனத்திலேயே அவனும் உத்தியோகத்திலிருந்தான். மேல் படிப்பிற்கு வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டுமென்ற திட்டம். அவனது வருங்கால மாமனார்தான் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்பது அவனது தந்தையின் நோக்கம். அவனுக்கு அடுத்தபடியாக, இரண்டு சகோதரிகள் கல்யாணத்திற்குக் காத்திருந்தார்கள். அவர்களைச் சீரும் சிறப்புமாக வாழ வைக்க மூத்த பிள்ளையின் சம்பாத்தியத்தையும்...அவனுக்கு கிட்டப்போகிற கணிசமான வரதட்சிணையையும் அவன் தந்தை வெகுவாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். வெளிப்படையாக சொல்லியும் விட்டார்.

ஜகதீசனுக்கு நீலகண்டனை 'மிகவும் பிடித்துவிட்டிருந்தது. சம்பந்தத்தை நழுவவிட மனம் இல்லை. பிள்ளை வீட்டார் கேட்டதைக் கொடுக்க அவர் தயாராக இருந்தார். பெண்ணின் கல்யாணத்திற்கு என்று அவர்சேமித்து வைத்த பணம் பாங்கில் குலுங்கியது. இறந்துபோன அம்மாவின் நகைகளில் அவள் பங்கிற்கு என்று ஒதுக்கப் பட்டவை இருந்தன. பெரிய பதவியில் அவர் இருந்ததால் ஆள் படை பலம் வேறு. கல்யாணத்தை தடபுடலாக நடத்திட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. பெண் பார்க்கும் படலத்தின் போதுதான் அவள் நீலகண்டனை லேசாகப் பார்த்தது.



"இவர்களுக்கு நமஸ்காரம் பண்ணு, இப்படி வாம்மா... இங்கே கொஞ்சம் நில்லு" என்று அப்பாவின் மகிழ்ச்சி நிறைந்த பரபரப்பான உத்தரவுகளில் அவள் நிதானமிழந்து விட்டிருந்தாள்.

அப்பா அன்று என்னவோ சொன்னார். எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். மாப்பிள்ளைப் பையன் வெட்கத்துடன் சிரித்தபடி தரையைப் பார்த்தான். மங்களாவுக்குக் கவலையாக இருந்தது. நீலகண்டனுக்கு அவளுடையதைப் போல் பற்கள் வரிசையாக இருக்கின்றனவா? அல்லது அத்தான் வஸந்துக்கு இருக்கிறது போல தெத்துப் பற்களா? அத்தான் வஸந்த் அவளைப் பார்த்து சிரித்தாலே அவளுக்கு அந்தப் பற்களைப் பார்க்கப் பிடிக்காது...எரிச்சல் பற்றிக் கொண்டு வரும். பற்கள் அவளுக்கு அப்போது வாழ்க்கையின் பெரும் பிரச்சினையாகத் தோன்றி மண்டையைக் குடைந்தது...அதற்குப் பின்னர் சில நாட்களில் அவள் மறந்து போனாள். காஞ்சிபுரத்திற்கே ஜவுளி எடுக்க அப்பா அவளையும் அண்ணா மன்னியுடன் அழைத்துக் கொண்டு சென்றார். கல்யாணப் பெண் என்ற நிலையிலே உயர்ந்து விட்டிருந்த தன் அந்தஸ்தை எண்ணி...பெருமையுடன் தன் வருங்காலத்தைப் பற்றிய இனிய கனவுகளிலே... மகிழ்ந்து போயிருந்தாள்.

"அவளுக்குப் பிடிச்ச நிறுசுகளைத் தானே பார்த்து வாங்கிக் கொள்ளட்டும். கூடக் குறைய விலையிருந்தால் கவலைப்பட வேண்டாம்" அப்பா உத்தரவிட்டபடியே காரை ஓட்டிக் கொண்டு போனார். அவளது இஷ்டத்துக்கெல்லாம் அப்பா ஈடு கொடுத்தார்.

அரக்கு வண்ணத்திலே கூரைப்புடவை...அகலமான சரிகை வேண்டும் என்று விரும்பிக் கேட்டாள்... "அதுக்கென்னம்மா எடுத்துக்கோ... வாழ்க்கையில் கல்யாணங்கிற சந்தோஷமான நிகழ்ச்சி ஒரே ஒரு முறைதானே வரப்போகிறது...உன் இஷ்டத்துக்கு எது வேணுமானாலும்

வாங்கிக்கோ. அப்பா சிரித்துக் கொண்டே கத்தை கத்தையாக ரூபாய் நோட்டுகளை ப்ரீப்கேஸிலிருந்து எடுத்துக் கடைக்காரனிடம் எண்ணி வைத்தார். எத்தனை தாராளமான மனம் அவருக்கு?

அவளது வருங்கால மாமியார் பாகீரதி அம்மாள் புடவை-நகைகள்-பாத்திரங்களை முன்னதாகப் பார்வையிட விரும்பி அவர்களது பங்களாவுக்கு வந்திருந்தாள்.

மகனைப் போன்று நல்ல நிறம். உயரம். கருகருவென்ற கூந்தல். ஆனால் அவளது கண்டிப்பான பார்வை மங்களாவுக்குத் திகிலைக் கொடுத்தது.

"கல்யாணத்துக்கப்புறம் படிக்கிறதா உத்தேசமுண்டா?" மெல்லச் சிரித்தபடி தான் கேட்டாள். பாகீரதி. காப்பி தம்ளரை அவள் அருகே வைத்து விட்டு அந்தக் கடுமையான பார்வையின் பொருள் விளங்காமல் விழித்தாள் மங்களா, நல்ல வேளை மன்னி அனுசுயா குறுக்கிட்டாள்.

"உங்கள் இஷ்டப்படி நடக்க அவள் தயார். மேலே படிச்சு முடிக்கச் சொன்னா படிப்பா...வேண்டாம்னா வுட்டுடுவா?" .

"நன்னா சமைக்கத் தெரியுமோ?" அடுத்த கேள்வி.

தலையை ஆட்டிவிட்டு—பின் பக்கம் அவள் நழுவத் தயாரான போது மன்னி சொன்னாள் :

"வாங்கிக் கொண்டு வந்திருக்கிற புடவைகளைக் கொண்டு வந்து காட்டு, மாமி பார்க்கட்டும்."

பாகீரதி மிகவும் கவனமாகத்தான் எல்லாவற்றையும் பார்வையிட்டாள். மெருகிட்டு வைத்திருந்த அம்மாளின் மூன்று கொத்து சங்கிலியை எடுத்து உள்ளங்கைக்குள்ளே வைத்துக்கொண்டு குலுக்கி தனக்குள்ளே எடையைத் தீர்மானித்துக் கொண்டாள். வைரத் தோடுகளை வெளிச்சத்திலே ஆராய்ந்தாள். பின்னர் அசட்டையாகத் தலையை



ஆட்டினாள், "கற்களில் அத்தனை பூரிப்பு இல்லை... ஒல்டு கட்டிங்... இதைப் பிரிச்சு தாமரைப்பூ வடிவத்திலே கொஞ்சம் பெரிசா கட்டி வச்சுடுங்கே... கூரைப்புடவை... கனமாகவே இல்லையே. காலமுச்சூடும் வச்சுக்கொண்டு, நாள் கிழமைகளுக்குக் கட்டிகிறாப்போல கனமும் உயரமுமாகப் பார்த்து வாங்கிடுங்கோ... இவ்வளவுதானா வெள்ளிப்பாத்திரங்கள், ரெண்டு வெள்ளிக் குத்துவிளக்குகள் கேட்டிருந்தேனே... இன்னொன்னையும் ஜோடியாகப் பார்த்து சீக்கிரமா வாங்கி வச்சிடுங்கோ..."

வருங்கால சம்பந்தியம்மாள் முன்னால்...கை கட்டி வாய் புதைத்து நிற்கும் அடிமைபோல...உடலை கூனிக் குறுகிக் கொண்டு அப்பா...பாகீரதியம்மாளுக்கு சலாம் போட்டுக் குழைந்த அந்தக்காட்சி...இன்று நடப்பது போல எத்தனை தெளிவாக...நினைவிலே நிற்கின்றது!

"எந்தவிதமான குறையும் வைக்க மாட்டோம். உங்க பிரியப்படியே எல்லாத்தையும் செய்து முடிக்கிறோம்"—அப்பா உறுதி தெரிவித்தார்.

"நான் முன்னாடி வந்து பார்த்தது நல்லதாப்போச்சு... பின்னாடி மனஸ்தாபங்கள் வேண்டாம் பாருங்க..." வெட்டு ஒண்ணு, துண்டு இரண்டாகப் பேசின பாகீரதியை நிமிர்ந்து பார்க்கவும் மங்களாவுக்குப் பயமாகத்தான் இருந்தது பதினெட்டாவது வயதின் இறுதியை எட்டிக்கொண்டிருந்தாள். அப்போது, செல்லமாக — அப்பாவின் கண்களாக வளர்க்கப்பட்டதினால் உலகமே தெரியாத வெகுளியாக இருந்தாள் மங்களா.

'இவளா என் மாமியார்...?'...உள்ளூர ஒரு கலக்கம்...

"பையன் பெண்ணைத் தனியே பார்த்துப் பேசணுமாம்." சொல்லிக் கொண்டே எழுந்து பட்டுப்புடவை சரசரக்கத் தங்கள் வீட்டுக்காரில் ஏறிக்கொண்டாள் பாகீரதி.

"அதுக்கென்ன. ஏற்பாடு செய்தால் போச்சு," அப்பா பெருமாள்மாடு போல் தலையை ஆட்டினார்.

"கல்யாணத்துக்கு முன்னாடி, இங்கேயும் அங்கேயும் ஜோடி போட்டுண்டு அவர்கள் தனியாகப் போய் பேச வேண்டியதில்லே. அதனாலே..." பாகீரதி கண்டிப்பான குரலில் அழுத்தமாகவே சொன்னாள். ஹிஹி...எனக்குத் தெரியாதா...அந்த மாதிரி பழக்கமெல்லாம் எங்களுக்குப் பிடிக்காது. நீங்க என்னிக்குன்னு நாள் குறிச்சு சொன்னா, நம்ப தோட்டத்திலேயே அவா ரெண்டு பேரும் புல் தரை மேலே உட்கார்ந்து பேசட்டும். ஏற்பாடு செய்துடறேன். பெரியவா கண்காணிப்பிலேயே தாராளமா பேசட்டுமே. இப்போ பேசித் தெரிஞ்சு கொண்டால்தானே அவர்கள் இருவருக்கும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்க உதவியா இருக்கும்·"—அப்பா உற்சாகமாக சொன்னார்.

ஒரே ஒருநாள். ஒரு சந்திப்பில்...பெரியவர்கள் கண்காணிப்பில்...ஒரு இடத்தில் அமர்ந்து சிறிது நேரம் பேசி விட்டதும்... அவர்களிருவர் இடையே காதல் கரை புரண்டு பொங்கி எழுந்துவிடும் என்பது அப்பாவின் கணிப்பு.

அவளும் அப்போது அப்படித்தான் எண்ணினாள். அழகான மாப்பிள்ளையாக-அப்பா அந்தஸ்துக்குத் தக்கபடி தேர்ந்து எடுத்து வைத்திருந்த நீலகண்டனை, அவளும் எடுத்த எடுப்பிலேயே காதலிக்கத் தன்னைத் தயாராக்கிக் கொண்டிருந்தாள், நீலகண்டனுடன் பேசி, அவன் சிரிக்கும்போது கவனமாகப் பற்களைக் கவனிக்க வேண்டும் என்றதொரு நினைப்பு இடையே இழை ஓடியதும் உண்மை.

சில நாட்களுக்குப்பின்னர் ஒருநாள் மாலை நீலகண்டன் அவர்கள் வீட்டிற்கு வந்தான். முன்னதாகவே அவன் வரவு அறிவிக்கப்படவில்லை. தானே காரை ஓட்டிக் கொண்டு வாசலில் இறங்கிய அவனை உள்ளேயிருந்த படியே அவள் பார்த்து விட்டாள். வெள்ளை குர்த்தாவும் பட்டுக்கரை வேஷ்டியுமாக உயரமாக... கம்பீரமாக நடந்து



உள்ளே வந்ததைக் கண்டு அவள் மார்பு படபடத்தது. மாடிக்கு ஓடினாள். அவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு கூந்தலை வாரிப் பின்னி...நுனியில் ரிப்பனை வைத்துக் கட்டிகொண்டாள். அவளுக்குப் பிடித்தமான நீலவண்ண அரக்குக் கரை காஞ்சீபுர பட்டுப் புடவையும், ஏற்ற ரவிக்கையும் தரித்துக் கொண்டாள்.

"கீழே வா...உன்னோட மாப்பிள்ளை சித்த பேசணுமாம்." மன்னி அனுசூயா அழைத்துக்கொண்டே வருமுன் இமைகளில் லேசாக மையை தீட்டிக்கொண்டு...நெற்றிக் குங்குமத்தை சரி செய்துவிட்டு...கண்ணாடியில அழகு பார்த்துக் கொண்டிருந்தாள் மங்களா. அவசரம் அவளுக்கும்.

பங்களாவின் பக்கவாட்டிலும் பரந்து கிடந்த புல் வெளியில், ஜமுக்காளத்தை விரித்து...சாப்பிட சூடாக பஜ்ஜியும் பாதாம் அல்வாவும் காப்பியும் கொண்டு வைத்திருந்தார்கள்.

உதடும் மூக்கும் துடிக்க...கையும் கால்களும் பதற... நெஞ்சு படபடக்க...அவன் எதிரே ஜமக்காளத்தின் மீது அவள் உட்கார்ந்து கொண்டாள். என்ன பேசுவது? ஒரே குழப்பம். 'உனக்கு தித்திப்பு பிடிக்குமா? காரம் பிடிக்குமா?' கேட்டுக்கொண்டே அவன்...பாதம் அல்வா கிண்ணத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"இரண்டுமே பிடிக்கும்" அவள் குரல் நடுங்கியது. பயத்தில்.

"ஒரு நாளைக்கு எத்தனை தடவை காப்பி சாப்பிடுவே?" அடுத்த படியாக தலை போகிற பெரிய கேள்வி ஒன்றைக் கேட்டு வைத்தான்.

"இரண்டு தடவைக்கு மேல் சாப்பிடப் பிடிக்காது 'ஆமாம் நீங்க சிகரெட் குடிப்பதுண்டா?' கேட்க வேண்டுமென்று எழுந்த கேள்வியைச் சட்டென்று அடக்கிக் கொண்டாள்.

"உனக்கு நீல வர்ணம் ரொம்பப் பிடிக்குமா...? எனக்குப் பச்சைதான் ரொம்பப் பிடிக்கும்—" என்றான் அவன். அரண்டு போய் விட்டாள். தப்பான வண்ணப் புடவையை அணிந்து கொண்டிருக்கிறாளே தவறாக எண்ணிக் கொண்டுவிட்டால்... "இல்லை, எனக்கும் பச்சைதான் ரொம்பப் பிடிக்கும்..."

ஏதோ பெரிய அதிசயத்தைக் கேட்டுவிட்டது போல அவன் உரத்துச்சிரித்தான். அப்போது நிமிர்ந்து கொஞ்சம் துணிவுடன் பார்த்தாள். அப்பாடா என்று மனம் நிம்மதியை அடைந்தது. அவனுக்கும் பற்கள் வரிசையாக இருந்தன. சிரிக்கும்போது அவன் இன்னும் கொஞ்சம் கூட அழகாகவே இருந்தான் அதைக் கண்டு மனம் பூரித்துப் போனாள். அதற்குப்பின் அவன் கேட்ட சில கேள்விகளுக்கெல்லாம் அவள் புன்னகையுடன் தலையை ஆட்டினாள். மாலை மங்கி இருள் பரவிக் கொண்டு வந்ததும் அப்பா தொண்டையைக் கனைத்துக் கொண்டு அருகில் வந்து விட்டார் பேச்சு முடிவடைந்தது.

சாப்பாடு பற்றியும்...கதைகள் படிப்பது பற்றியும் பேசியதிலே நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டதாக ஒரு நினைப்பு...பெரியவர்கள் பார்த்து நிச்சயித்த தங்களுக்குள்ளே காதல் அலை மோதிக் கொண்டு எழுந்து விட்டது போன்றதொரு பிரமிப்பு...ஒருவரையொருவர் பார்த்து வெட்கத்துடன் புன்முறுவலித்தபடி எழுந்து பிரிந்து விட்டனர்.

அதற்குப் பின்னர்... "உன்னை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. என்னை உனக்குப் பிடிக்கிறதா? மனதைத் திறந்து நீ இன்னமும் சொல்லவில்லையே...பதிலை எதிர்பார்க்கிறேன்." சுருக்கமாக ஒரு கடிதம் எழுதியிருந்தான். அவளுக்கும் அவனைப் பிடித்திருந்தது. ஆனால் பதில் எழுதத் துணிவிருக்கவில்லை.

தொலைபேசியில் இருமுறை அழைத்துத் தேனாகப் பேசினான். "உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.



வேலை ஓடமாட்டேங்கிறது. கல்யாணத்துக்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்குது?..." அவன் கேட்டபோது முகம் சிவந்து வெட்கத்திலே மூச்சடைத்துப் போய் நின்றாள். "என்ன பதிலைக் காணோமே...?" செல்லமாக அதட்டினான். "பதினைந்து நாள் இருக்கு..." தடுமாறினாள் மகிழ்ச்சியுடன்.

கல்யாணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன்தான் அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது. வீட்டின் பக்கத்திலே பரிசாரகர்கள் கல்யாணத்திற்கு பட்சணம் செய்து கொண்டிருந்தார்கள்.

"அம்மா கல்யாணப் பொண்ணு! இப்படி வாம்மா... இதைக் கொஞ்சம் சாப்பிட்டுப் பார்த்துச் சொல்...ஏலக்காய்... முந்திரிப்பருப்பு... கற்கண்டு... குங்குமப்பூ... எல்லாம் போட்டு ஜமாய்த்திருக்கேன்" பரிசாரகர் நீட்டிய தட்டில் விருந்த லட்டைக் கொஞ்சம் பிட்டு வாயில் போட்டுக் கொண்டாள்... தித்திப்பு உடல் முழுவதும் பரவுவது போன்ற மகிழ்ச்சியான கற்பனை...இன்னும் சிறிதளவு பிட்டு வாயில் போட எடுத்துக் கொண்டபோதுதான் அனுசூயா பரபரப்பாக அங்கே வந்தாள்.

"இப்படிக் கொஞ்சம் வா"—அவள் குரலில் ஒரே பதட்டம். மாடியறையில்— அப்பா— அண்ணா— அத்தை— வஸந்த் அத்தான்—தமக்கைகள்—இன்னும் கல்யாணத்திற்கு நான்கு நாள் முன்னதாக வந்த உறவினர் சிலர் எல்லோரும் கூடியிருந்தனர். அவளைக் கண்டதும் அப்பா வேகமாக வந்து கட்டிக் கொண்டார்.

"தலையில் கல்லைப் போட்டுட்டானே, பாவிப் பயல் நீலகண்டன்." கத்தியபடி மகளைக் கட்டிக் கொண்டு குலுங்கி அழுதுவிட்டார் ஜகதீசன். என்ன நேர்ந்தது? ஏன் இப்படி அழுகிறார்? அவளுக்கு ஒரே கலவரம், உடம்பெல்லாம் பதறியது.

"நேத்து ராத்திரியே பிடிச்சு அந்தப் பிள்ளையாண்டா னுக்கு வயிற்று வலியாம். துடிச்சுப் போயிட்டானாம். நர்ஸிங் ஹோமில் அனுமதிச்சட்டா... ஆபரேஷன் பண்ண அவசரமா ஏற்பாடுகள் செய்து... அவனை மேஜையில் கொண்டு போடறதுக்குள்ளே...போயிட்டானாம். அநியா யம்," அத்தை அனுதாபத்துடன் விவரித்தாள்.

"ஐயோ! நான் என்ன பண்ணுவேன்?"—அப்பா அரற்றி னார்.

"மூணு முடிச்சு விழறதுக்கு முந்தி ஆனதேன்னு மனதை தேத்திக்கோங்க அப்பா! அதுவரை நாம் தப்பினோம்"— மூத்த சகோதரி ஆறுதல் சொன்னாள்.

"ஆமாம். நமக்கு வரவிருந்த பெரிய ஆபத்து இப்படி போச்சேன்னு நினைச்சுப்போம்..." இளைய சகோதரி ஒத்துப் பாடினாள். அழகான நீலகண்டன் அவளிடம் அன்பாகப் பேசினானே? அவளை ரொம்பப் பிடிச்சிருக்கு என்று பலதடவை டெலிபோனில் குழைந்தானே...அவனா இறந்து போய்விட்டான்?... அதிர்ச்சியாலே மங்களா அப்படியே திகைத்துப் போய் நின்றாள். அதற்குப்பின் சில நாட்கள் அவளுக்கு யாரையும் பார்க்கவோ, பேசவோ பிடிக்க வில்லை...

அடுத்த வீட்டுப் பிள்ளை சலிப்புடன் டேப் ரிக்கார் டரை நிறுத்திவிட்டு...விளக்கை அணைத்து தூங்கப்போய் விட்டான்.

மங்களாவும் படுக்கையிலே...சாய்ந்து கொண்டு புரண் டாள்.

நீலகண்டன் பக்கென்று சிரித்தபடி அவளைப் பார்ப்பது போன்ற நினைவு...இன்னமும் நெஞ்சை விட்டு அகல வில்லை.

'பாவம்! எத்தனையோ வாழவேண்டியவன்... சின்னஞ் சிறு வயதிலேயே போய்விட்டானே ஏன்?"



அவன் சாவிற்கு அவள் எப்படிக் காரணமாவாள்? குற்றவாளிக் கூண்டில் இன்னமும் நிறுத்தி வைத்து அவளை பழிவாங்குகிறார்களே. அதைப்பற்றி என்ன சொல்ல?

நீலகண்டன் இறந்துபோனான். அவன் வரைக்கும் நிம்மதி. அவன் மரணத்தின் பாதிப்பினால் நிலை குலைந்து நிற்கிறாள் அவள். அதைப் பார்த்து யாராவது சிந்தித்தார்களா...? அவளுக்காக யாராவது அனுதாபப்பட்டிருப்பார்களா?...பொங்கி எழுந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ...கடந்த கால நினைவை உதறிவிடத் தலையணையில் முகத்தைப் பதித்துக் கொண்டாள்.

## 4

அன்று மாலை அவள் அலுவலகத்தினின்று வேக மாகத்தான் நடந்து வந்தாள். அப்படியும் வழக்கமாக அவள் பிடிக்கும் பஸ்ஸைத் தவற விட்டுவிட்டாள். வியர்க்க விறுவிறுக்க குடையை மடக்கிக்கொண்டு அவள் விரைந்து வருவதற்குள் மூச்சுத் திணறும். கூட்டத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டு பஸ் வேதனையில் முனகுவதுபோல் 'ங்கொய் ங்கொய்' என்ற ஓசையுடன் நகர்ந்து விட்டது.

அவள் மட்டும் ஆண்பிள்ளையாக இருந்தால், கூசாது ஒரே ஓட்டத்தில் கம்பியைத் தாவிப் பிடித்துக்கொண்டு ஒரு கால் படியிலும் ஒரு கால் வெளியிலுமாக தொங்கிக் கொண்டு ஆபத்தைப் பாராட்டாது அந்தப் பஸ்ஸில் பயணப்பட்டிருப் பாள்.

ஆணுக்குச் சமம் என்று கூறிக்கொண்டு வேலைக்கு வந்துவிட்டால் மட்டும் போதுமா?

இந்த மாதிரி சர்க்கஸ் வித்தைகளில் சராசரி பெண் எப்படி ஆணுக்குச் சமம் என்று கோஷமிட முடியும்?

கோபத்துடன் பற்களைக் கடித்துக் கொண்டாள். வாழ்க்கையின் சிறு அசைவுகளில் ஏற்படும் சின்னஞ் சிறு இடையூறுகள் கூட அவளுக்குப் பூதங்களாகப் பரிணமித்துக் கொண்டு பயமுறுத்துவது ஏன்? மனதிலே .பழைய அனுபவங்களின் பாதிப்பினால் ஏற்பட்ட கசப்பு கடுமையாகி விட்டதால் எதையும் பெரியதொரு தோல்வியாக எடுத்துக் கொள்ளும் மனப்பான்மை அவளிடம் உருவாகி விட்டதா?

வழக்கமாக அவள் வரும் சுற்றுப் பாதையைத் தளர்த்தி கிருஷ்ணாராவ் தெருவழியே அவள் வந்திருந்தால் நேரமும் நடையும் மிச்சமாகியிருக்கும். பஸ் தவறியிருக்காது, ஆனால் அவளுக்கு அந்தத் தெருவின் பெயரைப் பொறிக்கப் பட்டுள்ள பலகையைக் கூடப் பார்க்கப் பிடிக்காது. தலையைத் திருப்பிக் கொண்டு சாலையில் அதைப் பாராதவளாக நடப்பது வழக்கம்.

அப்பா உயிருடன் இருந்த காலத்தில் பெரிய பதவியில் அவர் ஓஹோ என்று வாழ்ந்த நாளில் அவர்களுக்குச் சொந்தமாயிருந்த அந்தப் பெரிய பங்களா... 'இமயம்' அந்தத் தெருவின் முனையில் நெடுஞ்சாலை ஓரத்திலே தான் இருந்தது, அதைப் பார்க்கும்போதெல்லாம் மனதிலே ஒரு பதட்டம். அந்தப் பெரிய தோட்டத்திற்குள் ஓடி விளையாடி-சிறுமியாக வளர்ந்து படித்துப் பட்டம் பெற்று ஆளாகி பெற்ற பல இன்ப துன்ப அனுபவங்களின் நினைவுகள் நெஞ்சை அடைக்க அவள் கண்கள் கலங்கி விடுவது வழக்கம்.

"சீ...' நீ சுத்த மக்கு. வெறும் கல்லாலான கட்டடம். இதன்மீது இப்படி ஒரு லயிப்பா? கோழையாக இருக்கிறியே? டோண்ட் பி எ ஸெண்டி மெண்டல் ஃபூல்," லதா பரிகசிப்பது உண்டு. அன்போடு கடிந்து கொள்வதும் உண்டு.

கல்லும்-சிமிண்டும் கொண்டு உருவாக்கிய வெறும் கட்டடந்தான். அதற்குள்ளே அவர்கள் வாழ்க்கையில்



நிகழ்ந்த அத்தனை அனுபவங்களின் நிறைகள் எல்லாம் அடங்கிக் கிடக்கின்றனவே! அதைப் பார்க்கும் போது... அப்பாவுடன் வராந்தாவிலே உட்கார்ந்து கொண்டு செஸ் விளையாடிய இன்ப நாளின் நினைவு-தோழிகளுடன் தோட்டத்திற்குள்ளே கண்ணாமூச்சி விளையாடிக்களித்த ஞாபகம்-மாடியில் தனது படுக்கையறையிலே கட்டிலின் மீது சாய்ந்து கொண்டு காதல் கதைகளைப் படித்துக் கொண்டு...ஜன்னல் வழியாக உலகத்தையே உல்லாசமாகப் பார்த்த நாட்களின் நினைப்பு... எத்தனையோ? அந்த உணர்வுக் குழப்பத்திலே மனம் நெகிழ்ந்து கரைந்து போய் விடுவதிலே வியப்பென்ன இருக்கிறது?

அந்த வீட்டை அவள் என்றும் கட்டடமாகப் பார்க்கவில்லை. தனது உற்ற நண்பன்-உணர்வுகளுக்கு அடைக்கலம் தந்த தோழன் என்றுதான் எண்ணி வந்தாள்... இப்போது யாருக்கோ சொந்தமாகிவிட்டதை அவளால் ஏற்று ஜீரணிக்க முடியவில்லை. பார்த்தபோதெல்லாம்... பரிவுணர்விலே பதறிப் போனாள். துன்பப்பட்டாள்... யாருக்கும் எளிதில் புரிய முடியாத ஒரு கதம்ப உணர்ச்சிக் குழப்பம் இது. என்னத்திற்கு இந்த தண்டனை என்று, தானே அதை தவிர்க்கத்தான் பஸ் நிலையத்திற்கு ஒரு சுற்றுவழியைத் தேடி அமைத்துக் கொண்டிருந்தாள்.

பஸ் தவறி விட்டதினால் ஏற்படப்போகும் விளைவுகள். அடுத்த பஸ் வர குறைந்தது இருபது நிமிடங்களாவது ஆகும். வீடு போய்ச்சேர அரை மணிக்கு மேலாகும்... அதற்குள் கட்டாயம் இருட்டி விடும். 'ஏன் நேரம்?' என்று வழக்கம் போல் அண்ணாவின் குறுக்கு விசாரணை இருக்கும். காலையில் அவள் கிளம்புமுன்னே மன்னி அனுசூயா கோடி காட்டி விட்டிருந்தாள் இன்னிக்குக்கூட எழுந்திருக்க முடியாது போலிருக்கு. உடம்பு கிழிச்ச நாராப் போயிடுதே' பலூன் போல உப்பியபடி படுக்கைமீது புரண்டு கொண்டிருந்த அனுசூயா ஆனாலும் இப்படி பொய் பேச வேண்டாம்...உள்ளூர எரிச்சல்... பல்லைக் கடித்துக்கொண்டுதான் வேலைக்குப் புறப்பட்டி

ருந்தாள் மங்களா... இப்போது போனதும் அவசரமாகப் பச்சைத் தண்ணீரில் குளித்து விட்டு அடுப்புக்காரியங்களைக் கவனிக்கத் துவங்க வேண்டும்.

காலையிலும் மாலையிலும் இரண்டு வேளை பச்சைத் தண்ணீரிலே குளித்துவிட்டு ஏ.சி. அறையில் நாள் முழுவதும் உட்கார்ந்து வேலை செய்கிறதினால் முதுகு பிடித்துக் கொண்டு வலிக்கிறது என்று அவள் யாரிடம் சொல்லி அனுதாபத்தைப் பெற முடியும்? வெளியே சொல்ல முடியாது. அவளே அனுபவிக்கிற மனவேதனை போல் உடல் வேதனையைப் பற்றியும் மூச்சே விடமுடியாத அடிமை நிலை. அக்கா இருவரும் கல்யாணமாகி... அப்பா, காலத்திலேயே வீட்டை விட்டு வெளியேறி விட்டனர் அப்பாவுக்குப் பின் அவள் மட்டும் வசமாக அண்ணா-மன்னியிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டாள்.

'ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்புத் தேவைதான்... அதற்காக இப்படி அடிமையிலும் அடிமையாக அல்லல் படத்தேவையில்லை, இந்தப்பிணைப்பை அறுத்தெறிந்து கொண்டு அவள் எப்பொழுது சுதந்திரமாக வாழப் போகிறாள்? அவளுக்கு வருங்காலம் என்று ஒன்று இருக்கிறதா?

குமுறிக்கொண்டு வந்த துக்கத்திலே மார்பு விம்மல்... கண்கள் பனிக்க...சாலையில் போய்க் கொண்டிருந்த வாகனங்கள்மீது பார்வையை ஓட்டியபடி நின்று கொண்டிருந்தாள். நேரம் தனியாக ஊர்ந்தது. மேலும் கீழும் விர்விர் என்று பல கார்கள் பறந்து கொண்டிருந்தன. அவளுக்குத் தேவையில்லாத இடங்களுக்குப் போகும் பஸ்கள் மூன்று ஒன்றன் பின் ஒன்றாக வந்து, நின்று கொண்டிருந்தவர்களில் பலரை அள்ளிக்கொண்டு கிளம்பின. அண்ணாநகர் போகும் பஸ்ஸை இன்னமும்காணவேயில்லை. நேரம் யுகமாகக் கனக்கவே கைக்கடிகாரத்தைக் கவலையுடன் பார்த்தாள். 'ஹாய்! மங்களா!' அந்த ஆண்குரல் அவளை திடுக்கிடச் செய்தது. அருகில் சரக்கென்று ஓசையுடன் நின்ற புத்தம் புது பியட் காரைத் திரும்பிப் பார்த்தாள்.



வண்டியினின்று அவள் அத்தான் வஸந்த் இறங்கினான். காதோரத்துக் கன்னத்திலே கனத்த கிருதாக்கள். தெத்துப் பற்களை மறைக்க தொங்கு மீசை, வெள்ளை சபாரி ஸூட் டிஜிட்டல் கடிகாரம். அத்தான் வஸந்த் அடையாளமே தெரியாத அளவுக்கு மாறிவிட்டிருக்கிறானே? அவனுடன் கூட வண்டியை விட்டு இறங்கி நடைபாதையருகே நெருக்கமாக நின்ற இளம் பெண்ணை வியப்புடன் மங்களா பார்த்தாள் அத்தான் வஸந்த்துக்கு ஏற்ற உயரத்தில்...தங்க நிறத்தில், உண்மையில் கொடி போல எத்தனை அழகான பெண்'ம்...

"நீங்க யாருமே என் கல்யாணத்துக்கு வரலை. அதுக்காகப் பதிலுக்குப்பதில் நாங்கள் ஷைலா கல்யாணத்துக்கு வராதிருந்துவிட்டோம்னு நினைக்காதே பத்திரிகை வந்தப்போ நாங்கள் ஊரில் இல்லை, நானும் ரஜனியும் சிங்கப்பூர், மலேயா, ஹாங்காங்னு சுத்திண்டு இருந்தோம். ஊரில் இருந்திருந்தால் கட்டாயம் வந்திருப்போம். மாமா பேத்தி கல்யாணமாச்சே. விட்டுவச்சிருப்பமா? ஹி ஹி..." உரத்த குரலில் சிரித்தான். நிலையத்தில் நின்றவர்களில் சிலர் தங்கள் பக்கம் திரும்பிப் பார்ப்பதை உணர்ந்த மங்களா, மிகவும் கூசிப்போனாள். அத்தான் வஸந்திடம் அவளுக்குப் பிடிக்காத குணம் கத்தி உரத்த குரலில் பேசுவது அட்டகாசமாக எதற்கும் சிரிப்பது. அதை இன்னமும் விட்டுத் தொலைக்கவில்லையா?

"என் மனைவி ரஜனியை நீ பார்த்ததில்லையே?" பெருமையுடன் அந்தக் கொடியழகியின் பக்கம் திரும்பினான் அத்தான்.

"ரஜனி! நான் முன்பே சொல்லியிருக்கிறேனே, என் மாமா பெண் மங்களானுட்டு...அவள்தான் இவள்..."

மங்களாவின் காதுகளிரண்டும் கலகலவென்று எரிந்தன. முகம் இறுகிப் போனாள்.

'அத்தான் வஸந்த், தன் மனைவியிடம் அவளைப் பற்றி என்னவெல்லாம் சொல்லியிருக்கிறானோ? அவன் ஒரு மாதிரி தனக்குள் சிரித்தபடி பார்க்கிறானே?

"வஸந்த்! நீயாவது உன் அம்மாவுக்கு எடுத்துச் சொல்லுடா? உறவு விட்டுப் போக வேண்டாம். மங்களாவைக் கல்யாணம் பண்ணிக்கோ. நீயும் இதே வீட்டிலே எங்களோட வளர்ந்து நெருங்கிப் பழகினவன் தானே? மறுக்காதேடா—அவளுக்கு வாழ்வு கொடு." அப்பா கெஞ்சியது நினைவுக்கு வரவே...அவமானம் உடலை அனலாகத் தகிப்பதை உணர்ந்தாள்.

பஸ்ஸிற்காக நிற்பவர்களில் சிலர் அவர்களது பேச்சை ரசிக்க இன்னும் சற்று அருகில் நெருங்க வந்து நின்று கொண்டதைக் காண மங்களாவுக்கு எரிச்சலாக இருந்தது.

"அத்தை சௌக்கியமா?" அடிக்குரலில் மெல்ல ஒப்புக்காக கேட்டுவிட்டு பஸ் வரும் திக்கிலே கண்களை ஓட விட்டாள்

உன் அத்தையைத் தெரியாதா? காலிலே சக்கரம்... திறமையான மாட்டுப் பெண் கிடைத்து விட்டதும் க்ஷேத்திராடனம் செய்யப் புறப்பட்டுட்டா...ரிஷிகேஷிலிருந்து போன வாரம் கடிதாசி போட்டா. பெங்களூருக்குத் திரும்பி வர ஒரு மாசமாகுமாம். "பெங்களூரா?'—கேட்ட மங்களா சட்டென்று தன் நாவைக் கடித்துக் கொண்டாள். அனாவசியமான பேச்சைத் துண்டிக்க பஸ் வரும் திக்கை மறுபடியும் ஆவலுடன் எட்டிப்பார்த்தாள். 'இப்போ நான் பெங்களூர் பிரான்ஞ்சுக்கு மானேஜர்...தெரியாதா உனக்கு? ஒரு வருஷமாச்சே? சொந்த ஃபிளாட்டுக்கு எழுதிப் போட்டிருக்கேன். கம்பெனி வாடகையிலே கிடைச்சிருக்கிற வீடு தாராளமா பெரிசா இருக்கு...நீ வந்தா பத்து நாள் ஓய்வா எங்களோட தங்கலாம்...வாயேன் ஒரு பயணம் பெங்களூர் பக்கம் ரஜனிக்கு விருந்தாளிகன்னா ரொம்ப ஆசை."



"தாங்க்யூ... லீவு வரட்டும் பார்க்கறேன்." வரட்சியாக புன்முறுவலித்தாள் மங்களா. ஓயமாட்டான் போலிருக்கு' பஸ் நிலையத்தருகே காரை நிறுத்திக் கொண்டு பேசுவது தப்பாச்சே. போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சல்— இதெல்லாம் இன்னமுமா தெரியாது வஸந்துக்கு? போக்குவரத்து போலீசை ஏன் கண்ணிலேயே காணோம்?

"இப்பகூட தலைமை ஆபீசிலே ஒரு காரியமாகத்தான் வந்திருக்கேன். அப்படியே உங்களையெல்லாம் பார்த்துட்டுப் போகலாம்னு ஒரு எண்ணம். ஏறிக்கோ... வீட்டிலே கொண்டு போய் விட்டுடறேன். எத்தனை நாழி பஸ்ஸுக்காக காத்திருப்பே?"

சுருக்கென்று அவள் மனதை வேதனை தைத்தது.

குடை நிழலில் குஞ்சரம் ஊர்ந்தோர்... நடை மெலிந்து. சின்னப் பெண்ணாக இருக்கையில் தமிழ் வகுப்பிலே படித்த பாடத்தின் நினைவு...

பங்களா—கார்—ஆட்கள் என்று படாடோபமாக இருந்த அவர்கள் வாழ்க்கை சரிந்து இப்போது பஸ்ஸிற்காக அவள் காத்திருக்கும் பரிதாபத்தை அவன் சுட்டிக் காட்டுகிறான்? மடையன்! பதவி உயர்ந்து விட்டால் போதுமா? அவனுக்கு எப்பொழுதுமே பண்பாகவே பேசத் தெரியாது... கோபத்துடன் உதட்டை கடித்துக் கொண்டாள்.

'வரயா! அழைச்சிண்டு போகட்டுமா...?"

மங்களா சட்டென்று தலையைப் பலமாக ஆட்டினாள். "தேவையில்லை. அதோ எங்கள் பஸ் வந்து விட்டது... ரொம்ப நன்றி..."—கூறிவிட்டு சட்டென்று கூட்டத்திற்குள் மறைந்துகொண்டாள்.

வஸந்த் காரில் ஏறிக் கொண்டான். மனைவி பக்கத்திலே வந்து உட்கார்ந்ததும் மங்களாவின் காது கேட்க கதவைப் படார் என்று சாத்தினான்.

"ஸார்! காரை எடுங்க சீக்கிரம். இங்கே நிக்கக் கூடாது தெரியாதா?"

குழலை ஊதிக் கொண்டு எங்கிருந்தோ வந்த போக்கு வரத்து போலீசிடம் கையை அமர்த்தி விட்டு வஸந்த் உரத்த குரலில் கத்திப் பேசினான்.

"மங்களா! அண்ணாவை இந்தத் தடவை மன்னிக்கச் சொல்லு. அடுத்த தடவை கட்டாயம் உங்களை எல்லாம் பார்க்க நாங்கள் வீட்டுக்கே வரோம்னு சொல்லு. அதுக்காக கோவிச்சுண்டு உன் கல்யாணப் பத்திரிகையை அனுப்பாமே நிறுத்திடாதே. மாமா பெண் கல்யாணத்துக்கு நான் வராம இருக்க முடியுமா? ஹி...ஹி" காரைக் கிளப்பிக்கொண்டு நகர்ந்து விட்டான்,

நெருப்பாக வந்து காதில் விழுந்த அந்தக் கேலிச் சொற் களின் உள் அர்த்தம் நெஞ்சைப் பிழியவே, கோபத்துடன் முகத்தை திருப்பிக் கொண்டு பஸ்ஸைப் பிடிக்கக் கூட்டத் திற்குள் புகுந்து தள்ளிக் கொண்டு நுழைந்தாள். எப்படியோ உள்ளே ஏறிவிட்டாள். ஜன்னல் ஓரத்திலே தெரிந்த காலி யான இடத்தில் சட்டென்று அமர்ந்து கொண்டாள் அழுக்குப் பிடித்த புடவைக்காரியின் பாட்டைத் தலை குழந்தை தன் ஒழுகும் மூக்கைத் தன் தோள்பட்டை மீது தடவிக் கொள்வதைப் பற்றி அவள் இன்று கவலையே படவில்லை.

அவள் எண்ணங்களும் நினைப்பும் கடந்த காலத்துடன் சுழன்று கொண்டிருந்தன.

அத்தை கற்பகத்தின் கணவர் கடும் காய்ச்சலில் திடீ ரென்று இறந்து போனபோது, விதவைச் சகோதரியைத் தன்னுடன் வைத்துக் காப்பாற்றும் பொறுப்பு அப்பா தலையில் விழுந்தது. கிராமத்திலிருந்து அவர்களை அழைத்து வந்து தங்களுடன் அந்தப் பங்களாவில் தங்க வைத்துக் கொண்டு ஜகதீசன், தங்கையை மிகவும் அன் போடுதான் ஆதரித்தார். அப்போது அவரும் மனைவியை



இழந்திருந்தார். வீட்டை நிர்வகிக்க விதவைச் சகோதரி உதவுவாள் என்ற நம்பிக்கை.

பட்டிக்காட்டிலிருந்து கொண்டு வந்த அவனது பழக்க வழக்கங்களை மாற்றி அவனைப் பட்டணவாசியாக்க அப்பா பட்ட பாடு...

"சோபா மீது காலை வச்சுண்டு பேசாதே. காலைத் தொங்கப்போடு."

"எட்டு வீடு கேட்கிறாப்பல ஏண்டா கத்தறே? மெதுவா பேசு. இங்கே யாருமே காது செவிடு இல்லை..." "குட் நைட்னு ஏண்டா சொல்றே? அவாள்ளாம் புறப்பட்டுப் பட்டுப் போகறச்சே சொல்லணும்...வெறுமனே தமிழிலே வணக்கம்னு சொல்லித் தொலைபோறும். இங்கிலீஷில் வழுக்கி விழ வேண்டாம்."

அப்பா அடிக்கொரு தடவை அவனைத் திருத்தி ஆளாக் கப்பட்ட சிரமம்...

பள்ளிக்கூடத்திலே சேர்த்துவிட்டு புத்தகங்கள், துணி மணிகள் என்று எல்லாம் வாங்கிக் கொடுத்து சீராட்டியது போதாது போல்...பாஸ் பண்ணித் தொலைக்க அந்தந்த பகுதிக்கு டியூஷன் வேறு வைத்துக் கொடுத்து அவனைத் தூக்கிவிட எத்தனை பாடுபட்டிருக்கிறார் ஜகதீசன்? பி. ஏ. பட்டத்தை பெற கஜனி முகமதுடன் அவன் போட்ட போட் டியைத்தான் மறக்க முடியுமா?

தொலையட்டும் தங்கை பிள்ளைதானே— அவனை வாழ வைக்க வேண்டியதும் நம் பொறுப்பாச்சே என்று நல்ல எண்ணத்துடன் அவர் வேலை பார்த்த நிறுவனத் திலேயே அவனுக்கும் ஒரு வேலை வாங்கித் தந்து உதவிய தற்குப் பிரதியாக அவன் அப்பாவுக்குக் கொடுத்த தொல்லைகள்? ஆரம்பத்திலிருந்தே அவளுக்கு அத்தான் வஸந்தைப் பிடிக்கலே. பிடிக்காது. அவனது உரத்த சிரிப்பு, தெத்துப் பற்கள், ஆபாசமான நகைச்சுவை

வார்த்தைகள், அதிகப் பிரசங்கித் தனமான நடத்தை... பல காரணம் பற்றி அவளுக்கு அவனைக் கொஞ்சமும் பிடிக்காது.

"என்ன அப்படி தள்ளி நகர்ந்து நிக்கிறே? ஒரு நாளைக்கில்லாட்ட ஒரு நாள் நீ எனக்கு மனைவியாகப் போறே, ஞாபகத்தில் வச்சுக்கோ..." சொல்லிவிட்டு மெல்ல அவள் கையைத் தொடுவான்.

ஏதாவது சொல்ல அருகில் வந்தால் தோளைத் தட்டித் தான் பேசுவான். யாரும் பார்க்காதபோது சட்டென்று அவள் கன்னத்தைக் கிள்ளுவான். இவையெல்லாம் பெரிய அசிங்கமான செய்கைகளாக அவளுக்குப்பட்டன. பண்பில்லாத அறிவு கெட்டவன் என்றவரைக்கும் அவனைப் பற்றிச் சின்ன வயதிலிருந்து அவள் மனதில் ஒரு வெறுப்பு.

"தொட்டுப் பேசாதே. போ, அந்தப் பக்கம். அப்பாவைக் கூப்பிடுவேன். அண்ணாகிட்டே சொன்னா உன் முதுகுத் தோலை பிச்சு விடுவார்."—அவளும் அந்தந்த சமயங்களில் பயமுறுத்தியிருக்கிறாள் அப்பா வேலை பார்த்த நிறுவனத்திலே அவன் விரைவில் தொழிலாளர்களைத் தூண்டிவிடும் மாபெரும் தலைவனாகி விட்டான்.

அந்த சமயம்தான் அத்தை மங்களாவைத் தன் மகனுக்கே கொடுத்துவிடும்படி...அண்ணனிடம் பெண் பேசினாள். அப்பா எடுத்த எடுப்பிலேயே மறுத்தார்.

"கற்பகம்...உன் பிள்ளையைப்பத்தி உனக்குத் தெரியாது. என் வேலைக்கே உன் பிள்ளை வெடி வைக்கிறான். யூனியன் லீடர்னு இவனுக்குப் பெரிய பதவி வந்துடுத்து. எனக்கெதிராக கொடி பிடிக்கிறான். இவனுக்கு நான் பெண்ணைக் கொடுத்துட்டா என்னைப்பத்தி ஒரு தப்பு அபிப்பிராயமே என் நிறுவனத்திலே ஏற்பட்டுடும்...அதனாலேதான் மங்களாவுக்கு வேறே இடத்திலே பார்த்து நிச்சயித்து இருக்கிறேன்."



அத்தை கற்பகத்திற்கு தாங்கமுடியாத கோபம். வஸந்த், அப்பாவை ஒழித்துவிடப் போவதாக சவால் கூறிவிட்டு அம்மாவுடன் வீட்டை விட்டே வெளியேறி தனியே வசிக்கத் தொடங்கினான். இரண்டு முறையும்... கல்யாண மாப்பிள்ளை இறந்து போய் கல்யாணம் நின்று ஊரார் பலவாறு பேசும்படியான பயங்கர நிலை ஏற்பட்டதும் அப்பாவே திகிலில் ஆடிப்போய் விட்டார்.

அப்போதுதான் வெட்கத்தைவிட்டு அத்தை கற்பகத்தைக் கேட்டார்.

"சரி மங்களாவை உன் பிள்ளைக்கே கொடுத்துடறேன் கற்பகம், இப்ப என்ன சொல்றே?"

"பேஷ்! எல்லோரும் வேண்டாம்னு உதறித் தள்ளிய உன் துக்கிரிப் பெண்ணை என் பிள்ளை தலையில் கட்டப் பார்க்கிறியா...? என் ஒரே பிள்ளை நன்னா இருக்கிறது உனக்குப் பிடிக்கலையா? உன் பொண்ணுக்கு மாங்கலியத்திலே சனி இருக்கு...எனக்கு வேண்டாம். என் பிள்ளைக்கு எத்த இடத்திலே நான் பார்த்துக்கிறேன்!"

முகத்திலடித்தாற் போல் அத்தை கொடுத்த பதிலைக் கேட்டும் அப்பா சளைக்கவில்லை.

மங்களாவுக்கு கல்யாணம் செய்து வைத்து விட வேண்டும் என்று ஒரே தவிப்பு.

"அத்தானை எனக்குப் பிடிக்கலை. ஏன் அப்பா, அத்தையைப் போய் கேட்டு அவமானப்பட்டேள்?" மங்களா சொல்லியதைக் கூட காதில் போட்டுக் கொள்ளவில்லை.

வஸந்தை வீட்டிற்கு வரவழைத்து தமது வயது, அந்தஸ்து எல்லாவற்றையும் மறந்து மங்களாவுக்கு வாழ்வு தரும்படி அவனை எப்படிக் கெஞ்சினார்? ஓங்கித்தலையில் அடித்துக் கொண்டு அழ வேண்டும் போன்று மங்களாவுக்கு அவமானமாக இருந்தது. அப்பா மேல் கோபமாகவும் இருந்தது.

வஸந்த் அதற்கு என்ன பதில் சொன்னான்?

"மாமா" நீங்க செய்திருக்கிற உதவிகளுக்கு ரொம்ப நன்றி அதுக்காக நான் தூக்குப் போட்டுக் கொண்டு சாக முடியாது. உங்க பொண்ணு கழுத்திலே தாலிக்கயிறு ஏறுமுன் என் கழுத்திலே யமனுடைய பாசக்கயிறு ஏறி விடும். ஹி...ஹி...மங்களாவுக்கு வேறே இளையாள் வரன் ஏதாவது பாருங்க...சில சமயம் அழகையும் பணத்தையும் பார்த்து யாராவது ஒத்துக் கொள்வார்கள்.

அன்று அப்பா அவனைக் கன்னத்தில் ஓங்கி அறையாது விட்டது தப்பு. இன்று ஏளனமாகப் பேசிவிட்டு நகர்ந்த இவன் கன்னத்தில் மங்களா ஓங்கி அறையாது போக விட்டதும் தப்பு, ஏன், மங்களா பெண்ணாகப் பிறந்ததே பெரும் தப்பு. திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள்... அண்ணா நகரில் அவள் இறங்க வேண்டிய நிலையத்திற்கு அதற்குள்ளாகவா வந்து விட்டாள்? என்ன இப்படி இருட்டி விட்டதே ஆமாம் அவள் வாழ்க்கையே அப்பாவுக்குப் பிறகு ஒரே இருட்டடிப்புத் தானே? கனத்த மனத்துடன் அவள் இறங்கி மெல்ல வீட்டை நோக்கி நடந்தாள்.

## 5

அன்று அவர்கள் அலுவலகத்தில் வேறு ஒரு பகுதியில் வேலை பார்த்து வந்த சிவசங்கரனுக்குத் திருமணம், விடியற்காலை முகூர்த்தம். மங்களாவைத் தவிர அலுவலகத்திலிருந்த அனைவரும் கல்யாணத்திற்குப் போயிருந்தனர். கல்யாணப் பரிசு வாங்க பணம் வசூலித்த டைப்பிஸ்ட் மாலினியிடம், மங்களா தன் பங்கு பத்து ரூபாய்களை ஏற்கனவே கொடுத்து விட்டிருந்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை என்றதினால் மன்னி அனுசூயா படுக்கையை விட்டு எழுந்து குளித்து விட்டுச் சமைக்கப் புறப்பட்டிருந்தாள். "மன்னிக்கு, உடம்பு தள்ளலை, கொஞ்சம் கூடமாட உதவிவிட்டு ஆபீஸிற்குப் போக லாம்." அண்ணா முன்னதாகவே உத்தரவு போட்டு விட்டிருந்தார்.



அதை அவளால் தவிர்க்க முடியவில்லை. "தலையை சுத்தறது...முதுகை ஏன் இப்படி கத்திரிக்கிறது?" முணு முணுத்தபடி சமையலறையில் வளைய வந்து கொண்டிருந்த மன்னிக்கு ஓடிஓடி உதவுவதிலே காலைப் பொழுது வேகமாகக் கரைந்து போனது.

கல்யாணத்திற்குப் போக வேண்டும் என்று அவள் வாய் தவறிக்கூட வீட்டில் சொல்லிக் கொள்ளவில்லை.

"அங்கே போய் நிற்பானேன்? உன் சங்கதி தெரிஞ்சவா ஆளுக்கு ஒண்ணு பேசுவா?" மன்னி பட்டென்று பதில் சொல்லி விடுவாள். அவள் பேச்சில் எப்போதும் நெருப்புத் தெறிக்கும். மேலும் அவளுக்கேகல்யாணங்களுக்குப் போவது பிடிக்காத விஷயமாகப் போய்விட்டிருந்தது. கடந்த சில ஆண்டுகளாக மற்றவர்கள் பார்வையினின்றும் ஒதுங்கி வாழத் தலைப்பட்டதினால் அவளுக்கு சமூகத்தில் பலரைத் தெரியா திருந்தது. தப்பித் தவறி அண்ணா மன்னியுடன் வேண்டியவர்கள் வீட்டுக் கல்யாணத்திற்குப் போக நேர்ந்து விட்டால் வேண்டா வெறுப்பாகத்தான் கிளம்புவாள்.

"உங்க தங்கைதானே? ஆமாம். இப்போ ஞாபகத்திற்கு வருகிறது" என்று குறிப்பாக யாராவது அண்ணாவிடம் கேட்டுவிட்டால் போதும். கூனிக் குறுகி பதறிப் போய் விடுவாள். அதற்குப்பின் முள்ளின்மேல் உட்கார்ந்திருப்பது போன்ற வேதனையுடன்தான் அங்கே அமர்ந்திருப்பது வழக்கம்.

ஏன் இந்த தண்டனை?

"நீதிபதி ஏகாம்பரத்து வீட்டுக்கல்யாணம். அண்ணாவைக் கட்டாயம் வரச் சொல்லியிருக்கா..." மன்னி அரை

மனத்துடன் அழைக்கும் பொழுதே மங்களா சட்டென்று மறுத்துவிடுவாள்.

"நான் வீட்டைப் பார்த்துக்கறேன். நீங்கள்ளாம் போய்ட்டு வாங்கோ."

அப்படி ஒரு திகில் உணர்வில் தவித்துக் கொண்டிருந்தாள். சிவசங்கரனது திருமணத்திற்கு அவள் போகத்தான் விரும்பவில்லை. ஆனால் வம்புக்கார பதஞ்சலியின் வாய் சும்மாவா இருந்தது

கல்யாண வீட்டுச் சாப்பாட்டை ஒரு கை பார்த்து விட்டு வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு மூச்சிறைக்க இருக்கையில் அமர்ந்து கொண்டார் பதஞ்சலி. வயிறு நிறைந்து விட்டிருந்தது. வம்புகளைக் கொஞ்சம் அவிழ்த்து விடாவிட்டால் மனம் நிறையாது போன்ற ஆதங்கம் அவருக்கு.

"...மாலினி! இங்கே வா." உரிமையோடு அழைத்தார் அவர்.

டைப் யந்திரத்தின் மேல் மூடியிருந்த பிளாஸ்டிக் உறையைக் கழற்றிக் கொண்டிருந்த மாலினி அதை வீசி அப்பால் போட்டுவிட்டு விரைவாக வந்தாள்.

"என்ன ஸார்"—பற்களைக் காட்டிப் பகட்டாகச் சிரித்தாள்.

"கல்யாணத்திற்கு நீ வந்திருந்தியோ?—கூட்டத்திலே உன்னைப் பார்க்கலையே?"

"வந்திருந்தேனே. நீங்க மாப்பிள்ளையைப் பிடித்துப் பலமாகக் குலுக்கிப் பாராட்டினதைப் பார்த்தபடி பக்கத்திலேதானே நின்று கொண்டிருந்தேன்."

"அப்படியா! நான் கவனிக்கலில்லை. கல்யாண மண்டபத்திலிருந்து நேரே வேலைக்கு வந்துட்டியா...? அடடா! இந்த ஆரஞ்சு பனாரஸ் சேலை உனக்கு ரொம்ப பொருத்தமா இருக்கு. உங்க அம்மாகிட்டச் சொல்லி



சுத்திப் போடச் சொல்லு. கண்பட்டுவிடப் போகிறது... ஹிஹி..." உரத்த குரலில் சிரித்தார்.

"தாங்க்யூ ஸார்...கல்யாணத்துக்கு எல்லோரும் வந்திருந்தாங்க. மிஸ் மங்களாதான்..."

அடிக்குரலில்தான் பேசினார்கள். ஆனாலும், ஃபைல்களை புரட்டிக்கொண்டு குறிப்பெடுத்துக் கொண்டிருந்த மங்களாவின் காதுகளில் தெளிவாகக் கேட்டது.

"அவ வரமாட்டான்னு தெரியும். ஏன்னா கல்யாணப் பெண்ணின் பெரியப்பா பிள்ளைதான் டாக்டர் சுகுமார்."

"டாக்டர் சுகுமாருக்கும் மங்களாவிற்கும் என்ன சம்பந்தம் ஸார்?"

"ஒரு சம்பந்தமும் வேண்டான்னு அந்தப் பையன் போயிட்டானே பாவம். புரியலையா உனக்கு? டாக்டர் சுகுமார்தான் மங்களாவுக்கு வந்த இரண்டாவது வரன். அவளைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கொண்ட துர்பாக்கியசாலி. பரதேச கோலத்திலே வாசல்படி அருகிலே மாரடைப்பில் செத்துப் போனவன்...டாக்டர் சுகுமார் குடும்பத்தை எனக்கு ரொம்ப நன்னாத் தெரியும்..."

ஃபைலை வேகமாக ஆத்திரத்துடன் புரட்டினாள் மங்களா. மூக்கும் முகமும் ஜிவ்வென்று பற்றி எரிந்தது. நெஞ்சிலே ஒரு படபடப்பு. பதஞ்சலி எத்தனை பெரிய பொய் சொல்கிறார்? டாக்டர் சுகுமார் பரதேச கோலத்தில் கல்யாண வீட்டு வாசல்படியில் மாரடைப்பால் சாகவில்லை.

கல்யாணத்திற்கு பத்து நாட்களுக்கு முன்பு...நிச்சயதார்த்தத்திற்குப் பின்னர் காமாலைக் காய்ச்சலில் செத்து போனது, குடும்பத்து நண்பர் பதஞ்சலிக்குத் தெரியாமல் போனது அதிசயம்தான்... கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டு ஃபைலில் காணப்பட்ட அந்த முக்கிய கடிதத்தை ஊன்றிப் படிக்க முயன்றாள். மனம் நிலைத்தால்தானே? உதறி எறிந்துவிட்டிருந்த அந்த பழைய

நினைவுகள் மீண்டும் அட்டைகளாக உள்ளத்திலே வந்து ஒட்டிக் கொண்டு அவளது உணர்வுகளை உறிஞ்சத் தொடங்கின. கண் இமைகளைக் கனத்த கண்ணீரை சிரமப் பட்டு அடக்கிக் கொண்டாள்.

நினைவின்றி அவள் அழித்துவிட்டிருந்த டாக்டர் குமாரின் முகம்...பைல்களின் பக்கங்களிலே நிழலாடியது.

அப்போது அவள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு விட்டில் தங்கியிருந்தாள். எப்படியாவது அந்த ஆண்டி லேயே அவளது திருமணத்தை முடித்துவிட வேண்டு மென்று அப்பா வரன் வேட்டையில் தீவிரமாக இறங்கியிருந் தார்.

அந்த தனியார் மருத்துவமனையில் நோயாளியாகப் படுத்திருந்த நண்பனைக் காணப்போன இடத்தில்தான் ஜகதீசனுக்கு டாக்டர் சுகுமாரின் அறிமுகம் ஏற்பட்டது. துடிப்பான அந்த இளம் டாக்டரின் பேச்சும் செயலும் அவருக்கு எடுந்த எடுப்பிலேயே பிடித்துப் போயின. அந்தஸ்திலே அவர்களுக்கு மிகவும் குறைந்த இடத்தில் ருந்து வந்தவன்தான். ஆனாலும் அப்பா ஒரே பிடியாக இருந்து விட்டார், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன.

"வருஷந்தோறும் தங்கப் பதக்கங்களும், பரிசுகளும் வாங்கிப் படிச்ச பிள்ளை. மேலே எம். எஸ். படிக்க ஆசைப் படறான். அவன் மேற்படிப்பை ஏத்துண்டு பின் னால் தொழில் துவக்க கிளினிக் வச்சுக் கொடுத்து உதவக் கூடிய இடமாகத்தான் பார்த்துண்டு இருக்கோம்"

பிள்ளையைப் பெற்ற தாய் சிறுவயதிலேயே விதவை யாகி விட்டவள், பரபரப்பாகப் பேசினாள்.

அவளது நிபந்தனைக்கு ஜகதீசன் கட்டுப்பட்டார்.

"வரதட்சிணை வாங்குகிறது எனக்குப் பிடிக்காத விஷயம். அதனால் பெண்ணுக்கு தேவையான வைரத் தோடுகள் இத்யாதிகளைப் போட்டால் போதும்..."



அப்பா சட்டென்று ஒப்புக்கொண்டார். பிரபலமான சர்ஜன் டாக்டர் சுகுமார் என் மாப்பிள்ளை என்று பெருமையடித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவருக்கு.

"அது இதுன்னு நான் கேட்கலை. ஆனால் எங்கள் மனசுக்குத் திருப்தியா கல்யாணத்தை விமரிசையா செய் துடுங்கோ. அது போதும்."

வருங்கால சம்பந்தி அம்மாளின் அடுத்த நிபந்தனைக்கு அப்பா ஜகதீசன் தலையைப் பலமாக ஆட்டி விட்டார். பின்னர் தான் மனத்திற்கு திருப்தி என்ற எல்லை எங்கே போய் நிற்கும் என்ற குழப்பம் ஏற்படத் தொடங்கியது.

"பெண்ணுக்கு ஒரு சின்ன வைர நெக்லஸ் செய்து டுங்கோ. டாக்டர் மாப்பிள்ளைக்கு இந்தக் காலத்தில் கிட்டத்தட்ட லட்சத்துக்கு மேல் வரதட்சிணை...சீர்னு செலவழிக்கிறா... நாங்கள் ரொம்ப கண்யமான குடும்பத்தி லிருந்து வந்தவர்கள். பெண் வீட்டாரைப் போட்டு பிழிஞ்சு எடுக்க மாட்டோம். நெக்லஸை மட்டும் மறந்துடா திங்கோ"

ஜகதீசன் அயர்ந்து போய் நின்ற போது, "யாருக்குக் கொடுக்கப் போகிறீர்? உங்கள் பொண்ணுக்குந்தானே?" என்ற கேள்வியைப் போட்டு மடக்கினாள்.

அம்மாவின் காசுமாலையை வைர நெக்லஸாக மாற்றி விடுவதென்று முடிவு கட்டிய அப்பா விரைவில் ஏற்பாடு செய்து விட்டார்.

இன்னும் கொஞ்சம் வெள்ளிப் பாத்திரங்கள்... இன்னும் கொஞ்சம் ஸ்டீல் உருப்படிகள்...பட்டியல் நீண்டு கொண்டு போயிற்று.

"தீபாவளிக்கு மாப்பிள்ளைக்கு வைர மோதிரம் தேவை யில்லை. அதற்குப் பதில ஒரு ஸ்கூட்டர் வாங்கிக் கொடுத்து விடுங்கோ. டாக்டர் தொழிலுக்கு ரொம்ப உபயோகமாக

இருக்கும்." சுகுமாரின் தாய் வழி மாமன் வந்து அப்பாவிடம் கிசுகிசுத்தார்.

தமது இன்ஷூரன்ஸில் கடன் வாங்கி சமாளித்து விடலாம் என்று அப்பாவுக்குத் தெம்பு. அதுக்கும் சரி என்று தலையை அசைத்தார்.

பெண் பாக்கும் வைபவமும் முடிந்தது. இருபக்கத்துப் பெரியவர்களும் தலையசைத்து ஆமோதித்த பின்னர் டாக்டர் சுகுமார்...தனக்கு வரப்போகும் மனைவியிடம் தனியாகப் பேச விரும்பினான்.

'பெரியவர்கள் கண்காணிப்புத் தேவையில்லை கல்யாணம் பண்ணிக்கொள்ளப்போகிற இருவரும் குழந்தைகள் அல்ல. பொறுப்பு நிறைந்தவர்கள். அதனால் கடற்கரையில் மங்களாவுடன் தனியாகப் பேசிப் பார்ப்பதில் அவருக்கு ஏதாவது ஆட்சேபணை உண்டா?" ஜகதீசன் மென்று விழுங்கினார். முடிவில் ஆகட்டும் என்று ஒப்புக் கொண்டார். தமது வருங்கால மாப்பிள்ளை தமது காரை ஓட்டிச் செல்லவும் அனுமதி தந்துவிட்டார்.

பெண் பார்க்க வந்தபோது மங்களா அவரைப் பார்த்திருந்தாள். மாநிறம், களையான முகம், புத்திசாலி என்று கேள்வி, அவ்வளவுதான் அவள் தெரிந்து கொண்டது. மற்றபடி பழக்கமில்லாத ஒரு புதிய மனிதன். அவனுடன் தனியே வெளியே சென்று பேசுவதா? அந்த ஏற்பாடு முதலில் சிறிய அச்சத்தைக் கொடுத்தது.

காரை தோட்டத்திலிருந்து கிளப்பி வெளியே சாலைக்குள் செலுத்திய சுகுமார் அவள் பக்கம் மெல்லத் திரும்பி முறுவலித்தான். "என்னோடு வெளியே வர பயமா இருக்கா?" கேலியாக மெல்லக் கேட்டான்.

மங்களா இப்போது ஒரு பட்டதாரி. இருபத்திரண்டு வயது இளம் பெண். பட்டென்று பதிலளிக்கக் கூடிய திறமை அவளிடம் இருந்தது.



"என்னை நான் பார்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்கும் போது நான் ஏன் பயப்படணும்?"

"சபாஷ் இந்த மாதிரியான பதில்தான் எனக்குப் பிடிக்கும்."- அவன் தனது வரிசைப்பற்கள் தெரிய வாய் விட்டுச் சிரித்தபோது மிகவும் களையாக, வசீகரமாகத் தென்பட்டான்.

அவள் மனம் பெருமையுடன் விம்மியது. எடுத்த எடுப்பிலே ஒரே பார்வையில் சில வார்த்தைகளிலேயே அவனை அவளுக்குப் பிடித்துவிட்டிருந்தது.

"மல்லிகையின் மணம் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.' சொல்லிக்கொண்டே காரை நிறுத்திவிட்டு அவளது கூந்தலை அவன் உற்றுப் பார்த்தான். சுமையாக அவள் மல்லிகை மலரைச் சூட்டிக் கொண்டிருந்தாள். "ஆஸ்பத்திரி வாசனை கம்னு வீசுமோன்னு தற்காப்புக்கு மல்லிகையைத் தலையில் வச்சுண்டு வந்தேன்னு நினைக்கிறேளா?"

"ரொம்ப வேடிக்கையாகப் பேசறியே?" புகழ்ந்தபடி அவன் இறங்கிக் காரின் கதவைச் சாத்த குனிந்த போது. அவனது நெருக்கம் இனிமையாக. இதமாக இருப்பதை உணர்ந்தாள்.

## 6

பெரியோர்களின் கண்காணிப்பு இல்லாத நிலையில் மணல் பரப்பிலே அவன் அருகில் மங்களா உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஆனாலும் மிகவும் கண்ணியமாகத்தான் நடந்து கொண்டான். அத்தான் வஸந்திற்கு மட்டும் அப்படி ஒரு சந்தர்ப்பம் கிட்டியிருந்தால் அவள் தோளை ஆயிரம் தடவை தட்டிப் பேசியிருப்பான், கைகளைப் பலதடவை ஆசையுடன் பிடித்துக் கொண்டிருப்பான். மறந்தும் சுகுமார் அவள் மீது ஒரு தடவைகூட நடக்கும்

போது இடித்துக் கொள்ளவில்லை. அவனது பண்பான நடத்தை அவளை வெகுவாகக் கவர்ந்து கொண்டு விட்டது. ஆரம்பத்திலிருந்த கூச்சம் மறைந்து அவனிடம் மனம் விட்டுப் பேசும் துணிவும் உற்சாகமும் விரைவில் ஏற்பட்டு விட்டன.

இருவரும் வெகுநேரம் இருட்டி விட்டதைக்கூடக் கவனிக்காது உட்கார்ந்திருந்தனர்.

சுகுமாரின் பேச்சைக் கேட்டு அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். பின்னர் சிந்திக்கவும் செய்தாள். எத்தனை சுவையாக, வேடிக்கையாக, கண்ணியமாக... அறிவுடன் திறமையாகப் பேசத் தெரிந்து கொண்டிருந்தான்? அதற்குப் பின்னர் பலமுறை இப்படிப்பட்ட சந்திப்புகளுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டன.

அப்பொழுது ஒரு தடவை அவளிடம் அவன் சொன்னான்: "சின்ன வயசில் நான் அப்பாவை இழந்து விட்டேன். அதனால அம்மாதான் எனக்கு எல்லாம் என்கிற நிலை. அம்மா பெண்கள் பள்ளி ஒன்றில் ஆசிரியராக இருந்தபடியே என்னை வளர்த்துப் படிக்க வச்சு ஆளாக்க ரொம்பப் பாடு படடுவிட்டாள். நான் புகழ் பெற்றதொரு டாக்டராகி சீரும் சிறப்புமா வாழணும்கறது அவளது குறிக்கோள். அந்த ஆசையினால் உன் அப்பாகிட்ட சில அதிகப்படியான விஷயங்களை எதிர்பார்க்கலாம். அதைப்பற்றி இப்போது என் தர்க்கம்னு நான் மௌனமாக இருக்கேன். உண்மையைச் சொல்றேன். என் வருங்காலத்தை நானே என் திறமையால் உருவாக்கிக்க ஆசைப்படறேன். யார் உதவியையும் நான் நாட மாட்டேன். என்னை நீ சரியாப் புரிஞ்சுக்கணும்கிறதுக்குத்தான் உன்னைத் தனியே சந்தித்துப் பேச ஆசைப்பட்டேன்."

"உங்க மனசு எனக்குப் புரிகிறது"-உள்ளம் நெகிழ்ந்து போய்விட்டாள் மங்களா.

"உங்கப்பா உன்னை எனக்குக் கல்யாணம் செய்து கொடுக்கிறதையே பெரிசா நான் நினைக்கிறேன். அதுக்கு மேலே நான் எதுவும் எதிர்பார்க்கலை."



மங்களாவுக்கு அவனை மிகவும் பிடித்துவிட்டது. எத்தனை நல்ல மனம் இவருக்கு. பூரித்துப் போய் விட்டாள்.

நிச்சயதார்த்தத்தின் போது அப்பா மாப்பிள்ளைக்கு உடைகளுக்கு என்று தட்டில் கனமானதொரு கடித உறையை வைத்தார். அதைத் தன் கையால் தொடவும் கூட அவன் மறுத்து விட்டான். ஜகதீசனும் பிடிவாதமாக இருந்தார்.

"உங்களுக்கு டிரஸ் வாங்கிக் கொள்ள முடியாதுங்கறதுக்காகவா இதைக் கொடுக்கிறேன். இதெல்லாம் ஒரு பந்ததி மாப்பிள்ளை மறுக்காம எனக்காக எடுத்துக்கணும்." வற்புறுத்தி காகித உறையை அவன் கையில் திணித்தார்.

நிச்சயதார்த்தம் ஆன பின்பு சில தினங்கள் கழித்து அவனுக்கு நல்ல காய்ச்சல் வாந்தியும் வயிற்று வலியும் அதிகமாகிவிடவே, அவன் வேலை பார்த்து வந்த அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான்.

"வெறும் ஃப்ளு காய்ச்சல். ரெண்டு நாளில் சரியாகிவிடும். டாக்டர் இல்லையா? அதுதான் இந்தத் தடபுடல்' என்று தான் ஜகதீசன் நம்பிவிட்டார். விரைவில் காரியங்களில் மும்முரமாக இறங்கிவிட்டிருந்தார்.

திருமண அழைப்பிதழ்களை அச்சகத்திலிருந்து எடுத்து வந்து அப்பா மேஜைமீது வைத்தார். கல்யாண மண்டபத்திற்கு—நாதஸ்வரத்திற்கு—சமையல் ஆட்களுக்கு—என்று எல்லா ஏற்பாடுகளையும் முடித்துவிட்டு களைப்புடன் அண்ணா அப்போது தான் வீட்டிற்குள் நுழைந்தார்.

புதிதாக வாங்கியிருந்த நெக்லஸை அழகு பார்த்துக் கொண்டு மாடியறையில் உட்கார்ந்திருந்தாள் மங்களா. கீழே பலருடைய பேச்சுக் குரலைக் கேட்டு சட்டென்று நகையைப் பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு அவசரமாக மாடியிலிருந்து ஓடி வந்தாள்.

குமுறிக் கொண்டிருந்த அழுகை தாங்க முடியாது அப்பா மேல்துண்டால் வாயைப் பொத்திக்கொண்டு குலுங்குவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

மன்னிதான் அந்த அவலச் செய்தியை அவளிடம் சொன்னாள்.

"மாப்பிள்ளைக்குக் காமாலை காய்ச்சலாம். ரொம்ப முத்திப் போய்விட்டதாம். இன்னிக்கு விடியற்காலை ரொம்ப அதிகமாய்ப் போயிடுத்தாம்."

"இப்போ எப்படி இருக்கார் மன்னி?" மங்களா பதறினாள்.

"இனி பிரயோசனமில்லையின்னு வீட்டுக்கு எடுத்துண்டு வந்துட்டாளாம். சித்த முன்னேதான் உயிர் பிரிஞ்சுதாம்..." பேச முடியாது அவள் தடுமாறினாள்.

"பொய்! நீங்க சொல்றது பொய். நம்ப மாட்டேன். சுத்தப் பொய்"—மங்களா ஆவேசம் வந்தவள் போலக் கத்தினாள். உடனடியாக ஓவென்று அலறி அழுதாள். கல்யாணமாகிப் பல ஆண்டுகள் வாழ்ந்துவிட்டுக் கணவனை இழந்து விட்டவள் போன்று தாங்க முடியாத துயரத்திலே அவள் துடிதுடித்து அழுதாள். யார் சமாதானப்படுத்தியும் அவள் சட்டென்று ஆறுதல் அடையாது வெகு நேரம் அழுது கொண்டிருந்தாள்.

ஆமாம்! அவள் டாக்டர் சுகுமாரை மெல்ல நேசிக்கத் தொடங்கியிருந்தாள். அவனைப் புரிந்து கொண்டு அவனுடன் இணைந்து பல்லாண்டு காலம் வாழப் போவதாக அவள் கட்டியிருந்த கனவுக் கோட்டை, இடிந்து பொடிப் பொடியாகி விட்ட அதிர்ச்சியைத் தாள முடியாது அவனை நினைத்து நினைத்து அவள் பல நாட்கள் அழுதாள். சுகுமார் காமாலைக் காய்ச்சலில் மரணமடைந்ததற்கு அவளா பொறுப்பு? இதே வேறு விதமாக அமைந்திருந்தால்?

மங்களாவுக்குக் காமாலை காய்ச்சல் வந்திருந்து, அவள் கல்யாணத்திற்கு முன்னால் இறந்துவிட்டிருந்தால்?

சுகுமாரின் அதிர்ஷ்டத்தைப்பற்றிப் பரவலானதொரு விளம்பரம் ஏற்பட்டிருக்குமா?



மேளதாளத்துடன் அடுத்த முகூர்த்தத்திலேயே வேறு ஒருத்தி மாலையிட்டிருப்பாளே!

அதிர்ஷ்டம் என்பதில்கூட ஆணுக்கு ஒரு நியாயம், பெண்ணுக்கு ஒரு நியாயமா? மனிதர்களுக்கு ஏன் இப்படி ஒரு வித்யாசமான பார்வை? தனக்குள் பலவும் எண்ணி வெகுண்ட மங்களா, மேசை மீதிருந்த மணியை ஓங்கி அடித்தாள்.

ஓடிவந்து நின்ற பையனிடம் பலத்த குரலில் கத்தினாள்.

"இந்தப் ஃபைல்களை மானேஜர் அறையில் கொண்டு வை. இவைகளைக் கொண்டு அந்தக் கணக்கர் மேசை மேலே போடு. மத்தவங்க வேலையைப் பார்க்க நான் ஒண்ணும் ஏமாந்தவ இல்லேன்னு அவர் தெரிஞ்சுக்கட்டும் போ—எடுத்துண்டு சீக்கிரம் போ." அடிபட்ட புலியாகக் கோபத்துடன் சீறினாள்.

தாயில்லாத பெண் என்று அப்பாவுக்கு மங்களா மீது அதிகமானதொரு பரிவு. அதனால் அவள் அவரது உயிராகி விட்டிருந்தாள்.

"குழந்தைக்குக் கார் அனுப்ப மறக்காதே, பள்ளிக்கூடம் கிட்டதான் இருக்கு ஆனால் அவள் நடந்து வர வேண்டாம். அந்தப் பக்கம் போக்குவரத்து நெரிசல் அதிகம், எனக்கே பார்க்க தலை சுத்தறது. குழந்தை வண்டிகளைத் தாண்டிக்கொண்டு எப்படி வருவா? பத்திரம். மறந்துடாதே."—மருமகள் அனுசுயாவை அப்பா தினமும் எச்சரிப்பது வழக்கம்.

"சங்கரா! குழந்தை பசியோடு வந்திருக்கா சீக்கிரம் காப்பியையும் டிபனையும் எடுத்துண்டு வா. உன் கதை எல்லாம் அப்புறம் பேசிக்கலாம்." சமையற்காரரிடம் சத்தம் போடுவார்.

"தலைவலியா அம்மா? அடடா! லேசா ஜுரம்கூட அடிக்கிறதே டாக்டர் கணேசனுக்குப் போன் பண்றேன்.

நீ இன்னிக்குக் காலேஜ் போகவேண்டாம். பேசாம படுத்துக்கோ..." அன்போடு கடிந்து கொள்வார்.

"இந்தா. உன் பிறந்த நாளுக்குப் பிடிச்சதை வாங்கிக்கோ..." ரகசியமா இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை அவள் கைகளில் வைத்து அழுத்திவிட்டுப் பரிவோடு மகளை பார்த்துப் பூரித்துப் போவார்,

"அம்மாவை அப்படியே உரிச்சிண்டு வந்திருக்கே. அவளாட்டாமே மூக்கிலே கோபம்கூட வந்துடறது...ம்...' தமக்குள்ளே சொல்லிக் கொண்டு...மெல்லச் சிரித்துக் கொள்வார். எத்தனை பெருமை அவருக்கு அவளைப் பற்றி...!

இப்படிக் கொஞ்சிக் கொண்டாடிப் பாசமும் நேசமுமாக அவளை வளர்த்தார் அப்பா,

ஆனால் அண்ணா அதுக்கு நேர் எதிர். சின்ன வயதிலேயே அவளுக்கு அண்ணா சீதாராமனைக் கண்டால் ஒரு நடுக்கம்.

"ரேடியோவை ஏன் இப்படி அலற விடறே-வீட்டிலே மத்தவா இருக்கிற நினைப்பு இல்லையா?" எழுந்து வந்து அவள் அறைக்குள்ளே எட்டிப் பார்த்துவிட்டு அண்ணா உறுமுவார்.

"அப்பா சொன்னார்னு அடுப்பங்கரைப் பக்கமே தலை காட்டாம நாள் முழுவதும் நாவல் படிச்சிண்டு இருந்தா போறுமா? நாளைக்கு வரவன் சமைக்கத் தெரியுமான்னு கேட்டா? எப்பவும் சமையலுக்கு ஆள், பங்களா-கார்ன்னு வாழ்ந்துட முடியும்னு கனவு வேண்டாம். சாதாரணமாக இருந்துக்க தெரிஞ்சுக்கோ." அண்ணா இரைந்து கத்துவார்.

அண்ணாவின் அதட்டல் உருட்டல்களைக் கேட்டு மிரண்டு போய் அவர் குரலைக் கீழே கேட்டதுமே மாடியிலிருக்கும் தன் அறைக்குள் சென்று பதுங்கிக் கொள்ளும் பயந்தவளாக-பதில் பேசத் தெரியாத கோழையாகத்



தான் வளர்ந்தாள். அந்தக் குணம் இத்தனை வயதாகியும் அவளை இன்னமும் விடவில்லை. அண்ணாவிடம் அவளுக்குக் கொஞ்சம் பயம்தான்.

மன்னி அனுசுயாவிடம் மட்டும் அவள் தனியாக இருக்கும் போது... எதிர்த்துப் பேசத் தொடங்கிவிட்டிருந்தாள். அதுவும் வேலைக்குப் போக ஆரம்பித்த பின்னர் ஏற்பட்ட புதுத் தெம்பில் தான் பட்டென்று பதிலளிக்கத் தெரிந்து கொண்டிருந்தாள். அந்தச் சனிக்கிழமை காலை, அவள் வேலைக்குக் கிளம்புமுன் அனுசுயாதான் ஆரம்பித்தாள்.

"இன்னிக்குப் பகலோட உன் வேலை முடிஞ்சிடுமில்லையா! சீக்கிரம் வீட்டுக்கு வந்துவிடு. நானும் அண்ணாவும் சினிமாவுக்குப் போகப் போறோம்."

"போங்க, அதுக்கு நான் ஏன் சீக்கிரம் வரணும்?" மங்களா சிடுசிடுத்தாள்.

"வீட்டை யாராவது பார்த்துக்க வேண்டாமா?"

"வீடு இங்கேதான் இருக்கும். எங்கேயும் ஓடி விடாது..."

"இப்படி எகத்தாளமாகப் பேச வேண்டாம். உங்க அண்ணா காதில்பட்டா வீண் பொல்லாப்பு. இப்போ எல்லாம் வீட்டைப் பூட்டிண்டுப் போகிறதுக்குப் பயமாக இருக்கு. எங்கே பார்த்தாலும் திருட்டாக இருக்கு அதனாலே..."

"மன்னி! எனக்கும் இன்னிக்கு மத்தியானம் கொஞ்சம் வேலையிருக்கு. லதா தன் வீட்டுக்கு டிபன் சாப்பிட கூப்பிட்டிருக்கா..."

"அந்த வாய்ப்பட்டி லதாவோட வீட்டுக்கு இன்னிக்குப் போகட்டா என்ன? அவள் அரட்டை பேச்சும்—அவ போட்டுக்கிற வேஷமும் யாருக்குப் பிடிக்கிறது?"

"எனக்கு அவளை ரொம்பப் பிடிக்கிறது. நான் வரேன்..." கோபத்துடன் சொல்லிவிட்டு தோளில் பையும், கையில் குடையுமாக வெளியேறி விட்டாள். வாசலுக்கு வந்த பிறகுதான் மனதிலே கொஞ்சம் பதட்டம் ஏற்பட்டது.

அண்ணாவிடம் மன்னி கட்டாயம் சொல்லுவாள். வீடு திரும்பும்போது மாலை ஒரு மண்டகப்படியை எதிர் பார்க்க வேண்டி வரும்.

ஆனால் அவள் முன்னதாக லதாவிடம் செய்த ஏற்பாடு என்னவாகிறது? அவளுக்கென்று கொஞ்ச நேரம் ஒதுக்க முடியாது. அலை ஓய்ந்து சமுத்திரத்தில் ஸ்நானம் செய்யக் காத்திருப்பவன் போன்ற அலைச்சலான வாழ்க்கை...சே... ...அவள் மன்னிக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது. முன் ஏற்பாடுப்படி லதாவை அவள் அன்று சந்தித்தாக வேண்டும். தெருவில் இறங்கினாள்.

"பெரிய என்கேஜ்மென்ட்? தலை போயிடும் போல பேசறாள்?" மன்னி இரைந்து பேசியதைக் காதில் போட்டுக் கொள்ளாது வேகமாக நடந்தாள்.

லதாவின் ஏற்பாடுப்படியே அன்று பகல் வேலை முடிந்ததும் அவள் ஸ்வப்பனா சட்டிங் ஹவுஸில் முன்னால் தயாராக நின்றாள். லதா குறித்த நேரத்தில் வந்து சேர்ந்து விட்டாள். இருவருக்கும் நல்ல பசி.

"இன்னிக்கு உனக்கு இந்த சட்டிங் ஹவுஸில் என்னால் டிபன் வாங்கித்தர முடியாது. அடிக்கடி இங்கே சாப்பிடுவது நமக்குக் கட்டுப்படியாகாது. அதனாலே காலையிலேயே ஆபீசிற்குப் புறப்படுமுன் அடைக்கு அரைத்து வச்சுட்டு வந்திருக்கேன். அப்படி ஒண்ணும் அது புளிச்சுப் போயிருக்காது நேரோ என் வீட்டுக்குப் போகப் போறோம். என்ன சொல்றே?"

"எனக்கு அடை புளிச்சிண்டு இருந்தா ரொம்பப் பிடிக்கும். பஸ்வரதான்னுபார்." மங்களா சிநேகிதியுடன்



கூடச் சிரித்தாள். லதாவுடன் பேசும் போதும்—சிரிக்கும் போதும் மனது எத்தனை லேசாகி விடுகிறது? ஏன்?

'வீட்டில் அண்ணா, மன்னியிடம் மட்டும் உணர்வுகள் ஏன் அப்படி பாறையாக இறுகிப் போய் மூச்சை அடைப்பது போல நெஞ்சு சுமையாகி விடுகின்றதே... ஏன்?' வியப்புடன் அவள் தோழியின் பின்னால் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

லதா திருவல்லிக்கேணி வாசி. பஸ் நிலையத்திற்கு சற்றுத் தூரத்திலிருந்த நெருக்கமானதொரு தெருவில் அவர்கள் வீடு இருந்தது. சின்னஞ்சிறு ஓட்டுக்கட்டடம். அதற்குள் மூன்று குடித்தனங்கள். முன் பகுதியில்தான் லதாவும், அவள் தாய் காமுவும் வசித்துக் கொண்டிருந்தனர். இரண்டு சிறு அறைகள். இடையே கூடம், பொது முற்றம் பொது நடை, பொதுக் குளியலறை—இத்யாதி கொண்ட சிறு குடியிருப்புப் பகுதி. மங்களா பல முறை அங்கு போயிருக்கிறாள். அந்தச் சின்னஞ்சிறு இடத்தை லதாவின் நோயாளித் தாயார் மிகவும் சுத்தமாக வைத்திருப்பதைக் கண்டு வியந்திருக்கிறாள்.

"வாம்மா, மங்களா!" அவளைக் கண்டதும் காமு மலர்ந்த முகத்துடன் எப்போதும் போல் வரவேற்றாள்.

இங்குமங்கும் நரை பட்டையிட்ட கருத்த முடி, நலிந்த உடல். ஆனாலும் அந்த அம்மாளின் கண்களில் மிதந்த கனவு ஒன்றே மங்களாவின் மனத்தை நிறைத்து விடுவதுண்டு. இறந்து போன அவள் தாயை அவளுருவில் பார்ப்பது போன்றதொரு உணர்வுகளில் அவள் உள்ளம் உருகிப் போவது வழக்கம்.

"இப்போ உங்களுக்கு உடம்பு எப்படியம்மா இருக்கு?" விசாரித்தபடி செம்பிலிருந்த நீரை எடுத்து முற்றத்திலே கால்களைக் கழுவிக் கொண்டாள்.

லதாவின் அன்னை தனக்குள்ளே மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

"யார் புண்ணியமோ, பத்து நாளா வயத்திலே வலியில்லாமே நன்னா நடமாடிண்டு இருக்கேன். உட்காரும்மா... லதா நீயும் கை கால்களை அலம்பிண்டு வந்து உட்கார்..." உத்தரவிட்டாள்.

தையல் இலைகளிரண்டை கூடத்திலே பரப்பி தண்ணீர் தெளித்து விட்டு லதா, மங்களாவுடன் உட்கார்ந்தாள். அடுப்பிலே வெந்து கொண்டிருந்த அடையின் மணம் நாவிலே நீர் சுரக்கச் செய்தது. மங்களாவின் பசி அதிகரித்தது.

"நீ டிபன் சாப்பிடப் போறதாக லதா சொன்னாள். தோட்டத்திலேயிருந்து இரண்டு முருங்கைக் கீரையைப் பறிச்சு உருவி அலம்பிட்டு மாவில் போட்டு வார்த்திருக்கேன். அடை, நெய் மணம் மணத்துண்டு மொறு மொறுன்னு எப்படியிருக்கு பார், தொட்டுக்க வெல்லப் பச்சடியும் வச்சிருக்கேன். நிதானமா இரண்டு பேரும் சாப்பிடுங்கள். இப்போ பால்காரன் வந்துடுவான். சூடா காப்பி போட்டுத் தரேன். வேலை செய்கிற குழந்தைகள் நன்னா சாப்பிடணும். இன்னும் கொஞ்சம் பச்சடி போட்டுக்கோம்மா." காமுவின் உபசரிப்பு மனத்திற்கு இதமாக இருந்தது. அவள் சூடாக வார்த்துப் போட்ட அடை ருசியாகத்தான் இருந்தது தோழியுடன் பேசிச் சிரித்தபடி, அடையை மெல்ல சுவைத்துச் சாப்பிட்டாள். காப்பியும் சூடாக வந்தது. குடித்து விட்டுச் சிறிது நேரம் இருவரும் கதைகள் பல பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர்

நான்கு மணி அளவில் தோழியை உசுப்பினாள் லதா. இருவரும் முற்றத்திலேயிருந்த வாளியிலிருந்து நீரை செம்பில் முகர்ந்து முகத்தைக் கழுவிக் கொண்டனர். கூடத்துச் சுவரில் தொங்கிய சிறிய கண்ணாடியில் பார்த்துத் தலையை வாரி சீராக்கிக்கொண்டு, பவுடர் பூசி, பொட்டு வைத்துக் கொண்டு தயாராகினர்.



"அம்மா கொஞ்சம் மங்களாவோட வெளியில் போயிட்டு வரேம்மா..." லதா சொல்லிக்கொண்டு புறப்பட்டாள். எங்கே எதற்கு என்று காமு அம்மாள் மகளை ஒரு கேள்வியும் கேட்கவில்லை. புன்னகையுடன் மௌனமாக விடை கொடுத்தாள்.

தோழிகள் இருவரின் வீட்டுச் சூழ்நிலையில்தான் எத்தனை வித்தியாசம்?

"நாம் போகிற இடம் அதிக தூரமில்லை...பக்கத்துத் தெரு. இந்த வேளையில் கூட்டம் ஏதும் இருக்காது."
—சொல்லிக் கொண்டே லதா நடந்தாள்.

மங்களாவுக்குள் ஒரு பரபரப்பு. பரீட்சைக்குப் போகும் மாணவி போன்று ஒரு பயம்கூட. பலமுறை முகத்தை கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

அதுவும் ஒரு பழங்காலத்துக்கட்டடம்; ஆனால் மாடி வீடு. வராந்தாவை அடைத்த நெருக்கமான கம்பிக் கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்ததும், ஒரு வாலிபன் எதிர்ப்பட்டான்.

"மாடியில் இருக்கார். செருப்புகளை இங்கேயே விட்டுடுங்கள்" என்று கூறிவிட்டு "இந்தப் பக்கம் படிகள்!" என்று கையைக் காட்டினான்.

மாடிப்படிகளின் வளைவிலே செருப்புகளை விட்டு விட்டு இருவரும் மேலே சென்றனர்.

உள்ளே நுழைந்ததும் இருந்த பெரிய ஹாலில் இரண்டு மூன்று மர பெஞ்சுகள் கிடந்தன. ஒன்றின் மீது இரண்டு ஆண்கள் உட்கார்ந்திருந்தனர். ஹாலை ஒட்டியிருந்ததொரு பெரிய அறையிலிருந்து வெளிப்பட்ட ஊதுவத்தியின் மணம் மூக்கைத் தாக்கியது.

காலியாகக் கிடந்த ஒரு பெஞ்சியின் மேல் தோழிகள் இருவரும் உட்கார்ந்தனர். உள்ளேயிருந்து மஞ்சள் தடவின கடித உறையைப் படித்துக்கொண்டு மலர்ந்த முகத்துடன் வெளிப்பட்ட ஒரு அம்மாள் அவர்களைத் தாண்டிக்கொண்டு கீழே விரைந்தாள். அடுத்ததாக உட்கார்ந்திருந்த இருவரும் உள்ளே சென்றனர். உள்ளேயிருந்த கரகரத்த பேச்சுக் குரலில்...லக்கனம் ராசி என்ற வார்த்தைகள் அடிப் பட்டன. அரை மணிக்கு மேல் நேரத்தை ஆக்கிரமித்து விட்டு அந்த இருவரும் வெளியேறியதும் லதா மங்களா வுக்கு சைகை செய்துவிட்டு முன்னால் அறைக்குள் நுழைந்தாள்.

வெள்ளிக் குமிழிட்ட கருங்காலி பலகை மீது கனத்த மனிதர் ஒருவர் அமர்ந்திருந்தார் ஐம்பது வயதிருக்கும். கிராப்பு முடி முழுவதிலும் பரவலான நரை, உடம்பிலும் நெற்றிமீதும் விபூதிப்பட்டைகள், நெற்றிப்பட்டைமீது பெரிய சொரு குங்குமப் பொட்டு. காதுகளில் வெள்ளைக் கடுக்கன். திறந்த மார்பில் பூணூலுடன் பெரிய அளவில் தங்கப் பூண் வைத்த ருத்திராட்சமாலை. ஜோசியர் பார்க்க கன கம்பீர மாகத் திகழ்ந்தார். சுவரில் தொங்கிய தெய்வப்படங்களைப் பார்த்தபடி மெல்ல தோழிகள் இருவரும் அவர் எதிரே தரையில் அமர்ந்து கொண்டனர். தயாராக கொண்டு வந்த பிறந்த தேதி-மாதம் முதலிய குறிப்புகள் கொண்ட காகிதத் துண்டைக் கையிலிருந்து எடுத்துப் பணிவாக அவர் முன் வைத்தாள் லதா.

ஜோசியரின் பிரஷ் புருவங்கள் மேலே உயர்ந்தன.

"இவள்தான் மங்களா. இவளுக்குத்தான் ஸார்..." லதா அறிமுகப்படுத்தியதும் அருகில் கட்டுகளாக அடுக்கி யிருந்த பழைய பஞ்சாங்கங்களைப் புரட்டி சட்டென்று தேடியதைத் தேர்ந்தெடுத்தார். தரையில் மடக்கி வைத் திருந்த கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு கவன மாகப் பார்த்துப் படித்தார். ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து தமது தொடைமீது வைத்துக்கொண்டு, தமக்குள்



முனகியபடி கோடுகளை இழுத்து, கட்டங்கள் வரைந்து, சூரியன்—செவ்வாய்—ராகு—புதன் எல்லோரையும் அவை களுக்குள் அடைத்தார்.

"மேஷ ராசி...இப்போ நடக்கும் சூரியன் தசை நற் பலனை அதிகம் அளிக்கிறது, பின்னர் வரும் சந்திரன்—செவ்வாய்—ராகு..." கரகர வென்ற குரலில் அவர் பேசியதை வெட்டி குறுக்கிட்டாள் லதா.

"ஸார். இந்தப் பெண்ணுக்கு கல்யாணம் எப்போ ஆகும், எப்படியாகும்னு கொஞ்சம் பார்த்துச் சொல் லுங்கோ......"

"இந்த ஜாதகப்படி ஏற்கனவே கல்யாணமாகியிருக்க ணும். இல்லாட்டா தடைபட்டிருக்கணும். சமீபத்திலே நடக்கறாப்பல இல்லையே......

கர்ம—லாபாதிபதியாகிய சனி லாப ஸ்தானத்தை நோக்குவதாலும் லக்னாதிபதி செவ்வாய்—சகாயபதி புதன் இவர்களுடைய கேந்திரத்தில் இருப்பதாலும்......"

மங்களாவுக்கு தலை சுற்றியது.

"ஸார். முக்கியமாகத் தெரியவேண்டியது, கல்யாணம் சீக்கிரம் நடக்குமா நடக்காதாங்கிறதுதான் ஸார். மற்ற தெல்லாம்..." அலுப்புடன் லதா கேட்டாள்.

"இந்த ஜாதகக்காரருக்கு திருமண பாக்கியத்தை அத்தனை விசேஷமாகச் சொல்ல முடியாது. ரொம்பநாள் கழிச்சுக் கல்யாணம் ஆனாலும் ஆகும்...ஆகாமல் போனா லும் அதிசயப்படறதுக்கில்லே..."

மங்களாவுக்கு துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது. மற்ற விஷயங்களை மேலே கேட்க விரும்பாது கலக்கத்துடன் தோழியைப் பார்த்தாள்.

'விலாசத்தைக் கொடுத்துட்டுப் போனா, பலன்களை வரிசைக் கிரமமா எழுதி அனுப்பறேன்...'

மணிபர்சைத் திறந்து லதா அவர் முகத்தை ஆவலுடன் பார்த்தாள்.

"விஸ்தாரமா பலன்களை எழுதிக் கொடுக்கிறதுக்கு இருபது ரூபாய்கள் எடுத்துக்கிறேன்..."

பணத்தை எண்ணி அவர் முன் வைத்துவிட்டு தோழியின் தோளைத் தொட்டு எழுப்பியபடி கிளம்பினாள்.

வெளியே வந்த லதா—"ஏன் அப்படி சிரிக்கிறே' என்னைப்பத்தி அவர் சொன்னதைக் கேட்டு உனக்கு சிரிப்பா வரது?"—மங்களா முகம் வாடிப்போனாள்.

"இல்லை. பல வருஷங்களுக்கு முன் அம்மா ஐம்பது ரூபாய் செலவழித்து எல்லாம் பிரபலம்னு சொன்ன ஒரு ஜோசியரிடம் என் ஜாதகத்தைக்காட்டி பலன்களை எழுதி வாங்கிக் கொண்டா...அதுபடி நான் பதினாறு வயசிலே கல்யாணமாகி—நாலு குழந்தைகளுக்குத் தாயாகியிருக்க வேண்டும். சுத்தமா எனக்குப் படிப்பு வராதுன்னு ஜோசியர் அடிச்சுச் சொல்லியிருந்தார் உன்னோட படிக்கிறச்சே உன்னைவிட அதிக மார்க்குகள் வாங்கி நான் படிச்சு பட்டதாரியாகியிருக்கேன். இன்னமும் கல்யாணமாகவில்லை. வேலை செய்து என்னைக் காப்பாத்திக்கிறேன். அவர் சொன்ன ஒண்ணுகூட பலிக்கலை. அதை நினைச்சுச் சிரிச்சேன். அவ்வளவுதான்..."

"அப்படின்னா உனக்கு ஜோசியத்திலே நம்பிக்கையில்லையா?"

"ஜோசியத்தை நம்பறது நம்பாதிருப்பது என்பது தர்க்கத்துக்குரிய பெரிய விஷயம். என்னைப் பொறுத்தவரை என் வருங்காலத்தை நானே என் உழைப்பால் உருவாக்கிவிட முடியும் என்கிற நம்பிக்கை..."

"பின்னே என்னை மட்டும் ஏன் ஜோஸியரிடம் அழைச்சுண்டு வந்து இருபது ரூபாய்க்கு செலவு வச்சே?"—சிறிது கோபத்துடன் கேட்டாள் மங்களா.



"வாழ்க்கையில் நாம் கற்றுக் கொள்கிற பாடத்திற்கு காணிக்கை ஏதாவது தந்தாக வேண்டும். சில சமயம் நமது உணர்வுகளைத் தருகிறோம்—சில சமயம் பணத்தைக் கொடுத்துப் பாடத்தை ஏற்கிறோம்.

நமது வருங்காலத்தை நமக்கு இன்னொருத்தர் எடுத்துச் சொல்லணுமா? நமக்குத் தெரியாதா...என்கிற நம்பிக்கை உன் மனசிலே திடமாக ஏற்படத்தான் கூட்டி வந்தேன்.

இது ஒரு விதமான ஷாக் டிரீட்மெண்ட்னு வச்சுக்கோ ...வாழ்க்கை கற்றுக் கொடுக்கப் போகும் நம்பிக்கை என்கிற பாடத்திற்கு குருதட்சிணைன்னு நினைச்சுக்கோ"—லதா சிரித்தபோது மனம் லேசாகி மங்களாவும் சிரித்து விட்டாள்.

## 7

அன்று அவள் வீடு திரும்பும் பொழுது நன்றாக இருட்டி விட்டிருந்தது. வாயில் கேட்டைமெல்லத் திறக்கு முன்பே அவள் பார்த்து விட்டாள்.

முன்னறையில் பனியனும் லுங்கியுமாக அண்ணா சோபா ஒன்றில் கால்களை நீட்டியபடி காலைப் பத்திரிகையை ஆற அமரப் படித்துக் கொண்டிருந்தார், பத்திரிகையின் பின்னால் மறைந்து கொண்டிருந்த அவரது முகத்தைப் பார்க்கக் கூட மங்களாவிற்கு அச்சமாகத்தானிருந்தது.

ஓசைப்படாமல் செருப்புகளைக் கழற்றி முன்னறையை ஒட்டிய நடையருகில் வைத்துவிட்டு அண்ணனைத் தாண்டிக் கொண்டு குளியலறைக்குப் போக முயன்றாள். ஆனால் அண்ணா கவனித்து விட்டார்.

மெய் பதற, மார்பு படபடக்க, ஒரு மாபெரும் பூகம்பத்தை எதிர் நோக்கி நின்றாள் அவள்.

"அனுசூயா! டிபனை எடுத்து வை, மங்களா வந்திருக்கா" உள்ளேயிருந்த மனைவிக்கு அண்ணா அறிவுறுத்தினார் உரக்க. அவரது குரலில் என்றுமில்லாத பரிவு· மங்களா உண்மையில் திகைத்துப் போய் விட்டாள்.

அண்ணா ஏளனம் செய்கிறாரா, அல்லது உண்மையான பரிவுடன்...அவள் மனம் குழம்பியது. மெதுவாகக் குளியலறைக்குள் சென்று குழாயைத் திருப்பினாள். முகம் கை கால்களைக் கழுவித் துடைத்தபடி வெளியே வந்தாள்.

"இன்னிக்கு 'வெஜிடபின் பாத்' டிபன். இப்பத்தான் அண்ணாவும், நானும் சாப்பிட்டோம் நீயும் கொஞ்சம் எடுத்துக்கோ. ராத்திரி மெல்ல சாப்பிட்டால் போச்சு." மன்னி அனுசூயா புன்னகைத்த வண்ணம் சமையலறையிலிருந்து வெளிப்பட்டபோது, மங்களாவால் நம்பவே முடியவில்லை.

கட்டாயம் இதுகனவேதான். நேரம் கழித்து வந்தால் சிடுசிடுக்கும் மன்னி சிரித்த முகமாகவல்லவா இருக்கிறாள்?

"காப்பி சூடா' கொண்டு வரட்டுமா?"—மன்னி கேட்டதும் திகைப்பினின்றும் விடுபட்டாள் அவள்.

"ஒண்ணும் வேண்டாம் மன்னி. நான் லதா வீட்டிலேயே டிபன் சாப்பிட்டாச்சு. பஸ் சட்டுனு கிடைக்கல்லே· அதனாலே நாழியாகி விட்டது."—சொல்லிக் கொண்டே மாடிப்பக்கம் நழுவிவிட்டாள்.

"வெளியிலே போனா, வர முன்னே பின்னேதான் ஆகும் அதுக்கென்ன இப்போ?"

"மன்னியா இப்படிப் பேசுகிறாள்? ஹூம்! நம்பவே முடியவில்லையே! மங்களாவின் குழப்பம் மேலும் அதிகரித்தது.

இரவு சாப்பாட்டை முதலில் அண்ணாவுக்கும் மன்னிக்கும் பரிமாறிவிட்டு, பிறகு மங்களா தானே போட்டுக்



கொண்டு சாப்பிடுவது வழக்கம். சாப்பிட்ட பிறகு சமையலறையை சுத்தப்படுத்தி, சீர்படுத்த வேண்டியதும் அவள் பொறுப்புத்தான். மன்னி ஊஞ்சல் மீது உட்கார்ந்து கொண்டு வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி அண்ணாவுடன் ஊர்க்கதைகளை அளந்து கொண்டிருப்பாள்.

ஷைலா பரீட்சைக்குப் படிப்பதாக சாக்குச் சொல்லி விட்டு மாடிக்கு ஓடி விடுவாள். இன்று எல்லாம் தலைகீழ்!

மன்னிதான் அவர்கள் இருவருக்கும் பரிமாறினாள்.

"அண்ணாவுக்கு ரெண்டு நாளா நல்ல ஜலதோஷம்· அதனால் காரசாரமா மிளகு ரசம் வச்சிருக்கேன், உனக்கு மிளகு ரசம்னா ரொம்பப் பிடிக்குமே, டம்ளரிலே கொடுக்கட்டுமா? குடியேன்... ஏன் மூஞ்சி அதிச்சாப்பல இருக்கு. நாள் முச்சூடும் வேலை செய்கிறே உனக்கு ஓய்வு ஒழிச்சலே போறாது. அதனாலதான்." மன்னி மிக அன்பாகப் பேசிய போது ஆச்சரியத்தால், சாதத்தை விழுங்கவே முடியவில்லை அவளுக்கு.

'இல்லை! இல்லை! மன்னிக்கு அவள் மீது திடீரென அன்பு பொங்கி வந்துவிடவில்லை, இது சுத்த நடிப்பு. ஏன்? இரண்டு பேருமே சேர்ந்து ஏதோ நாடகம் போடுகிறார்கள், காரணம் ஏதோ ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும்.' அவளுள் எண்ணம் மின்னியது.

இரவு மங்களாவுக்கு சட்டென தூக்கம் வந்துவிடவில்லை. அவர்கள் வீட்டில் வேலை செய்த தேவானை அவளிடம் கூறியது அப்போது ஏனோ நினைவிற்கு வந்தது. தேவானையின் கணவன் படு சோம்பேறி. ஒரு வேலையும் அவன் தொடர்ந்து செய்ததில்லை. நாலுவீடு கூட்டி வீட்டையும், நாலு குழந்தைகளையும், அவனையும் சமாளிக்கத்தான் மனைவி இருக்கிறாளே. வேலைக்குப் போவானேன் என்ற நினைப்பு அவனுக்கு. அடிக்கடி வேலைக்கு மட்டம் போட்டு விட்டு வீட்டிலேயே படுத்துக் கிடப்பான். குடிப்பழக்கம் வேறு. குடித்து விட்டு வீட்டிற்குள் வந்து தினசரி கூத்தடிப்பான்.

"என்ன தேவானை? தலைநிறைய கனகாம்பரம்? என்ன விசேஷம்?" என்று வேடிக்கையாகக் கேட்டாள் அவள்.

"தோட்டத்து வேலைக்குப் போன இடத்திலேருந்து அவரு கொணந்தாரு. அந்தப் பங்களாக்காரங்க ஊருக்குப் போயிருக்காங்களாம். செடியில பூத்து சும்மா கீழே கொட்டு தேன்னு பறிச்சிட்டு வந்து கொடுத்தாரு. உனக்கும் அம்மா வுக்கும் கூட கொணாந்திருக்கேன். சாப்பாட்டு மேசை மேலே வச்சிருக்கேன். தொடுத்து வச்சிக்க?" என்றாள் தேவானை.

"பரவாயில்லையே உன் வீட்டுக்காரன்! அதான் பூவச்சுக்கிட்டு மினுக்கிறே!" மங்களா வேடிக்கை செய்தாள்.

"அ! என் மச்சானைத் தெரியாதா? அட போம்மா! நீ ஒண்ணு! மாதச் சம்பளம் வாங்கி வந்து வீட்டுக்குள்ளாற மறைச்சி வச்சிருக்கேன். அதை மோப்பம் பிடிச்சிக்கிட்டாரு ஆசாமி! பங்களாக்காரு திரும்பி வந்தாத்தான் சம்பளம் கெடைக்கும். அதுவரைக்கும் கள்ளச்சாரயம் வாங்கக் காசு? அதனால ஆசாமி வேஷம் கட்டறாரு' கனகாம்பரத்தைக் கொணாந்து, 'தேவானை வச்சுக்கோ உனக்கு பூ வாங்கிக் கொடுத்து எத்தனை நாளாச்சு'ன்னு பல்லைக் காட்டறாரு, நாலு புள்ளை பெத்துட்டேனே எனக்கு எம் புருஷனைப் பத்தி தெரியாதா? அந்தக் காசை எங்கிட்டருந்து புடுங்கிக்கிட்டுப் போக இப்படி ஒரு வேசம்." படபடவென்று பேசிக்கொண்டே சோப்பில் ஊற வைத்த துணியொன்றை எடுத்து, துவைக்கும் கல்லின் மீது ஆத்திரம் தீர பட்பட்டென்று அடித்தாள்.

படுக்கையினின்றும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள் மங்களா. ஒரு சமயம் இப்படி இருக்குமோ? அவள் நெஞ்சு படபடவெனத் துடித்தது. அவளிடம் எதை எதிர்பார்த்து மன்னியும் அண்ணாவும் இப்படி ஒரு பாசமலர் நாடகம் ஆடுகிறார்கள்?

ஷைலாவின் கல்யாணத்திற்கு முன்னர் அவர்கள் வீட்டிலேயே பெரிய குழப்பம் ஏற்பட்டது உண்மை.



சில நாட்கள் அண்ணாவும் மன்னியும் அவளிடம் முகம் கொடுத்துப் பேசக்கூட மறுத்து விட்டிருந்தனர் வீட்டிற்குள் நுழையக் கூட அச்சமாக, உணர்வுகள் மண்டையை வெடித்து விடும் போன்றதொரு அழுத்த நிலையில் அவதிப் பட்டிருக்கிறாள் அவள். அவர்களை வெறுத்து, உதறிவிட்டுப்போகும் இடம் இல்லாத அவல நிலை மங்களாவிற்கு முடிவில் அவள் தோற்றுப் போனாள்.

"சரி" என்று தானே ஒப்புதல் கொடுத்தாள். ஆனால் உள்ளம் ஆத்திரத்தால் குமுறத்தான் செய்தது.

ஷைலாவிற்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டிருந்தது. கல்யாணத்திற்குப் பெண்ணுக்குப் போடுவதாகச் சொல்லி ஒப்புக் கொண்டிருந்த நகைகளைச்செய்ய அண்ணாவிடம் பணவசதி இருக்கவில்லை.

கல்யாணச் செலவிற்கு மட்டும்தான் பணம் சேமித்திருந்தார். அப்பொழுதுதான் மன்னி அந்த யோசனையை வழங்கிவிட்டிருந்தாள்.

"மங்களாவிற்கு என்று ஒதுக்கப்பட்ட நகைகள்... பாங்க் லாக்கரில் தூங்கிக்கொண்டிருப்பானேன்? மங்களாவிடம் கேட்டு வாங்கி ஷைலாவிற்கு போட்டு அவள் கல்யாணத்தை முடித்துவிட்டுப் பின்னர் மங்களாவிற்கு அதே போலச் செய்து கொடுத்து விடுவோம்."

"மங்களா! மன்னி சொல்லறதுதான் சரின்னு படறது. நீ என்ன நினைக்கிறே?"

மங்களாவிற்குத் துயரமும் கோபமும் போட்டிப் போட்டுக் கொண்டு வந்தன.

"அப்பா எனக்குன்னு கொடுத்த நகைகள், மன்னிக்கும் அம்மா நகையில் ஒரு பங்கு கிடைச்சுதே. அதை இப்ப உபயோகிக்கலாமே?"

"அதை எல்லாம் நான் போட்டுட்டா வெறும் கழுத்தோட நிக்கணும். ஆனா நீ, நகைகளை வெறுமனே

பாங்கியில் தூங்கவச்சிருக்கே. அதைக் கொடுத்து இப்போ குடும்பத்துக்கு உதவி செய்யுன்னு கேட்கிறோம்.''—மன்னி கடுகடுத்தாள்.

"கால முச்சூடும் எங்களோட வாழ தேர்ந்துட்டா உன்னை நாங்க ஒதுக்கியா தள்ளிவிடுவோம். அப்படி இருந்தும் நீ என்னவோ பெரிசா யோசிக்கிறியே?''—அண்ணா கேட்டார்

''பார்த்தேளா? பணத்துக்கு முன்னாடி பாசத்துக்கு மதிப்பில்லைன்னு புரியறதா?'' மன்னி இடித்தாள்.

''அண்ணா! அப்பா கொடுத்த நகைகள் அம்மா நினைவிற்காக என்னோட வச்சிண்டுருக்கேன். அதனாலே...'' மேலே எதுவும் தொடர முடியாமல் அவள் விருட்டென்று வேலைக்குக் கிளம்பி விட்டாள். ஆனால் அத்துடன் அவளை விட்டார்களா என்ன?

மாலை வீடு திரும்பிய தங்கையை அண்ணா வெறுப்புடன் முறைத்தார். மன்னியின் முகத்திலோ எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவள் பேசவே இல்லை.

பேச்சு வார்த்தையின்றி ஒரே வீட்டில் விரோதிகள் போல் எத்தனை நாட்கள் வளைய வரமுடியும்.

அந்த வெள்ளிக்கிழமை காலை. மன்னி திடீரென அழ ஆரம்பித்து விட்டாள்.

''என்ன மன்னி. என்ன? ஏன் அழறேள்?'' பதறியபடி மங்களா வெட்கத்தைவிட்டு. வலுவிலேயே போய்க் கேட்டாள்.

''கல்யாணத் தேதியும் வச்சாயிடுத்து. நகைகளைப் பத்தி சம்பந்தியம்மா கேட்டா என்ன சொல்லப் போறோமோ தெரியாது. முப்பது பவுனுக்கு சங்கிலி, வளையல், வைரத்தோடுன்னு அண்ணா ஒப்புக்கொண்டுவிட்டார். இப்ப பவுன் விக்கிற விலையிலே வாங்க சாத்தியப்படுமா? பேசாம எதையாவது சாப்பிட்டுவிட்டு செத்துப்



போயிடலாமான்னு தோன்றது. எனக்கு மானம் போறது' விக்கினாள் மன்னி.

மங்களாவுக்கு அன்று ஆபீஸில் வேலையே ஓடவில்லை ஒரு சமயம் மன்னி அனுசுயா அப்படி ஏதாவது தாறுமாறாக செய்துவைத்து விட்டால்...?

வாழ்க்கை முழுவதும் மங்களா பச்சாதாபத்தில் தன்னை தானே நொந்து கொள்ளும்படி ஆகிவிடுமோ? கல்யாணம் என்பது அவள் வரை வெறும் கனவாகிவிட்டிருக்கிறதனால் அந்த நகைகளைப் பத்திரமாகப் பூட்டி வைப்பதில் எவருக்கு லாபம்? ஷைலாவை வாழ வைக்க உபயோகப்பட்டால் எடுத்துக் கொள்ளட்டும்.

நகை-சாமான்கள் என்பதற்காக, அண்ணா, மன்னியிடம் விரோதம் வேண்டுமா? திருப்பி செய்து தந்துவிடுவதாகச் சொல்கிறார்களே?

வீடு திரும்பியதும் முதல் வேலையாக, வலியச்சென்று மன்னியிடம் சொன்னாள்:

''ஷைலாவிற்கு என் நகைகளை எடுத்துக்கோங்கோ மன்னி, வீணா மனசை அலட்டிக்காதீங்கோ.''

விஷயத்தைக் கேள்விப்பட்ட லதா போனிலேயே குதித்தாள் கோபத்துடன்.

''மக்கு. மக்கு! என்ன காரியம் செஞ்சே. அதெல்லாம் திரும்பி வரப்போறதுன்னு நம்பறியா?''

''போகட்டும். எனக்கு அமைதி வேணும். அண்ணையும், மன்னியையும் விரோதிச்சிண்டு அதே வீட்டில் என்னால் வாழ முடியாது.''

''அப்போ வெளியில வந்துடு.''

''எப்படி வரமுடியும்? கதையிலே நடக்கிறாப்பல பெட்டியைத் தூக்கிண்டு வாசல்லே நான் வந்துட முடியுமா? வாழ்க்கையில ஒரு பெண்ணுக்கு நல்ல பாது

காப்புத் தேவை இருக்கே. அண்ணாவும் மன்னியும் எனக்கு அளிக்கிறது பாதுகாப்புக்கு லஞ்சம்னு...இந்த நகைகளை வச்சுக்கோ. அப்பாவே போயிட்டார். அந்த அதிர்ச்சியைத் தாங்கிண்டு வாழ்ந்திண்டு இருக்கேன். அவர் கொடுத்ததே இந்த நகைகள். இதுகளும் போனா போகட்டும். என்னால் இந்த இழப்பைத் தாங்கிக்க முடியும்."

"அதுக்கு சொல்லலை. இதுதான் ஆரம்பம்னு வச்சிக்கோ. இனி இந்தச் சுரண்டலுக்கு 'முடிவே இருக்காது.'"

"என்ன சொல்றே?"

"உண்மையைச் சொல்றேன். நீ சாமர்த்தியமாக இருக்கத் தெரிஞ்சுக்கொள்ளாட்டா ரொம்ப கஷ்டப் படப் போறே." லதா கொஞ்சம் எரிச்சலாகவே போனை வைத்து விட்டாள்.

அன்று அண்ணாவும் மன்னியும் கோபத்துடன் மனத் தாங்கலைக் காட்டி நகைகளை அவளிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டனர். இன்று பாசத்தைக் காட்டி எதைப் பறிக்கப் பார்க்கிறார்கள்? கவலையால் அவளால் தூங்கவே முடியவில்லை.

லதா எப்போதும் போல் முன் ஆலோசனைக்காரி கெட்டிக்காரி. அவள் சொன்னது பொய்யாகவில்லை.

நல்லதுக்கு நரி முட்டையிடவில்லை. தேவானைகூட அவளைவிடக் கெட்டிக்காரி! உலகத்தைப் புரிந்து வைத்திருந்தவள்.

மறுநாள் காலை அண்ணாவே அவளிடம் பேச வந்தார். ஸ்நானம் செய்து விட்டு ஈர முடியைத் துவாலையில் துவட்டியபடி அண்ணா அவள் அறைக்குள் தலையை நீட்டினார்.

"என்ன பண்றே? பேப்பர் படிச்சுண்டு இருக்கிறியா? உங்கிட்ட ஒரு விஷயம்...' அண்ணாவின் குரலில்தான் எத்தனை மென்மை!



பத்திரிகையை மடக்கி வைத்துவிட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் மங்களா.

# 8

அண்ணாவைக் கண்டதும் படித்துக் கொண்டிருந்த பத்திரிகையை மடித்து வைத்துவிட்டு எழுந்தாள் மங்களா.

அண்ணா சுற்றி வளைக்கவில்லை. "நாளைக்குக் காலை வண்டியிலே ஷைலாவும் அவள் புருஷனும் ஹனிமூனிலிருந்து திரும்பி வர்றதா தந்தியடிச்சிருக்கா. மாப்பிள்ளைக்குப் பெங்களூருக்கு மாத்தலாகியிருக்கு. அங்கே தனிக்குடித்தனம் வைக்கணும், நாமதான் குழந்தைக்கு எல்லாம் வாங்கிக் குடுத்து ஏற்பாடு செய்யணுமாம். பீரோ, கட்டில் இதுகளுக்குப் பத்தாயிரம் பிடிக்கும். கல்யாணச் செலவு கையைக் கடிச்சுட்டது. உன் கணக்கிலே பாங்கில நீ ஒரு பத்தாயிரம் வரை வச்சுண்டு இருக்கேன்னு தெரியும். இப்போ சத்தியா ஒரு எழாயிரம் குடுத்து உதவினா போறும் ஒரு செக் எழுதி இப்பவே குடுத்துட்டேன்னா நாளைக்கு நான் ஆபீஸுக்குப் போகறதுக்கு முன்னாடி என் கணக்கிலே கட்டிட்டு கடைக்காரன்களுக்கு செக் எழுதிக் கொடுத்துடுவேன்!"

"இதுதான் ஆரம்பம்னு வெச்சுக்கோ" லதாவின் வார்த்தைகள் காதைக் கிழிப்பது போன்ற பிரமை நெஞ்சு திகிலில் எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

"உனக்குச் சம்மதம் இல்லாட்டா..." அண்ணா முடிக்கு முன் அவள் தன் பீரோவைத் திறந்தாள். செக் புத்தகத்தை எடுத்து தமையனிடம் நீட்டினாள்.

' நீங்களே எழுதிக்கோங்க அண்ணா! கையெழுத்துப் போட்டுவிட்டேன்." அழமாட்டாத துயரம். அண்ணா

எழுதி முடித்து நீட்டிய செக்கின் அடியில் கையெழுத்திட்டான்.

"சாப்பிட வா! தனியா ஏன் உக்கார்ந்துண்டு இருக்கே?" ஏழாயிரம் ரூபாய்க்கு அண்ணா ஒரு மகிழ்ச்சி புன்னகையை உதிர்த்துவிட்டு வெளியேறினார்.

கண்களில் பொங்கிய கண்ணீரை சமாளித்தபடி திரும்பிய போது பீரோ கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தைப் பார்த்துப் பொங்கிப் போனாள்.

மூலையில் சாத்தியிருந்த கொடிக் கம்பை எடுத்து ஓங்கி அந்த அசட்டுப் பெண் தலையில் அடித்து நொறுக்க மாட்டோமா என்ற ஆத்திரத்தில் அறைக் கதவைப் படீர் என சாத்திக்கொண்டு படுக்கை மீது விழுந்தாள்.

பெண்ணையும், மாப்பிள்ளையையும் கண்டதும் அனுசூயாவுக்குத் திடீர் தெம்பு எங்கிருந்தோ வந்து விட்டிருந்தது. மங்களாவைக்கூட உதவிக்கு அழைக்காது அவள் ஓடி ஓடி வீட்டில் எல்லாவற்றையும் தானே கவனித்தாள்.

பெண்ணும் மாப்பிள்ளையும் தங்கியிருந்த அந்த ஒரு வார காலத்திற்கு சீதாராமன் ஆபீசிற்குப் போகவில்லை. லீவு போட்டுவிட்டு அவர்களுடன் கடைத் தெருவைச் சுற்றிக் கொண்டிருந்தார். அனுசூயாவுக்கு மூச்சுவிட நேரமின்றி வேலை சரியாக இருந்தது. புதிதாகக் குடித்தனம் செய்யப் போகும் மகளுக்கு மிளகாய்ப் பொடியிலிருந்து வத்தல், வடகம், முறுக்கு, மைசூர் பாகு இத்யாதி தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். தன் வழக்கமான முணுமுணுப்புகளை மறந்தே போனாள்.

ஷைலா மறுநாள் காலை பிருந்தாவனம் எக்ஸ்பிரசில் கணவனுடன் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். வீட்டு முன்னறை முழுவதிலும் சாமான்கள் குவிக்கப்பட்டிருந்தன. அலுவலகத்திலிருந்து அன்று மாலை திரும்பிய மங்களா அவைகளைப் பார்த்து ஒரு கணம் மலைத்தே



போனாள். அவன் பாடுபட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் வடிய சம்பாதித்து, சேர்த்து வைத்திருந்த பணத்தின் ஒரு பகுதி பெட்டிகளாகவும், முறுக்கு நிறைந்த டின்களாகவும், அப்பள டப்பாக்களாகவும் மாறி விட்டதைக் காண அவளுக்கு ஆத்திரமாகத்தானிருந்தது. தலையில் அடித்துக் கொண்டு அழவேண்டும் போன்று துக்கமாகவும் இருந்தது. மௌனமாக மன்னி கொடுத்த காப்பியைப் பருகிவிட்டு மாடியறைக்குச் சென்று மறைந்து கொண்டாள்.

கடந்த ஒருவார காலமாக அவள் மனதிலே ஒருவித உணர்வுப் போராட்டமும் ஏற்பட்டிருந்தது உண்மை.

"கல்யாணத்தின் போது பார்த்திருப்பேளே, என் தங்கை மங்களா!" அண்ணா மொட்டையாக ஒருமுறை மாப்பிள்ளைக்கு அவளை அறிமுகம் செய்துவைத்தார்.

லேசாக அவன் முறுவலித்தான். அத்துடன் சரி, மாப்பிள்ளை அவளிடம் எதுவும் பேச முன் வரவில்லை. அவளுக்கும் பேசிப் பழக துணிவிருக்கவில்லை. முன்னறை இரண்டுபட அவர்கள் நால்வரும் உட்கார்ந்து பேசிச் சிரித்த பொழுது தனக்கு அங்கே அதில் பங்கு கொள்ளத் தகுதியில்லை என்றதொரு ஏக்க உணர்விலே அவள் ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

அண்ணாவுக்கு மன்னி துணை—அவர்களுக்குப் பெண் மாப்பிள்ளை என்ற உறவு—விரைவில் பேரன் பேத்திகள் என்ற பந்தம்; சம்பந்திகள் என்ற சொந்தம். இப்படியே அவர்களுக்கென்றதொரு கூட்டத்தைச் சேர்த்து கொண்டு விடுவார்கள், அவளுக்கு?

அப்பாவுக்குப் பின் தனிமரமாக நிற்கும் அவளது வாழ்க்கை இப்படியே யந்திர கதியில் ஓடிக்கொண்டு எந்தவித எதிர்பார்ப்புக்களும் இன்றி தனிமையில்...ஒரு சூனியத்தை நோக்கி விரையப் போகிறது.

தன் வருங்காலத்தைப் பற்றி நினைக்கவும் அவளுக்கு பயங்கரமாக இருந்தது. நினைத்துப் பாராமலும் இருக்க முடியாத ஒரு தவிப்பு. வீட்டினுள் இருந்த அந்த அனைவருடன் அவள் பட்டும் படாது... தண்ணீர் மீது மிதக்கும் எண்ணெய்த் துளியாக வளைய வந்து கொண்டிருந்தாள்.

ஷைலாவும், மாப்பிள்ளையும் அன்று காலைப் புறப்பட்டுப்போய் விட்டனர். கண்ணைக் கசக்கி மூக்கை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு வழியனுப்பிய மன்னி அனுசுயா, சிறிது பொழுதில் தேற்றிக் கொண்டுவிட்டாள். 'பெங்களூர்தானே? தொலைதூரத்துக்கா அனுப்பிவிட்டோம். ஏன் கவலை...?' என்ற துணிவு.

சிரிப்பும் பேச்சுமாக கலகலத்த வீட்டிலே இப்போது ஒரே அமைதி. வழக்கம்போல் அண்ணா வேலையிலிருந்து வந்ததும் லுங்கியும், பனியனுமாக காலைப் பத்திரிகையுடன் உட்காரத் தொடங்கினார்.

வழக்கம்போல மங்களாவின் உதவியை எதிர்பார்த்து கொண்டு மன்னி வீட்டு வேலைகளை அப்படியே போட்டு வைக்கத் தொடங்கினாள். ஷைலா வந்துபோனாள் என்ற அந்த சிறு மாற்றத்திற்குப் பின்...வாழ்க்கை எப்பொழுதும் போல சுவையற்றதாக மெல்ல நகர்ந்தது.

அன்று அவள் விரைவாக இரவு காரியங்களை முடித்துக் கொண்டு படுக்கச் சென்றுவிட்டாள். பக்கத்து வீட்டு பையன் கூட பரீட்சையை மறந்து சீக்கிரமே படுத்துவிட்டிருந்தான். விரைவில் அந்தக் குடியிருப்புப் பகுதி அமைதியில் மூழ்கி விட்டிருந்தது. தூக்கம் வரும்வரை மங்களா ஏதாவது கதைப் புத்தகத்தைப் படிப்பது வழக்கம். ஈஸ்வரி நூல் நிலையத்திலிருந்து அவள்தேடி எடுத்துவந்த ஈவ்லின் அந்தோனியின் ஸ்டிரேஞ்சர் அட் தி கேட்...பிரித்துக்கூட பார்க்காத நிலையில் அசட்டையாக கட்டிலின் கீழே தரையில் கிடந்தது. எதிலுமே பிடிப்பு இல்லாத ஒரு விரக்தியான மன நிலையுடன் அவள் படுக்கை மீது லேசாகப் புரண்ட போது, அண்ணா. மன்னியிடம் பேசியது கணீர் என்று கேட்டது.



*தினசரி* அண்ணா தான் கீழே கதவுகளை சாத்தித் தாளிட்டு விட்டு கடைசியாக மாடிக்குப் படுக்க வருவது வழக்கம். சட்டென்று படுத்துவிட மாட்டார். பத்திரிகையில் விட்டுப் போன விஷயங்களை விடாமல் படித்து விட்டுக் கடைசியாக ஒரு சிகரெட்டைக் கொளுத்தி இழுத்து ஊதி விட்டு... குளியலறைக்குச் சென்று, எல்லோருக்கும் கேட்கும்படி வாய் கொப்பளித்துவிட்டு, கால் செருப்பு சப்திக்க தொண்டையைப் பலமுறை செருமிக் கொண்டு முடிவில் தான் அண்ணா படுக்க போவார். இது தினமும் நடக்கும் ஒரு நிகழ்ச்சி.

மங்களாவின் அறைக்கதவு லேசாகத்தான் சாத்தப்பட்டிருந்தது. அண்ணா நெருப்புக்குச்சியைக் கிழிக்கும் சப்தம் பளிச்சென்று இடுக்கு வழியே அறைக்குள் எட்டியது. தொடர்ந்து சிகரெட்டின் மணம் ஹாலை வளையமிட்டு அறைக்குள்ளே மோதியது.

"அனுசுயா! இங்கே வா. உன்கிட்டே பேசணும்..." —ஒருமுறை இருமிவிட்டு அண்ணா கரகரத்த குரலில் அழைத்தார்.

"இந்தப் ராமும் சிகரெட் வேண்டாம். விடுங்கோன்னா கேட்டாத்தானே? ராத்திரியெல்லாம் இருமல்." கடிந்து கொண்டே பூமி அதிர விடுக்கென்று நடந்து வந்தாள் அனுசுயா.

"மங்களாவுக்கு உன் மாப்பிள்ளை ஒரு வரன் சொன்னானே—அதைப்பத்தி நீ அவகிட்டே பேசினியோ?"

திடுக்கிட்டுப் போனாள் மங்களா. அறைக்குள் கலந்து நின்ற இருளை ஊடுருவிப் பார்த்தபடி ஊன்றிக் கவனமாகக் கேட்டாள்.

அவளையும் மீறிய அச்சத்திலே நெஞ்சில் ஒரு படபடப்பு.

"என்ன சொல்வானோன்னு எனக்கு கேட்கக்கூட பயமா இருக்கு"—வெற்றிலையை மென்று கொண்டே பேசினாள் மன்னி.

"இதற்கு மேல் அவள் வேறே என்னத்தை பார்க்கிறாளாம்?"

"இந்த வரன் நம் மாப்பிள்ளைக்கு தூரப் பந்துவாம். மனுஷன் ரொம்ப நல்லவனாம். ஒரே ஒரு பிள்ளைதான். அவனும் பள்ளிக்கூடத்திலே படிச்சிண்டு பாட்டி வீட்டிலே தங்கியிருக்கானாம். பெண்டாட்டி போய் மூணு வருஷமாகிறதாம். வேற பிக்கல் பிடுங்கல் ஏதும் கிடையாது, அந்தக் கம்பெனியில் அவர்தான் உதவி மானேஜராம்... நல்ல சம்பளம் இந்த வரனுக்கு என்ன கேடு?" அண்ணாவின் குரலில் எரிச்சல்.

"பள்ளிக்கூடத்தில் படிக்கிற பிள்ளை இருக்குன்னா, அவருக்கு வயசு கொஞ்சம் அதிகமிருக்குமே?"

"அப்படி என்ன வயசாயிடுத்து அவருக்கு? நாற்பத்து நாலு வயசு ஆண்பிள்ளைக்கு ஒரு வயசா? இவளுக்கு மட்டும் ஆகலையா? விஷம் ஏர்றாப் போல வயசு ஏறிண்டு போறதே...என் கவலையெல்லாம் என்ன தெரியுமா? நாம ஒத்துக்கிறது பெரிசில்ல. அந்த மனுஷன் சரின்னு ஒத்துக்கணும். ஞாபகம் இருக்கா உனக்கு?"

அண்ணாவின் குரல் சன்னமாகியது. ஹால் விளக்கை அணைத்து விட்டு மன்னி நடந்து படுக்கை அறைப் பக்கம் போகும் காலடி ஓசை. அண்ணாவின் இருமல்... செருப்பு சப்தம். கதவு படீர் என்று சாத்தப்படும் ஓசை—எல்லாம் கேட்டன. மங்களாவின் தலை விண்விண் என்று தெறித்தது. எழுந்து வேகமாகச் சென்று கதவைத் தாளிட்டு விட்டுக் கோபத்துடன் படுக்கை மீது வந்து உட்கார்ந்து கொண்டாள்



'ஞாபகமிருக்கா...' அண்ணாவின் குரல் சம்மட்டியாக மண்டையில் மீண்டும் ஓங்கி அடித்தது. தன் இரு கைகளாலும் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

அவளது வாழ்க்கையில் நடந்த எந்த ஒரு அனுபவத்தையும் அவள் மறக்கவே இல்லை. ஒவ்வொன்றும் அவள் மனதில் ஆழமாகப் பதித்துவிட்டுப் போன காயங்கள் இன்னமும் ஆறவில்லையே?

இரண்டு தடவைகளும் தமது மகளின் கல்யாணம் நின்று போனதைக் கண்டு அப்பா ஜகதீசன் அதிர்ந்து போய் வரன் தேடும் முயற்சியை சிலகாலம் கைவிட்டு விட்டிருந்தார்.

ஒரு வருஷத்துக்குப் பின்னர் மறுபடி துணிவுடன் மும்முரமாகப் பல இடங்களில் தேட ஆரம்பித்தார். அப்போது அவருக்கிருந்த அந்தஸ்திற்கும், செல்வாக்கிற்கும் பல இடங்களிலிருந்து வரன்கள் வந்தன.

பேச்சு வார்த்தைகள் நடந்தன. பெண்ணை வந்து பார்த்தனர். பிடித்துவிட்டது என்று தலையசைத்தனர் வரதட்சிணை, சீர் இத்யாதி அலசப்பட்டன.

மங்களாவுக்கு முடிவில் ஒரு நல்ல இடம் அமைந்து விட்டது என்று ஜகதீசன் நிம்மதியாக மூச்சு விடுமுன் பிள்ளை வீட்டார்களிடமிருந்து கடிதங்கள் பறந்தன.

"பெண் பிடிக்கிறது. ஆனால் ஜாதகம் பொருந்தவில்லை மன்னிக்கவும்."

"இந்த வருஷம் எங்கள் பையனுக்குக் கல்யாணம் செய்வதாக உத்தேசமில்லை. நீங்கள் வேறு இடம் பார்த்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை."

"பையன் மேல் படிப்புக்கு மேல் நாடு செல்லவிருக்கிறான். படிப்பு முடிந்ததும்தான் கல்யாணம் என்று

பிடிவாதமாக இருக்கிறான். நல்ல இடம். ஆனால் எங்களுக்கு கொடுத்து வைக்கவில்லையே என்று வருந்துகிறோம்.''

நாசூக்காக சொல்லாமல் சொல்லித் தட்டிக் கழித்து ஓடிவிட்டனர். அப்பா தொடர்ந்து முயன்று தோல்வியுற்றார். தமது கடைசி மகளின் கல்யாணம் இப்படி ஒரு பயங்கரப் பிரச்னையாகிவிடும் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. தத்தளித்துப் போய்விட்டார்.

அப்பொழுதுதான் அவர்களது வாழ்க்கையில் சரிவு காலம் துவங்கியது.

அத்தான் வஸந்த் அப்பாவுக்கு எதிராக அலுவலகத்து ஊழியர்களைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தான். அதன் பயனாக அவர்களிடையே பல விஷயங்களைப்பற்றி அதிருப்தி ஊழியர்கள் மந்த கதியில் செயல்படவே, வேலை தேக்கம் எக்கச்சக்கமாகி விட்டது.

தொழிலாளர் தலைவனாகிவிட்டிருந்த வஸந்த் ஜகதீசனிடம் பிடிகொடுத்துப் பேச மறுத்து விட்டான் ஏறி வந்த ஏணியை எட்டி உதைக்கும் மகானுபாவன் அவன் தொடர்ந்து பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தான். பெரியதொரு வேலை நிறுத்தம் ஏற்படலாம் என்றதொரு நிலை உருவானபோதுதான் பம்பாய் தலைமை அலுவலகத்திலிருந்து முதலாளியே அலறிப்புடைத்துக் கொண்டு ஓடிவந்து விட்டார்.

ஜகதீசனது நிர்வாகத் திறமையிலே அவருக்கு நம்பிக்கை குறைந்து போயிற்று. வஸந்த் மூலம் ஊழியர்களிடையே சமரசம் செய்து கொண்டார். அத்துடன் பம்பாயில் உதவி மானேஜராக இருந்த தமது உறவினரை உடனடியாக வரவழைத்து சென்னை அலுவலகத்தின் தலைமை அதிகாரி பதவியில் உயர்த்தி உட்கார்த்தி வைத்துவிட்டார்.

தமக்குக்கீழ் நிலையில் வேலை பார்த்தவனுக்கு இப்போதுதான் கைகட்டி பதில் சொல்ல வேண்டிய நிலை



ஏற்பட்டபோது ஜகதீசன் மனம் ஒடிந்து போய்விட்டார். அங்கே நீடித்து வேலை பார்க்க வெட்கமாக இருந்தது. அவரது பெருமைக்கு இழுக்குபோல் தோன்றியது ஒரு மாத முன் அறிவிப்பு விடுத்து...தமது வேலையை ராஜினாமா செய்து விட்டார்.

வேலையின்றி தங்க நேர்ந்தபோதுதான் அவருக்குப் புரிந்தது அந்த வயதில்...அந்த மாதிரியான நல்லதொரு வேலை அத்தனை சுலபமாக மறுபடி கிடைத்துவிடாது என்பது நன்றாகத் தெரிந்துவிட்டது, தொடர்ந்து பல இடங்களில் முயன்று தோற்றுப் போனார். கையிலிருந்த பணம் வேகமாகக் கரையத் தொடங்கியது. வெட்கத்தை விட்டு, விரோதத்தை மறந்து தம் மகளை மணந்து கொள்ளும்படி வஸந்தைக் கெஞ்சிக்கேட்டு வாயிழந்து போனார். எந்தப் பக்கம் திரும்பினாலும் தோல்வி—தோல்வி—தோல்வியைத் தான் சந்தித்தார், முதல் இரு பெண்களையும் கல்யாணம் செய்து கொடுத்த வகையில் வீட்டின்மீது கழுத்துவரை கடன். அதை நிவர்த்திக்க வழியின்றி அடமானம் வைத்து கடன் வாங்கியிருந்தவருக்கே வீட்டை விற்று முடித்தார் நல்லவேளை, சீதாராமனுக்கு வேலை உயர்வும், அண்ணா நகரில் தங்க வீடும் கம்பெனி தந்துவிட்டிருந்தன, சொந்த வீட்டை விற்றபின் மகனுக்குக் கிடைத்த வாடகை வீட்டிலேயே மங்களாவுடன் குடியேறினார்... வேலை, அதனால் ஏற்பட்ட செல்வாக்கு அந்தஸ்து எல்லாம் பறிபோன பின்பு ஜகதீசன் பாதிமனிதராகி விட்டிருந்தார். போதாதற்கு மங்களாவின் கல்யாணப் பிரச்சினை அவரை உள்ளூற அரித்துக் கொண்டிருந்தது. மனிதர் வேகமாக ஒடுங்கத் தொடங்கி விட்டார்.

அப்போதுதான் அவருக்கு அந்தவரன் பற்றியதகவல் கிடைத்தது. ஜகதீசனின் நெருங்கிய நண்பர் சங்கரலிங்கம். அவருக்கு ஒரு இடத்தில் நல்லதொரு வேலை தேடித்தர பலவாறு முயன்று கொண்டிருந்தார், அநேகமாகக் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை இருந்தது. அந்தத்

தெம்பில்தான் அவர் கேள்விப்பட்ட அந்த வரன் வீட்டவர்களை நேரே தேடிக்கொண்டு புறப்பட்டார்.

பெண் பார்க்கும் படலம் முடிந்தது. பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. ஆனாலும் அவருக்கு மனதிலே ஒரு சிறு உறுத்தல்.

'மங்களா ஒத்துக் கொள்ள வேண்டுமே? அவள் மறுத்து விட்டால்...?'

பிள்ளை வீட்டவர்கள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற திருப்தியுடன் வீட்டுக்குள் வந்தார் ஜகதீசன்.

மாடியிலிருந்து இறங்கி ஓடிவந்தாள் மகள்

"அப்பா காபி கொண்டு வரட்டுமா? மன்னி தெரிஞ்சவ யாரையோ பார்க்க வெளியே போயிருக்கா."—அன்புடன் விசாரித்தாள்.

அது சமயம் அவர்கள் இருவரைத் தவிர வீட்டில் யாரும் இருக்கவில்லை. "இப்படி உட்கார்...உன்னோடு பேசணும்."—அவர் குரல் தடைப்பட்டது. மங்களா வியப்புடன் விழித்தாள். எதிரே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"அன்னிக்குப் பார்த்துட்டுப் போன அந்த வரன் வீட்டவர்களுக்கு உன்னைப் பிடிச்சிருக்காம்!"—அப்பா தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

மங்களா தந்தையை மௌனமாக நிமிர்ந்து பார்த்தாள்.

"எல்லாம் மனசுக்குப் பிடிச்சிருக்கு ஆனால் ஒரே ஒரு குறை...இளையாள் வரன்...மூத்தாள் இறந்துபோய் ஒரு வருஷந்தான் ஆகிறது." மென்று விழுங்கினார்.

மங்களா பேசவில்லை. தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஜகதீசனுக்கு அச்சமாக இருந்தது.



"மங்களா, நன்னா கேட்டுக்கோ. எனக்குக் கொஞ்ச நாளா உடம்பு அத்தனை திருப்தியாக இல்லை. அடிக்கடி நெஞ்சைப் பிளக்கிறது."

"அப்பா!" திகைப்புடன் மங்களா நிமிர்ந்து பார்த்தாள்.

"எனக்கு ஏதாவது ஆயிடறதுக்கு முந்தி உன்னை ஒரு நல்ல இடத்திலே கொடுத்துடணும்னு பார்க்கிறேன். இளையாள் வரன்தான்...ஆனால் பையனுக்கு வயது இருபத்தேழுதான் ஆகிறது. நீ சரின்னு சொன்னா நான் மளமளன்னு முடிச்சிடுவேன்... நீ ஒப்புக்க மாட்டேன்னா..." அவர் குரல் தழுதழுத்தது.

மங்களாவின் கண்கள் கலங்கின. துயரத்திலே அவளது உதடுகள் துடித்தன. அவள் ஒருத்தியால் அப்பாவுக்கு எத்தனை கஷ்டம்... தொல்லைகள்... துன்பங்கள்?

"கவலைப்படாதீங்க அப்பா... உங்க இஷ்டம் என் இஷ்டம் போல. உங்க உடம்பை முதலில் கவனிச்சுக்கோங்க..."

"மனப்பூர்வமாகத்தானே சொல்றேம்மா...? நான் உன்னை வற்புறுத்தலியே...? பொங்கி வந்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு புன்னகைத்து விட்டு எழுந்து உள்ளே வந்துவிட்டார்.

இரண்டு தினங்களுக்குப் பின்னர் சங்கரலிங்கம் அவரைத் தேடிக் கொண்டு வீட்டுக்கு வந்தார்.

"ரொம்ப வருத்தப்படறேண்டா உனக்குன்னு ஒதுக்கி வெச்சிருந்த வேலையை முதலாளி தன் மச்சானுக்குக் கொடுத்துட்டான். எனக்குப் பெருத்த ஏமாற்றம். வேற ஏதாவது கிடைக்கிறதான்னு பார்க்கிறேன்." நண்பன் கொடுத்த தகவல் அவருக்குப் பெருத்த இடியாக இருந்தது. பிள்ளை வீட்டவர்களைப் பார்த்துப் பேசிக் கல்யாணத்தை

யாவது முடிவு செய்வோம் என்று கிளம்பிச் சென்றவர், பேயறைந்தவர் போல் முகம்மாறி வீட்டுக்குத் திரும்பி வந்தார்.

"என்னப்பா ஆச்சு?"—சீதாராமன் ஆவலுடன் கேட்டார். 'முதல் இரண்டு கல்யாணங்கள் தடைப்பட்டுப் போனதைக் கேள்விப்பட்டாளாம். அதனால் இந்தப் பெண் வேண்டாம்னு தோணிடுத்தாம். மூஞ்சியில் அடிச்சாப் போல சொல்லிவிட்டா." ஜெகதீசன் துயரத்துடன் திணறினார்.

"அப்படியா சொன்னா?" அதிசயப்பட்டார் சீதாராமன். 'நம்ப அதிர்ஷ்டம் ஊர் அறிஞ்ச கதையாயிடுத்து. எந்த வேளையில் இந்த பெண் பிறந்தாளோ? தரித்திரம் என் வேலை போச்சு, வீடு போச்சு... பெண்டாட்டி செத்தவன் கூட திரும்பிப் பார்க்க மாட்டேங்கிறான். சனியன் என் கழுத்திலேயே பாறாங்கல்லாட்டமா உட்கார்ந்திருக்கா..."

படபடவென்று ஆற்றமாட்டா துயரத்தில் ஜெகதீசன் இரைந்து பேசிவிட்டார். அப்போது அவர் பார்க்கவில்லை.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு மாடிப்படி உச்சியில் நின்ற மங்களா மெல்ல இறங்கி வந்தாள். அவர் திடுக்கிட்டு முகம் வாடிப் போனார்.

"அப்பா! நீங்க கூடவா என்னை துர் அதிர்ஷ்டம் பிடிச்சவன்னு நம்பறேள்...? அப்பா, நீங்க கூடவா?" என்று கேட்ட மகள் குலுங்கி அழுத போது தந்தையினால் தாங்க முடியவில்லை.

தோல்வி மேல் தோல்வியைச் சந்திச்சதும் என்மனசு குழம்பிப் போய் என்னை அறியாமல் கடுமையாப் பேசிட்டேன். குழந்தே! வருத்தப்படாதேயம்மா... என்னை மன்னிச்சிடு. நான் யார்...உன்மேலே உசிரை வச்சிருக்கிற உன் அப்பா. அம்மா...அழாதே...குழந்தே." கெஞ்சிக் கொண்டே அருகில் வந்தார். மங்களா விசும்பிக் கொண்டே மாடிப்பக்கம் ஓடிவிட்டாள்.



'அப்பா!' என்று அவள் உள்ளத்திலே வைத்துப் பூஜித்துக் கொண்டிருந்த உருவம்...பீடத்திலிருந்து கீழே விழுந்துவிட்டது போன்ற வேதனையில் மனம் சுக்காக வெடிக்க...துடிதுடித்து அழுதாள்.

அண்ணா அந்தச் சம்பவத்தை ஏன் இப்போது ஞாபகப் படுத்துகிறார். துயரத்திலே அவள் நெஞ்சம் விம்மியது.

# 9

மங்களாவுக்கு அன்று ஒரே கோபம். அதற்குப் பலரும் காரணமாக இருந்தனர். வேலைக்குப் புறப்படு முன் ஆரம்பித்து வைத்தவள் மன்னி அனுசுயா.

சில நாட்களாக அண்ணாவும் மன்னியும் தங்களுக்குள் அரைக் குரலில் பேசிக்கொண்டதை அவள் கேட்டுத் தெரிந்து கொண்டுதான் இருந்தாள்.

ஷைலாவின் கணவன் சிபாரிசு செய்திருந்த அந்த வரனை அண்ணா விசாரிக்கத் தலைப்பட்டிருந்தார். இரண்டு முறைகள் அந்த மனிதரின் வீடுதேடி நேரிடையே போய் விசாரித்துவிட்டு வந்திருந்தார். முடிவில் அந்த வரனும் நழுவிப் போய்விட்டிருந்தது. அதற்கு அண்ணா தான் முழுதும் காரணம். இந்த உண்மை தானாகவே அவளிடம் சிக்கி விட்டிருந்தது.

அன்று தேவானை காலை வேலைகளை முடிக்க அவசரப்பட்டாள். "குளிக்கறதுக்கு முன்னாலே அழுக்கிக் கூடையிலிருக்கிற துணிகளை எடுத்து அலகிட்ட தோய்க்கப் போட்டுடு மங்களா!" மன்னி சமையலறையிலிருந்த படி உத்திரவிட்டாள்.

அண்ணா தமது சட்டைப் பையில் சிகரெட் டப்பாக்களையும், ஒத்தை ரூபாய் நோட்டுகளையும் மறந்துவிட்டு

விடுவது உண்டு. பார்க்காவிட்டால் தேவானை அப்படியே சோப்பு நீரில் முக்கி அடித்து வெளுத்து நொறுக்கி விடுவாள்.

மங்களா அண்ணாவின் சட்டைப் பைகளைத் துழாவிய போது முதல் நாள் காலை அவர் அணிந்து கொண்டு போயிருந்த அந்த வெள்ளை ஷர்ட் பையில் ஒரு கடித மடிப்பு கையில் தட்டுப்பட்டது. அசட்டையாகப் பிரித்தாள். அவளைப் பற்றி அந்த இளையாள்காரர் எழுதியிருந்த கடிதம் அது. தன்னைப் பற்றியது என்றதுமே ஒரு பரபரப்பு. படித்தாள்.

"எனது முதல் மனைவி ஒரு பட்டதாரி. தனியார் பாங்கில் ஆபீஸராக வேலை பார்த்தவள். அதனால் எனக்கு இளையாளாக வருகிறவளுக்கும் இந்தத் தகுதிகள் இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தேன். ஆனால் எனக்கு மனைவியான பின்பும் உங்கள் தங்கை சம்பாதிப் பதில் ஒரு பங்கை பிறந்த வீட்டுக்குத் தர வேண்டும் என்று நீங்கள் போட்ட நிபந்தனை எனக்கு விசித்திரமாக இருந்தது. படிக்க வைத்து ஆளாக்க செலவழித்தோம்' அதனால் கடனாளியாகி விட்டோம்; அதைக் கட்டாயம் ஈடு செய்தாக வேண்டும் என்றுஎதிர்பார்ப்பது நியாயம் என்று டெலிபோனில் காட்டுக் கத்தலாக நீங்கள் கத்தியது எனக்கு மிக்க அருவருப்பாக இருந்தது. பதிலைக் கடிதத் தின் மூலம் சொல்லிவிட்டேன். உங்கள் சகோதரி சம்பாதித்து தான் உங்கள் கடன்கள் அடைய வேண்டுமென்றால்... அவளுக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளத்தில் ஆகாத' காரியம், நிறைய சம்பாதிக்க பெண்களுக்கு கிடைக்கும் சில வேலைகளை அவள் நாடினால் சுலபமாக இருக்கும். இதைப் பற்றி நீங்கள் இனி தொடர்பு கொள்ளத் தேவையில்லை. எனக்கு வேறு இடத்தில் நிச்சயமாகி விட்டது."

அவமானத்தில் திகுதிகுவென்று எரிந்தாள் மங்களா. இதுவரை அவளது அதிர்ஷ்டத்தைச் சுட்டிக் காட்டி அவளை வரன் விட்டவர்கள் அவமதித்தனர்.



இந்தக் கிராதகன் அவளது பெண்மையைக் கொச்சை படுத்தும் வகையில் இழிவாக எழுதியிருக்கிறானே? எத்தனை அகம்பாவம்? பெண் என்பவள் அவ்வளவா மட்டமானவளாகி விட்டாள்? திமிர்பிடித்த மனிதன். இப்படிப்பட்ட முரட்டு ஜென்மத்திடம் கொண்டு தள்ள அண்ணா அவளைக் கலந்து ஆலோசிக்காது—தான் அவமானப்பட்டதுடன் அவளையும் அவமானமடையச் செய்து விட்டாரே?

எதிரே தெரிந்த சுவரில் தலையை முட்டிக்கொண்டு கதற வேண்டும் போன்ற துக்கமும் ஆத்திரமும் தாங்காது உடல் நடுங்க உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் நின்றாள்.

மன்னியிடம் அவள் அதைப்பற்றி பேசவேயில்லை. 'பேசுவதற்கு என்ன இருக்கிறது?' என்ற கோபம்.

வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தவளிடம் மன்னி தானே ஆரம்பித்தாள். வாசற்படியைத் தாண்டி விட்டாள் அவள்.

"மங்களா!"

எரிச்சலுடன் அனுசூயாவைத் திரும்பிப் பார்த்தாள்.

"உங்கிட்டே சொல்லணும்னுதான் இருந்தோம். போன வாரம் ஷைலா அகத்துக்காரர் சொன்ன வரனை அண்ணா போய்ப்பார்த்தார். எல்லாம் கூடிவந்தது. மங்களாவுக்கு இந்தக் கல்யாண மாசத்திலேயே ஒருவழி பண்ணிவிடலாம்னு நானும் இவரும் சந்தோஷமாக இருந்தோம். பெண் பார்க்கக் கூட அவா இந்த வெள்ளிக் கிழமை வர்றதாக ஏற்பாடு இளையாள் வரன். ஆனால் நல்ல இடம்னு உங்கிட்டே பிறகு சொல்லலாம்னு இருந்தோம். அண்ணா ரொம்ப மும்முரமாக இதிலே இறங்கியிருந்தார்."

பொறுமையின்றி கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு வாசலில் இறங்கினாள் மங்களா.

'இரண்டு தடவை கல்யாணம் நின்று போச்சுங்கிற அந்தச் சங்கதியை இவாளும் கேள்விப்பட்டுட்டு ஜாதக

பொருந்தலைன்னு சொல்லிட்டா. இல்லையா மன்னி?'' சினத்தை அடக்கிக் கொண்டு ஏளனமாகக் கேட்டாள்.

''ஆமாம்! உனக்கு எப்படித் தெரியும்?'' அதிசயப் பட்ட அனுசூயா பின்னால் வராந்தாவரை நடந்து வந்தாள்.

''என் அதிர்ஷ்டத்தைப் பற்றிய விவரம் உலகமகா அதிசயமாகிவிட்டிருச்சே? இதையா சொல்ல வந்தேள்? தாழியாச்சு. நான் வரேன்...''

விடுவிடுவென்று தெருவில் நடந்தாள். குடையைப் பிரித்துக் கொள்ளக் கூட மறந்துவிட்டாள். கன்னென்று எரித்த வெயிலில் நெருப்பாக எரிந்த மனத்துடன் கோபத்தை அடக்க பற்களை அழுத்தமாக கடித்துக் கொண்டு நடந்தாள்.

'சே! இந்த மன்னி ஏன் இப்படி பொய் சொல்லணும்? சே! சே! இந்த அண்ணா முன்பின் தெரியாத ஒருத்தனிடம் ஏன் பொய் பேரம் செய்யணும்?

கணவன் என்ற தகுதியை அடையுமுன்பே அவள் சம்பாதிப்பது முழுவதும் தன்னைச் சேரவேண்டும் என்று விவாதிக்கிறான் ஒருவன். பிறந்த வீட்டை விட்டுப் போய் விட்டாலும் தனக்கும் ஒரு பங்கு உண்டு என்று பேரம் பேசுகிறார் அண்ணா.

'பெண் என்று பிறந்துவிட்டால் அவள் ஆண்மகனின் கொத்தடிமை. இல்லை. இல்லை. அவனது உடைமைப் பொருள்களில் ஒன்று...லதா இதைக் கேட்டால் என்ன சொல்லுவாள்?...ம்...'' வேகமாக விரைந்தாள்.

உள்ளே நுழைந்து தன் இருக்கையில் உட்கார்ந்ததுமே பதஞ்சலி அவளைத் தேடிக்கொண்டு வந்து நின்றார்.

பஸ்ஸைப் பிடிக்கும்போது வாயில் அடைத்துக் கொண்ட வெற்றிலையை அவர் இன்னமும் துப்பாது குதப்பிக் கொண்டிருந்தார்.



அந்த வாயொடுகூரை முகட்டிற்கு முகத்தைத் தூக்கிக் கொண்டு ழொ ழொ என்று பேச வந்துவிட்டார். மங்களாவுக்கு அவளைக் கண்டதுமே எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

''இந்த ஃபைல்களில் சிகப்புச் கோடு போட்டு வச்சிருக்கிற இடமெல்லாம் அந்தப் புது மானேஜருக்குப் புரியலையாம்...நேரே வந்து விளக்கம் சொல்லச் சொல்றார்.''

''வெற்றிலையைத் துப்பிவிட்டு நீங்களே போய் சொல்லுங்க ஸார்...அது என்னுடைய வேலை இல்லை...'' சிடுசிடுத்தாள் மங்களா.

''அவர் இப்போ கூப்பிட்டு அனுப்பப்போறார்... எச்சரிக்கிறேன்.''—பதஞ்சலி தமது இடத்திற்குத் திரும்பி விட்டார். பன்னீராக எச்சில் முன்னங் கைகள் மீது தெறித்து விட்டதைக் கழுவிக்கொள்ள மங்களா விருக்கென்று எழுந்து பின் பக்கம் சென்றாள்.

புது உதவி மானேஜர் நந்தகோபால் அந்த அலுவலகத்திற்கு வந்து சில நாட்கள் தானாகியிருந்தன. அதற்கு முன்னர் அங்கிருந்த கிரிதர்நாத் கேட்டுக் கொண்டதன் பயனாக பெங்களூருக்கு மாற்றப்பட்டு விட்டிருந்தார். நந்தகோபால் பம்பாய் அலுவலகத்திலிருந்து அனுப்பப் பட்டிருந்தான்.

அவன் வந்த முதல்நாள் பதஞ்சலி அவனுக்குத் தன் அருகேயிருந்த ஊழியர்கள் அனைவரையும் அறிமுகப் படுத்தினார். மங்களாவைத் தனிப்பட்ட முறையில் அவன் ஒரு கணம் கூடுதலாகவே ஏற இறங்கப் பார்த்தான். கவனித்து விட்டாள் அவள். சட்டென்று மேஜை மேல் கிடந்த பைல்கள் பக்கம் திரும்பிக் கொண்டாள். சிறிது நேரம் பதஞ்சலியுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவன் தன் அறைக்குள் சென்றுவிட்டான்.

ரிஸப்ஷனிலிருந்த மேரியும். டெலிபோன் ஆப்ரேட்டர் ஷீலாவும் அங்கே ஓடிவந்தனர்.

"இவர்தான் உதவி மானேஜர் மிஸ்டர் நந்தகோபாலா? ஹ்ரி...ஈஸ் ஏ...ஹம்...ஸார்..." வியப்புடன் முறுவலித்தாள் மேரி.

"என்ன எழவு எனக்கு ஒண்ணும் புரியலையே...?" பதஞ்சலி கூட உரத்த குரலில் சிரித்தார்.

"ரொம்ப லக்ஷணமாக இருக்கிறார்ன்னு சுருக்கமாகச் சொல்றா ஸார்...அது கிடக்கட்டும். எங்க ரெண்டு பேருக்கும் அவரை நீங்க அறிமுகப்படுத்தி வைக்க மறந்துட்டீங்களே? ஏன் ஸார்?"—முறையிட்டுக் கொண்டாள் ஷீலா.

"மேரிக்கு அவரது அறிமுகம் தேவையில்லை. அவளுக்குத்தான் ஒரு பியான்ஸி இருக்கிறாரே?" கண்களைச் சிமிட்டிய பதஞ்சலி மெல்லிய குரலில் ஷீலாவிடம் சொன்னார்.

"உனக்கும் தேவையில்லை. உன் குரலை அவர் நொடிக்கு நூறுதரம் போனில் கேட்கப்போகிறார்... யார் இந்தப் பெண் அழகான குரல்னு அதிசயப்பட்டுக் கொண்டு அவராகவே வந்து அறிமுகம் பண்ணிக்கொள்றப்போ ஏற்படுகிற சுவாரஸ்யமே வேறேயாச்சே...?"

"போங்க ஸார்...நீங்க ரொம்ப நாட்டியா பேசறீங்க." இருவரும் சிணுங்கிக் கொண்டு திரும்பினர்.

"இந்தாங்க...இப்படி வாங்க...ஒண்ணு சொல்லமறந்துட்டேன். மிஸ்டர் நந்தகோபாலுக்கு இன்னும் கல்யாணமாகலை..." இடி இடியென்று சிரித்தார்.

மங்களாவின் முகத்தில் ரத்தம் சூடாகியது.

இந்தப் பெண்கள் எதற்காக இவரிடம் இப்படித் தங்கள் கௌரவத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்?

வேலையின் போது இடையே ஓடி வந்து வம்பு பேசுகிறது என்ன வழக்கம்? இது ஆபீஸா... காய்கறிச் சந்தையா?



வந்த மறுநாளே நந்தகோபால் பையிலிருந்த ஒரு சிறு சந்தேகத்தைக் கேட்டுத் தெளிய அவளைக் கூப்பிட்டனுப்பியிருந்தான். அவன் முகத்தைகூடப் பார்க்காது விடுவிடுவென்று விளக்கத்தைச் சொல்லி விட்டு வேகமாக வெளியே வந்து விட்டாள்.

இரண்டு நாள் கழித்து மீண்டும் ஒருமுறை அவனிடமிருந்து அழைப்பு வந்தது.

மிகவும் சுலபமான ஒரு விஷயத்தைப் புரியாதது போல் பலமுறை அவன் விளக்கம் கேட்டபோது அவளுக்கு மெல்லச் சந்தேகம் தோன்றத் துவங்கியது.

கைகளைக் கழுவிக் கொண்டு ஆசனத்தில் வந்து உட்கார்ந்தாள். "உங்களை மேனேஜர் ஐயா இந்தப் ஃபைல்களை எடுத்திட்டு வரச் சொன்னார்"—ஆபீஸ் பையன் சிரித்தான்.

'அந்த இளையாள்காரனைவிட இவன் மகா மட்டமானவனா இருப்பான் போலிருக்கே?' வெகுண்டாள் மங்களா. ஃபைல்களைக் கட்டாக அள்ளிக் கொண்டு விர்ரென்று உள்ளே சென்றாள்.

ஏ.சி. அறையின் குளுமையில் சுழல் நாற்காலியில் மெத்தென்று சாய்ந்து கொண்டிருந்தான் நந்தகோபால். பொழுது போக்க வந்தவன் போன்றதொரு உல்லாசப் பார்வை.

"உட்காருங்க மிஸ் மங்களா." ஒரு நாற்காலியைக் காட்டி உபசரித்தான். "தாங்க்யூ ஸார்." அவள் உட்காரவில்லை. அவனுக்கு முன் அங்கிருந்த கிரிதர்நாத் தமக்குக் கீழே வேலை பார்க்கும் ஊழியர்களை சரிசமமாக உட்கார வைத்து உபசரித்துப் பேசியதில்லை. தமது அதிகாரப் பீடத்தின் கௌரவத்தையை அணுவளவும் விட்டுக் கொடுக்காது, அதேசமயம் பண்பும் கண்ணியமுமாக நடந்து கொள்வார். நின்று கொண்டே ஃபைல்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டு போய்விடுவது

வழக்கம் இந்தத் திடீர் சலுகையை அவள் விரும்பவில்லை காலோடு தலைவரை அவனது கண்கள் தன்மேல் பரவிய முறையும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

அது சமயம் உள்ளே வந்தான் ஆபீஸ் பையன். மரத் தட்டை மேஜை மீது வைத்து விட்டு மாயமானான். மேலே போர்த்தியிருந்த வெள்ளைத் துணியை எடுத்து அப்பால் போட்டுவிட்டு ஐஸ் துண்டங்கள் மிதந்த பழச்சாறை—கண்ணாடி கூஜாவினின்று இரண்டு டம்ளர்களில் நிறைத்தான் நந்தகோபால்

"உக்காருங்கோ - முதல்லே பழரசத்தைச் சாப்பிடுங்கோ இப்போ ஆபீஸின் டீ டைம். நான் காப்பி டீ இதுகளைச் சாப்பிடறதில்லை. பழரசந்தான்· அதுவும் ஐஸ் போட்டது தான் சாப்பிடற பழக்கம்..."

வரிசையான பற்கள் தெரிய உல்லாசமாகச் சிரித்தான்.

"நான் பழரசம் சாப்பிடுவதில்லை, மன்னிக்கவும்..." பட்டென்று பதிலளித்ததைக் கேட்டு அவன் 'ஹோ ஹோ...' என்று உரக்கச் சிரித்தான். கையில் பிடித்திருந்த தம்ளரை மேஜைமீது வைத்துவிட்டு சுழல் நாற்காலியில் சுழன்றாடினான்.

"ஸபையரில் ஒரு நல்ல இங்கிலீஷ் படம் காட்டுகிறாங்க ...நாளை சாயங்காலம் உங்களுக்கு நேரம் இருக்கு மில்லையா...? ரெண்டு டிக்கெட்டுகள் புக் பண்ண ஏற்பாடு செய்துடுறேன். என்ன சொல்றீங்க...?"

மங்களா முகம் சிவந்து போனாள். நெஞ்சிலே நெருப்பு கனன்றது. கூட சினிமாவுக்கு வரச் சொல்கிறானே தடியன்? எத்தனை துணிச்சல்? வேலை செய்யும் பெண்கள் என்றால் கிள்ளுக் கீரையென்றா நினைப்பு?

"மௌனம்... சம்மதத்துக்கு அறிகுறிம்பாங்க. ஓ.கே..." அவன் கொஞ்சிக் குழையுமுன் மங்களா குறுக்கே வெட்டினாள்.



"பைல்களில் சந்தேகம்னு கூப்பிட்டனுப்பினிங்க விளக்கம் சொல்ல வந்தேன். சினிமாப் பாக்கறதைப் பத்திப் பேச வரலை...நீங்க கேட்டிருக்கிற சந்தேகத்திற்கு ஆங் காங்கே பதில் எழுதி பைல்களில் வச்சுப் பையனிடம் அனுப் பறேன்."—வேகமாக வெளியே வந்து விட்டாள்.

அப்பொழுது அலுவலகத்தின் இடை நேரம். கையில் தேநீர் கோப்பையுடன் தன் இடத்தைவிட்டு ஷீலா வந்து பதஞ்சலியுடன் வம்படித்துக் கொண்டிருந்தாள். "இன் னிக்கு காலையிலிருந்து இதுவரை சுமார் முப்பது தடவை கள் இருக்கும். உதவி மானேஜர் மாற்றி மாற்றி லைன் கேட்டு கழுத்தை அறுத்திண்டு இருந்தார் ஸார்...எனக்கு எரிச்சலாக இருந்தது."

"எரிச்சல் பட்டு முறைச்சுக்கிறதிலே லாபமில்லே. வீண் பொல்லாப்பு. நந்தகோபால் யார் தெரியுமா? இந்த நிறுவனத்தின் தலைவர் இருக்காரே...அவருடைய நெருங் கின தோஸ்தின் பிள்ளை. மரியாதையா நடந்துக்கோ..."

"அப்படியா?"—கிறீச்சிட்டாள் ஷீலா.

"பெரிய இடத்துப்பிள்ளை அவன். இந்த வேலை யில்லாட்டா அவன் தலை போயிடாது. ஆனால் நமக்குப் போய்விட்டால் நடுத்தெருவில் நிற்போம். ரொம்பமோதி னால் வேலைக்கு வெடி வெச்சுடுவான். ஒழுங்கா நடந் துக்கோ..."

ஃபைல்களை வைத்துவிட்டு முகத்தில் அரும்பிய வியர் வையைத் துடைத்துக் கொண்டாள் மங்களா.

இருண்டு கிடக்கும் தன் எதிர்காலத்தை எண்ணி மிரண்டு போய் இந்த வேலை ஒன்றையே நம்பிக் கொண்டு வாழ்கிறவள் அவள்...

அதற்கு இவனால் ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ? அட கடவுளே...!

# 10

வேலைக்குக் கிளம்பிய அவசரத்திலே டிபன் பாக்ஸைக் கூட மறந்து தூக்கமாட்டாத சுமையாக ஆபீஸ் ஃபைல்களை அணைத்துக் கொண்டு மங்களா விரைந்து வந்து கொண்டிருந்தாள்.

பஸ் நிலையத்தின் அருகே எதிர்புறமாக வந்து கொண்டிருந்த கிழவர் அவளைக் கண்டதும் தயங்கி நின்றார்.

தும்பையாக வெளுத்துவிட்ட கிராப்பு முடியையும் கனமான பிரேம் கொண்ட கண்ணாடி முகத்தையும் அவள் எங்கேயோ பார்த்த நினைப்பு. அவளும் தயங்கினாள்.

"மங்களாவா...? ஃபைல்களைத் தூக்கிக்கொண்டு... வெயிலில் குடை கூட இல்லாம... அடடா! வேலைக்குப் போயிண்டு இருக்கிறாயா?"

அப்பாவுக்குப் பிறகு அவளைப் பற்றி அக்கறையுடன் —அனுதாபமாக விசாரித்த அந்த மனிதரை சட்டென்று அவளுக்கு அடையாளம் தெரியவில்லை.

"என்னம்மா தெரியலையா" மெல்ல அவர் முறுவலித்த போது மண்டையில ஓங்கி அடித்தாற் போல் நினைவு பளிச்சிட்டது. இந்தச் சில ஆண்டுகளில் சங்கரலிங்கம் எப்படி மாறி விட்டிருக்கிறார்! மனத்திற்குள்ளே அவரது தோற்றத்தைக் கண்டு பிரமிப்பு.

"எப்படி தெரியாமல் போகும் ஸார்...உங்க தயவாலே... உங்க உதவியாலேதான் இந்த வேலை எனக்குக் கிடைச்சுது. அதை மறந்துடுவேனா?" நன்றி பெருக்கிலே முகம் சிவக்க நெஞ்சு பதற மேலே பேசாது நின்றாள்

அவள் அன்றாடம் பிடிக்கும் பஸ் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுமே என்று கால்கள் பூமியில் பாவாது பரபரத்தன. ஆனாலும் அப்பாவின் நெருங்கிய நண்பரான



சங்கரலிங்கத்தை அவள் அசட்டை செய்துவிட்டு அப்பால் போக முடியாதே. அவரது சிபாரிசில் கிடைத்த வேலை அதன் தயவால்தானே அவள் தலை நிமிர்ந்து இதுவரை வாழ்ந்து கொண்டிருக்கிறாள்?

'குடை கூட இல்லாம வேலைக்குப் புறப்பட்டுட்டியா அம்மா?' தமது குடையைப் பின்னுக்குச் சாய்த்துக் கொண்டு... புன்முறுவலுடன் கேட்டார் அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. அவள் அன்று குடையையும் மறந்து வீட்டில் விட்டு வந்திருந்தாள். எல்லாம் அந்தப் பாவி நந்தகோபாலனால்தான்

வேண்டுமென்றே அவனும் தினமும் சுமையாக அவள் கவனிப்புக்கு ஃபைல்களை அனுப்பிக் கொண்டேயிருந்தான். சிவப்புக் கோடிட்ட இடங்களுக்கு விளக்கம் எழுதி வைத்து கை வலித்துப் போயிற்று. அப்படியும் எல்லாவற்றையும் முடிக்க முடியவில்லை. பரீட்சைக்குப் படிப்பதுபோல் தினமும் இரவு வேளையில் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்ட பின், ஃபைல்களைத் திறந்து வைத்துக் கொண்டு, வெகு நேரம் கண் விழித்து எழுதி முடிக்க வேண்டியிருந்தது.

என்றாலும் அவள் சளைக்கவில்லை. மறுநாள்-பூதத்திற்கு வேலையிட்டது போல் இன்னொரு போர் ஃபைல்களை அவள் மேஜைமீது குவித்து வைப்பது வழக்கமாகி விட்டது. பதஞ்சலிக்கு அடுத்தபடியாக அலுவலகத்தில் அவன் இரண்டாவது எதிரி. சினிமாவுக்கு அவனுடன் வர அவள் ஒப்புக் கொள்ளாததற்கு இப்படி மறைமுகமாக அவன் பழி தீர்த்துக்கொள்ளத் தொடங்கிவிட்டிருந்தான், அவள் இதைப் பற்றி யாரிடம் முறையிட்டுக் கொள்வாள்? அவனுக்கு மேலதிகாரியாக அந்த ஸ்தானத்தில் இருக்கவேண்டிய மானேஜரின் பதவி கடந்த வருஷமாகக் காலியாகத்தான் இருந்தது.

டைரக்டரின் பிள்ளைதான் அதை முன்னர் வகித்துக் கொண்டிருந்தார். உடம்புக்கு முடியாமல் அறுவைச் சிகிச்

சைக்குப் பம்பாய் போன மானேஜர் மறுபடி சென்னைக்கு வரவில்லை. வேறு ஒரு கிளைக்குப் போய்விட்டார். அவருக்குப் பதில் டைரக்டர் இன்னமும் யாரையும் தேர்ந்தெடுத்து அதில் உட்கார வைக்கவில்லை. அதனால் அந்தப் பீடத்தின் கீழ் இருந்தவர்கள் வைத்தது சட்டமாக அலுவலகத்தின் நிர்வாகத்தில் ஊழல் மெல்ல தலையைக் காட்டிக் கொண்டிருந்தது.

''மங்களா சௌக்கியமாகத்தானே இருக்கே? ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டியே?' சங்கரலிங்கம் மெல்லச் சிரித்தார், பஸ் வரும் திக்கில் மங்களா பார்வையை ஒரு முறை ஓடவிட்டுத் திரும்பினாள்.

''சொல்லுங்க சார், பெரியவா சொல்ற புத்திமதியைக் கேட்க என் கோவிச்சுக்கணும்?''

''ஆபீஸ் வேலைகளை வீட்டுக்குக் கொண்டு வர்றதும் வீட்டு வேலைகளை ஆபீஸ்லே செய்யறதும் ரொம்பத் தவறு அம்மா... அந்தந்த ஃபைல்களை அப்போ அப்போ... முடிச்சு மேற்பார்வைக்கு டக்குனு அனுப்பிடணும்... சிலர் ஆபீஸ் நேரத்திலே சொந்தக்காரங்களுக்கு சட்டுனு ஒரு கடுதாசி எழுதற பழக்கம் உண்டு. அதெல்லாம் நியாயமிலலே. சம்பளம் கொடுக்கிறவனுக்கு அதிகமா உழைக்க வேண்டாம்; உண்மையா உழைச்சா போதும்...''

''ஆபீஸ் நேரத்திலே நான் ஸ்வெட்டர் பின்னிண்டு உட்கார்ந்திருக்கமாட்டேன் ஸார்... என் வேலையை ஒழுங்கா செய்கிறேன். அதுக்கு மேலேயும்... சமாளிக்க முடியாததை வீட்டிலே கொண்டு வந்து முடிக்கிறேன்.''

''அவசியமில்லை. உன் தலையில் வேணுமின்னே யாராவது அதிகப்படி வேலையைக் கட்டினா... அதைப் பத்தி உன் மேலதிகாரியிடம் தைரியமா போய்ப் புகார் பண்ணு. இந்தக் காலத்திலே வாயுள்ள பிள்ளைதான் பிழைப்பார்கள். உண்மையைக் கண்டு நீ ஒதுங்கிப் போகவே கூடாது...''



'வேலியே பயிரை மேய முற்பட்டால்...' கேட்க வேண்டும் போன்று மனதிலே ஒரு துடிப்பு... ஆனாலும் மௌனமாக முறுவலித்தபடி தலையை அசைத்தாள்.

''உன் அப்பாவை நான் அடிக்கடி நினைச்சுக்கிறேன். ரொம்ப கண்ணியமானவன். எனக்கு ரொம்ப நெருங்கின சிநேகிதன். அவன்போன பின்பு வலது கையே ஒடிஞ்சு விட்டதுபோல் ஆயிட்டுது. மொத்தத்தில் நான் வேலையிலிருந்து ஓய்வடைஞ்சபின்—யாரும் என்னை சட்டை பண்றதில்லை, நீ பார்க்கிற இந்த வேலைக்கு இப்போ நான் சிபாரிசு பண்ணிணா அந்தக் கடுதாசியை அப்படியே குப்பைக் கூடையில் போட்டு விடுவாங்க... எல்லாம் பீடத்திலே இருக்கிற வரைதான் மதிப்பு. வரட்டுமா?''—அவர் கிளம்பினார்.

பஸ் தொலைவில் வருவதை உணர்ந்து அவள் வேகமாக நிலையத்தை அணுகினாள். கூட்டத்திற்குள் இடித்துக் கொண்டு புகுந்து பெரிய கூடையை மடியில் வைத்துக் கொண்டிருந்த ஒரு பெரிய கொண்டைக்காரப் பெண்ணின் அருகே நெருக்கிப் பிடித்துக்கொண்டு மூச்சடைக்க உட்கார்ந்தாள்.

அவர் சொன்னது எத்தனை உண்மை? பீடத்திலிருக்கும் வரைதான் யாருக்கும் மதிப்பு. ஏன். பெண் என்பவளுக்கும் அந்த உண்மை பொருந்தத்தானே செய்கிறது?

கட்டுப்பாடு என்ற பீடத்தினின்று பெண் இறங்கி விட்டால்... மதிப்புக் குலைந்து... நாசமாகி விடமாட்டாளா?

நந்தகோபால் அவளிடம் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருக்கட்டும். அவள் அசையப் போவதில்லை. வேலை போய்விடுமே என்று அஞ்சி... அந்தப்பீடத்தினின்றும் இறங்கிவிடப் போவதில்லை... ஹும்... உயிர் போனாலும் சரி... நகரப்போவதில்லை... ஆமாம், இதைப்பற்றி ல[illegible]டம் பேசினால்...?

... LIBRARY
AMBATTUR (OT) CHENNAI-53.
KINDLY RETURN WITHIN 7 DAYS

ஆபீசில் அன்று ஆசனத்தில் வந்து அமர்ந்தவளுக்கு மூச்சுவிட நேரமே இருக்கவில்லை. அத்தனை வேலை. உணவு நேரத்தின்போது. அலுவலகத்து பையனிடம் பணம் கொடுத்து ஒரு மசால் தோசை வாங்கி வரச் செய்து. அதை ஆபீஸ் அறையிலேயே உட்கார்ந்து சாப்பிட்டாள். அவன் கொண்டு வந்து வைத்த தண்ணீரை மடமடவென்று குடித்து விட்டு வீட்டுக்கு எடுத்துப்போக ஒதுக்கி வைத்த பைல்களை அங்கேயே முடிக்க இழுத்து முன்னால் வைத்துக் கொண்டாள்.

தொலைபேசி மணி அடித்தது. மறுமுனையில் லதா சிரித்தாள். "நீ ஆபீஸிலேதான் இருப்பேன்னு எனக்குத் தெரியாதா? இந்த மாதிரி விசுவாசமா உழைக்கிறவா உருப் படறதில்லை. அது உனக்குத் தெரியுமோ...?" லதா கிணு கிணுவென்று மறுமுனையில் சிரித்தாள்.

"பல் சுளுக்கிக்கப் போறது...நிறுத்து... விஷயம் என்ன?" அதட்டினாள் மங்களா. அதேசமயம் தோழியின் குரலைக் கேட்க இதமாகத்தான் இருந்தது.

"இன்னிக்கு நான் ஒரு மணி நேரம் லீவு எடுத்துக் கொண்டு முன்னதாகவே கிளம்பிவிடப் போகிறேன். சரஸ்வதி நர்ஸிங்ஹோமில் என் பக்கத்து வீட்டுக்காரர் ஹார்ட்அட்டாக் வந்து படுத்திருக்கிறார். அவரை எட்டிப் பார்த்துவிட்டு வரணும்னு அம்மா உத்தரவு."

"அப்படியா." ஏனோ மங்களாவுக்கு உடனடியாக அப்பாவின் நினைப்பு குபீரென்று நெஞ்சை அடைத்தது.

"அதற்கு பிறகு நான் ஸ்வப்பனாவின் வாசலில் உன்னை சந்திக்க நின்று கொண்டிருப்பேன். ஆபீஸ் முடிஞ்சதும் நீ நேரே அங்கே வரணும். நாம் பேசி ரொம்ப நாளாச்சு. தொலையட்டும்னு இன்னிக்கு என் செலவில் உனக்குத் தயிர்வடை வாங்கித் தந்துவிடு கிறேன்...காத்திருப்பேன்... ஒகே..." மறுப்பைக் கேட்க விரும்பாமல் பட்டென்று தொலைபேசியை வைத்து விட்டாள் லதா. மங்களா தன் இடத்தில் வந்து உட்



கார்ந்து கொண்டாள் ஃபைல் ஒன்றை எடுத்து பக்கங்களைப் புரட்டினாள். அப்பாவின் சிரித்த முகம் நிழலாடியது. நினைவு...எங்கேயோ ஓடியது...

அந்த இரண்டந்தார வரன் கைநழுவிய பின்னர் அவள் அப்பாவிடம் அதிகம் பேசுவதை நிறுத்திக்கொண்டு விட்டிருந் தாள்.

முன்போலக் காலை வேளையில் பத்திரிகையும் காப்பியு மாக அவரைத் தேடிக்கொண்டு வாயில் வராந்தாவுக்கு வருவ தில்லை. கூண்டுக்குள் அடைபட்ட கோழியாக தன் அறைக் குள்ளே நாள் முழுவதும் அடங்கிக் கிடந்தாள்.

அவளிடம் மனம் விட்டுப்பேச அப்பா எத்தனையோ தடவைகள் முயன்றார். தோல்வியடைந்து போனார்.

ஒரு சமயம் அந்த ஏக்கம்தானோ?

அதைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் ஒரு குற்ற உணர்வு அவள் நெஞ்சை நெருடியது உண்மை.

கடைகுட்டி என்று சீராட்டிச் செல்லமாக வளர்த்த தந்தைக்கே அவள் முடிவில் எமனாகி விட்டாளோ! அப்படி ஒரு எண்ணம் உள்மனதிலே உறுத்திக் கொண்டுதான் இருந்தது.

ஒரு நாள் மாலை. அவள் மாடியிலிருந்து கீழே வந்த போது அப்பா முன்னறையில் தனியே உட்கார்ந்திருந்தார் அப்போது வீட்டில் யாரும் இருக்கவில்லை.

அவரைப் பாராதது போல் தாண்டிக் கொண்டு தோட்டந்திற்குள் புக முயன்றபோது முனகல் சப்தம் கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பி பார்த்தாள்.

மனத்தாங்கலை உதறிவிட்டு, "அப்பா" என்று அருகில் நெருங்கினாள். ஜகதீசனின் முகம் சாம்பல் பூத்திருந்தது. நெற்றியில் முத்து முத்தாக வியர்வை. இடது கையால் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு திணறிக்கொண்டிருந்தார்.

"என்னப்பா? உடம்பை என்ன பண்றது?"— திகிலுடன் மகள் கேட்டாள்.

"நேற்று ராத்திரி ஒரு தடவை மார்பிலே நல்ல வலி. காத்தாலேயே நம்ப டாக்டர்கிட்ட போய் காட்டினேன் ஆஸ்பத்திரியிலே கட்டாயம் இருக்கணும்னு சொன்னார்.

எச்சிலை விழுங்கிக் கொண்டாள். மின் விசிறியைச் சுழல விட்டாள். ஓடிச் சென்று டம்பளரில் குடிக்கத் தண்ணீர் எடுத்து வந்தாள்...கைகளும் கால்களும் பதற "என்னப்பா செய்யணும்? சொல்லுங்க... இந்த ஜலத்தைக் குடியுங்கோ." உபசரித்தாள்.

"எனக்கு லேசா ஹார்ட் அட்டாக் வந்திருக்கு. உடனடியா நர்ஸிங் ஹோமில் வச்சுப் பார்க்கணும்னார் டாக்டர். நான் பேசாம இருந்தது தப்பு. இப்போ மறுபடி ஒரு வலி வந்துடுத்து—தாங்க முடியலை...என்னை ஒரு டாக்ஸியிலே அவருடைய நர்ஸிங் ஹோமுக்கு அழைச்சிண்டு போம்மா... அப்படியே உன் அண்ணாவுக்குப் போன் பண்ணிடு. வேலைக்காரனைக் கூப்பிட்டு டாக்ஸியைக் கொண்டு வரச்சொல்..." திக்கித் திணறி அவர் பேசிவிட்டு மயங்கி சோபாவில் சாய்ந்து கொண்டபோது அவள் நடுங்கிப் போய் விட்டாள்.

டாக்ஸி வருவதற்குள்-அண்ணா போனில் பதிலளிப்பதற்குள் அவள் அப்பாவுக்காக பிரார்த்தித்துக் கொள்ளாத தெய்வங்கள் பாக்கி இருக்கவில்லை.

ஜகதீசனைச் சில நாட்கள்தான் விசேஷக் கவனிப்பு அறையில் வைத்து சிகிச்சை கொடுத்தார்கள். பின்னர் சாதாரண அறைக்கு மாற்றிவிட்டார்கள். உறவினர்கள் பார்க்கலாம். பேசலாம் என்று அனுமதி கிடைத்ததும்—அத்தனை நாள் பேசாததிற்கு பிராயச்சித்தம் போல மங்களா தான் முழுவதும் அந்த அறையில் கூடத் தங்கி அப்பாவை நன்கு கவனித்துக் கொண்டாள்.



சில நாட்களுக்குப் பின்னர் ஒருநாள் மாலை, மருந்து மயக்கத்திலே தூங்கிக் கொண்டிருந்த ஜகதீசன் மெல்ல கண்களைத் திறந்து அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"இப்படி கிட்ட வந்து உட்கார்...உன்கிட்டே ஒண்ணு சொல்லணும்"—அப்பா மெல்லிய குரலில் பேசினார்.

"என்னப்பா?"—வியப்புடன் நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டாள் அவள்.

"என்னை முழுவதும் மன்னிச்சுட்டியா?" நலிந்து ஒலித்தது அவர் குரல் "அதைப்பத்தி இப்பப் பேசணுமா?" மங்களாவுக்கு என்னவோ போலிருந்தது.

"பேச இனி நேரம் இருக்குமோ இருக்காதோ? யார் கண்டா?"

"அப்பா... அப்படி எல்லாம் சொல்லாதீங்க." திகிலுடன் அவரது முகத்தைப் பார்த்தாள்.

"என்னைப் பொறுத்தவரை ஒரு வழியா நான் பட்ட கடன்களையெல்லாம் அடைச்சுட்டேன். உனக்கு ஒரு வழி செய்யாம கண்ணை மூடிவிடக்கூடாதுன்னு டாக்டரைப் பார்த்த முதல் நாளே உடனேயே பாங்குக்குப் போனேன் என் கணக்கில் பத்தாயிரந்தான் மீதி இருந்தது. அதில் ஆறாயிரத்தை எடுத்து உன் கணக்கில் கட்டிவிட்டிருக்கேன்."

"அப்பா! இதெல்லாம் இப்ப எதுக்குப் பண்ணினேள்?"

"காசு பணம் எதுவும் வைக்காமல் நான் போய்விட்டால் உன் கல்யாணத்துக்கு சீதாராமன் கஷ்டப்படக் கூடாது. ஆறாயிரத்திலே ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் பண்ண முடியுமான்னு கேட்காதே ஏதோ என்னால் ஆனதைக் கொஞ்சம் வச்சிட்டுப் போறேன். உனக்கு அது உதவட்டும்..."

"அப்பா...!" தாங்க முடியாது அவள் விம்மி விட்டாள்.

நோயுடன் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் போது கூட, அந்த இதயத்தில் அவளைப்பற்றிக் கனிவான நினைப்பு.

அப்படிப்பட்ட அப்பாவிடம் பேசாது மனத்தாங்கலாக நடந்து கொண்டது எத்தனை பெரிய பிசகு...வேதனை ரம்பமாக நெஞ்சை அறுத்தது.

"அம்மா மங்களா! இன்னொன்றும் சொல்லிவிட றேன். எக்காரணம் கொண்டும் உனக்குப் பிடிக்காதவனுக்கு நீ கழுத்தை நீட்ட வேண்டாம். உன் மனசுக்குப் பிடிச்சவன் யாராக இருந்தாலும் சரி. பாதகமில்லை. நீ கல்யாணம் பண்ணிக்கோ. உனக்கு எப்பவும் என் ஆசிகள் உண்டு. கடைசியா ஒண்ணு சொல்ல விரும்பறேன். கல்யாணம் என்கிற பந்தமில்லாது...வெறும் உடல் உணர்வுக்காக... நீ எவனிடமும் மயங்கி...கட்டுபாடுகளை உதறிவிட்டு இறங்கி விடாதே...அந்த மாதிரியான வாழ்க்கை எந்த பெண்ணுக்கும் மன நிறைவை ஒரு பொழுதும் கொடுக்காது. அதைவிட நீ தனிமையிலே... வாழ்க்கையை... கௌரவமாக தள்ளிவிட லாம். புரிகிறதா?"

"புரிகிறது"—கண்ணீருடன் தலையை அசைத்தாள்.

அதற்குப் பிறகு அப்பா அப்படி மனம் விட்டு நெருக்க மாகப் பேச நேரமே இல்லாது அன்று இரவே பெரிய நெஞ்சு வலி வந்து போய் விட்டார்.

'சே! சே! இப்போ என் இப்படி? யாராவது பார்த்தால்?' தன்னையே கடந்து கொண்டு எழுந்து பின்பக்கம் சென்றாள். வாஷ் பேசினில் முகத்தைக் குளிர்ந்த நீரில் கழுவிக் கொண் டாள். ஆனால் அப்பாவின் நினைப்பை...சட்டென்று சில கண்ணீர்த் துளிகளால் அகற்ற முடியவில்லை.

மேலும் குமுறிக் கொண்டு அழுகை வரவே...அந்த அறையின் சுவரின் மீது சாய்ந்து கொண்டு நெஞ்சு ஆறுகிற மட்டும் ஒரு மூச்சு அழுது தீர்த்தாள்.

# 11

வேலை செய்துவிட்டு அலுத்துப்போய் வெளி வந்த வள் போல் இருக்கவில்லை. எங்கேயோ தேநீர் விருந்துக்கு கிளம்பிவிட்டவள் போல ஊதா வண்ண அமெரிக்கன் ஜார் ஜெட்டில் ஒயிலாக, உயரமாக லதா ஸ்வப்பனாவின் வாயி லில் நின்று கொண்டிருந்தாள்.

"அம்மாடி! ஒரு வழியாக வந்து சேர்ந்தே. எங்கே ஓவர் டைம்னு ஆபீஸிலேயே உட்கார்ந்துவிடுவியோன்னு பயந்து கொண்டிருந்தேன்."

தோழியின் கரத்தை மென்மையாக—அன்பாகப் பிடித்துக் கொண்டாள் லதா.

இருவரும் உள்ளே சென்றனர்.

மாதத்தின் கடைசி வாரம். லதாவின் கைப்பையில் காசின் ஓசை குறைந்துதான் கேட்டது. ஆனால் அவள் மனதில் அன்றும் எப்பொழுதும் போல் தாராளம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

"நான்தான் கூப்பிட்டேன், அதனால் நீ பேசாமல் சாப்பிட வேண்டும். செலவு என்னுடையது. புரிகிறதா?" சிநேகிதியை அதட்டிவிட்டு, மேஜையருகே வந்து நின்ற பையனிடம் சொன்னாள் லதா!

"குலாப்ஜாமூன், தயிர்வடை, ஸ்பெஷல் காபி எல்லாம் இரண்டு" வெகுநேரம் ஜாமூனைத் துளித்துளியாக வெட்டித் தின்றாள் மங்களா. மெல்ல ஸ்பூனால் சர்க்கரைப் பாகை அள்ளி வாயில் கொட்டிக் கொண்டாள். ஊகும்! அப்பவும் நெஞ்சிலே வழிந்த அந்தக் கசப்பு உணர்வை அந்த இனிப் பால் விரட்டவே முடியவில்லை.

எங்கேயாவது அருகில் மனிதர்கள் இல்லாத ஒரு இடத்திலே லதாவுடன் மனம்விட்டுப் பேசவேண்டும் போல் பிரச்னைகள் உள்ளத்திலே சுமையாக அழுத்தவே, சுற்றிலும் திரும்பிப் பார்த்தாள். தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு.

"என்ன இப்படி இடிஞ்சி போயிட்டே...என்ன விஷயம்?" லதா சிரித்துக் கொண்டே ஒரு தயிர்வடைத் தட்டைத் தன் அருகே இழுத்துக் கொண்டாள்.

இது ஆபீஸ் அல்ல. அவனது அதிகாரத்திற்கு அப்பாற் பட்ட இடத்தில்தானே இருக்கிறாள்? உடம்பெல்லாம் அச்சத்திலே இப்படிப் பதறுவானேன்?

மூலையிலிருந்த ஒரு மேஜை பின்னால் அவன் தனியே உட்கார்ந்திருந்தான். அவர்களுக்கு முன்னதாக வந்திருக்க வேண்டும். முன்னால் தட்டுகள் காலியாகக் கிடந்தன பையன் கொண்டு வந்து வைத்த காப்பிக் கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டு மீசை நனைய தலையைக் குனிந்தபடி அதை உறிஞ்சிக் கொண்டிருந்தான்.

"நான் காப்பி—டீ இவைகளைச் சாப்பிடுவதில்லை. பழரசந்தான்; அதுவும் ஐஸ் போட்டதுதான் சாப்பிடற வழக்கம்!"

எடுத்த எடுப்பில் இப்படி ஒரு பொய் சொல்ல வேண்டியது அவசியமா? அவனது பதவிக்குத்தான் அது தகுமா?

"என்ன முணுமுணுக்கிறே, அந்தப்பக்கம் முறைக்கிறே, எனக்குச் சொல்லக் கூடாதா? மண்டை வெடிக்கிறது எனக்கு." சிரித்தாள் லதா.

"உன் பின்னால் வலது கோடியில் உட்கார்ந்திருக்கிறானே அவனை உடனடியாகத் திரும்பிப் பார்க்காதே. நான் சொல்லும்போது திரும்பிப் பார்." எச்சரித்தாள் மங்களா. பரபரப்பாக தயிர்வடையை வெட்டி வேகமாக விழுங்கத் தொடங்கினாள்.



நெஞ்சு ஏன் இப்படி படபடக்கிறது? இந்தப் பாவி, வேலைக்கு வெடி வைத்துவிடுவான் என்றா திகிலா? தனக்குள்ளே எண்ணியபடி தட்டின் மீதே கவனமாக இருந்தாள்

"சட்டுனு திரும்பிப் பார்க்கச் சொல். எனக்கு எப்பொழுதும், நீண்ட சஸ்பென்ஸ் பிடிக்காதே தெரியு மில்லியா? கதைப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தை முதலில் படித்து முடித்துவிடும் பழக்கமாச்சே. பொறுமையைச் சோதிக்காதே, சொல் சீக்கிரம்" லதா சீண்டி விட்டு அவளது கரத்தையும் பிடித்து ஆறுதலாக அழுத்தினாள்.

காப்பியுடன் பையன் பில்லைக் கொண்டு வந்து வைத்து விட்டு நகர்ந்தான்.

"சட்டுனு இப்போ திரும்பிப் பார்," அடிக்குரலில் மங்களா உத்தரவிட்டு மெல்ல கோப்பையைத் தூக்கிக் கொண்டாள். அவள் கரம் கிடுகிடுவென்று நடுங்கியது.

பில்லுக்குரிய பணத்தை தட்டில் வைத்துவிட்டு பத்துப் பைசாவை காலடியில் நழுவவிட்டாள் லதா அதைத் தேடி எடுப்பவள் போல். குனிந்து மெல்ல பின்னால் திரும்பி அவனை நன்றாகப் பார்த்தாள்.

கண்ணாடிக் கிண்ணத்திலே வைக்கப்பட்டிருந்த சோம்பிலிருந்து ஒரு துளி அள்ளி வாயில் போட்டுக் கொண்டு தோள் பையை மாட்டிக் கொண்டு அவன் புறப்பட்டான்.

தோழியுடன் கூடவே எழுந்து வெளியே வந்தாள் மங்களா. ஸ்வப்பனாவின் உள் பக்கம் திரும்பிக்கூட பார்க்கத் துணிவின்றி வேகமாகத் தெருவில் நடக்கத் தொடங்கினாள்.

கொஞ்ச தூரம் வந்த பின்னர்தான் லதா கேட்டாள்.

"பார்க்க ஜம்முனு இருக்கான், யார் இந்தக் கதாநாயகன்?"

"இல்லை, பெரிய வில்லன் எங்கள் ஆபீஸிற்குப் புதிதாக வந்திருக்கும் உதவி மானேஜர் நந்தகோபால்." அதற்கு மேல் பேச முடியாது ஆத்திரத்தில் மௌனமாக நடந்தாள் மங்களா.

வீட்டுக்குப் போக வேண்டும் என்கிற நினைப்பு இன்றி இருவரும் கடற்கரை பக்கம் வந்து சேர்ந்தனர். வறுத்த கடலைப் பொட்டலம் ஒன்றை வாங்கிக்கொண்டு லதா மணலில் உட்கார்ந்தாள்.

"உன் கோபத்தைப் போல இந்தக் கடலையும் இன்னமும் சூடா இருக்கு. உட்கார். கடலையைக் கொறித்துக் கொண்டே கதையைச் சொல்லு. இந்த வில்லன் ஆபீஸில் தொந்தரவு கொடுக்க ஆரம்பிச்சுட்டானா?"

"உனக்கு எப்படி தெரியும்?" வியப்புடன் மங்களா தோழியின் எதிரே உட்கார்ந்து கொண்டாள்.

"இந்த வேலைக்கு முன்னால் நான் மூன்று இடத்திலே வேலை செய்து வெளி வந்தவள். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வித அனுபவம், அதனாலே நீ சொல்வதற்கு முன்னால் என்னால் ஓரளவு ஊகிக்க முடிகிறது."

மணலை விரலால் அளைந்து கொண்டே மங்களா பேசினாள். வேலைக்கு வந்த சில நாட்களுக்குள் நந்தகோபால் அவளுக்குக் கொடுக்கும் சில்லரைத் துன்பங்களை விவரித்தாள்.

"முகத்திலடித்தாற் போல் சினிமாவுக்கு, வர முடியாதுன்னு மறுத்தும் அவனுக்கு வெட்கமே இல்லை." பொங்கிய சினத்தைக் கட்டுப்படுத்த உதட்டை அழுத்தமாக கடித்துக் கொண்டாள் மங்களா.

"காம வசப்பட்டவனுக்குப் பயம் கிடையாது. வெட்கம் கிடையாது என்பது முற்றிலும் உண்மை. வெட்கத்தை உதறி விட்டு இன்னும் ஏதாவது முயன்று கொண்டேதான் இருப்பான்."



"நேரே பார்த்தாப்பல சொல்றீயே? நெஞ்சிலே தைக்கிறாப்பல பட்டுனு பதில் சொல்லியாச்சு. ஆசாமி அடங்கிப் போய்விட்டான்னு நினைச்சேன். இன்னிக்கு ஆபீஸ் முடியறத்துக்கு முந்தி பையனைவிட்டு என்னைக் கூப்பிட்டனுப்பினான். எல்லா ஃபைல்களையும் மூட்டையாகக் கட்டிக் கொண்டு உள்ளே போனேன். 'ஃபைல்களைப் பார்க்க கூப்பிடவில்லை. உங்களைப் பார்க்கத்தான் கூப்பிட்டனுப்பினேனு சிரிச்சான். எத்தனைத் திமிர் அத்தோட நிற்கலை. நீங்கள் அண்ணா நகரிலே வசிக்கிறீங்கன்னு தெரிஞ்சது. உதவி செய்யலாமேன்னு கூப்பிட்டனுப்பினேன். என் அக்காவும் அவங்க கணவரும் அண்ணா நகரில்தான். வசிக்கிறாங்க. அவங்க வீட்டிலே தான் தற்சமயம் நான் தங்கியிருக்கேன். அந்தப் பக்கம் நான் தினமும் போகிறதினாலே நீங்க ஏன் பஸ்ஸில் போய் சிரமப்படணும்? என் காரிலேயே அழைத்துக் கொண்டு விட்டுட்டுப் போறேன். என்ன சொல்றீங்கன்னு ரொம்ப அழுத்தமாகக் கேட்டான். ஓங்கி கன்னத்தில் ஒரு அறை விடணும்போலத்தான் எரிச்சலாக இருந்தது 'தாங்க்யூ ஸார். எனக்குப் பஸ்ஸில் போவதுதான் பிடிக்கும்'னுட்டு வெளியே வந்து விட்டேன்."

லதா குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.

"இந்த மாதிரி எனக்கும் ஒரு அனுபவம் ஏற்பட்டது. கொஞ்சம் வேறு தினுசு அனுபவம். உன்னாட்டமா நான் ஓடிவரலை. ஓங்கி கன்னத்திலே பளார்னு விட்டேன்."

திடுக்கிட்டுப் போனாள் மங்களா. தோழியை ஆச்சரியத்துடன் பார்த்தாள். "உண்மையாகவா லதா? என்ன நடந்தது?"

"நான் முதல் முதலாக வேலைக்குப் போன இடத்தில் மானேஜரே பொல்லாதவனாக இருந்தான். நந்தகோபாலைப் போல் ஃபைல்களை எடுத்துக்கொண்டு நேரே வரச்சொல்லி உத்தரவு போட்டான்."

முதலில் புரியவில்லை. தவறிப்போய் அவன் கை என் கை மேலே பட்டுவிட்டதாகத்தான் நினைத்தேன். அதை கண்டு கொள்ளாதிருந்துவிட்டேன். அது, நான் செய்த தவறு. ஜேப்படி திருடன் பின்னால் வந்து மெல்ல தோளைத் தொடுவான். அவன் கைபட்டதும் தோளை அசைத்தால் நகர்ந்து கொண்டு விடுவான். தோளை அவன் தொடுவதை உணராது எங்கேயோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்போது மெள்ள கிட்ட நெருங்கி கழுத்து மீது மூச்சுவிடற நெருக்கத்திலே நின்றுகொண்டு பிளேடால் சரக்குனு ஒரு இழுப்பு இழுத்து பர்ஸை தட்டி கொண்டு போய்விடுவான், கைதேர்ந்த காமுகனும் இதே முறையைத்தான் ஏமாந்த பெண்களிடம் அப்பியசிக்கிறான்னு நான் புரிஞ்சு கொண்டு உஷாராக இருக்கத் தெரிஞ்சு கொண்டிருக்கிறேன்.

முதலில் சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்க அழைப்பான். எதேச்சையாக கை மேலே படும். பிறகு கிட்ட நெருங்கி நின்று பேசத் தொடங்குவான். படிப்படியாக குளிர்விட்டுப் போய் பச்சையாகவே தன் இச்சையைப் பற்றிச் சொல்லி விடுவான்.

"நீ ரொம்ப கெட்டிக்காரி. ஆளைப்பார்த்த அளவிலேயே எடைபோட்டு விடுகிறாயே?"— மங்களா கோபமெல்லாம் மறந்து கலகல வென்று சிரித்தாள்.

"வயதான நோயாளித் தாயையும் தன்னையும் காத்துக் கொள்ள வேலை செய்துதான் ஆகவேண்டுமென்ற நிலை ஒரு இளம் பெண்ணுக்கு ஏற்பட்டால் தன்னைத் தானே காத்துக் கொள்கிற சாமர்த்தியமும் கூடவே ஏற்பட்டு விடுகிறதுன்னு வச்சுக்கோயேன்.

முதலில் வேலைக்குப் போன இடத்திலே என் அனுபவம் கொஞ்சம் கடுமையானதாகவேதான் இருந்தது. அதிகப்படி வேலை இருக்குன்னு எல்லோரும் போனதும் அந்த மானேஜர் என்னைத் தனியாகத்தான் அறைக்குக் கூப்பிட்டனுப்பினான்."



'இத்தனை நாள் லதா இதெல்லாம் பற்றிச் சொல்லவில்லையே?

ஆபீசில் தனியாக அவன் இருந்தபோது என்ன நடந்தது?' கலவரத்துடன் சிநேகிதியைப் பார்த்தாள் மங்களா.

"ஏதோ ஃபைல்களைப் பார்ப்பது போல பக்கத்தில் வந்து நின்றான். நான் கவனிக்கவேயில்லை. ஃபைல்களைப் பற்றியே விவரித்துக்கொண்டிருந்தான். திடீர்னு என் தோள் மேல் கையைப் போட்டுத் தன் அருகே இழுக்க முயன்றபோது, பிசாசு வேகத்திலே வந்து ஆசனத்தில் ஓங்கி பளார்னு அவன் கன்னத்தில் அறைவிட்டேன்

அவனுக்கேற்பட்ட அதிர்ச்சியிலே ஆடிப்போய் மேஜை மேலே சாய்ந்தபோது, ஓரத்திலே வைத்திருந்த மணிமீது கையை வைக்க, ஆபீஸ் பையன் வராந்தாவிலே பாதி வழி போனவன் பயந்து கொண்டு ஓடிவந்து, 'என்ன ஸார்?' என்று ஸலாம் போட—இந்த ஃபைல்களையெல்லாம் தலைமைக் கணக்கர் மேஜை மேலே வைக்கச் சொன்னார். 'அய்யாவுக்கு சூடா காப்பி வேணுமாம்.' சொல்லிக் கொண்டே நான் வெளியே ஓட்டம் பிடித்தேன்... ஆனால் பையன் ஒரு மாதிரி. தனக்குள் சிரித்துக் கொண்டான். அவனுக்கு அந்த அய்யாவின் சங்கதி தெரிந்திருக்க வேண்டும்."

"பிறகு..." மங்களா உன்னிப்பாகக் கேட்டாள்.

"அதுக்கு மேலே நான் அங்கே வேலை பார்க்கமுடியுமா? பயந்துண்டு காய்ச்சல்னு லீவு போட்டுட்டு... ஒரு பத்து நாள் கழித்து என் ராஜிநாமாவை அனுப்பிவிட்டேன். எல்லாம் தற்காலிக வேலைதானே..."

"வேலையில்லாமல் கஷ்டப்பட்டிருப்பியே...?"

"கஷ்டப்பட்டோம். அம்மா மேலே போட்டுக் கொண்டிருந்த இரண்டு நகைகளையும்; விற்று சமாளிச்சோம்.

'பிறகு ஒரு இடத்திலே வேலை கிடைச்சது... அங்கே தலைமைக்கணக்கர் எனக்கு மேல் அதிகாரியாக இருந்தார். ரொம்ப தொல்லை கொடுக்க ஆரம்பித்தார். படிப்படியாக ஆரம்பித்து பச்சையாகவே சொல்லி விட்டார். ஆத்திரம் தாங்காது வாயில் வந்தபடி திட்டி விட்டேன். அந்த காரத்தை மனதில் வைத்துக் கொண்டு நிறுவனத்தின் தலைவரிடம் என் வேலையைப் பற்றி குறைகள் சொல்லி என்னை வெளியேற்றிவிட்டார்......"

"ஐயய்யோ......!"

"இது மாதிரி மூன்று இடங்களில் அவதிப்பட்டேன். நான் இப்போ இருக்கிற இடம் சுவர்க்கம். எங்கள் மானேஜர் ரொம்ப கண்ணியமானவர். மற்ற ஊழியர்களும் ரொம்ப பண்போட நடத்துகிறார்கள், உலகத்திலே எல்லா ஆண்களும் கெட்டவர்கள்ன்னு சொல்லிக் கொண்டு திரிய எனக்கு எந்தவிதமான பாதிப்பும் கிடையாது...சில சமயம் நாம் கெட்டவர்களைச் சந்திக்க நேர்ந்துவிடுகிறது...அது ஒரு விபத்து. அவ்வளவுதான்."

"வேலை இல்லாதபோது என்ன செய்தே?"

"பட்டினி கிடக்கல இன்னொரு வேலையைத் தேடிக் கொள்ள முயன்றேன். அதற்கு இடையிலே, எங்கள் தெரு முனையிலே ஒரு விதவை நர்ஸ் அம்மா. அவங்களுக்கு சமையல்காரி வேலை செய்தேன். அவுங்க இரண்டு குழந்தைகளையும் கவனிச்சுக்கொண்டேன். என்னையும். அம்மாவையும் காப்பாதிக்க முடிஞ்சது."

"சமையல் வேலை கூடவா?"

"அதிலென்ன இழிவு? தப்பான பாதையிலே போய் வயிறு வளர்க்கிறதைக் காட்டிலும், நம்ம படிப்பைப் பத்திக் கவலைப்படாம. உடலால் உழைச்சி, நேர்மையான முறையில சம்பாதிக்கிற எந்தத் தொழிலும் கௌரவமானதுன்னு நினைக்கிறேன். 'லிப்ஸ்டிக்' பவுடர் போட்டு



கழற்றிக் கொடுன்னு என் பிறந்த வீடே நிர்ப்பந்திக்கிறது. நமது பிறந்த வீடுகளுக்குள் எத்தனை வித்தியாசம் பார்த்தேளா?" மங்களா வறட்சியாகச் சிரித்தாள்.

அனுசூயாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "உங்க அண்ணா கேட்கச் சொன்னார்...கேட்டேன்..." விருக்கென்று எழுந்தாள்.

"நகை—பணம் எல்லாத்தையும் கொடுத்தாச்சு' இதெல்லாம் திருப்பி வாங்போகிறதுன்னு நான் எதிர் பார்க்கலை. இப்ப என்கிட்ட இருக்கிறது இந்த வைரத் தோடு ஒண்ணுதான்...நான் எக்காரணம் கொண்டும் கொடுக்கப் போவதில்லை...' பிடிவாதமாகப் பேசிவிட்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள்.

தாளமாட்டாத கோபத்திலே பூமியுடன் மேஜை நாற் காலி... அதிர மன்னி அறையை விட்டு வெளியேறினாள். தது. ...று விளக்கை அணைத்துவிட்டு—கதவைத் வுக்கு... டுக் கொண்டு படுக்கையில் சுருண்டு கொண்டு ... ள் மங்களா...அதற்குப் பின் அவர்கள் என்ன பேசிக் ...ள்கிறார்கள்...என்பதைக் கேட்டு...தூக்கம் வராது— படுக்கையிலேயே புரண்டு கொண்டிருக்க அவள் விரும்ப வில்லை.

மறுநாள் காலை அண்ணா அவளிடம் பேசவேயில்லை. அதைக் கண்டு கொள்ளாதவன் போல் அவன் வேலைக்குக் கிளம்பினான் வராந்தாவைத் தாண்டி படியில் இறங்கப் போனவளை மன்னி அதட்டிக் கூப்பிட்டாள். வெளியே போகும்போது கூப்பிட்டுப் பேசி எரிச்சலூட்டும் பழக்கம் அனுசூயாவுக்கு உண்டு.

"அண்ணா கடைசியா ஒரு தடவை உன்கிட்டே கேட்டுப் பார்க்கச் சொன்னார். ஷைலாவுக்கே நீ வைரத் தோட்டை கொடுக்க வேண்டாம். வெறுமனே கொஞ்ச நாட்களுக்கு இரவலா கொடுத்தால் போதும். அதுக்குள்ளே பணத்தை சமாளித்திடுவேன்னு. சொல்லச் சொன்னார்."

"மன்னி! மறுபடியும் சொல்றேன்...உங்க தோடுகளை இரவலா உங்க பெண்ணுக்குக் கொடுத்து உதவுங்கோ எந்த நிபந்தனைக்கும் நான் ஒத்துக்க மாட்டேன்! இது தான் என் முடிவு." குடையை விரித்துக் கொண்டு படியில் இறங்கினாள்.

"மங்களா! உனக்கு துளிக்கூட நன்றியில்லை...அப்பா வுக்குப் பின்னாடி உன்னைக் கட்டிக் காத்து வர பொறுப்பை பாவம், உன் அண்ணா சுமக்கிறார்...அப்படியிருந்தும் என்ன திமிரா பேசறே?"

"அண்ணாவும் நீங்களும் வெறுமனே ஒண்ணும் கட்டிக் காக்கலை...காசுக்குத்தான் இந்தக் காரியத்தைச் செய்யறேள். இந்த வெட்கக் கேட்டை வெளிப்படையா சொல்லச் சொல்றேள். மாசா மாசம் நான் உங்களோட இந்த வீட்டில் தங்குகிறதுக்கும்—சாப்பாட்டுக்கும் ...ம் நாம் என் சம்பளத்திலிருந்து ஒரு பெரும் தொகையை ...து ஒரு கிட்டே கொடுக்கிறேன். ஒரு பெண்ணுக்கு நாதி இல்லே அவள் எல்லார் காலடியிலும் செருப்பாத் தேய போயிருக்கு. அதுக்கெல்லாம் நான் இனி தயார் இல்லை."

"என்ன சொன்னே?" அனுசூயா கோபத்துடன் கத்தி விட்டாள். தெருவில் போகிறவர் இரண்டொருவர் சட் டென்று தங்களைத் திரும்பிப் பார்த்துவிட்டு மேலே பேசு வதை கேட்க நிற்பதைக் கவனித்தாள் மங்களா. அவளுக்கு வெட்கமாக இருந்தது.

"வாசலில் நின்னுண்டு பேசற விஷயமில்லை. நாழியா யிடுத்து... நான் வரேன்."

"வரேன்னு சொல்லிட்டுப் போறதுக்கு உனக்கு ரொம்ப தைரியந்தான். ஆபத்துக்கு அண்ணாவுக்கு உதவ மாட்டேன்னு சொன்ன பின் அண்ணாவாவது தங்கையாவது...உறவு என்ன வச்சுக் கிடக்கு? எந்த முகத்தை வச்சுண்டு இங்கே சாயங்காலம் நீ திரும்பி வரதாக உத்தேசம்?"



திடுக்கிட்டு போனாள் மங்களா.

வைரத்தோடு இல்லாவிட்டால் அந்த வீட்டுக்குள் அவளுக்கு இடம் இல்லை என்கிறாளா மன்னி?

"மன்னி! புரியும்படி சொல்லுங்க, எனக்கு பஸ் வந்துடும்," கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்.

"உன்கூடப் பிறந்த அண்ணா சொன்னதை நான் சொன்னேன். நன்னா மனசுக்குள்ளே ஒரு முடிவு எடுத் துக்கோ. இந்தச் சமயத்திலே நகை கொடுக்கலேன்னா எங்களோட நீடிச்சு ஒட்டிண்டு இருக்கிறதிலே அர்த்தமே யில்லை."

கதவைப் படீர் என்று சாத்திக் கொண்டு உள்ளே போய் விட்டாள் மன்னி.

அன்று அலுவலகத்திலும் அவளுக்கு அமைதியின்றி ... ஆரம்பமாகியது. ஆசனத்தில் உட்காருமுன் உதவி கா... ஜர் பையனை விட்டுக் கூப்பிட்டனுப்பி விட்டான். தது. ...வுக்கு வேறு வழியிருக்கவில்லை. பைல்களை அள்ளிக் கொண்டு உள்ளே சென்றாள்.

நந்தகோபால் அவளை அழுத்தலாகப் பார்த்தான்.

"இந்த அலுவலகத்தில் உங்க வேலைதான் அதிக மாகத் தேங்கிக் கிடக்கிறது என்று தெரிகிறது...உங்க பதில்?"

"என்னால் முடிந்ததை வஞ்சனையில்லாமல் வேகமாகச் செய்து முடிக்கிறேன்."

"மற்றவர்கள் செய்து முடிப்பதில் பாதி வேலைகூட நீங்க தினமும் முடிப்பதில்லை என்று மிஸ்டர் பதஞ்சலி சொல்கிறார். எல்லாரையும் விட்டு உங்க மேல் மட்டும் சொல்ல அவருக்கு எப்படி...உங்க மேல் விரோதமா?"

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் மங்களா, மன்னி வீட்டில் இடமில்லை என்பதற்கு அடையாளமாக கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

ஆபீசில் உனக்கு வேலையில்லை என்று இவன் கழுத்தைப் பிடித்து தள்ளிவிடப் போகிறானா...'

''என்ன செய்வீங்களோ தெரியாது இன்னும் இரண்டு நாளில் தேங்கிக் கிடக்கும் எல்லா பைலையும் நீங்க முடித்தாக வேண்டும். திங்கள் கிழமையிலிருந்து நம் ஆபீசிற்குப் புதிதாக ஒரு மானேஜர் வரப்போகிறார், உங்க வேலை எனக்குத் திருப்தியளிக்கா விட்டால்...'' மிகவும் கடுமையாக அவனை வெறித்தான்.

அந்த மானேஜர் வரட்டும், நானும் பார்த்துக் கொள்கிறேன். தனக்குள்ளே ஆத்திரத்துடன் சொல்லிக் கொண்டான்.

''என்ன பதிலை காணோமே?''— எரிச்சலோடு கேட்டான் நந்தகோபால்.

''எப்படியாவது இரண்டு நாளில் எல்லாத் தாம் முடிச்சு விடறேன் சார்''—அதற்கு மேல் பேசப்பிடித்து ஒரு வெளியே வந்து விட்டாள்.

# 13

மாலை நேரத்தில் அந்த பஸ் நிலையத்திலே பெண்களின் கூட்டம் அதிகம். அருகே பல அலுவலகங்கள் அடுத்தடுத்து இருந்ததுதான் அதற்குக் காரணம். பச்சை நீலம், மஞ்சள் என்ற சேலைத் தலைப்புகள் ஆட, குலுங்கிய சதங்கைகள் போலச் சிரித்துக் கொண்டு நின்ற பெண்களால் நிலையம் கலகலத்துக் கொண்டிருந்தது. வேகமாக வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்ட மங்களா முகத்திலே பொடித்த வியர்வையை மெதுவாகத் துடைத்துக் கொண்டாள். அருகே அந்த மூன்று பெண்களும் நின்று கொண்டிருந்தனர். நிலையத்திலே அடிக்கடி அவள் அவர்களைப் பார்த்திருக்கிறாள்.



எதிர்ப்பக்கத்திலேயிருந்த பெரிய அலுவல இப்படிப் ...லை பார்த்துக்கொண்டிருந்தனர் அவர்கள். எப்பெ...ழுக்...ம் சேர்ந்தாற்போல்தான் அலுவலகத்திற்கு ஒரே பஸ்ஸில் வந்து திரும்புவார்கள். நிலையத்தில் வண்டிக்காக காத்திருக்கும்போதுகூட அவர்களுக்குள் பேச்சும் சிரிப்புமாக உற்சாகம் பொங்கிவழியும். அப்படி 'ஒரு நெருக்கமான தோழமை.

மங்களாவின் அலுவலகத்திலே அவளுடன் கூட வேலை பார்க்கும் பெண்கள் அவளிடம் ஏன் நெருங்கிப் பழகுவதில்லை? விரோதிகள் போல ஒதுங்கி ஓடுகிறார்களே ஏன்? அடிக்கடி மங்களா இதைப் பற்றி எண்ணிக் குமுறுவது வழக்கம். அந்த மூவரும் இன்று அவளுக்கு மிக அருகிலே நிலையத்தில் பஸ்ஸிற்காகக் காத்துக்கொண்டு நின்றனர். வழக்கம்போல வாய் ஓயாது பேசிக் கொண்டுமிருந்தனர்.

காறது—

தது. அதோ போகிறாரே, அந்தக் கிழவர் சொன்னதை வுக்குள் ...யா? வரவர எங்கே பார்த்தாலும், அல்லி ராஜ்ய ...கிட்டதுன்னு தன் சிநேகிதரிடம் சொல்லிவிட்டு நம்மையெல்லாம் முறைச்சிட்டுப் போறார்.'' மூவரில் ஒல்லியாக உயரமாக இருந்த பச்சை வண்ண நைலக்ஸ் சேலைக்காரி சொல்லிச் சிரித்தாள்.

''சரியான பட்டிக்காடுபோல இருக்கு. அதான் அப்படிச் சொல்லிவிட்டார்.''—இரண்டாவது பெண் பதிலளித்துவிட்டு மூக்கின் மீது நழுவிய கண்ணாடியை சரிசெய்து கொண்டாள்.

''என்கிட்டே சொல்லியிருந்தால் நான் சரியான பதில் கொடுத்திருப்பேன், உங்க பேரனையும், ஊரில் உள்ள தாத்தாக்களின் அத்தனைப் பேரன்களையும் ஒன்று திரட்டி, 'நாங்கள் வரதட்சணை வாங்கமாட்டோம். வேலை பார்க்கும் பெண்தான் கல்யாணத்திற்கு தேவை என்று கேட்கமாட்டோம்' என்று உறுதிமொழி எழுதிக் கொடுக்கச்

சொல்லுங்க ஆபீசில் வேலை பார்க்கும் அ..று இவன் களும் அடுப்பங்கரைக்குள் அடைக்கலமா..'' என்று சவால் விடுவேன்.''

''உனக்கு ரொம்ப வாய். ஊர் வம்பை விலைக்கு வாங்குறே''—சிரித்தாள் முதலில் பேசினவள்.

''பானை பிடித்தவள்தான் பாக்கியசாலி என்பதற்குப் பதில் பையைப் பிடித்தவள்தான் பாக்யசாலின்னு நினைக்கிற காலமாக இருக்கும்போது, ..ந்தாம்பசலி போல் இந்தக் கிழவர் பேசினால் கோபம் வராதா?'' மங்களாவுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. தோழி லதாவுக்கு மேல் ஒருபடி வாயாடியாக இருக்கிற..ளே, இந்தப் பெண். தனக்குள்ளே சிரித்தபடி வேகமாக வந்து நின்ற பஸ்ஸை நோக்கி நகர்ந்து கூட்டத்திற்குள் கலந்து போனாள். கிடைத்த இடத்திலே மூச்சை நெருக்கிக் கொண்டு உட்கார்ந்தாள். பஸ் நகர்ந்தது. ''டிக்கெட் டிக்..ட்'' என்று அருகில் வந்த கண்ட..ரைக் கண்டதும் தான் வீட்டின் நினைப்பு பகீர் என்று நெ.. ஒரு அடி வயிற்றை.. சுட்டது.

''சமயத்திற்கு கைகொடுக்கலேன்னா எங்களோட நீடிச்சு ஒட்டிண்டு இருக்கிறதிலே அர்த்தமில்லை.''

மன்னி அனுசுயா சொல்லிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு போனாளே? அந்தக் கதவு இப்போது அவளுக்குத் திறந்திருக்குமா? வேலை முடிந்ததும் அந்த வீட்டுக்குத் திரும்பாது அவள் வேறே எங்கே போவாள்!

அப்படிப் போவதற்கு அவளுக்கு வேறு ஒரு இடமும் கிடையாது என்ற துணிவில்தானே அனுசுயா அப்படிப் பேசிவிட்டாள்? சற்றுமுன் சிரிப்பிலே மலர்ந்த உதடுகள் துயரத்திலே துடிக்க பர்சைத் திறந்து சில்லரையை எடுத்துக் கொடுத்து தனது டிக்கெட்டைப் பெற்றுக் கொண்டாள்.

வழிநெடுகிலும் பற்பல சிந்தனைகள்—பல கவலைகள் ஓசைப்படாது கேட்டைத் திறந்து கொண்டு



இப்படிப் உ[illegible]ழுந்த போது காரேஜில் அண்ணாவின் ஆபீஸ் காரைப் ..ார்த்து விட்டாள். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. வாயிற்கதவு மூடியிருக்கவில்லை. ஆனாலும் குற்றவாளியைப் போல மெல்ல சப்தமிடாது உள்ளே சென்றாள். செருப்புகளைக் கழற்றி வைத்து விட்டு, லுங்கிக்குமேல் உடம்பை மறைத்து காலைப் பத்திரிகைக்குள் ஆழ்ந்து விட்டிருந்த அ..ண்ணனைத் தாண்டிக் கொண்டு குளியலைறைக்குள் புகுவதற்குள் உயிரே போய் விடும் போன்ற அச்சத்தில் வெளிறிப் போய் விட்டாள். மெல்ல செம்பு நீரைக் காலில் ஊற்றிக் கொண்டு, கைகளையும் முகத்தையும் கழுவித் துடைத்துக் கொண்டு சாப்பாட்டு அறைப்பக்கம் வந்தாள்.

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் துடிப்பது துல்லிய காதுக்.. கேட்டது. அப்படி ஒரு அமைதி- பயங்கரமான தது. ..ம் அந்த வீட்டில் நிலவிக் கிடந்தது. காப்பியைக் ..க்கு..ண்டு வந்து முக்காலி மீது வைத்த அனுசுயா அவளை ஏ..றெடுத்தும் பார்க்கவில்லை...பேசவும் இல்லை.

அன்று இரவு அவர்கள் மூவரும் ஒன்றாக உட்கார்ந்து தான் சாப்பிட்டார்கள். அவரவர்களுக்கு வேண்டியதைத் தாங்களே எடுத்துப் பரிமாறிக் கொண்டார்கள். வழக்கமான அண்ணாவின் ஆங்கார ஓங்கார ஓசைகள் கூட அன்று அடங்கிவிட்டிருந்தன. சமையலறைக் காரியங்களை முடித்துக் கொண்டு அவள் தன் அறைக்கு வந்த போது அண்ணா ஹாலில் இருக்கவில்லை. அவள் கதவை மூடிக் கொண்ட பின்னர்தான் அவர் கீழே இறங்கிப் போய் கதவுகள் எல்லாம் சரியாக தாளிடப்பட்டிருக்கின்றனவா என்று சோதித்துவிட்டு மாடிக்கு வந்து வெகு நேரம் கழித்து சிகரெட்டைப் பற்ற வைத்து இழுத்து விட்டு முகம் கழுவ குழாயைத் திருப்பும் ஓசைகேட்டது.

மறுநாள் அவள் வேலைக்குக் கிளம்புமுன் அண்ணா புறப்பட்டுப் போய்விட்டார். தயாராக மேஜைமீது

வைக்கப்பட்டிருந்த டிபன் பாக்சை எடுத்து... இவன் ...அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். மன்னி அனு... ஏதோ காரியமாக தோட்டத்தின் பின்பக்கம் சென்று விட்டிருந்தாள்.

"நான் வரட்டுமா?" என்று சொல்லிக் கொள்ள நாக்கு புரள மறுத்தது. குற்ற உணர்விலே திண்டாடிப் போன மங்களா, மெல்ல தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். வேண்டுமென்றே செருப்புகளை பலத்த ஓசையுடன் தட்டிவிட்டு காலில் அணிந்து கொண்டாள். மெல்ல தோட்டத்தின் பக்கம் எட்டிப் பார்த்தாள். மன்னி அனுசூயா அசைந்து கொடுக்கவில்லை. அவள் ஏதோ வேலையாக இருப்பது புலப்பட்டது.

"கதவைச் சாத்திக்கோங்க. நான் வரேன்." வலிய தானே சொல்லி முடிப்பதற்குள் அவமானத்திலே கூனிக் குறுகிப் போய்விட்டாள் மங்களா.

"நீ யாரோ, நாங்கள் யாரோ என்ற பிரித்துக் காட்டுரு நாம் அவர்கள் இடையே அவள் கதியில்லாமல் வசிக்க வேண்டியிருக்கிறதே? கல்யாணமாகி புக்ககத்தில் வாழும் மற்ற இரு சகோதரிகளையும் அண்ணா இப்படி நடத்த முடியுமோ?

"மன்னி அவர்களது காது தோடுகளைக் கேட்டு நிர்ப்பந்திக்க இயலுமோ? அவளுக்கு என்று ஒரு கணவன் வீடு என்று ஒரு குடும்பம் அமையாத குறையினால் பணத்தைக் கொடுத்தும், உடம்பால் உழைத்தும் பயன் இல்லாது போய் விட்டிருக்கிறதே... தங்கள் தயவு இல்லாது அவள் வாழமுடியாது என்று சொல்லாமல் சொல்கிறது அவர்கள் மௌனம்......'உண்மையில் ஒரு பெண் தன்னந்தனியே தன் உழைப்பின் பயனால் வாழ முடியாதா...? வாழ்ந்தால் சமூகத்தின் கண்ணோட்டத்திலே தவறாகப் புலப்படுவாளா...? லதாவிடம் இதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்' என்று எண்ணியபடி பொங்கி வந்த துயரத்தை அடக்கிக் கொண்டு கிளம்பிச் சென்றாள்.



இப்படிப் பட்டதொரு பயங்கர மௌனத்தில்— உணர்வுகளின் இறுக்கத்திலே ஒரு வார காலம் ஓடிச் சென்றது. அண்ணா அவளிடம் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டிருந்தார். மன்னி மிகவும் அசட்டையாக நடந்து கொண்டாள். சாப்பிடும்போது அவர்களிருவரின் முகத்தைப் பார்க்க அஞ்சி எதிரே தெரிந்த சுவரை வெறித்தபடி வாயில் போட்டுக் கொண்ட உணவு தொண்டையை இறுக்கியது. இந்நிலை எத்தனை நாட்கள் நீடிக்கப் போகிறது...? அவளுக்குக் கவலையும் துக்கமும் தாங்க முடியவில்லை. அதுவரை கடுமையாக எரித்துக் கொண்டிருந்த வெயில் இரண்டு தினங்களாக மிகவும் தணிந்து விட்டிருந்தது அன்று காலை எழுந்திருக்கும் போதே கவனித்தாள். மையைப் பூசிக் கொண்டு விட்டது போன்று வானம் கருமை கட்டிக் கொண்டிருந்தது. இடை இடையே சிலுசிலுவென்ற காற்று— பெருத்த மழைக்கு அடிகோலிக் கொண்டிருந்தது. குடையை மறக்காது எடுத்துக் கொண்டு தெருவுக்குள் இறங்கினாள். எதிர்வீட்டுக் கேட்டின் மீது சாய்ந்து கொண்டு வேடிக்கை பார்த்தபடி நின்ற யோகாம்பாள் பார்த்து முறுவலித்தாள். தனியார் வங்கியில் பெரிய பதவியிலிருந்துவிட்டு தற்சமயம் ஓய்வாக இருக்கிறவள் யோகாம்பாள். அந்தப் பகுதியில் ஒரு சிறிய வீட்டை வாங்கிக் கொண்டு தன்னந்தனியே வசித்துக் கொண்டிருந்தாள். தும்பைப் பூவாக நரைத்த தலை. ஆனாலும் எங்கேயோ உத்தியோகத்திற்குக் கிளம்பத் தயாராக இருப்பது போன்று கஞ்சியில் மொடமொடக்கும் இஸ்திரி போட்ட நூல் சேலை, வெள்ளை ரவிக்கை...பளிச்சென்று நின்று கொண்டிருந்தாள்.

"ஹலோ! வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறாயாக்கும்...? இந்தக் காலத்துப் பெண்கள் அதிர்ஷ்டசாலிகள். விதவிதமான நைலான் புடவைகளில் கிளம்பி விடுகிறீங்க? அந்தக் காலத்தில் நாங்கள் வேலைக்குப் போய்க் கொண்டிருந்த போது பஸ்ஸை விட்டு இறங்குவதற்குள் இஸ்திரி மோட்டு உடுத்திக் கொண்ட சேலை பிடி துணியாகக

கசங்கிப்போய்... அடிபட்ட கோழிகள் போல, ஆபீசில் போய் நிற்போம். நானும் கவனிச்சுக் கொண்டு தான் வரேன். மாலையிலே நீ திரும்பி வரும்போது அப்போது தான் பூத்த பூப்போல வாடாம கொள்ளாம புடவை அலுங்காம நகங்காம காலையிலே போன அழகோட அப்படியே திரும்பி வந்து இருக்கறே, மறுபடியும் ஒரு சிறு பெண்ணாக மாறி இந்த நவீன காலத்து சுகபோகங்களையெல்லாம் அனுபவிக்க மாட்டோமான்னு என் மனசு ஏங்கறது.'' சிரித்தாள் யோகாம்பாள். வேலைக்குப் போகும்போது மனம் குளிர அந்தம்மாள் புகழ்ந்தது கேட்டு மங்களாவுக்கு மனம் லேசாகியது.

வயது காலத்தில் அந்த அம்மாள் துணிவுடன் தன்வந் தனியாக வாழ்கிறார். செலவுக்குத் தன் கையில் பணம் இருக்கிறது என்ற தெம்பில்தான் அப்படி வீட்டுக் கேட்டின் மீது சாய்ந்து கொண்டு தெருவில் போவோரையும் வருவோரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு அசட்டையாகப் பொழுதைக் கழிக்க முடிகிறது.

மங்களாவும் அந்த வயதை அடையும்போது...பற்பல எண்ணியபடி அவள் திரும்பி யோகாம்பாளைப் பார்த்து முறுவலித்தபடி விரைந்தாள்.

பாதி வழியிலேயே மழை சன்னமாக ஆரம்பித்துப் பின்னர் பலத்துக்கொட்டத் தொடங்கிவிட்டது நிலையத்தில் இறங்கியதும் மழை அடங்குவதற்காக சற்று காத்துக் கொண்டு நின்றாள். வேகமாக வந்து பயமுறுத்திய மழை வேகமாக விரைவில் அடங்கிவிட்டது. தூரல் முற்றிலும் நின்று வானம் பளிச்சென்றாகிய போதிலும் தெருவில் குண்டு குழிகளில் மழை நீர் நிரம்பி வழிந்து நசு நசுவென்றிருந்தது.

புடவை ஓரம் அழுக்கடையாதிருக்க இடது கையால் மெல்ல கொசுவத்தை தூக்கிப் பிடித்தபடி குடையை விரித்துக் கொண்டு மங்களா நிதானமாக நடந்து சென்று கொண்டிருந்தாள். ஆபீஸ் துவங்க, வேண்டிய நேரம்



இருந்தது என்ற நினைவிலே பரபரப்பின்றி மெல்ல நடந்து கொண்டிருந்தாள். அது சமயம் அவளைத் தாண்டிக் கொண்டு வேகமாக ஓடிய ஒரு பியட்காரின் முன் சக்கரம் மழை நீர் நிரம்பிய குழி யொன்றில் சருக்கென்று இறங்கிச் சேற்றை வாரிச் சடாரென்று அவள் மேல் தெறித்து விட்டது. பல நாட்களாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த நீலப்பூப் போட்ட வெள்ளை நைலக்ஸ் மீது...சேற்று நீர்...அபிஷேகம்.

''அடப்பாவி! இந்தக் கோலத்தில் ஆபீசிற்குப் போக வச்சட்டியே?'' மனம் அலற, கண்களில் கோபம் எரிய அந்தப் பியட் போன திக்கை நோக்கினாள்.

சிறிது தூரம் சென்ற அந்த வண்டி ஓட்டி சட்டென்று வண்டியை நிறுத்தினான். பின்னால் நகர்ந்தபடி அவள் அருகே வந்தான். காரிலின்று இறங்கினான். கச்சிதமாக உடுத்தியிருந்த வெள்ளை சபாரி ஸூட்டிலே வாட்ட சாட்டமாக எங்கேயோ வேலைக்கு இண்டர்வியூவுக்குப் போகிறவன் போல அமர்க்களமாகத் தென்பட்டான். மா நிறத்தான்.

''மன்னிக்கவும். எதிரே வந்த லாரிக்காக ஒதுங்கி ஓட்டினதிலே எற்பட்ட விபத்து.'' புன்னகைத்தபோது பளிச் சென்று குழல் விளக்கை ஏற்றியது போன்று முகத்திலே பிரகாசம்...

''பரவாயில்லை'' என்று கூறிவிட்டு அழுத்தலாகத் திரும்பினாள் மங்களா.

''உங்களுக்கு ஆக்ஷேபணையில்லையென்றால்...நீங்கள் எங்கே போணுமோ அங்கே என் காரிலேயே கொண்டு விடுகிறேன். புடவை ரொம்ப அழுக்காகிவிட்டிருக்கிறது. தப்பு என்னுடையது''—தயங்கினான்.

''தேவையில்லை. ரொம்ப நன்றி.'' உறுத்துப் பார்த்தாள் மங்களா.

"மறுபடியும் மன்னிப்புக் கேட்கிறேன்..." கூறிவிட்டு அவன் நகர்ந்தபோது, புன்னகையில் விரிந்த உதடுகளி டையே மின்னலடித்த வரிசைப் பற்களை மங்களா பார்க்கத் தவறவில்லை. லேசான சிரிப்பிலே அந்த முகத்திலே எத் தனை களை, வியப்புடன் அவள் வேகமாக ஆபீசிற்கு நடந் தாள்.

யாரையும் கண்டு கொள்ளாது அவள் நேரே தனது அறைக்குப் பின்னால் உள்ள பகுதிக்கு விரைந்தாள். கத வைச் சாத்திக்கொண்டு அழுக்காகிவிட்ட புடவையின் பகுதி யைக் களைந்து வாஷ் பேசினில் மெல்லக் கழுவி—சுத்த மாக்கிக் கொண்டு ஈரம் போக அழுத்திப் பிழிந்து உடுத்திக் கொண்டு வெளியில் வந்தாள்

பொது ஹாலில் தலைக்குமேல் ஓடிய மின்விசிறியின் கீழ் ஈரமானப் பகுதியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாள்

"மழையில் நனைஞ்சுட்டியாம்மா?" பாம்புக்கண் பதஞ்சலி கேட்டுக்கொண்டே பற்களைக் காட்டி நகைத்த படியே ஹாலுக்குள் வந்தார்.

தலையை மட்டும் ஆட்டிவிட்டு அவள் தன்வேலையி லேயே அழுந்தி இருந்தாள். சில நிமிஷங்களில் பாதி ஈரம் காய்ந்து விட்டது. எதிர்வீட்டு அம்மா சொன்னதுபோல நைலான் புடவைகளால் நன்மைதான். சேறுபட்ட அடை யாளமே தெரியாது பளிச்சென்று அப்பொழுதுதான் எடுத்து உடுத்தியதுபோல மாறிவிட்டதைக் கண்டு மகிழ்ச்சியுடன் தன் இருக்கையில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

சிறிது நேரம் சென்றதும் பதஞ்சலி அருகிலிருந்த தொலை பேசி கிணுகிணுத்தது. கையில் எடுத்தார். முகத் திலே ஏக பரபரப்பு.

"சந்தோஷம் சார். அப்படியே செய்யுங்க" என்று கூறிவிட்டு பதட்டமாக எழுந்து பின்னால் ஓடினார். வாயில் குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலையை உமிழ்ந்து



வாயைக் கொப்பளித்துவிட்டு அவசரமாக வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். பின்னர் எல்லோரும் கேட்கும்படி உரத்த குரலில் எச்சரிக்கை விடுத்தார்.

"பல நாட்களாக காலியாயிருந்த மானேஜர் பதவிக்கு யாரோ வரப்போறதாக சில தினங்களுக்கு முன் கேள்விப் பட்டிருந்தோமோல்லியோ... புது மானேஜர் இன்று வந்து விட்டாராம். உதவி மானேஜருடன் நம்மையெல்லாம் பார்க்க வரப் போறார். எல்லோரும் அவரவர் இடத்திலே இருத்தல் நல்லது."

"வந்துட்டாங்க ஸார்."—ஆபீஸ் பையன் ஓடிவந்து பாஸ் கொடுக்க, கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவர்களைக் கண்டு பரபரத்த பதஞ்சலி அறிமுகப் படலத்தைத் துவங்க...

"இவங்கதான் மிஸ் மங்களா ஜகதீசன். இவங்க இந்தப் பகுதியிலே" முடிக்கு முன்...தன் மேஜை முன் நின்ற மனிதனின் சபாரி ஸூட்டைக் கண்டு திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"நம் கம்பெனியின் மானேஜர் திரு. காசிநாத்" என்று அறிமுகப்படுத்திய பதஞ்சலி, தமது அருகில் நின்ற கணக்கர் தாமோதரனின் விலாவில் யாரும் பாராத போது சடாரென்று குத்தினார்.

"என்னய்யா? வருகிறவன் எல்லாம்... இவளைப் பார்த்ததும் பிரமித்துப் போய் நிக்கிறான்களே...? என்ன சங்கதி...? என்ற அர்த்த பாவத்திலே வீசப்பட்ட அந்தக் குத்து தாமோதரனின் விலா எலும்புகளை ஒரு ஆட்டம் ஆட்டிவிட்டது.

## 14

வேலைக்கு விரைந்து கொண்டிருந்தவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டி பிடிவாதமாகக் கொட்டிய அந்த மழை போன இடம் தெரியாது மறைந்து விடவே—

சுள்ளென்று வெயில் காயத் தொடங்கியது. மழை நீரில் சாய்ந்து குளித்துக் கொண்டிருந்த அந்த தோட்டத்துச் செடிகள் எல்லாம் நிமிர்ந்து மெல்லிய காற்றிலே தங்கள் பசுந்தழைகளை அசைத்துக் கொண்டிருந்தன. பகல் உணவு நேரத்தின் போது ஆபீஸ் அறையிலேயே தங்கிவிட்ட மங்களா, சாப்பிட்டபின் கையைக் கழுவ பின்பக்கம் சென்றாள். தடையை ஒட்டியிருந்த பெரிய ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

புதிய மானேஜர் காசிநாத், புல்தரை நடுவே நெளிந்த பாதைக்குள் புகுந்து கார்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதிக்கு விரைவதைக் கவனித்தாள். நிதானமும் கம்பீரமுமாக நடந்த அவன். ஓரத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பியட்டின் கதவைத் திறந்து உள்ளே ஏறிக் கொண்டான். சில வினாடிகளில் கார் நடைபாதையில் புகுந்து, கேட்டருகே நின்ற கூர்க்கா சலாமடிக்க, வெளியே சாலைக்குள் மறையும் வரை மங்களா பார்த்துக் கொண்டே நின்றாள். அன்று காலை அவள் இரண்டு தடவைகள் சில ஃபைல்களை அவனது பார்வைக்கு எடுத்துச் செல்ல—அவன் அறைக்குள்ளே செல்ல நேரிட்டது.

அவளுக்குத்தான் மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. ஆனால் அவன் பார்வையிலோ பேச்சிலோ அன்று காலை நடந்த அந்தச் சம்பவத்தின் சாயை சிறிதும் புலப்படவேயில்லை. பதஞ்சலி அறிமுகப்படுத்திய போது, லேசாக ஒருமுறை வியப்புடன் பார்த்தானே ஒரு பார்வை அத்துடன் சரி. அதற்குப் பின் அவளை அவன் ஏற்கெனவே சந்தித்தது பற்றியோ, பேசியது பற்றியோ சிறிதுகூட வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. வேலையைப் பற்றிய விவரங்களை உரித்தான அதிகார தோரணையில் அவளுடன் விசாரித்ததுடன் நிறுத்திக் கொண்டிருந்தான்.

நந்தகோபாலனுக்கும், அவனுக்கும் எத்தனை வித்தியாசம்? வியப்புடன் எண்ணியபடி குழாயைத் திருப்பிக் கைகளைக் கழுவிக் கொண்டாள். வாஷ்பேசின் மேல்



சுவரோடு பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியில்... நெற்றியில் புரண்ட கூந்தலை சீப்பால் சீராக்கிக் கொள்ள நிமிர்ந்த போது திடுக்கிட்டுப் போனாள்.

அன்று காலையில் நடந்த சம்பவம்—தொடர்ந்து அவன் பேசியது— அவைகளைப் பற்றிய நினைவில் அவள் முகம் இப்படிச் சிவந்து போவானேன்? சே! சே...! இதென்ன அசட்டு விவகாரம்? தன்னையே கடிந்து கொண்டு விரைவாகத் திரும்பி தன் ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

அன்று பிற்பகல் அவன் மீண்டும் அலுவலகத்திற்கு வரவில்லை. நகரத்தில் நிறுவனத்திற்குச் சொந்தமாக இருந்த மொத்த வியாபாரக் கிடங்குகளைப் பார்வையிடப் போயிருப்பதாக கசமுசவென்று பேச்சு காதில் பட்டது. மற்ற ஊழியர்கள் அதை அறிந்து நிம்மதியாக இருந்தனர் ஆனால் ஏனோ மங்களாவிற்கு அந்தச் செய்தி சிறிதளவு ஏமாற்றத்தைத் தந்தது.

அன்று இரவு மறுபடியும் மழை சன்னமாகத் தொடர்ந்து வெகு நேரம் பொழிந்து கொண்டிருந்தது. ஜன்னலின் கண்ணாடிக் கதவுகள் மீது லேசாக விழுந்த மழைச்சாரல் எழுப்பிய ஓசை தாலாட்டைப் போல இதமாக இருக்கவே மங்களா நன்றாகவே உறங்கிப் போய் விட்டாள்.

மறுநாள் காலை பளிச்சென உதயமான சூரியன் அவள் மனத்திற்கு உற்சாகத்தைக் கொடுத்தது. வீட்டிலே நிலவிக் கொண்டிருந்த இறுக்க உணர்வைப் பாராட்டாது அவள் சற்று முன்னதாகவே வேலைக்குப் புறப்பட்டு விட்டிருந்தாள். அரைமணிக்கு முன்னதாகவே ஆசனத்தில் வந்து அமர்ந்து விட்ட போதிலும், நேரத்தை வீணாக்க மனமின்றி கவனிக்க வேண்டிய ஃபைல்களை அருகில் இழுத்து வைத்துக் கொண்டு ஆராயத் தொடங்கினாள்.

பொது ஹாலில் மாட்டப்பட்டிருந்த பெரிய கடிகாரம், ஒன்பது மணி முப்பது நிமிஷம் என்று காட்டிக்

கொண்டிருந்தபோது நிதான நடையில் காசிநாத் உள்ளே வந்தான்.

தன் அறைக்குள் போகுமுன், அந்தப் பகுதிக்குள் வந்து மெல்ல எட்டிப் பார்த்தான்.

மங்களாவைத் தவிர யாரையும் அங்கே காணவில்லை. கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு வேகமாகத் தன் அறைக்குள் நுழைந்து நாற்காலியில் சாய்ந்து கொண்டான். ஃபிரீப்கேஸைத் தூக்கிக் கொண்டு பின்னால் ஓடி வந்த பையன் அதை மேசையின் மீது ஒரு பக்கம் வைத்து விட்டு, சட்டைப் பையிலிருந்த தந்தியை எடுத்துப் பணிவுடன் அவன் முன் மேஜையில் வைத்தான்.

"சித்த முன்னாடி இது வந்தது. மங்களா அம்மாதான் வாங்கினாங்க. உங்க கிட்ட கொடுக்கச் சொன்னாங்க" என்றான் பதட்டமாக. தந்தியைப் பிரித்தான்—காசிநாத். நிறுவனத்தின் டைரக்டர் தலைமை அலுவலகத்திலிருந்து அதை அனுப்பியிருந்தார்.

"சாமான்கள் இன்னும் வந்து சேரவில்லை என்று சேலத்து வாடிக்கைக்காரரிடமிருந்து புகார் வந்திருக்கிறது. தாமதத்தின் காரணம் என்ன? உடனடியாக இதைக் கவனிக்கவும்.—பிரசாத் "

டைரக்டர் பிரசாத்தின் ஜிவு ஜிவு முகம் தந்தியில் நிழலாடுவதைப் போன்ற பிரமிப்பில் காசிநாத் அதிர்ந்து போனான். 'வேலையை மேற்கொண்டு இருபத்து நான்கு மணி ஆவதற்குள் பிரச்சனை ஆரம்பமாகிவிட்டிருக்கிறதே?' அவனுள் மலைப்பு. தொலைபேசியை எடுத்து ஆப்பரேட்டரை அழைத்தான். "ஹலோ ஹலோ!" அவன் கத்தியது தான் மிச்சம். மறுமுனையில் பெரும் நிசப்தம்.

மேஜைக்கு அருகே ஓரமாக நின்ற பையனுக்கு சங்கடமாக இருந்தது. புது ஐயாவுக்கு இந்த ஆபீஸ் விவகாரம் ஒன்றுமே தெரியவில்லையே என்ற தவிப்பு.



"ஷீலா அம்மா இன்னும் வரலீங்க." தலையைச் சொரிந்து கொண்டான் பையன்.

புருவங்களைச் சுருக்கியபடி காசிநாத் இண்டர்காமில் பதஞ்சலியை அழைக்க முயன்றான். நொய். நொய் என்ற சப்தத்தை தவிர அங்கிருந்தும் பதில் வரவில்லை. பையனது தவிப்பு அதிகரித்தது. மறுபடியும் தலையை சொரிந்து கொண்டான்.

"அவர் வரத்துக்கு பத்து மணிக்கும் மேலாகும்." மெல்லிய குரலில் முணுமுணுத்தான்.

மறுபடி அவன் இண்டர்காமை கையிலெடுக்கு முன் பையன் முந்திக் கொண்டான்.

"உதவி மானேஜர் அய்யா கூட இப்ப இருக்க மாட்டார். பதினோரு மணிக்கு மேல்தான் வர்ற வழக்கம்."

தாடைகள் இறுக சில வினாடிகள் மேஜைமீது கிடந்த அந்தத் தந்தியைக் கோபத்துடன் உறுத்துப் பார்த்தான் காசிநாத்.

டைரக்டர் பிரசாத் பெருங்குரலில் கூச்சலிடுவதைப் போன்ற ஒரு பிரமையில் அவனுக்கு கோபம் தாளமுடியவில்லை. விருக்கென்று அவன் எழுந்திருப்பதைக் கண்டதும் பையன் பயந்து விட்டான்.

"மங்களா அம்மா ஆபீசிலே இருக்காங்க. கூட்டி வரேன். அவங்க ஒருத்தர்தான் ஆபீஸ் ஆரம்பிக்கறதுக்கு பத்து நிமிசம் முன்னாடியே வர பழக்கம்" பதில் எதிர்பாராது வெளியே பறந்தான்.

அலுவலகத்திற்கு இன்னமும் யாரும் வரவில்லை. அதற்குள் அவளைத் தனியே சந்திக்க புதிய மானேஜர் அழைக்கிறாரே? முதல்நாள் மரியாதையாக பேசியதெல்லாம் வேஷமா? இவரும் நந்தகோபால் போல...அச்சமும் சந்தேகமுமாக மங்களா பரபரப்புடன் எழுந்து அவன் அறைக்குள்ளே வந்தாள்.

காசிநாத் சிறிது கோபத்துடன் அந்தத் தந்தியை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"இதைப்பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" வறட்சியாக முறுவலித்தான்.

மங்களா தந்தியைத் தனக்குள்ளே படித்துக்கொண்டாள். பேசுமுன் அவள் நெஞ்சு படபடத்தது.

"தெரியும் ஸார், ஆனால் புக்கிங் அண்ட் ஃபார் வேடிங் என்னுடைய வேலை இல்லை. ஆனாலும் இதில் நான் உதவி செய்திருக்கிறேன்."

"விளக்கமாகச் சொல்ல முடியுமா?" தாடையைத் தடவிக் கொண்டே நாற்காலியில் சாய்ந்தபடி அவளைத் தீர்க்கமாகப் பார்த்தான்.

"சேலத்து வாடிக்கைக்காரர்கள் நம்முடன் நீண்ட கால தொடர்பு கொண்டவர்கள். அவர்கள் கேட்ட சாமான்களை லாரி மூலம் அனுப்பியாகி விட்டது. ஆனால் பில்லில் ஏதோ தகராறு. அதனால் செக்போஸ்டில் நிறுத்தி விட்டாங்க. இதை நான் கவனிக்கணும்னு உதவி மானேஜர் உத்திரவிட்டிருந்தார். பில் அனுப்பின தேதி, விற்பனை வரி விவரம் எல்லாவற்றிற்கும் ஒரு குறிப்பு எடுத்து எங்கள் பகுதி தலைவர் மிஸ்டர் பதஞ்சலியிடம் கொடுத்து விட்டேன். மேற்கொண்டு அவர் என்ன செய்தாரோ எனக்குத் தெரியாது ஸார்"—படபடவென்று பேசி முடித்தாள்.

"தாங்க்யூ மிஸ் மங்களா, நீங்கள் போகலாம்." காசிநாத் அவள் முகத்தைப் பார்க்காமலே உத்தரவிட்டான்.

உள்ளங்கைகளில் பொடித்த வியர்வையை புடவைத் தலைப்பில் துடைத்துக்கொண்டு படபடத்த நெஞ்சோடு மங்களா வெளியே வந்தாள். குதப்பிக்கொண்டிருந்த வெற்றிலையை தோட்டத்தில் ஒரு மூலையில் துப்பிவிட்டு அங்கிருந்த குழாயில் வாயைக் கொப்பளித்துவிட்டு



நிம்மதியாக மெல்ல நடந்து தமது அறையை நோக்கிச் சென்ற பதஞ்சலி, அவளைப் பார்த்துவிட்டு சிரிப்பொன்றை உதிர்த்தார், கைப்பையை தரையில் ஓரமாக வைத்துவிட்டு, வழியில் கடையில் வாங்கிய தினசரிப் பத்திரிகையைச் சுடச் சுடப் படிக்க மேஜைமீது போட்டு விட்டுத் திரும்பியவர் திடுக்கிட்டுப் போனார்.

"கொஞ்சம் என் அறைக்கு வர முடியுமா?" மானேஜர் காசிநாத் அவரை நேராகவே அழைக்க அங்கு வந்து விட்டிருந்தான்.

பலிபீடத்திற்கு இழுத்துச் செல்லப்படும் ஆடுபோல பதஞ்சலி அவன் பின்னால் போவதைக் காண மங்களாவுக்கு ஒரே சிரிப்பு...சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு ஃபைல்களைப் புரட்டினாள்.

தன் அறைக்குள்ளே நுழைந்து நந்தகோபால் சுழல் நாற்காலியில் சாயுமுன், ஆபீஸ்பையன் அழையாதபடி அங்கு ஆஜராகி விட்டான்.

"மானேஜர் ஐயா...உங்களை உடனே தம் அறைக்கு வரச் சொன்னார்" என்றான். வழக்கத்திற்கு மாறாக அரை மணி முன்னதாகவே அவன் வந்திருந்தும், பாவி மானேஜர் காசிநாத் அவனை முந்திக்கொண்டு விட்டிருக்கிறானே... 'எதுக்குக் கூப்பிடுகிறான்?'—எரிச்சலுடன் தான் எழுந்து சென்றான்.

பதஞ்சலி முன்னால் தூக்கிப்போட்ட அதே தந்தியை இப்பொழுது நந்தகோபாலனிடம் கொடுத்துவிட்டு தன் நாற்காலியில் அமர்ந்தபடி இருவரையும் ஊன்றிப் பார்த்தான் காசிநாத்.

பதஞ்சலி திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தார்.

நந்தகோபால் சட்டென்று அசந்துவிடவில்லை. "இதைப்பத்தி ஏற்கனவே மிஸ் மங்களாவிடம் சொல்லியிருந்தேனே..."

"சந்தோஷம் தொடர்ந்து நீங்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டீங்க...?"

"மிஸ் மங்களாவைத்தான் கேட்கணும்." எரிச்சலை அடக்கிக் கொண்டு பதிலளித்தான் நந்தகோபால். தன்னை உட்காரச் சொல்லாது பதஞ்சலிக்கு எதிரே நிற்கவைத்தே பேசுகிறானே இந்த மானேஜர்...என்று உள்ளூர ஆத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்தான்.

"தான் அவங்களைக் கேட்டாச்சு, மிஸ்டர் பதஞ்சலி! இந்த விவகாரத்தைப் பத்தின குறிப்பு ஃபைலில் உங்க மேஜையில் தான் இருக்கிறதாம் போய் எடுத்து வருகிறீர்களா?"

பதஞ்சலி பயத்தில் ஆடிப்போய் விட்டார். 'புது மானேஜர் வந்து ஒரு நாள்கூட ஆகலை, அதற்குள் குட்டையைக் குழப்புகிறானே பாவி...' தமக்குள்ளே புலம்பியபடி அதைத் தேடி எடுக்க ஓடினார்.

அவர் கொண்டு வந்து பணிவுடன் எதிரே வைத்த ஃபைலை காசிநாத் திறந்து முதல் பக்கத்தைப் புரட்டினான்.

குண்டு குண்டான எழுத்திலே மங்களா எழுதின அந்த விவரமான குறிப்பு...பளிச்சென்று மேலேயே இருப்பதைக் கண்டு பதஞ்சலி அசந்து போய்விட்டார்.

"இந்தக் குறிப்பு எடுத்து எத்தனை நாளாச்சுன்னு தலைப்பிலே கொடுத்திருக்கிற தேதியைப் பாருங்க..." காரமாக மானேஜர் கேட்டபோது, பதஞ்சலி நந்த கோபாலைப் பரிதாபமாகப் பார்த்தார்.

உதவி மானேஜரிடம், 'என்கிட்டே பதஞ்சலி சார் இந்தக் குறிப்பைப் பத்தி ஒரு வார்த்தை கூடப் பேசலை. அதனால் நான் எல்லாம் சரியாகிவிட்டது என்று நினைத்துக் கொண்டிருந்தேன்."

"மிஸ்டர் பதஞ்சலி முக்கியமானதை இப்படி மறந்து போவார்னு நான் நினைக்கலை" நந்தகோபால் சமயத்தில் பதஞ்சலியை வாரி விட்டுவிட்டான். இடி விழுந்தாற் போல் அவர் திகைத்துப் போனார். ஆனால் காசிநாத் சட்டென்று அதை எடுத்துக் கொண்டு விடவில்லை. உதவி மானேஜர் தமது வேலையில் பொறுப்பில்லாது நடந்து கொண்டு விட்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை. "அப்படின்னா, நீங்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டு அந்தக் குறிப்பு என்ன ஆயிற்று என்று அதைப் பற்றி தொடர்ந்து ஏதும் விசாரிக்கவில்லைன்னுதானே அர்த்தம்?"



நந்தகோபால் வெட்கிப்போனான் பதஞ்சலி முன்னால் மானேஜர் ஒரேயடியாக இறக்கிவிட்டானே? திமிர் பிடிச்சவன் போலிருக்கு...பொங்கிவந்த கோபத்தை அடக்கிக் கொண்டு மௌனமானான். கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு காசிநாத் அறைக்குள்ளே முன்னும் பின்னும் உலாவியபடி பேசினான்.

"இந்த ஆபீஸிலே எல்லாமே குழப்பமாக இருக்கிறது. இதுக்கு எல்லோரும்தான் காரணம்னு நினைக்கிறேன். நன்றாக யோசித்துப் பாருங்கள். இது நம் எல்லோருக்குமே அவமானம் இல்லையா? டைரக்டர் தந்தி கொடுத்து விசாரிக்கும் வரை நாம் விவகாரத்தை அசரப்போட்டுத் தூங்குகிறோம் என்றால் ஆபீஸா நடத்துகிறோம்...? வெட்கம். வெட்கம் ஒவ்வொருவருக்கும் அவரவருக்குக் கொடுத்த வேலையைப் பாறுப்பாச் செய்திருந்தால் இப்படி ஒரு அசம்பாவிதம் ஏற்படுமா? பதினெட்டுக் கிளைகள் கொண்ட பெரியதொரு நிறுவனம் நம்முடையது. செக்போஸ்டில் தகராறு ஏற்பட்டால் காரணம் என்ன என்று உடனே நீங்க கவனித்திருக்க வேண்டாமா? மிஸ்டர் நந்தகோபால்! டெலிபோனில் நம்ம வக்கீலையும் வியாபார வரி அதிகாரியையும் தொடர்பு கொண்டு முதல் வேலையாக இந்தப் பிரச்னையை ஒழுங்கு செய்யுங்க. நேரே சேலம் பார்ட்டிக்கு ஒரு டிரங்கால் போட்டு மன்னிப்பு கேட்கலாம்னு முயற்சி பண்ணினால் ஆப்பரேட்டர் இல்லை. ரிஸப்ஷனிஸ்டை இடத்தில் காணோம். நம்ம ஆபீஸிற்கு

இன்னிக்கு லீவோன்னு வந்ததும் எனக்கு திகைப்பாய் போயிட்டது.''

பதஞ்சலி மௌனமாக நின்றார். வயதில் பிள்ளைக்கு ஒத்தவன் சாட்டையால் அடிப்பதுபோல் சாடுகிறானே என்று மனம் குமைந்தார். கதவை தள்ளிகொண்டு மெல்ல எட்டிப் பார்த்தான் பையன் ''ஸார்! டெலிபோன் ஆப்பரேட்டர் வந்துட்டாங்க...'' என்றான். காசிநாத்தின் குரலைக் கேட்ட ஷீலா உறைந்து போனாள்.

''சேர்வா பிரதர்ஸுக்குத்தானே...இதோ...கொடுக்கறேன் ஸார்...'' வார்த்தைகள் குளறின.

சில நிமிஷத்தில் சேலத்தைச் சேர்ந்த அந்த வாடிக்கைகாரருடன் காசிநாத் தொலைபேசியில் தொடர்பு கொண்டான்.

''பிரசாத் அண்ட் சன்ஸின் மானேஜர் பேசறேன். ரொம்ப நீங்க மன்னிச்சுக்கணும் எதிர்பாராத விதமாக நடந்த தவறு இனி இதுமாதிரி ஏதும் நடக்காது. நான் உறுதி கொடுக்கிறேன். உங்கள் சாமான்கள் விரைவாக வந்து சேர்ந்திடும். மிக்க நன்றி...'' போனை வைத்துவிட்டு முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான்.

தேனீர் வேளையின்போது எல்லோரையும் பொது ஹாலுக்கு வரச் சொல்லியிருந்தான்.

''உங்களுக்கு அலுவலகம் தேநீர் குடிக்க அளிக்கும் பதினைந்து நிமிஷத்தில் நான் பாதியை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஒரு சில வார்த்தைகளைச் சுருக்கமாகச் சொல்லமட்டும் ஆசைப்படுகிறேன்.

நமது அலுவலகம் காலை ஒன்பதரை மணிக்கு ஆரம்பிக்கிறது. மாலை ஐந்து மணிக்கு முடிவடைகிறது. காலை மாலை தேநீருக்கு கொடுக்கும் பதினைந்து நிமிஷங்களும், மதிய உணவுக்குக் கொடுக்கும் ஒருமணி நேரமும் உங்களுடையது. ஆனால் மீதி நேரத்தின் ஒவ்வொரு நிமிஷமும் அலுவலகத்தைச் சேர்ந்தது.

நாளை காலை ஒன்பதரை மணிக்கு எல்லோரையும் சந்திக்க விரும்புகிறேன். அவ்வளவுதான், தாங்க்யூ.'' டக்டக்கென்று கால் பாதணி ஒலிக்க, மிடுக்காக தலையை நிமிர்த்திக்கொண்டு அவன் வேகமாகத் தன் அறைக்குள் மறைந்துவிட்டான்.



## 15

புது மானேஜர் காசிநாத் பொறுப்பிலே அந்த அலுவலகம் சில நாட்களில் ஒரேயடியாக மாறிவிட்டிருந்தது.

அவரவர் வேலை அவரவருக்கு என்ற ஒழுங்கு முறை ஏற்பட்டதும் எண்ணெயப்பட்ட சக்கரங்கள் போன்று வேலைகள் எவ்வித சிக்கலுமின்றி செயல்பட்டுக் கொண்டிருந்தன.

முன்போல் மங்களா தன் மேஜை மீது குவிக்கப்பட்டிருந்த ஃபைல்களின எண்ணிக்கையைக் கண்டு மலைக்கத் தேவையிருக்கவில்லை. சாப்பிட நேரமின்றி, தன்னைப் பற்றி சிந்திக்க நினைப்புமின்றிச் சதா ஃபைல்களைப் பார்த்து கண்கள் பூத்து-முதுகு வலிக்க அவள் உழைத்து ஓடாக வேண்டிய அவசியமும் இருக்கவில்லை.

தலை மீது சுமத்தப்பட்ட பளுவை யாரோ இறக்கிவிட்டது போன்ற லேசான உணர்வுடன் தனக்களிக்கப்பட்ட வேலைகளை முன்னைவிட கவனமாக, உற்சாகமாகச் செய்து கொண்டிருந்தாள்.

அத்துடன் அலுவலகத்து நடவடிக்கைகளிலும் பலத்த ஒழுங்கு முறை அமலுக்கு வந்துவிட்டிருந்தது. வேலை நேரங்களில் டைப் இயந்திரங்கள் எழுப்பிய ஒலியும், காகிதங்களைப் புரட்டும்போது ஏற்படும் ஒலியும் தவிர,

அலுவலகத்திற்குள் ஒரு அபூர்வமான அமைதி நிலவியிருந்தது. பதஞ்சலியின், கோடையிடிச் சிரிப்பு மாயமாக மறைந்து போயிற்று, அவசியமான வேளைகளில் மட்டுமே அவர் மற்றவர்களிடம் தணிந்த குரலில் மெதுவாகப் பேசினார். அவருடைய அட்டகாசமான பழைய சத்தத்தை மூட்டை கட்டி மூலையில் வைத்துவிட நேர்ந்தது.

மங்களா எந்தவிதமான தலையீடுமின்றி நிம்மதியாகத் தன் வேலைகளைக் கவனித்தாள்.

இத்தனை நாட்களாக அலுவலகத்திலே அவளுக்கு ஏற்படாத ஒரு மனத்திருப்தி இப்போதுதான் ஏற்பட்டிருந்தது.

அன்று பகல் உணவு நேரத்திற்கு சிறிது முன்பே தன் வேலைகளைச் செவ்வனே முடித்துவிட்டுப் ஃபைல்களை ஒழுங்காக அடுக்கி பையனிடம் மானேஜர்பார்வைக்கு அனுப்பி விட்டாள்.

மகிழ்ச்சியுடன் எழுந்து பின் பக்கம் சென்றவள் முகத்தைக் கழுவி, முடியைச் சீராக்கிக் கொண்டு அவள் வெளியே வந்தபோது பகல் உணவு நேரம் ஆரம்பமாகி விட்டது. எல்லோரும் வெளியே கிளம்பிவிட்டனர்.

டிபன் பாக்கைத் திறந்து வைத்துக்கொண்டு சாப்பிட உட்கார்ந்திருந்தபோது திடீர் என லதாவின் நினைப்பு.

சில நாட்களாக உணவு வேளையில் அவள் ஏன் டெலிபோனில் கூட அழைக்கவில்லை?

'அனாவசிய அதிகாரங்கள் இல்லாது நிம்மதியாக வேலை செய்தால்தான் வேலையில் மன நிறைவு ஏற்படும் அடிக்கடி லதா சொல்லுவாளே, அந்த மன நிறைவு இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கின்ற உண்மையை அவளிடம் சொல்ல வேணுமே...ஆபீசில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைப் பற்றிப் பேசும் பொழுது வீட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைப் பற்றியும் சொல்லி ஆலோசனை கேட்க வேண்டுமே? லதா ஏன் மௌனமாக இருக்கிறாள். உடம்புக்கு...?



விரைவாக உணவை முடித்துக் கொண்டு எழுந்தாள்.

புது மானேஜர் கண்டிப்பானவர் என்பதைப் புரிந்து கொண்ட அலுவலகத்து ஊழியர்கள் அனைவரும் அதுவரை அனுபவித்துக் கொண்டிருந்த சில்லறை சலுகைகளை உதறி விட்டிருந்தனர்.

தாமோதரன் ஆபீஸ் காகிதங்களை சொந்த உபயோகத்திற்கு அள்ளிச் சுருட்டிக்கொண்டு போவதை நிறுத்தி விட்டிருந்தான்.

டைப்பிஸ்ட் மாலினி அடுத்த வீட்டு அம்மாவின் டெலிபோன் எண்ணைச் சுழற்றி தன் தாயாருக்கு தகவல்கள் அனுப்புவதை கைவிட்டிருந்தாள்.

என்றுமே மங்களா அலுவலகத்து தொலை பேசியை தன் சொந்தக் காரியங்களுக்கு உபயோகித்தது இல்லை. எனவே அவள் வேகமாக கீழே இறங்கி சாலையைக் கடந்து எதிர்ப்பக்கத்து மருந்துக் கடைக்குச் சென்றாள்.

பக்கத்து அலுவலகத்துப் பெண்கள் சிலர் காசு கொடுத்துவிட்டு அந்தக் கடைத் தொலைபேசியை அவசரத்திற்கு உபயோகிப்பது வழக்கம்.

கடையில் கூட்டம் அதிகம் இருக்கவில்லை.

பூட்டைக் கழற்றிவிட்டு, கடைக்காரர் தொலை பேசியை மேஜையின் மீது அவள் பக்கம் சற்று நகர்த்தி வைத்தார். "வாடிக்கைக்காரங்க— டாக்டருங்க எல்லாரும் அடிக்கடி கூப்பிடுவாங்க அதனாலே சுருக்கமா பேசணும்' ஒரு ரூபாயைத் தமது காசுப் பெட்டிக்குள் தள்ளிக் கொண்டு கண்டிப்பாக எச்சரித்தார். போக்குவரத்து செலவுக்காக அவள் ஒதுக்கி தனது சிறு பர்சுக்குள் வைத்திருந்த பணத்தில் ஒரு ரூபாய் செலவானதுதான் மிச்சம்.

லதா ஒரு வாரலீவில் இருக்கிறாள் என்ற பதில் மறுமுனையிலிருந்து எரிச்சலோடு காதைக் கிழித்தது.

"சாதாரணமாக லதா லீவு எடுக்கமாட்டாளே...அவளுக்கு என்ன? அவள் தாயாருக்கு ஏதாவது அப்படி வந்தால் தகவல் அனுப்பியிருப்பாளே...? விடையில்லாத கேள்விகள் நெஞ்சைக் குடைய சுருக்கமாகப் பேச்சை முடித்துக் கொண்டு திரும்பி விட்டாள்.

மாலை வேலை முடிந்ததும் அவள் நேரே வீட்டிற்குப் போகவில்லை.

மங்களா வந்தாளா...போனாளா என்று விசாரிக்க மனமின்றி ஒதுங்கிவிட்ட உறவினர் கொண்ட வீட்டுக்கு எப்போ போனால் என்ன என்ற அசட்டை

பஸ்ஸை விட்டிறங்கி வேகமாக லதா வசித்த தெருவுக்குள் புகுந்தாள். ஒண்டுக்குடித்தன வீடாதலினால் வாயிற்கதவு அகலமாகவே திறந்து கிடந்தது. முற்றத்தில் பம்பை அடித்து தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த காமு அம்மாளைப் பார்த்ததும் அவளுக்கு நிதானமான மூச்சு வந்தது.

"வாம்மா மங்களா...செம்பிலே ஜலம் வச்சிருக்கேன். கைகால் அலம்பிண்டு வந்து உட்கார். டிபனுக்கு அரிசி உப்புமா பண்ணினேன். உனக்குப் பிடிக்குமேன்னு நினைச்சுண்டேன். நீ வந்தே...உனக்கு ஆயுசு நூறு..."

மங்களா களுக்கென்று சிரித்தாள். "நூறு வருஷம் நான் வாழணும்னு நினைக்கிறேளா?" கேலியாகக்கேட்டபடி செம்பை எடுத்துக் கொண்டாள்.

"நீயும் லதாவும் நூறுக்கு மேலேயே வாழணும்னு வாழ்த்தறேன். உங்க ரெண்டு பேருக்கும் என்ன குறைச்சல்? படிச்ச குழந்தைகள். உங்க உழைப்பால் நிமிர்ந்து நிக்கறேன். சோம்பேறிகளாக வம்பு தும்புகளில் வெட்டிப் பொழுதைக் கழிக்கிறவங்கதான் பூமிக்குப் பாரம், வா உள்ளே..." புன்னகைத்தபடி குடத்தைத் தூக்கிக் கொண்டு திரும்பினாள்.



கூடத்துத் தரையில் சுவரோரமாக மங்களா வந்து உட்கார்ந்து கொண்டாள். லதா அங்கு இல்லை என்பது விளங்கியது.

அவள் கேட்குமுன்...ஒரு சிறு வாழை இலைத்துண்டைக் கூடத்தில் நீர் தெளித்து காமு அம்மாள் உப்புமாவை பரிமாறத் தொடங்கிவிட்டாள்.

"லதா வர நேரம் பிடிக்கும். உனக்குத் தெரியுமோ என்னவோ, ஒரு வாரமா அவ லீவு போட்டுட்டு..." சாம்பாரை வார்த்துவிட்டு நிமிர்ந்தாள்.

"அதைப்பற்றி விசாரிக்கத்தான் வந்தேன். அவ உடம்புக்கு...?"

காமு அம்மாள் லேசாகச் சிரித்தாள், "இந்த வீட்டில் உடம்புக்கு முடியாமல் சுருட்டிக் கொண்டு கிடக்கிறவள் நான் ஒருத்திதான். உனக்கு உன் சிநேகிதியின் குணம் தெரிஞ்ச சங்கதிதானே? அடுத்த வீட்டு மனுஷன் போன வியாழக்கிழமை அன்னிக்கு ஆஸ்பத்திரியிலேயே போய்ட்டார். வயசு எழுபதுக்கு மேலே ஆயிடுத்து...ஆனால் அவரைத் துணையாகக் கொண்டு வாழ்ந்த அவர் பேத்தி சரோஜா நிலைமைதான் ரொம்பப் பரிதாபமா போயிடுத்து..."

காப்பியைக் கலந்து அவள் முன் வைத்துவிட்டு காமு அம்மாள்.

"உனக்கு இதெல்லாம் லதா சொன்னாளோ என்னவோ? இந்தத்தெருவில் இந்த வரிசையில் மூணாவது வீட்டில் குடியிருந்த சுப்பராமனைத்தான் நாங்க அடுத்த வீட்டு மனுஷன்னு சொல்லுவோம். லதாவுக்கு அவரையும், அவர் பேத்தி சரோஜாவையும் ரொம்பப் பிடிக்கும். எங்கேயோ கம்பெனியில் வேலைசெய்துவிட்டு ரிடையர்ட் ஆனவர். அவருடைய ஒரே பெண்ணும் மாப்பிள்ளையும் பல வருஷங்களுக்குமுன் நடந்த ஒரு பஸ் விபத்திலே

செத்துப்போயிட்டா. பாட்டன்தான் சரோஜாவை வளர்த்து படிக்கவச்சு—ஆளாக்கி கல்யாணம் பண்ணிக் கொடுத்தார்.

பேத்தி கல்யாணத்துக்குப் பிறகு பாட்டியும் போயிட்டா. பாவம் சுப்பராமனுக்கு துன்பம். இடிமேல் இடியா வந்துண்டேதான் இருந்தது. டெல்லியில் வாழ்க்கைப்பட்ட பேத்தி சரோஜாவுக்கும், அவள் கணவனுக்கும் ஒத்துக்கலை. என்ன விஷயமோ விவரமா தெரியாது. இரண்டு வருஷத்துக்கு முன்னாடி அவளைப் புருஷன் விவாகரத்து செய்துட்டான். உங்களுக்கெல்லாமே கல்யாணங்கிறது பிரச்னையா போயிருக்கிற சமூகத்திலே எவன் விவாகரத்தானவளை திரும்பிப் பார்ப்பான்?

லதா புத்தி சொல்லி அந்தப் பெண்ணை செகரட்டேரியல் கோர்ஸில் படிக்க வற்புறுத்தி, கூடநின்னு உதவினாள். வேலைக்கு மனு போட்டு இண்டர்வியூவில் தேறி உத்தரவு வந்தபோது...தாத்தா போயிட்டார், போதுமா...?"

காமு அம்மாளிடம் கதை கேட்டுக்கொண்டே, அவள் கொடுத்த காப்பியைப் பருகிவிட்டு டம்ளரைக்கீழே வைத்தாள் மங்களா. "அவளுக்கு வேறே நெருங்கின உறவுக்காரர் யாருமில்லையா?" அனுதாபத்துடன் கேட்டபடி இலையை வைத்துக் கொண்டு பின்பக்கம் திரும்பினாள்.

"தங்கள் குழந்தைகள் தாங்கள்னு ஒரு சின்ன வட்டத்திலே சுயநலமாக எல்லாரும் வாழ ஆரம்பிச்சாச்சு. பெற்ற தாயையே கூட வச்சுக்க பிள்ளைகள் சிரமப்படற காலமாக இருக்கும்போது தூரத்து உறவினர்களை நம்பி ஒரு இளம் பெண் வாழ முடியுமா? அதனாலே தாத்தா செத்த துக்கம் ஒரு பக்கம் இருக்க லதாவோட போய் அந்த வேலையை ஒப்புக் கொண்டுவிட்டா. எங்கே இருக்கிறது என்பது அடுத்த பிரச்னை."



சாப்பிட்ட இடத்தை சுத்தம் செய்து விட்டு காப்பி தம்ளரைக் கழுவி உள்ளே கொண்டு வைத்துவிட்டு, மங்களா மறுபடி கூடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"அந்த வீட்டிலே..." அவள் முடிக்குமுன் காமு அம்மாள் குறுக்கிட்டாள்:

"தாத்தா போனதும் ஒரு இளவயசுப் பொண்ணு அங்கே தனியா இருக்க முடியுமா? அதுவும் விவாகரத்து செய்து கொண்டவள்னு தெரிஞ்சா போறாதா? அதனாலே அவளை ஆனந்த நிலையம்கிற ஹாஸ்டல்லே சேர்த்துட்டு வர லதா கூடப் போயிருக்காள்."

"ஹாஸ்டலா...?"

"ஆமாம். சுமதி எண்டர்பிரைசர்ஸ்னு ஒரு நிறுவனம் இருக்கு. அதன் தலைவி சுமதி அம்மாள். வாழ்க்கையிலே சிறு வயதில் விதவையாகி, வறுமையிலும், தனிமையிலும் ரொம்ப அவதிப்பட்டவள். அவள் வச்சிருக்கிற ரெடிமேட் ஆடை தயாரிப்பு நிறுவனத்தில் பல பெண்கள் வேலை செய்கிறார்கள். அவர்களில் பலர் வெளியூர்வாசிகள். அவர்களுக்காக ஒரு பழைய பங்களாவை வாங்கி... திருத்தி-ஆனந்த நிலையம்னு ஹாஸ்டலா மாற்றியிருக்கா. வேலை செய்யும் பெண்கள் தங்கி வசிக்கும் ஒரு தனியார் விடுதி. இப்போதைக்கு முப்பது பேருக்குத்தான் இடமிருக்கிறதாம். எப்படியோ அந்த சுமதி அம்மாள் காலில் விழுந்து அதில் சரோஜாவுக்கும் இடம் வாங்கிக் கொடுத்திட்டாள் லதா..."

"பெண்கள் இப்படி தனியாகப் போய் ஹாஸ்டலில் தங்கி வாழறதைப்பத்தி என்ன நினைக்கிறேள்?" மங்களா திடீரென்று கேட்டாள்.

"அண்ணன் தம்பி பெற்றோர் என்று ஏக குடும்பமாக வாழ்ந்த காலம் போய் இப்போ அவா அவா தனியா பிரிஞ்சு வாழ ஆரம்பிச்சுட்டோம். வயதானவர்களுக்கு

இளைய சமுதாயத்தினரிடையே நெருக்கமில்லாமல் போச்சு பெற்றோரால் கைவிடப்பட்ட பச்சைக்குழந்தைகளுக்கு அனாதை இல்லங்களும் இளைய சமுதாயத்தால் ஒதுக்கப் பட்ட வயதானவர்களுக்கு கருணை இல்லங்களும். பரவலா நம்மிடையே அதிகரிக்க ஆரம்பித்து விட்ட காலம் இது. உன்னையும் லதாவையும் போன்ற இளம் பெண்கள் வேலை செய்து தம்மைத்தாமே காப்பாத்திக்கிற நிலையில் இருக்கிற வர்களுக்கு ஒரு இடம் வேண்டாமா? பச்சைக் குழந்தை என்று அனாதை இல்லத்தில் நீங்கள் அடைக்கலம் அடைய முடியாது. வயசானவர்னு கருணை இல்லம் உங்களை ஏத்துக்காது. வேலை செய்யும் பெண்களுக்காக நடத்தப் படும் ஹாஸ்டலில் இருந்து வாழ்கிறதுதான் முறை நான் திடீரென்று கண்ணை மூடிவிட்டால், லதா எங்கே போவாள்னு நினைக்கிறே?"

"அப்படி ஏதும் சொல்லாதீங்க மாமி..." மனவெழுச்சி யுடன் காமுவின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

"ஒரு பெண் படிச்சு வேலைக்கு வந்து தன்னைத் தானே காப்பாத்திக்க வேணும்கிற நிலை வந்துவிட்ட அடுத்தபடி இதுதானே? தனியா வசிக்கணும்கிறதை சொல்லாமே தெரிஞ்சுக்கணும், இல்லியா...? நன்னா யோசிச்சுப் பார்... நீங்கள் எல்லாம் எதுக்குப் பயப்பட ணும்?" லதாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள நினைத்த கேள்விக்கு காமு அம்மாளே பதில் சொல்லிவிட்டாளே? மங்களாவுக்கு மெத்த வியப்பு.

"வீடு என்கிற பாதுகாப்பிலிருந்து, விலகி, இப்படி வெளி இடத்திலே தங்கி வாழும் போது ஏதாவது விபரீதம் நேர்ந்துட்டா?"

"இதோ பார் மங்களா. நீயும் லதாவும் பச்சைக் குழந்தைகள் இல்லை, சரியான வயதிலே கல்யாணமாகி யிருந்தா பத்து வயதுக் குழந்தைக்கு தாயாகியிருக்கும் பொறுப்பான பெண்ணாகியிருப்பேள்.



"ஒரு பெண்ணுக்கு வீடோ-அதிலுள்ள உறவினரோ பாதுகாப்பு இல்லை. அதுக்குத்தான் சொல்வார்கள்... பெண்ணுக்கு மதில் காவலா, மனசு காவலான்னு. புரி யறதா?"

மங்களா மகிழ்ச்சியுடன் தலையை அசைத்துவிட்டு விடை பெற்றுக் கொண்டாள். பின்னால் வாயில் வரை வந்த காமு அம்மாள் மெல்லிய குரலில் சொன்னாள்:

"அந்த சரோஜா ரொம்ப அசடு. புருஷனோட வாழ்ந்த காலத்தில் அப்பா போட்ட நகைகளை அவன் கேட்ட போதெல்லாம் கழட்டிக் கொடுத்துவிட்டு இப்போ ஒரு பொன் துடைச்ச மணி மேனியிலே இல்லாம நிக்கிறாள். லதா உன்னைப்பத்தி என்கிட்டே சொல்லியிருக்காள். நீயும் நகை களையும் பணத்தையும் அண்ணா குடும்பத்துக்கு வாரி வழங்கிட்டியாம். இனிமேலாவது ஜாக்கிரதையாக இருந் துக்கோம்மா?"

மங்களா திடுக்கிட்டுப் போனாள். அவளது எண்ணங் களைக் கண்ணாடி வழியாகப் பார்த்துப் படித்து விட்டவள் போல காமு மாமி அவள் கேட்க வந்ததற்கெல்லாம் தானே பதில் சொல்லிவிட்டாளே-என்ன விந்தை?

வழி நெடுகிலும் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டு வீட்டருகே வந்தபோது கவனித்தாள், தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இத்தனை நாளும் ஏன் என்று விசாரிக்காத அண்ணா—அவளைக் கண்டதும் எழுந்து வந்தார்.

"ஏதாவது சாப்பிட்டுவிட்டு வா. உன்கிட்டே பேசணும்." அவர் முகத்திலே கடுமை தெரிந்தது.

"சாப்பிட்டாச்சு. நேரேயே பேசலாமே?" டிபன், பாக்ஸ்-குடை-கைப்பை எல்லாவற்றையும் மேஜை மீது வைத்து விட்டு அருகே வந்தாள்.

"உட்கார்..." அதட்டிய அண்ணா எதிரே தாமும் உட்கார்ந்து கொண்டார்.

"மன்னி கேட்டதைப் பத்தி உன் முடிவான பதில்"

அதிகாரமாகக் கேட்டார் அண்ணா.

மங்களாவுக்கு இதுநாள் இல்லாத ஒரு துணிச்சல் திடீரென்று ஏற்பட்டது. நிமிர்ந்து அண்ணாவை உற்று பார்த்தாள்.

"அப்பவே முடிவான பதிலை மன்னிகிட்டே சொல் விட்டேனே?"

"அப்பா வைரத்தோட்டை கொடுக்கக் கூடாதுன்னு சொன்னதாகச் சொன்னியாம். அப்பாவா உன்னை இப்போ வச்சுப் பாதுகாக்கிறார்?"

பொங்கி எழுந்த கோபத்தை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"அப்பாவும் இல்லை; அண்ணாவும் இல்லை... என்னையே நான் காப்பாத்திக்கிறேன். இதிலே உங்களுக்கு என்ன சந்தேகம்...?"

"இதே பேச்சை இந்த வாசப்படியைத் தாண்டி உன்னால் பேச முடியுமா?"

பதில் சொல்லாது விருக்கென்று எழுந்து மாடிக்கு விரைந்து தன் அறைக்குள் மறைந்து கொண்டாள்.

சில தினங்களுக்கு முன் மன்னி விட்ட சவாலை அண்ணா வேறு முறையில் செய்கிறார். அப்படியென்றால் உறவு என்பதற்கே அர்த்தம்எதும் இல்லையா?

படிப்பு உத்தியோகம் அந்தஸ்து என்று போர்வை களை அகற்றியபோது அண்ணாவும் ஒருசாதாரண அல்ப மான மனிதராகி விட்டாரோ? சே! உண்மை எப்படி கசக்கிறது?



நெஞ்சு படபடக்க, உடம்பெல்லாம் உணர்ச்சிக் கொந் தளிப்பில் நடுங்க, துயரத்துடன் ஜன்னல் வழியே வெளியில் பார்த்தாள்.

மின் விசை துண்டிப்பினால்...அவளது எதிர்காலம்போல தெரு இருளில் மூழ்கிக் கிடந்தது.

## 16

இரண்டு நாட்கள் சென்றன. மீண்டும் வீட்டில் அமைதி. அண்ணாவும், மன்னியும் விரோதிகளைப் போன்று கடுமையாக வெறித்த உணர்வுகள்—பாறாங்கல்லாக இறுகி மண்டை வெடித்துவிடும் போன்ற சூழ்நிலையில்...வார இறுதியை அவள், வீட்டிலேயே கழிக்க வேண்டி வந்து விட்டது.

சனிக்கிழமை பாதி நேரம் போக ஞாயிறு மட்டும்தான் முழுநாள். அந்த ஒன்னரை நாள் பொழுதை வீட்டில் ஒன்னரை மாதம் போல கழிக்க அவள் பட்ட வேதனை...! நேரம் எப்படி கனத்துத் தொலைத்தது? 'இவள் நம்மை விட்டு எங்கே போய்விட முடியும்?' என்று மன்னி அழுத்த லாக அகங்காரமாக அடிக்கொரு தடவை முறைத்தாள். எதிரே உட்கார்ந்தவளைப் பாராதது போல அண்ணா பத்திரிகையை மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தது அவள் மனதைப் புண்ணாக வருத்தியது.

"வேண்டாம் என்று ஒதுக்குகிற இவர்களைவிட்டு நான் எங்கே போவேன்? போகுமிடம் எங்கே? கடவுளே எனக்கு மனதில் துணிவையாவது கொடுக்கமாட்டாயா?" தனக்குள் அவள் மருகிக் கொண்டிருந்தாள். மௌனமாக வீட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். இந்த நிலை நீடித்தால் புத்தி பேதலித்துவிடும் என்ற தொரு அச்சம் அவளுள். அவனால்தான் தானே மறுபடியும்

லதாவை அந்த மருந்துக்கடை தொலைபேசி மூலம் உணவு நேரத்தின்போது அழைத்தாள்.

அந்த ஏற்பாட்டின்படி அன்று மாலை அவர்களிருவரும் ஸ்வப்பனாவின் வாயிலில் சந்திததனர்.

"எப்பொழுதும் நீயே செலவழிக்கிறாய்! இன்னிக்கு என் செலவாக இருக்கட்டும்"—லதாவின் கையைப் பற்றி மங்களா உள்ளே அழைத்துச் சென்றாள்.

மாலை வேளையில் ஸ்வப்பனாவில் எப்பொழுதுமே கூட்டம் அதிகம். அன்று குடும்ப அறைகள் எதிலும் இடம் இருக்கவில்லை. பொது சாப்பாடு இடத்தில் ஒரு மூலையில் ஒரே ஒரு மேஜைதான் காலியாகிக் கொண்டிருந்தது. பில்லைக் கையில் எடுத்துக்கொண்டு இருவர் அங்கிருந்து எழுந்தவுடன் ஹோட்டல் பையன் தட்டு களைப் பிளாஸ்டிக் கூடைக்குள் தள்ளிவிட்டு ஒரு அழுக்குத் துணியால் பரபரப்பாக மேஜையைத் துடைக்கலானான்.

காலியான அந்த இடத்தைச் சட்டென்று அவர்கள் இருவரும் பிடித்துக் கொண்டனர். எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டனர். வந்து நின்ற சர்வரிடம் வேகமாக வேண்டியதைச் சொன்னாள் மங்களா. லதாவுக்கு எப்பொழுதும் கண்களும் பரபரப்பாகவே இயங்குவது வழக்கம்.

"உன்னால் பார்க்க முடியும். இதே ஓரத்தில் மூன்று நாற்காலிகள் தள்ளி ஜன்னல் அருகே தனியாக உட்கார்ந்திருக்கும் வாலிபனை உனக்குத் தெரியுமா? நீயும் நானும் அவரைத் தாண்டிக் கொண்டு வந்தபோது கவனித்தேன். புன்னகை செய்தார்..."

பையன் கொண்டு வந்து வைத்த குளிர்ந்த நீர் டம்ளரை எடுத்து ஒரு வாய் பருகிவிட்டு நிமிர்ந்தாள் மங்களா... அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.



தலையை நிமிர்த்தியபோது மூன்றாவது வரிசையிலிருந்த சிறு மேஜைக்குப் பின்னால் தன்னந் தனியாக அவளுக்கு எதிரில் காசிநாதன் உட்கார்ந்திருந்தான். தன் எதிரே மேஜை மீது வைக்கப்பட்டிருந்த பூரியைப் பிட்டுக் கையில் எடுத்தவன் அவளை நேருக்கு நேர் பார்த்து விட்டான்.

மங்களாவுக்கு வியர்த்துக் கொட்டியது. உடம்பெல்லாம் சிலிர்த்துப் போன உணர்வு.

"பார்த்தியா? அந்தப் பழுப்பு வண்ண சபாரி ஸூட்டுக்காரனைத்தான் சொல்றேன். உனக்கு முன்னமே அவனைத் தெரியுமா? அப்படிப் பார்க்கிறானே...?" லதா மெல்லக் கேட்ட போது, மங்களாவால் சட்டென்று பேச முடியவில்லை.

காலையில் அவன் அறைக்குள் ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு போன போது கவனித்தாள்.

அந்தப் பழுப்பு வண்ண சபாரி ஸூட் அவனுக்கு மிகவும் எடுப்பாக இருப்பது போலப்பட்டது.

"மிஸ் மங்களா? உங்களுக்கு கொடுக்கப்படும் வேலைகளையெல்லாம் உடனடியாக முடிச்சுடுறீங்க...எனக்குச் சுறுசுறுப்பாக வேலை செய்கிறவங்களைத்தான் பிடிக்கும்" பைலைப் புரட்டி அவள் காட்டிய பகுதியிலிருந்த கடிதத்தைப் படித்துவிட்டுக் கையெழுத்துப் போட்ட வண்ணம் நிமிராமலே சொன்னான்.

கூரையிலிருந்து யாரோ ஐஸ் துண்டங்களைப் பொடியாக சன்னமாக மெல்ல அவள் தலைமேல் மலர்களைப் போலத்,தூவுவது போன்ற குளிர்ச்சியான மகிழ்ச்சியில் ஒரு கணம் மெய்மறந்து போனாள். 'தாங்க்யூ...' என்று தன் முன் நீட்டிய ஃபைலை வாங்கிக்கொண்டு கனவில் நடப்பது போன்றுதான் வெளியே வந்தாள்.

அவளுக்கு அடுத்தபடியாக ஃபைல் கத்தையுடன் உள்ளே சென்றுவிட்டு வெளிவந்த பதஞ்சலி களையிழந்த

முகமும், தள்ளாடிய நடையுமாக தமது ஆசனத்தில் தொப் பென்று விழுந்தார். அடக்கமாக இருக்க முயன்றும் பல நாள் பழக்கத்தின் விளைவு. 'மனிதனுக்கு மூட் சரியில்லை நெருப்பா பொரிஞ்சு தள்றானே...? தப்பெடுத்துத் நாடை யில் போடும் எமகாதகன்'—தமக்குள்ளே முணுமுணுத்த போதிலும் அவர் வார்த்தைகள் துல்லியமாக அவளுக்குக் கேட்டது. 'நிலவு போன்று குளிர்ச்சியுடன் அவளைக் கண்டு பேசிய காசிநாதன், பதஞ்சலியிடம் எரிமலையாகப் பொங்கியிருக்கிறான் என்றால்...அவன் மேல்...கற்பனையை மேலே ஓடவிடப் பயந்து துண்டித்துக் கொண்டு வேலை யைக் க்வனிக்கலுற்றாள்

தெருக்கு நேர் பார்த்த அந்தக் கண்களில் மிதந்த கனிவு அவள் மனதை என்னவோ செய்ய...சட்டென்று தட்டைப் பார்த்தாள். "ஆமாம்! அவர் எனக்குத் தெரிந்தவர் தான். எங்கள் ஆபீசிற்கு வந்திருக்கும் புது மானேஜர் காசிநாத்."

"அப்படிச் சொல்...நந்தகோபாலுக்கு ஒரு ஸீனியர் கிளம்பிவிட்டிருக்கிறார். அடிசக்கை..."

"சே! சே! நடத்தையில் அவருக்கு நேர்மாறானவர்."

"ஆமாம், உன் ஆபீஸ் அதிகாரிகள் எல்லோருமே நாம் வரும் இந்த ஸ்வப்பனாவுக்கேதான் சாப்பிட வரணுமா? எதேச்சையாக வந்திருக்கிறாரா அல்லது நாம் இங்கே வருவதைக் கண்டு வந்திருக்கிறாரா?"

"லதா, உன் பரிகாசமெல்லாம் பிறகு இருக்கட்டும். அலுவலகத்துக்கிட்டே இந்த ஹோட்டல் இருப்பதால் வந்திருக்கலாம். இப்போது அவரைப் பத்திய ஆராய்ச்சிக்கு உன்னை இங்கே அழைத்துவரவில்லை. என்னைப் பத்தி தான் பேச வந்தேன் சீக்கிரம் சாப்பிடு. இரண்டு பேரும் கடற்கரையில் உட்கார்ந்து நிம்மதியாக சில விஷயங்களைச் சிந்தித்தாக வேண்டும்" என்றாள்.

"நான் கவனிச்சேன். நாம் சாப்பிட்டு வெளியே வந்த பிறகுதான் அவர் வந்தார். தெருவில் நிறுத்தியிருந்த



தமது பியட்டுக்குள் ஏறுமுன் சட்டைப் பையில் சாவியை எடுப்பதாகப் பாவனை செய்தபடி உள்பக்கம் திரும்பிப் பார்த்தார். ஒருசமயம் வீட்டுக்குப் போக ஒரு லிப்ட் கொடுக்கலாம் என்கிற உத்தேசமாக இருக்கும்."—லதா சிரித்துக் கொண்டே தோழியின் தோளைத் தட்டி விட்டுக் கடற்கரை மணல்மீது அமர்ந்து கொண்டாள்.

"நான் 'சரி' என்று சட்டென்று காரில் ஏறி உட்கார்ந்து விடமாட்டேன் என்று அவருக்குத் தெரியும்"—மங்களாவும் கூடச் சிரித்தாள்.

"எப்படித் தெரியும்?"

"முதல் அனுபவமே ஒரு பாடம் கற்பித்து விட்டிருக்குமே. ஒரு வாரம் நீ லீவு எடுத்துக் கொண்டதில் எத்தனை அருமை யான விஷயங்களை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளாம போயிட்டே..." தோழியின் தலையில் செல்லமாகக் குட்டி னாள் மங்களா பின்னர் அவர்கள் சந்திக்காத போது வீட்டிலும் அலுவலகத்திலும் நடந்த அத்தனை சங்கதிகளையும் மனம் திறந்து கொட்டினாள்.

"அண்ணா அப்படிச் சொல்லிய பிறகு அந்த வீட்டில் தங்கும் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு. நரகவேதனையா இருக்கு லதா. நானும் அடுத்த வீட்டு சுப்பாராமன் பேத்தி போல வேலை செய்யும் பெண்கள் தங்கும் ஹாஸ்டலில்போய் வாழ விரும்புகிறேன். எனக்கு அங்கே தங்க கொஞ்சம் உதவி செய்யேன்..."—குழைந்த குரலில் பேசினாள் மங்களா.

"போனவாரம் போனபோது திருமதி சுமதி கண்டிப் பாகச் சொல்லிவிட்டார்கள். இப்பொழுது அந்த ஹாஸ்டலில் இரண்டு பேரை அதிகப்படியாக எடுத்துக் கொண்டிருப்பதால் இனி யாருக்கும் இடமில்லை. வேறு யாரையும் நான் கூட்டி வரக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள்."

"அப்போ நான் வேறே எங்கே போய் இருப்பேன்?"—திகைப்போடு கேட்டாள் மங்களா.

"எங்க வீட்டுக்கு வந்து என்னோட இரு. உங்க அண்ணாவுடைய வீட்டைப் போல தனியறை முதலிய வசதிகள் கிடையாது. வீட்டில் தங்க விஸ்தாரமான இடம் கிடையாது. ஆனால் எனக்கும் அம்மாவுக்கும் மனசில உனக்கு ரொம்ப இடமுண்டு."

நெஞ்சம் நெகிழ்ந்து போய்விட்டாள் மங்களா. தோழியின் கையை அன்புடன் பற்றி அழுத்தினாள்.

"நீ கூப்பிடாவிட்டாலும் தானே வந்து உங்கள் வீட்டில் தங்கிவிடுவேன். அத்தனை உரிமை எனக்கு உங்கள் இருவரிடமும் உண்டு. ஆனால் என் அண்ணா ஒரு மாதிரியானவர். நேரே உங்கள் வீட்டுக்கு வந்து ரகளை செய்தாலும் செய்வார். என்னால் உனக்கு எந்தவிதமான தொந்தரவும் ஏற்படக்கூடாது. அந்த ஒரு காரணத்திற்காகவே நான் ஹாஸ்டலில் தங்கி வாழ விரும்புகிறேன். திருமதி சுமதி நடத்தும் ஹாஸ்டலில் இடமில்லை என்றால் வேறு எங்கேயாவது தேடிப் பார்க்க முடியாதா?"—கவலையும் துயரமுமாகக் கேட்டாள்.

"இன்னும் சில ஹாஸ்டல்கள் இருக்கின்றன. நாளைக்கு நான் விசாரித்துவிட்டு...உன்னை அங்கே அழைத்துப் போகிறேன். அதுவரை பொறுமையாக இரு..."— அபயம் கொடுத்தாள் லதா.

மறுநாள் மாலை லதாவுக்கு அவளுடன் வர இயலவில்லை. காமு அம்மாளுக்கு வழக்கமாக வரும் வயிற்று வலி மிகவும் கடுமையாகிவிட்டிருந்தது. வேலையிலின்று ஒரு மணி முன்னதாக விடுப்பு எடுத்துக் கொண்டு அவள் வீட்டுக்கு ஓட வேண்டியிருந்தது. அதனால் தனிப்பட்ட முறையில்தான் ஹாஸ்டலைத் தேடிக் கொண்டு செல்ல வேண்டி வந்துவிட்டது.

லதா கொடுத்த இரண்டு முகவரிகளில் முதலாவது ஹாஸ்டலுக்கு தொலைபேசி எண் இருந்தது. மருந்துக்



கடைசியில் அதுசமயம் அதிகக்கூட்டம். பணத்தை வாங்கிக் கொண்டு கடைக்காரர் எரிச்சலுடன் மங்களாவைப் பார்த்தார்.

"சட்டுனு பேசி முடியுங்க...வியாபார சமயத்திலே நீங்கள் வந்து..."—பற்களைக் கடித்துக்கொண்டார்.

ஹாஸ்டல் வார்டன்தான் மறுமுனையில் பேசினாள்.

"வருஷ நடுவிலே யாரையும் ஹாஸ்டலில் சேர்ப்பதில்லை. ஆரம்பத்திலேயே தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டிருந்தால் ஒரு சமயம் அவசரத்திற்கு நடுவில் சேர்க்க இயலும். ஏற்னவே காலியாகப்போகும் அறைகளுக்கு பதிவு செய்து கொண்டவர்கள் ஒரு பெரிய வரிசையாக இருப்பதால்...உங்களுக்கு சட்டென்று இடம் கிடைக்கும் என்று உத்தரவாதம் அளிக்க முடியாது... மன்னிக்கவும்." பட்டென்று தொலைபேசியை வைத்து விட்டாள். இன்னொரு ஹாஸ்டலின் தொலைபேசி எண்ணை டைரக்டரியில் தேடினாள். காணவில்லை.

"முடிச்சாச்சா அம்மா..." மருந்துக்கடைக்காரர் சீறுவதைப் பொறுக்காது நேரே அங்கே சென்று விசாரித்துவிடக் கிளம்பினாள்.

லதா விவரமாகத்தான் முகவரியைக் கொடுத்திருந்தாள். ஆனாலும் அடையாறில் அந்தப் பகுதியிலிருந்த அந்த ஹாஸ்டலைத் தேடிப் பிடிப்பதற்குள் இருட்டி விட்டது.

திருவான்மியூர் போகும் வழியில் ஒரு திருப்பத்திலே உள்ளே சென்றதொரு தெருவில், பஸ் நிலையத்திற்குச் சிறிது தூரத்தில் சுற்றிலும் பாதி கட்டிய வீடுகள் சிதறிக் கிடந்த சூழ்நிலையில். தென்னை மரங்கள் அடர்ந்த தோட்டத்திற்குள்ளே ஒரு பழையகாலத்து பங்களா அது. வண்ணமெல்லாம் இழந்து உப்புக் காற்றால் கிரில்கள் கரைந்து...ஒரு பக்கத்து மதில் சுவர் இழந்த நிலையில் பொக்கை வாய்க் கிழவி போல நின்றது.

'மங்கையர் இல்லம்' என்ற பலகை கேட்டின்மீது தொங்குவதைக் கண்டுதான் அவள் புரிந்துகொண்டாள்.

அழைப்புமணியை அடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கவில்லை. வராந்தாவில் கிடந்த பிரம்பு நாற்காலியி விருந்து பருமனான வயதான ஒரு பெண்மணி எழுந்திருந் தாள்.

"யாரது?"—அதட்டியபடியே விளக்கைப் போட்டாள்.

மங்களா படிகளில் ஏறி வராந்தாவிற்கு வந்து கை குவித்து வணக்கம் தெரிவித்தாள்.

"இந்த ஹாஸ்டலின் வார்டன் அம்மாவைப் பார்க்க ணும்... இங்கே தங்க இடம் கிடைக்கும் என்று என் சிநேகிதி சொன்னாள். வந்தேன்."—ஒரே மூச்சில் பேசினாள்.

"நான்தான் இந்த ஹாஸ்டல் வார்டன், தலைவி சொந்தக்காரி எல்லாமும். இப்படி உட்கார்... யாருக்கு இடம் தேடிக்கொண்டு வந்திருக்கே? விவரமாகச்சொல்."

கவனிக்கப்படாது அசட்டையாக விடப்பட்டிருந்த தோட்டத்திற்குள் இங்குமங்கும் சில இளம் பெண்கள் உலவு வதைக் கண்ட பின்னர்தான் மங்களாவுக்குத் துணிவு வந்தது.

லதா கொடுத்த முகவரி சரியாகத்தானிருக்கும் என்ற நம்பிக்கை.

"நான் வேலை செய்கிறேன். எனக்குத்தான் இடம் வேணும்..." என்றாள்.

"ஹாஸ்டலில் சேருமுன் இடத்தைச் சுற்றிக் காண்பிக் கிறேன். கூடவா, என் கணவர் போனபின் இந்தப் பெரிய பங்களாவை நிர்வகிக்க முடியவில்லை. என்னால் முடிந்த வரை *சீர்திருத்தி* ஹாஸ்டலாக நடத்திவருகிறேன். இப்போ இங்கே பதினைந்து பெண்கள் இருக்கிறார்கள். இருபதுபேர் கூட இருக்க இடம் தாராளமாக இருக்கிறது. நீ நினைக்கிற படிவேலை பார்க்கும் பெண்களுக்கு என்று தனிபட்டமுறை



யில் கட்டப்பட்ட ஹாஸ்டல் இது இல்லை. அதனால் குளியல் அறை, படுக்கை அறை அருகே இருக்காது. சில அசௌகர்யங்கள் இருக்கக் கூடும். பஸ் நிலையங்கள் கூட இங்கிருந்து கொஞ்சம் தூரம்தான். சுற்றிப்பார். விண் ணப்பத்தாள் தருகிறேன். அதனைப் பூர்த்தி செய்து இரண்டு மாதம் முன் பணம் கட்டி விட்டுச் சேர வேண்டும். மாதம் சாப்பாட்டுக்கும் தங்குவதற்கும் முன்னூறு வாங்குகிறேன். பால், பழம், முட்டை இவைகளுக்குத் தனியாக பணம் வசூ லிக்கப்படும்."

மங்களா மலைப்புடன் அவளைப் பார்த்தாள்.

## 17

மங்களாவிடம் ஹாஸ்டல் நிர்வாகி தொடர்ந்து கூறி னாள்.

"இப்போ இருக்கும் விலைவாசிகளுக்கு இதுவே ரொம்பக் குறைவான பணம். காலையில் காப்பி பலகாரம்- கையில் கொடுத்து விடுவோம். மாலை வந்ததும் ஒரு கப் டீ கொடுப்போம். இரவு எட்டு மணிக்குச் சாப்பாடு... அவ்வளவுதான். ஹாஸ்டலைச் சுற்றிக் காட்டட்டுமா? பார்க்கிறியா...?"—அந்தம்மாள் அதட்டிக் கேட்டாள். வேறு வழியின்றி மங்களா பின் தொடர்ந்தாள்.

பங்களாவினின்று வெளி வந்தபோது மங்களாவின் மனதில் ஒரு நெருடல்.

'இடம் பார்க்கவே பிடிக்கலையே. இங்கே எப்படி வசிப்பது? அண்ணாவின் வீட்டைவிட இங்கே உணர்வு கள் இறுகி விடும் போலிருக்கே? ஏன், இந்தப் பக்கம்... எங்கேயோ கொலைகூட நடந்ததாகச் சொன்னார்களே... சே! சே! பகலில் பார்த்தால் வேறு விதமாக இருக்கும். மிரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்' தனக் குள்ளே சிரித்தபடி நடந்தாள்.

அந்த ஞாயிற்றுக்கிழமை மாதத்தின் இரண்டாவது நாள். அவள் ஹாஸ்டலில் சேரவேண்டிய நாள். லதாவின் யோசனைப்படியே அவள் முதல் நாள் பாங்கிலிருந்து-தன் சேமிப்பிலிருந்து ஆயிரம் ரூபாய்களை எடுத்துக் கொண்டிருந்தாள். அத்துடன் பிரச்சனையை எழுப்பிவிட்ட வைரத்தோடுகளையும், தன் கழுத்துச் சங்கிலி கை வளையல்கள் எல்லாவற்றையும் லாக்கரில் வைத்துப் பூட்டி விட்டாள். லதாவுடன் கூட அந்த ஹாஸ்டலுக்குச்சென்று தலைவி கேட்ட இரண்டு மாத முன் பணத்தையும் கட்டி ரசீது பெற்றுக் கொண்டாள்.

வரும்போது வழியில் கடையிலிருந்து ஒரு சிறு பெட்டியை விலைக்கு வாங்கிக் கொண்டாள்.

அப்பாவுக்குப் பின்னர் அண்ணாவின் பாதுகாப்பில் இத்தனை காலம் வாழ்ந்தாகி விட்டது என்ற கடமைக்காக அவள் அவர்களிடம் சொல்லிக்கொண்டு புறப்பட விரும்பினாள்.

அன்று மாலை வீட்டிற்கு வந்ததும் தனது முடிவை முதலில் அண்ணாவிடம் சொன்னாள்.

அவளை அவர் வியப்புடன் மவுனமாகப் பார்த்தார். தனது துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு மாடிக்குப் போய் விட்டார்.

மன்னி அனுசுயாவிடம் சொன்னபோது—

"மகனே சமர்த்துன்னானாம். என்கிட்டே எதுக்குச் சொல்லணும்?"...குத்தலாகக் கேட்டுவிட்டு உள்ளே சென்று விட்டாள்.

மறுநாள் காலை அண்ணாவும் மன்னியும் நந்தனத்தி லிருந்த ஒரு நண்பர் வீட்டுக்குக் காலையிலேயே காரில் புறப்பட்டு விட்டனர். தனியே இவள் என்னத்தைச் சாதிக்கிறாள் பார்க்கலாம் என்றதொரு சவால் அது.



அப்பாவின் பெரிய தோல்பெட்டியைப் பீரோவின் உச்சியிலிருந்து எடுத்து தூசியைத் தட்டித் துடைத்து திறந்து வைத்தாள். வேண்டாம் என்று அண்ணா ஒதுக்கிப் போட்டிருந்த பழைய பெட்டியை எடுத்து அதனை பழுது பார்த்து வைத்துக் கொண்டிருந்தாள். அது இப்போது உபயோகப்பட்டது.

பீரோவைத் திறந்து அதிலிருந்து தனது புடவை, ரவிக்கை இத்யாதிகளை எடுத்து அதில் அடுக்கிக் கொண்டாள். பீரோவின் அடித்தட்டில் அவள் கல்யாணத்திற்கென்று செய்து வைத்திருந்த வெள்ளிப் பாத்திரங்களில் ஒரு தட்டும், குங்குமச் சிமிழும் இன்னும் விற்கப்படாதிருந்தன அப்பா அன்போடு அவளுக்காகச் சேகரித்து வைத்திருந்தவைகளில் மீதி, அவை இரண்டுதான். அவைகளை ஏன் விட்டுப் போக வேண்டும்? எடுத்துப் பெட்டியில் போட்டு மூடிக் கொண்டாள்.

பீரோவைப் பூட்டினாள். ஜன்னல்களைச் சாத்திவிட்டு கதவுகளைப் பூட்டினாள். பெட்டிகளைச் சுமந்து வெளியே வராந்தாவில் வைத்துவிட்டு வாயிற்கதவை இழுத்துப் பூட்டினாள். தெருவில் போன ரிக்ஷாவைக் கைதட்டி அழைத்து, பெட்டிகளை அதில் ஏற்றிவிட்டு, எதிர் வீட்டுப் பக்கம் விரைந்தாள். வழக்கம் போல வேடிக்கை பார்க்க வாயிலுக்கு வந்து கொண்டிருந்தாள் யோகாம்பாள்.

"அண்ணாவும் மன்னியும் வெளியே போயிருக்காங்க அவர்கள் வந்ததும் வீட்டுச் சாவியைக் கொடுத்துடுங்க. ரொம்ப நன்றி...நான் அவசரமா போகணும்..." என்றாள்.

யோகாம்பாள் கேட்கவில்லை... அவள் கண்களில் ஆவல் மிதந்தது.

"ஆபீஸ்கிட்டே ஒரு ஹாஸ்டல் இருக்கு. அதிலே போய் தங்கிக்கப் போறேன். இந்தப் பஸ்ஸுக்கு அலைஞ்சு என் பிராணன் போறது. வரட்டுமா?"— பேசிக்கொண்டே டாக்சி ஸ்டாண்டுக்கு விரைந்தாள்.

விலை உயர்ந்த பட்டுச் சேலைகள், வெள்ளித்தட்டு முதலியவற்றைக் கொண்ட பெரிய தோல்பெட்டியை லதாவிடம் ஒப்படைத்துவிட்டு, சிறு பெட்டியில் ஒரு வாரத்திற்கு உபயோகிக்கத் தேவையான புடவைத் துணிகளுடன் ஹாஸ்டலுக்கு அதேடாக்ஸியில் கிளம்பி விட்டாள்.

வாயிற்புறமிருந்த ஆபீஸ் அறையில் மங்கையர் இல்லத் தலைவி பிரகதா அம்மாளைக் காணவில்லை. மேஜை மீதிருந்த கடிதங்களை அடுக்கிக் கம்பிவலைக் கூடைக்குள் போட்டுவிட்டு தூசியைத் தட்டிக்கொண்டு நின்ற வெள்ளைப் புடவைக்காரி விருக்கென்று திரும்பினாள் ஒல்லியான யான உயரமானதொரு இளம் பெண்தான் அவள். உள்ளடங்கிய கன்னங்களும் சற்றுமுன் தூக்கி நின்ற பற்களும் வயதைக் கூடுதலாகக் காட்டின.

போலி முத்துக் காதணி, கண்ணாடி வளையல்கள், கருகமணி மாலை-இந்த அலங்காரத்தில் நீலவண்ண மலர் போல் பளிச்சென்று உள்ளே வந்து மங்களாவை லேசான பொறாமையுடன் மேலும் கீழும் பார்த்தாள்.

'வசதியான வீட்டுப் பெண் போல பார்க்க ஜம்முனு இருக்கா. இங்கே எங்கே வந்தா?' காலோடு தலைவரை ஆராய்ந்தாள் எரிச்சலுடன்.

"கதவைத் தட்டிவிட்டு வரலாமான்னு கேட்டு உத்திரவு வாங்கிட்டுத்தானே உள்ளே வரணும்? படிச்ச பெண்ணா இருக்கே? மரியாதை தெரியலையே?"— வெடுக்கென்று கேட்டாள்.

முகம் சிவந்து உடலைக் குறுக்கிக்கொண்டு நின்ற மங்களாவை குரூரத் திருப்தியுடன் மறுபடியும் ஊன்றி வெறித்தாள். "நீதான் ஹாஸ்டலில் 'சேர இன்னிக்கு வரப் போவதாக அத்தை சொன்ன மிஸ் மங்களாவோ? இதுதானா உன் சாமான்? ஒரே ஒரு சின்ன பெட்டியோட வந்திருக்கே?"

"அவ்வளவுதான் இருக்கு. கொண்டு வந்தேன்". கோபத்தை அடக்கிக் கொண்டு பதிலளித்தாள் மங்களா.



"இதுக்காகத்தான் நாங்க முன்னெச்சரிக்கையாக இரண்டு மாத முன் பணம் வாங்குகிறோம். ஒரு பத்து நாள் இருந்துட்டு வெறும் பெட்டியை வச்சுட்டு சும்மா கம்பி நீட்டிட்டா யார் நஷ்டப்படறது?"—சொல்லிவிட்டு அவளை எரிச்சலுடன் பார்த்தாள் வெள்ளைப் புடவைக்காரி.

மங்களா பதில் பேசவில்லை.

"சரி, என் பின்னாலே வா. இன்னிக்கு இந்த ஹாஸ்டலின் தலைவி பிரகதாம்பா அம்மாவுக்கு ஓய்வுநாள். அவுங்க என் அத்தை. நான்தான் இந்த ஹாஸ்டல் உதவி வார்டன். மேற்பார்வையாளர், அந்தரங்க காரியதரிசி எல்லாம். பெயர் அனுபமா."—தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு நடந்தாள். பிளைவுட் தடுப்புகளால் இரண்டாகப் பிரிக்கப்பட்ட ஒரு அறையின் ஒரு பகுதிக்குள் வந்ததும் அவள் திரும்பினாள்.

"உனக்கு தனியா அறை வேணும்னு அத்தைகிட்ட கேட்டு கொண்டியாம். அதனாலே நீ மத்தவங்களை விட வாடகை அதிகம் கட்ட வேண்டியிருக்கும். அடுத்த பகுதியில் மூணுபேர் ஒரு அறையில் தங்கியிருக்காங்க. அவுங்களுக்கு அத்தனை வாடகை இல்லை. இந்த அறையிலிருக்கும் சாமான்களுக்கு ஒரு இன்வெண்டரி எடுத்திருக்கிறேன் அதில் நீ கையெழுத்துப் போடணும். ஏதாச்சும் காணாமல் போனால் நீதான் ஈடு செய்யணும். நல்லா பாத்துக்கோ"—சொல்லிக் கொண்டு கையோடு கொண்டு வந்த ஒரு காகிதத்தை அவள் முன் நீட்டினாள் அனுபமா.

மங்களா அறையைச் சுற்றி நோட்டம் விட்டாள். பாதரசம் பாதி கலைந்துபோன கண்ணாடி பதித்த ஒரு சிறு பீரோ, ஒரு மரக்கட்டில். தேங்காய் நார் மெத்தை, தலைகாணி, கால்கள் ஆடிய சிறு மேஜை, ஒரு நாற்காலி, அழுது வடிந்த மின் விளக்கு. தண்ணீர் நிறைந்த மண்கூஜா, ஒரு கண்ணாடி டம்ளர். புன்னகைத்தபடி கையெழுத்திட்ட காகிதத்தை அனுபமாவிடம் கொடுத்தாள்.

'தனி அறை என்றதும் கொஞ்சம் பெருசா இருக்கும்னு நினைச்சேன். ரொம்ப சின்னதா இருக்கே?'—மங்களா தனக்குள் பேசிக்கொண்டதைக் கேட்டதும் வெடித்தாள் அனுபமா.

"நீ கொடுக்கிற வாடகைக்கு ஃபைஸ்டார் ஓட்டல் அறை கிடைக்கும்னு நினைப்பா? அத்தை யாருக்கும் தனி அறை சலுகை தரதில்லை. என்னவோ உன் மேலே பரிதாபப் பட்டுட்டு கொடுத்திருக்காங்க. அதை வச்சுக் காப்பாதிக்க தெரிஞ்சுக்கோ. இப்பவே எல்லாத்தையும் சொல்லிட்டுப் போறேன். எனக்கு வேலை ரொம்ப கிடக்கு."—படபட வென்று பேசினாள்.

மங்களாவுக்கு வியப்பு! அர்த்தமில்லாமல் இந்த அனுபமா வுக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது?

"இந்த ஹாஸ்டலுக்கு ரெண்டு குளியலறை; ரெண்டு கழிவு அறைதான் இருக்கு. அதனாலே காலை அஞ்சு மணிக்கே எழுந்துட்டாதான் சரியா இருக்கும். ஏழு மணிக்கே சாப்பாட்டறைக்கு காபி பலகாரம் சாப்பிட வந்துடணும். அப்படியே பகல் உணவு பொட்டலத்தைக் கேட்டு வாங்கிட் டுப் போகணும். மாலை ஆறுமணிக்கு மேல் வந்தால் டீ கிடையாது. இரவு ஏழு மணிக்கு மேலே சாப்பாடு குளோஸ். ராத்திரி எட்டரை மணிக்கு மேலே கேட்டைத் திறந்து வச்சிருக்க முடியாது. மூடிவிடுவோம். ஹாஸ்டல் விதிகள் அடங்கின ஒரு காகிதத்தை அத்தை கொடுத்திருப்பாங்களே? எதுக்கும் நானும் சொல்லிட்டேன்."—கூறிவிட்டு வேகமாகப் போய் விட்டாள்.

எப்படியோ ஒரு வார கால வாழ்க்கையை ஹாஸ்டலில் ஓட்டி விட்டாள்.

அன்று மாலை அவள் உணவு நேரத்தின்போது ஆபீஸ் அறையிலேயே வழக்கம்போல் உட்கார்ந்திருந்தாள். ஹாஸ்டலில் தந்த உணவுப் பொட்டலத்தைப் பிரித்தாள்.



காலிபால் பையைக் கழுவி அதற்குள் தயிர் சாதத்தை திணித்து பத்திரிகைத்தாளில் சுற்றிக் கொடுத்திருந்தாள் ஹாஸ்டல் சமையல்காரி.

பொட்டலத்தைப் பிரிக்குமுன்பே புளிப்பு நாற்றம் முகத்திலடித்தது. வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது வழக்கம்போல் அதைத் திரும்பக் காகிதத்தில் சுற்றி குப்பைக் கூடைக்குள் போட்டாள். வராந்தாவில் ஓடிக் கொண்டிருந்த ஆபீஸ் பையனைக் கூப்பிட்டு காப்பியும், தோசையும் வாங்கி வரச் சொல்லி காசு கொடுத்தனுப் பினாள்.

ஒரு சில நாட்களிலேயே அவள் உணர்ந்து கொண்டு விட்டாள் அந்த ஹாஸ்டல் வாழ்க்கை அவளுக்குப் பிடிக்க வேயில்லை. களையில்லாத அந்தக் கட்டடத்தைப் பார்க்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை.

காற்றோட்டமில்லாத அந்தச்சிறு அறையில் வசிக்கப் பிடிக்கவில்லை. இரவு முழுவதும் தூங்க முடியாது அப்பிய கொசு உபத்திரவத்தைத் தாங்க முடியவில்லை.

படுக்கையா அது? முள்ளாக உடம்பைக் குத்தி வதைத்தது. சாப்பாடு? ஊஹூம்...வாயில் வைக்க விஷ மாக இருந்தது. எல்லாவற்றையும் விட அதில் வசித்த பெண்களுடன் தன்னால் இணைந்து வாழ முடியாது என்பதை விரைவில் புரிந்து கொண்டு விட்டாள்.

அவர்களது பேச்சு, மட்டமான நகைச்சுவை பொழுது போக்குகள் ஒன்றையும் அவளால் ரசிக்க முடியவில்லை தண்ணீர் மேல் தெளித்த எண்ணையாக அவர்களுடன் ஒட்டி உறவாட முடியாது தத்தளித்துப் போனாள்.

கடைசியாக அந்த அனுபமாவை அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

ஆரம்பத்திலேயே காரணமின்றி எரிந்து விழுந்தாள். எது கேட்டாலும் எப்பொழுதும் எரிச்சலுடன் கடுத்த முகத்துடன் பதிலளித்தாள். ஏன் சிலருக்குச் சிலரைக் கண்டால் காரணமில்லாத ஒரு வெறுப்பு ஏன்? அனுபமா காரணம் ஏதுமின்றி மங்களாவை வெறித்தாள் 'காசைக் கொடுத்து விட்டு தங்கியிருக்கும்போது சுள்ளென்று விழுகிறாளே. இவளும் ஒரு மனுஷியா?' என்ற வெறுப்பு மங்களாவுக்கு அவள் மேல். "பொறுத்துக்கொள். எல்லா ஹாஸ்டல்களும் இப்படி மட்டமாக பயங்கரமாக இருக்காது..." என்று ஸ்தா ஆறுதல் கூறியிருந்தாள். அந்த நம்பிக்கையில் பற்களைக் கடித்துக்கொண்டு பொறுமையாகத்தான் இருந்தாள்.

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் அவள் வெளியே கண்ணாடிக் கதவின் பக்கம் நிழலாடிய உருவத்தைக் கண்டு அதிர்ந்து போய்விட்டாள்.

கதவைத் திறந்து கொண்டு அவள் அண்ணா உள்ளே வந்தார். கோபத்திலே முகம் சிவந்துவிட்டிருந்தது. கண்களில் கடுமை தெரிந்தன.

"வாங்க அண்ணா உட்காருங்க."—நாற்காலியை இழுத்துப் போட்டு உபசரித்தாள்.

"உன் உபசாரம் தேவையில்லை. இரண்டு வார்த்தை உன்னை நேரே பார்த்துக் கேட்டுப் போக வந்தேன். அப்பத்தான் மனசு ஆறும்போல இருக்கு. எங்களை இப்படி அவமானப்படுத்தணும்னு எத்தனை நாளா திட்டம் போட்டிருந்தே? எதிர்வீட்டு யோகம்பாகிட்டே சாவியைக் கொடுத்துட்டு கிளம்பிட்டியே? என்ன நெஞ்சழுத்தம் உனக்கு!"

அண்ணாவுக்கடங்கி மரியாதைக்குக் கட்டுப்பட்டு எதிர் பேச்சு பேசாது இத்தனை காலம் அவள் கோழையாக இருந்தது போதாதா? இன்னும் என்ன பயம் வேண்டிக் கிடக்கிறது? உணர்வுகள் குமுறின.



"நீங்களும் மன்னியும்தான் இந்த நிலையை உருவாக்கினவா. அப்படி இருக்கச்சே, என் மேலே ஏன் குற்றம் படிக்கிறேள்?"—மெல்லக் கேட்டாள்.

"வீட்டை விட்டு ஒரு பெண் வெளியேவந்து வாழ்ந்து காட்டறேன்னு வீம்பு பிடிக்கிறது ரொம்ப அழகா இருக்குன்னு நினைக்கிறியா?"

"வீம்பு பிடிக்கலை...என் நிலைமையை நான் புரிஞ்சுண்டு விலகி வந்துட்டேன். கால முச்சூடும் உங்களுக்கு அடிமையா நான் வாழணும்னு நீங்க எதிர்பார்க்கிறேளே. அது சரியா அண்ணா?"

"இத்தனை வயசுக்கு மேலே நீ வாழ்க்கையிலே என்ன எதிர்பார்க்கிறே?"

"புரியறது அண்ணா, மறுபடியும் அதைச் சொல்லிக் காட்டி என் மனசை புண்படுத்த வேண்டாம். இத்தனை வயசுக்கு மேலே-என் வாழ்க்கையிலே நடந்த துன்ப நிகழ்ச்சிகளுக்குப்பிறகு எவன் வந்து உன்னை கல்யாணம் பண்ணிக்கப் போறான், அப்படின்னு சொல்ல வந்தேள். எனக்குன்னு ஒரு குடும்ப வாழ்க்கை அமையாட்டாப் போகட்டும். ஆனால் அதுக்காக அடிமையாக உங்ககிட்டே காலம் முழுவதும் என்னால தள்ள முடியாது. என் உழைப்பை வச்சிண்டு கௌரவமாக சுதந்திரமாக வாழ விரும்புகிறேன். இதிலே தப்பென்ன?"

"இன்னொரு தடவை சொல்லு கேட்கட்டும்."—கோபத்துடன் அண்ணா கையை ஓங்கிக் கொண்டு நெருங்கியபோது, அவள் அதிர்ந்து போனாள். சட்டென்று பின்னால் நகர்ந்து கொண்டாள்.

"அண்ணா! இது என் ஆபீஸ் என்ன வெட்கக்கேடு? கையைக் கீழே போடுங்க. யாராவது பார்த்தால் சிரிப்பா. இத்தனை வயசான பொண்ணை தொட்டு அடிக்க... வராரே ஒரு அண்ணான்னு உங்களைத்தான் கேவலமா

பேசவா. அண்ணன் தங்கை என்கிற உறவைத் தவிர உங்களுக்கு என்மேலே உரிமை எதுவும் கிடையாது...புரிஞ்சுக்கோங்க."

முகம் இறுகி கோபத்திலே கொதித்துப்போன சீதாராமன் அவளைக் கொன்றுவிடுவது போல் பார்த்தார்.

"உறவு மட்டும் இனி என்னத்துக்கு? இன்னியோட அதுக்கும் முழுக்குப் போட்டுடு...உன்னாலே நான் என் சம்பந்தி முன்னாலே படப் போற அவமானத்தை நினைச்சா நாக்கை பிடுங்கிக்கணும் போல் இருக்கு. என் குடியைக் கெடுக்க வந்த பாவி நீ..." கர்ஜித்துவிட்டு வேகமாக வெளியேறினார்.

தோசையையும் காபியையும் கொண்டுவந்து மேஜை மீது வைத்த ஆபீஸ் பையன் கேட்டு விட்டான்.

"அந்தய்யா அப்படிக் கோபமா போறாரே. யாரு அவரு?"

"எனக்கென்ன தெரியும். அவர் யாரோ!"—துயரத்தில் குமுறிய நெஞ்சினின்று எழுந்த வார்த்தைகள் மெல்லியதாக ஒலித்தன.

பையன் வெளியேறியதும், தோசைப் பொட்டலத்தைக் கூடைக்குள் விட்டெறிந்தாள். கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்துவிட்டாள்.

"உறவு மட்டும் இனி என்னத்துக்கு? அதுக்கும் முழுக்கு போட்டுவிடு." அண்ணாவின் கடுமையான சொற்கள் மீண்டும் மீண்டும் காதுகளைக் கிழித்தன.

# 18

சில சமயங்களில் கோபமும்— வேதனையும் தரும் சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்வதுண்டு.

அப்படிப்பட்டதொரு அனுபவம் அன்று மங்களாவுக்கு. அண்ணா வந்து போய் வெகு நேரமாகியும் அவளது மன உளைச்சல் அடங்கவேயில்லை. ஆத்திரமும் அழுகையும் உருண்டையாகி எழுந்து அடிக்கடி நெஞ்சை அடைத்தன.

ஒருவாறு உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு தன் வேலைக்குள் மூழ்கிப் போனாள்.

ஒரு ஃபைலை முடித்து மூடிவிட்டுத் திரும்பிய போது மேஜையருகே நிழலாடுவதை உணர்ந்தாள். ஆபீஸ் பையன் எதிரே நின்று கொண்டிருந்தான். "எல். ஏ. எண் பத்து—பதினைந்து இரண்டு ஃபைல்களையும் எடுத்துட்டு உதவி மானேஜர் தமது அறைக்கு வரச் சொன்னார்." விஷயத்தை சொல்லிவிட்டுப் பையன் மறைந்து விட்டான்.

அன்று பிற்பகல் காசிநாத் நகரத்திலிருந்த மொத்த வியாபாரக்கிடங்கை பார்வையிட்டு விட்டு சற்று தாமதமாகத்தான் அந்த அலுவலகத்திற்கு வருவார் என்ற சங்கதி எல்லோருக்குமே தெரிந்திருந்தது. கட்டுப்பாடு சற்று தளர்ந்து அலுவலகத்திலே பேச்சு சலசலத்தது. டைப் இயந்திரங்கள் அடிக்கடி மௌனமாகின. எந்த நிமிஷமும் காசிநாத் அழைக்கக்கூடும் என்ற திகில் இருந்தும், கிடைத்த நேரத்தை வீணடிப்பதில் ஊறிவிட்டிருந்த ஷீலா, இருக்கையை விட்டுப் பலமுறை எழுந்து உள்ளே வந்து விட்டாள். பதஞ்சலியிடம் அரைக்குரலில் பேசிக் கொண்டிருந்தாள். இத்தனை நாளாக அடக்கி வைத்துக் கொண்டிருந்த குரலை பதஞ்சலியும் அவிழ்த்து விட்டிருந்தார்.

ஓரக்கண்ணால் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த மங்களாவுக்கு மட்டற்ற எரிச்சல்.

மானேஜர் காசிநாதன் முன் ஒரு வேஷம்—அவர் பின்னால் இப்படி ஒரு அமனி.

'கட்டுப்பாட்டில் தங்களை அடக்கிக் கொண்டு செயல் படத் தெரியாத இவர்கள் எல்லாம் ஏன் வேலைக்கு வருகிறார்கள்? இவர்கள் மனசாட்சி... இந்தச் சமயங்களில் தூங்குகிறது போலும்! சே! என்ன மனிதர்கள்...' எண்ணிக் குமைந்து கொண்டிருந்தவள் திகைத்துப் போனாள் மானேஜர் வந்து பதவி ஏற்ற பின் மங்களாவை தன் அறைக்கு அழைப்பதை நந்தகோபால் நிறுத்திக் கொண்டிருந்தான் பூனைகள் இல்லாதபோது எலிகள் கொட்டமடிக்கும் என்பார்களே, அதைப் போல இவன் எதுக்காகக் கூப்பிடுகிறான்?

பொங்கி வந்த கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவன் கேட்ட ஃபைல்களை அலமாரியில் தேடி எடுத்துக் கை மடக்கில் சுமந்து கொண்டு அவன் அறைக்குள் புகுந்தாள்.

புகைத்துக் கொண்டிருந்த சிகரெட் துண்டை ஆஷ்ட்ரேயில் போட்டு விரல்களால் நசுக்கிவிட்டு தலையை நிமிர்த்திய நந்தகோபால் மென்மையாக முறுவலித்தான்

"மிஸ் மங்களா! இந்தப் ஃபைல்களை நான் உடனடியாகப் பாச்க்க விரும்பவில்லை, ஒன்று பேச வேண்டும். இப்படி உட்காருங்கள்." நாற்காலியைச் சுட்டிக் காட்டினான்.

நெஞ்சிலே ஏற்பட்ட பதட்டத்தில் அவளுக்கு மூச்சு முட்டியது. உதட்டைக் கடித்துக் கொண்டு ஃபைல்களை மேஜை மீது வைத்தாள்.

"சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள் சார். நின்று கொண்டே கேட்கிறேன். நம்ப ஆபீஸ் மானேஜர் இந்த மாதிரியான சலுகைகளை எங்களுக்குத் தருவதில்லை. நானும் ஏற்க விரும்புவதில்லை."— மிடுக்காக அவனைப் பார்த்தாள்.



"பேஷ்! புது மானேஜர் புகழ் பாட இங்கே நிறைய ஆட்கள் இருக்கிறாப் போல இருக்கு... நான் சொல்ல வந்த விஷயத்தைக் கேட்ட பிறகு அவரைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் ரொம்ப மாறிப் போகும்." கலகலவென்று சிரித்தான்.

"மன்னிக்கணும். எனக்கு அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமேயில்லை. நான் போகலாமா ஸார்?"—அழுத்தலாகக் கேட்டாள்.

மீண்டும் நந்தகோபால் மெல்லச் சிரித்தான். நெற்றி மீது புரண்ட முடியை இடது கையால் நாசூக்காக ஒதுக்கிக் கொண்டு உல்லாசமாக அவளைப் பார்த்தான்.

'ஊகும்! இம்மி கூட அசைந்து கொடுக்காத இந்தப் பெண் என்ன, உணர்வுகள் அற்ற ஒரு ஜடமாக இருக்கிறாள்?'

"உங்களைப் பற்றிய விஷயம் கூட நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

'இவன் என்ன சுற்றி வளைக்கிறான்?'—மங்களாவுக்குள்ளே ஒரு கலக்கம். தயக்கத்துடன் நின்றாள்.

"இந்த அலுவலகத்தில் உள்ள ஊழியர்கள் அனைவரைப் பற்றியும் எனது அந்தரங்க அபிப்பிராயத்தை எழுதித் தரும் படி கேட்டிருக்கிறார். வருகிற திங்கள் காலை எனது தயாரிப்பை அவர் பார்வையில் நான் வைக்க வேண்டும்."

மங்களாவின் மூளையில் அவன் சொல்லப் போவது அனைத்தும் முன் எச்சரிக்கையாகப் பளிச்சிட்டு விட்டது.

'திறமையற்றவள்—வேலையில் கவனம் இல்லை. அதிகப் பிசகுகள் செய்கிறாள் என்று மட்டப்படுத்தி எழுதி வைப்பேன். உன் வேலைக்கு சீட்டு கிழிக்கப்பட்டு விடும். அதனால் நீ மனதை மாற்றிக் கொண்டு என் வழிக்கு

வருவதாக இருந்தால் உன்னைப் பற்றி மதிப்பு ஏற்படும் வகையில் மானேஜருக்கு சிபாரிசு செய்வேன்...என்று தானே சொல்லப்போகிறான்.'—சீறிக்கொண்டு எழுந்தது அவள் கோபம்.

"இப்போ நீங்கள் எங்கேயோ ஒரு ஹாஸ்டலில் தங்கி இருப்பதாகக் கேள்விப் பட்டேன்!"

முகம் சிவந்து போனாள் மங்களா.

"வீட்டை விட்டு வெளியேறி வசிக்கிற பெண் நீ! ரொம்ப மானம் மரியாதைக்கு அஞ்சுகிறவள் போல நடிக்கிறாயே...?' சொல்லாமல் சொன்ன அவனது கண்களை ஆத்திரமாகப் பார்த்தாள்.

"அது என் சொந்த விஷயம். அதை நான் யாரிடமும் பேச விரும்பவில்லை. நீங்க தயாரிக்கப் போகிற இந்த அந்தரங்க அபிப்ராயப் பட்டியலைப் பற்றியும் எனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. என்கிட்டே ஏன் சொல்லணும்? உங்க மனசாட்சி சொல்கிறபடி எழுதிவையுங்கள். மானேஜர் செய்ய விரும்புகிறதைச் செய்து கொள்ளட்டும்... என்னைப் பொறுத்தவரை என் மதிப்புக்கு அப்பாற்பட்டவர்கள் கொடுக்கிற சான்றிதழ்களைக் குப்பைக்குச் சமமாக நினைக்கிறவள். இந்த வேலையை நம்பி நான் வாழப் போவதில்லை. என்னை நம்பி இந்த அலுவலகம் செயல்படவில்லை. அதனால் பாவம், நீங்கள் ஏன் ஸார் வீணாக இடையில் புகுந்து உதவணும்? தாங்க்யூ..." படபடவென்று கூறிவிட்டு வேகமாக வெளியே வந்தாள்.

ஆத்திரத்தை அடக்க முகத்தை கைக்குட்டையால் சிவக்க அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

மறுபடியும் நந்தகோபால் தொந்திரவு கொடுக்கத் துவங்கிவிட்டானா? இருக்கட்டும். மனதிற்குள்ளே கறுவிக் கொண்டாள்.

வேலை முடிந்ததும் நேரே ஹாஸ்டலுக்குப் போக மனமில்லை. லதாவைக் கண்டு நடந்ததையெல்லாம்



சொல்லி ஆறுதல் பெறாவிடில் நெஞ்சு வெடித்துவிடும் போன்று உணர்வுகள் பாறையாக இறுகின. தோழியை வீட்டிலே சந்தித்துப் பேச எண்ணியவளாகப் புறப்பட்டாள்.

நடையில் செருப்பு சப்தம் கேட்டதும். கூடத்திலிருந்து வந்து எட்டிப் பார்த்தாள் காமு அம்மாள்.

"லதான்னு நினைச்சேன். வாம்மா மங்களா, உன் சிநேகிதி வரும் நேரம்தான்..." அன்போடு வரவேற்றாள்.

இப்படி மன்னி அனுசுயாவாவது, அண்ணாவாவது ஒரே ஒருநாள் உண்மையான அன்போடு வேலையிலிருந்து சோர்ந்து களைத்து வீடு வரும் அவளை வரவேற்றிருக்கிறார்களா?

இந்த லட்சணத்தில் அவர்களுடன் வசிக்காது வெளியேறி அவமானப்படுத்திவிட்டதாக அண்ணா உருட்டி மிரட்டிப் பேசியதில் என்ன நியாயம் இருக்கிறது?

பலவும் எண்ணியபடி முற்றத்தில் இறங்கி கை கால்களைக் கழுவிக்கொண்டு கூடத்துத் தரையில் வந்து உட்கார்ந்து கொண்டாள் மங்களா.

"இதோ நானும் வந்துட்டேன். சேர்த்தாப்பல இரண்டு பேருக்கும் காப்பியைக் கலந்து கொடுங்கோ."—சொல்லிக் கொண்டே லதா முற்றத்தில் இறங்கினாள்.

காப்பியை பருகிவிட்டு இருவரும் கடற்கரைக்குக் கிளம்பினார்கள்.

ஹாஸ்டலுக்கு திரும்பறத்துக்கு முன்னாடி ஒருவாய் இங்கேயே எங்களோடு சாப்பிட்டுப் போம்மா. ஹாஸ்டல் சாப்பாடு உனக்குப் பிடிக்கலைன்னு லதா சொல்லி வருத்தப்பட்டாள். உன்னையும் என் பெண் போலத்தான் நினைச்சுண்டிருக்கேன். பிடிச்சபடி சாப்பாட்டுக்குத் தானே இந்த உலகமே உழைக்கிறது? அந்தச் சாப்பாட்டுக்கே மோசம் வந்தா. தெம்பா எப்படியம்மா வேலை செய்ய முடியும்? நீங்க ரெண்டு பேரும் காலார நடந்துட்டு வாங்க...நான் அதுக்குள்ளே குக்கரை வச்சு நொடியிலே சமைச்சுடறேன்...

சீக்கிரம் சாப்பிட வந்திடுங்கோ.' காமு அம்மாள் அன்புடன் எச்சரித்தாள்.

கடல் காற்று, லதாவின் ஆறுதல் மொழிகள் எல்லாம் உடலுக்கும், மனத்திற்கும் இதமாக இருந்தன. மங்களாவிற்கு நேரம் போனதே தெரியவில்லை. லதாவுடன் அவர்கள் வீட்டுக்குத் திரும்பியபோதே இருட்டத் தொடங்கி விட்டிருந்தது.

''இந்தா, ஆளுக்குத் துளி...இந்தப் பூவை வச்சுக்கோங்கோ. மங்களா வந்திருக்காளேன்னு வாசலில் வந்த பூக்காரிகிட்டே கூடவே ஒரு முழம் மல்லிகைப் பூ வாங்கினேன்...' மொட்டவிழ்த்துக் கொண்டு மனத்தைப் பரப்பத் துவங்கியிருந்த மல்லிகைச் சரத்தை மகள் கையில் கொடுத்தாள் காமு அம்மாள்.

''உங்களுக்கு ஏன் வீண் செலவு?'' கேட்டுக்கொண்டே மங்களா ஆவலுடன் தோழி துண்டித்துக் கொடுத்த மலர்ச் சரத்தை வாங்கித் தலையில் சூட்டிக் கொண்டாள் அவளுக்கு மல்லிகை என்றால் மிகவும் பிடிக்கும்.

''அப்பவே சொன்னேனே, நீ எனக்கு ஒரு பெண் மாதிரின்னுட்டு. லதாவுக்கு நான் தினமும் கொஞ்சம் பூ வாங்கி வைக்கிறது வழக்கம். நகையும் நட்டும் பண்ணிப் போட இந்த ஏழைத்தாயால் முடியாட்டாலும் ஒரு முழம் பூவாவது வாங்கி வைக்கக்கூடாதான்னுதான் மனசு தவிக்கும் வாங்கி வைப்பேன். ஏம்மா வீண் செலவுன்னுட்டு தான் லதாவும் சொல்லுவாள். நீயும் அவளாட்டமே தான் சொல்றே?' சிரித்துக்கொண்டே உணவைப் பரிமாற ஆயத்தமானாள். சுவையற்ற ஹாஸ்டல் உணவை உண்டு அலுத்துவிட்டிருந்த மங்களாவுக்கு காமு அம்மாவின் தயாரிப்பு அமிருதமாகத் தானிருந்தது.



''போகும்போது மறக்காமல் இந்தப் பாட்டிலை எடுத்துண்டு போ. இதிலே கொஞ்சம் நாரத்தங்காய் ஊறுகாய் போட்டு வச்சிருக்கேன். அடுத்த தடவை வரும் போது பருப்புப் பொடி கொஞ்சம் அரைச்சுக் கொடுக்கிறேன்.'' உபசரித்தாள் லதாவின் தாய்.

மங்களா மனம் நெகிழ்ந்து போனாள். ஹாஸ்டலுக்குப் போகிறேன் என்றபோது முகத்தை திருப்பிக் கொண்டு போனாளே மன்னி அனுசூயா? ஆனால் பெண் சைலா தனிக்குடித்தனம் போனபோது, வத்தல், வடகம், குழம்புப் பொடி, ஊறுகாய் என்று மூட்டைக் கட்டிக் கொடுக்கத் தெரிந்ததே? எத்தனை ஓரவஞ்சனை? சே! அப்படிப்பட்ட சுயநலக்காரர்களுடன் தொடர்ந்து வாழாது துண்டித்துக் கொண்டதில் தவறு என்ன?

''வரேன் மாமி!'' நன்றி தெரிவித்துவிட்டு கிளம்பினாள். தோழி லதா கூடவே பஸ் நிலையத்திற்கு வந்து காத்திருந்தாள்.

அன்று சோதனையாக அவள் போக வேண்டிய பஸ் மிகவும் தாமதமாகத்தான் வந்தது. ஒரே நெரிசல். எப்படியோ ஏறிக்கொண்டு கூட்டத்தின் இடைவழியே கொஞ்சம் தெரிந்த தோழிக்குக் கையாட்டி விடைபெற்றுக் கொண்டாள்.

சிறிது தூரம்தான் பஸ் ஓடியது. திடீரென்று டிரைவர் வண்டியை நிறுத்திவிட்டார். டிரைவரும், கண்டக்டரும் பயணிகள் அடங்கிய பஸ்ஸை இருமுறை வலம் வந்தனர். குனிந்து பார்த்தனர். தமக்குள்ளே பேசிகொண்டு தலையை அசைத்தனர். இதற்கு சில நிமிஷங்கள் விரயமாயின.

''பஸ் பழுதடைந்துவிட்டது. பயணிகள் இறங்கி நடைபாதையில் நிற்கவேண்டும், அடுத்து வரும் பஸ்களில் வரிசையாக அனுமதிக்கப்படுவார்கள்.'' கண்டக்டர் அறிக்கை விடுத்தார்.

சாலை விளக்கொளியில் கைகடிகாரத்தைப் பார்த்தாள் மங்களா. திடுக்கிட்டுப் போனாள். அப்போது இரவு மணி எட்டு. இன்னும் அரை மணிக்குள் அவள் ஹாஸ்டலில் இருந்தாக வேண்டுமே? திகிலில் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. சாலையில் அடுத்தடுத்து பல பஸ்கள் ஓடின. அவர்கள் போகும் பகுதிக்குரிய பஸ் ஏனோ விரைவில் வந்து தொலைக்கவில்லை. ஒவ்வொரு வினாடியும் யுகமாக பிரமிப்பைக் கொடுத்தது. மனத்திற்குள் கவலையும் வேதனையும் சுமையாயின. அப்பாடா! முடிவில் அவர்கள் போகும் பஸ் வந்தது. அதில் கொஞ்சம் பேருக்குத்தான் இடமிருந்தது. கண்டக்டர் மிகப்பெரிய மனது பண்ணி தொலை தூரம் போகிறவர்களை அதுவும் பெண்களை முதலில் எற்றி விட்டார். மனத்திற்குள்ளே அவரை வாழ்த்தினாள் மங்களா.

அவள் இறங்க வேண்டிய நிலையத்தை பஸ் அடைவதற்குள் மணி ஒன்பதாகிவிட்டது. மூச்சடைக்க வேகமாக ஓட்டமும் நடையுமாகத்தான் ஹாஸ்டலுக்கு விரைந்தாள். பயன்? மங்கையர் இல்லத்து முன் பக்கத்து இரும்புக் கேட் அடைத்து உள்ளே பூட்டப்பட்டிருந்தது. வராந்தாவில் எரியும் விளக்கும் அணைக்கப்பட்டு தோட்டம் இருளில் மூழ்கிக் கிடந்தது.

படபடவென்று யாரோ கேட்டை உலுக்கும் சப்தம் கேட்டு எரிச்சலுடன் எழுந்து வந்தாள் அனுபமா. வராந்தாவின் விளக்கை எரியவிட்டு கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். கேட்டு வரை பரவி நின்ற விளக்கொளியில் வந்திருப்பவளைப் பார்த்தாள். சாப்பாட்டறையிலே மங்களா இல்லாததை அவள் முதலிலேயே கவனித்துவிட்டிருந்தாள். இருக்கட்டும் என்றுதான் எதிர்பார்ப்புடன் காத்திருந்தாள். அவளுக்கு வெற்றி கிடைத்து விட்டது போன்ற பெருமை தொனித்த குரலில் "யாரது?" என்று ஓங்கி அதட்டினாள்.



"நான்தான் மங்களா..." ஈனஸ்வரத்திலே குரல் கொடுத்தாள் மங்களா.

"சேரும்போதே நான் சொன்னேன். ஹாஸ்டல் விதிகள் அடங்கிய தாளையும் கொடுத்தேன். அப்படியிருந்தும் நேரம் தாண்டி வந்தால் என்ன அர்த்தம்?' அதட்டிக் கொண்டே மெல்ல தோட்டத்தில் இறங்கி... கேட்டருகே வந்தாள் அனுபமா.

மங்களாவிற்குக் கோபமாகத்தான் இருந்தது. 'போயும் போயும் இவளைக் கெஞ்சும்படி சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதே...கடவுளே!' தனக்குள்ளே வேதனைப்பட்டுக் கொண்டாள். 'வழியில் பஸ் ரிப்பேராகி விட்டது'' என்றாள்.

''கட்டாயம் எங்கேயோ நல்லா சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறாள். முகம் சொல்றதே. தலையில் மல்லிகைப் பூ! காதலன் வாங்கிக் கொடுத்திருப்பான். குஷியாக ஊர் சுற்றிவிட்டு இப்போ' வந்து கதை அளக்கிறாள்?'—எண்ணியபடி வெறுப்போடு அவளை ஏற இறங்கப் பார்த்தாள் அனுபமா.

"இந்தக் கதையை நம்பச் சொல்றியா?"—குரோதமாகக் கேட்டாள்.

"இது உண்மை. டிக்கெட் நம்பர், நேரம், பழுதடைஞ்ச இடம் எல்லாம் குறிச்சுத் தரேன். நீங்க வேணுமானால் விசாரிச்சு உண்மையா, பொய்யான்னு தெரிஞ்சுக்கலாம்..."

"ஹாஸ்டல் நடத்துகிற தொல்லை போதாதுன்னு துப்பறிய சொல்றியா? ஏன் வீண் பேச்சு? உனக்கு ஒருத்திக்காக நான் ஹாஸ்டல் விதிகளைத் தளர்த்தப் போவதில்லை..."

"அப்படின்னா?"

"எட்டரை மணிக்கு மூடின கேட்டை நாளைக் காலை ஏழு மணிக்குத்தான் திறப்போம்!"

"ராத்திரி இப்போ ஒன்பது மணிக்குமேல் ஆயிட்டுதே நான் வெளியிலே என்ன செய்வேன்? எங்கே போவேன்?"

"இத்தனை நாழி சுத்தின இந்தப் பட்டணத்தில் விட்டுப் போன இடத்தைக் கொஞ்சம் சுத்திப்பார். உன் கிட்டே பேசிண்டு இருக்க எனக்குப் பொழுது இல்லை. நாளைக்கு மத்ததைப் பேசிக்கலாம்"—அனுபமா பிடிவாதமாக கேட்டை திறக்க மறுத்துவிட்டு உள்ளே திரும்பி விட்டாள். சில நொடிகளில் வாயிற் கதவு டமார் என்று அடைபடும் ஓசை கேட்டது. அத்துடன் தொடர்ந்து வராண்டா விளக்கு அணைக்கப்பட்டது. அதே சமயம் சாலை விளக்குகள் எல்லாம் திடீரென்று அணைந்து கொள்ளவே...எங்கும் ஒரே இருள்.

எங்கேயோ பங்களா ஒன்றில் நாய் பலமாக குரைக்கும் சப்தம் கேட்டதும், மங்களாவின் உடல் கிடுகிடுவென அச்சத்திலே ஆடியது.

இந்த இருட்டில் அவள் இப்போது எங்கே போவாள்? ஓவென்று அழவேண்டுமென்ற துக்கம் தொண்டையை அடைக்க, அந்தக் கம்பிக் கேட்டைப் பிடித்துக்கொண்டு அவள் செயலற்று நின்று கொண்டிருந்தாள்.

## 19

நான்கு சுவர்கள் என்ற பாதுகாப்பு இன்றி அந்த வேளையில் தனியே நிற்க நேர்ந்துவிட்ட கொடுமை மங்களாவுக்கு மாபெரும் அதிர்ச்சியாகத்தானிருந்தது. கண்களை கவ்விய அந்த இருள் பயங்கரமாகப் புலப்பட்டது. ஒரு சிறு இலை அலைந்தால் கூட நடுநடுங்கிப் போகுமளவு அச்சம் அவளைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தது.

அடுத்தபடியாக அவள் இப்போது என்ன செய்ய வேண்டும்? மங்கையர் இல்லத்துப் பின்பக்கத்துச் சுற்றுச்



சுவர் இடிந்து விழுந்திருந்ததை அவள் பார்த்திருந்தாள். அதன் வழியே தோட்டத்திற்குள் சென்று ஒரு மரத்தடியில் இரவு முழுவதும் ஒண்டிக் கொண்டால்?

அதை அடைய அவள் அடுத்த தெருவுக்குள் சென்று ஒரு சந்து வழியாகத்தான் பின்பக்கத்திற்கு வரமுடியும்.

தன்கையே புலப்படாத இருளில் அவள் தடுமாறிக் கொண்டு அந்தச் சந்தில் தனியே எப்படி நடக்க முடியும்?

அனுபமா மறுபடியும் கதவைத் திறந்து கொண்டு வந்து அவளைத் தோட்டத்திலிருந்து கூட விரட்டத் தயங்க மாட்டாள் அப்படிப்பட்டதொரு அரக்கி அவள். மறுபடியும் அவளிடம் அவமானப்படுவதில் பயன்?

இப்பொழுது அவள் என்னத்தான் செய்ய வேண்டும்? தனக்குள்ளே பலவும் கேட்டபடி அவள் கேட்டில் கம்பிகளை இறுக்கமாக கை சிவந்து வலிக்கப்பற்றியபடி நின்று கொண்டிருந்தாள்.

அரைமணி நேரத்திற்குப் பின்னர் பளீரென்று தெரு விளக்குகள் எரியத் தொடங்கின. மறு கோடி வரை ஆள் நடமாட்டமே இல்லாது வெறிச்சோடி விட்டிருந்த தெரு, இருளில் இருந்ததைவிட இப்போது இன்னும் அதிக பயத்தை உண்டாக்கியது. சற்றுத்தொலைவில் தெரிந்த இரண்டொரு பங்களாவிலும் கீழ்ப்பகுதிகளில் விளக்குகள் அணைக்கப்பட்டு மேலே தெரிந்த படுக்கை அறைகளில் வெளிச்சம் தெரிந்தது.

பங்களாக்களில் கட்டாயம் வாயிலில் கன்றுக்குட்டி உயரத்திற்கு நாய்கள் காவலுக்காக இருக்குமே?

மேலும் அங்கே யாரைத் தெரியும்? யார் வீட்டு வாசல் கதவைப் போய் இடிக்க முடியும்? ஐய்யய்யோ... வெளியே எத்தனை நேரம் இப்படியே நின்று கொண்டிருப்பது? இனி தொடர்ந்து அங்கே நிற்பதில் பயன்? கடைசி பஸ்ஸும் போய்விட்டால் வேறு என்ன செய்ய முடியும்?

சீக்கிரமாக நிலையத்திற்கு விரைந்து பஸ்ஸைப் பிடித்து லதா வீட்டிற்குப் போவதைத் தவிர வழி ஏதும் இல்லையே?

பஸ் நிலையத்தை நோக்கி நடந்தாள். அவளது காலடி ஓசையே அவளுக்குப் பயத்தை ஊட்டியது. நிலையத்தை நெருங்குவதற்குள் பழி கொட்டிக் கொள்வது போல புளி மூட்டையாகப் பயணிகளை அடைத்துக் கொண்டு வந்த பஸ் சில நிமிஷங்கள் நின்று விட்டு நகர்ந்து விட்டது. மூச்சிறைக்க அவள் ஓடிவந்ததுதான் மிச்சம். பஸ் வேகமாக மறைந்து விட்டது. ஒரு சமயம் அதுவேதான் கடைசி பஸ்ஸோ! அப்படியென்றால் அவள் லதா வீட்டிற்கு எப்படிப் போவாள்? டாக்ஸி, ஆட்டோ, ரிக்ஷா இவைகளைத் தேடிக்கொண்டு தொலை தூரம் அவள் தனியே நடக்க வேண்டியிருக்கும். திக்திக்கென்று நெஞ்சு திகிலில் பிளந்து விடும் போல துடிக்க-அச்சத்திலே உடல் பதற—காய்ந்து போன உதடுகளை நாவால் தடவிக்கொண்டு அவள் சுற்றும்முற்றும் பார்த்தாள்.

மற்றொரு அதிர்ச்சி.

எதிர்பக்கத்தில் முற்றும் கட்டப்படாத நிலையிலிருந்த ஒரு கட்டடத்தின் நிழலினின்று வெளிப்பட்ட இரண்டு இளைஞர்கள் வேகமாக நிலையத்தை நோக்கி வருவதைக் கண்டு விட்டாள். அவளது படபடப்பும் வேகமாகியது, அச்சத்திலே தொண்டை காய்ந்து வாயுலர்ந்து போனதை உணர்ந்தாள்.

முழங்காலுக்கு மேல் மடித்துக் கட்டிய வேட்டியும்—பனியனும்—வாயில் புகைத்துக் கொண்டிருந்த பீடியுமாக அவள் பக்கம் விரைந்து வந்து கொண்டிருந்தனர்.

கட்டடத்தில் வேலை செய்து விட்டு அங்கேயே தங்கிக் கொண்டிருக்கும் தொழிலாளிகளா அல்லது இரவில் அந்த வேளையில் வேறு அனுபவங்களைத் தேடிக் கொண்டு திரியும் வேலையற்ற போக்கிரிகளா?



வெளிச்சத்தில் பார்த்தபோது அவர்கள் முகத்தில் பரவிக் கிடந்த முரட்டுத்தனம் அவளுக்கு நடுக்கத்தைக் கொடுத்தது. பஸ் வரும் திக்கையே பார்த்தவண்ணம் நின்ற மங்களா திடுக்கிட்டுப் போனாள்.

"இது நல்ல கிராக்கிதாண்டா." என்றான் உற்சாகமான குரலில் அவர்களில் ஒருவன். மற்றவன் பதிலுக்கு 'உஷ்' என்று பலமாக சீட்டியடித்தான்.

"கடைசி பஸ் போன பிறகு கால்கடுக்க வந்து இங்கே நின்னா என்ன அர்த்தம்?—உரத்த குரலில் முதலில் பேசியவன் சிரித்தான்.

மங்களா வெலவெலத்துப் போனாள்.

'அவளைப்பற்றி அவர்கள் அதிகமாக விமர்சிக்கிறார்களோ?' பனைமரத்தடியில் பால் குடிப்பவனையும், பத்து மணிக்குமேல் நிற்கும் இளம் பெண்ணையும் வேறுவிதமாக கணிப்பது சகஜம்தான். பாவி. அனுபமா இப்படி ஒரு கொடுமையைச் செய்வாளா...?

பச்சையாகப் பேசிச் சிரிக்கும் அந்த முரடர்கள் அருகே நிற்பதும் ஆபத்து... அவள் சடுதியில் நகர வேண்டும்...எண்ணியபடி விர் என்று வேகமாகத் தெருவில் நடந்தாள்.

அவர்களிருவரும் பின்னால் அவளை வேகமாகத் தொடரத் தொடங்கினர். வேண்டுமென்றே சட்டென்று அவள் எதிர்ப்பட்ட குறுக்குத் தெருவுக்குள்ளே நுழைந்தாள்.

அவர்களும் விடாது தொடர்ந்தனர் பின்னால் கொஞ்ச தூரத்திலேயே விரசமாகப் பேசிச் சிரித்தபடியே வந்து கொண்டிருந்தனர். ஆபத்து மிக அருகில் நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்த பரபரப்பிலே அவள் கால்கள் தடுமாற வேகமாக ஓட்டமும் நடையுமாக விரைந்தாள். சுற்று முற்றும் பார்த்தபடி நடந்தாள். "ஐயோ! நான் என்ன செய்வேன்?" என்று மனம் புலம்பி அழ...அவள்

மேலும் வேகமாக நெஞ்சை மூச்சு அடைக்க நடந்தாள். நல்லவேளை எதிர்ப்பக்கமாக ஒரு சைக்கிள் வண்டி வந்தது.

தொடர்ந்து வந்த இரண்டு முரடர்களும் ஒரு புதுக் கட்டடத்தின் முன் கிடந்த கற்குவியல் அருகே நின்று கொண்டு மறுபடியும் ஆளுக்கொரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டனர்.

அப்பாடா என்று ஒரு சிறு நிம்மதி மூச்சு அவளுக்கு வந்தது.

மறுபடி எதிரே தெரிந்த இன்னொரு குறுக்குத் தெருவுக்குள் வேகமாகப் புகுந்தாள். எதிர்ப்பட்ட எந்த ஒரு வீட்டிற்குள்ளாவது ஓடி அடைக்கலம் தேடிக் கொள்வது என்ற எண்ணம். 'ஆமாம்! திடீர் என்று தேடிக் கொண்டு செல்லும் வீட்டில் அடைக்கலம் கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்? அங்கே வேறு வகை ஆபத்து காத்திருந்தால்?' 'கடவுளே என்னைக் காப்பாற்று.' மனதிற்குள் இஷ்டதெய்வத்தை எண்ணிப் புலம்பியபடி கால்கள் தள்ளாட அவள் கடுகி விரைந்தபோது பளிச்சென்று ஒரு நினைவு மூளையில் பொறி தட்டியது.

இரண்டு தினங்களுக்கு முன்னர் அவள் காசிநாதத்தின் கையெழுத்துக்காக ஒரு ஃபைலை அவன் அறைக்குள் எடுத்துச் சென்றபோது தொலைபேசியில் அவன் பேசிக் கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் கையை அசைத்து இருக்கச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான். அரைகுறையாகத்தான் அவள் கேட்டாள் என்றாலும் அவளால் ஊகிக்க முடிந்தது. அவனது டெலிவிஷன் செட்டில் ஏதோ பழுது—அதைச் சரிசெய்ய பழுது பார்க்கிறவர் வர வேண்டிய முகவரி— நேரம் இரண்டையும் சொல்லிக் கொண்டிருந்தான்.

மறுமுனையில் தெளிவாகக் கேட்கவில்லை என்பதால் அழுத்தி உரத்த குரலில் அவன் தன் முகவரியை இருமுறை சொன்னதைக் கேட்டுக் கொண்டு நின்றாள்.



"நீங்க சொல்றது சாஸ்திரி நகர்...நான் இருப்பது சாஸ்திரி அவென்யூ...ஆமாம். அந்தப் பஸ் நிலையத்துக் கிட்டேதான். இரண்டாவது குறுக்குத் தெருவுக்குள்ளே புகுந்ததும் இடது பக்கம் ஒரு திருப்பம் வரும். பெரிய பலகையில் சாஸ்திரி அவென்யூ என்று எழுதியிருக்கும். மொத்தம் ஆறு வீடுகள்தான். கண்டுபிடிப்பது ரொம்ப சுலபம், திருப்பத்துக்குள்ளே நுழைந்ததும் மூணாவது வீடு வாசலில் என் பெயர் பொறித்த பலகை இருக்கும். நாய் கிடையாது. பயம் வேண்டாம்...கேட்டை திறந்து கொண்டு நேரே தோட்டத்துக்குள்ளே வந்துடுங்கோ. வராந்தா விளக்கை நான் விடிய விடிய எரியவிட்டு வைக்கிற வழக்கம். சாயங்கால வேளைகளில் நான் வெளியே போகிற வழக்கத்தை இன்னும் ஆரம்பிக்கலை. இன்னிக்கே வருகிறீர்களா? ஓ.கே" தொலைபேசியை வைத்துவிட்டு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தான்.

கையெழுத்தை வாங்கிக்கொண்டு மங்களா வெளியே வந்தாள். 'அப்படியென்றால் அவள் வசிக்கும் ஹாஸ்டல் அருகேதான் காசிநாதன் குடியிருக்கிறாரா?'

அந்தப் பக்கம் நடந்து வந்தபோது, த...
குறுக்குத் தெருவுக்குள் அவள் நுழைந்த... ...மூன்... அவனது
போது கவனித்தாள். சாஸ்திரி ...ல... அவன் உதவியை
தொரு பலகை. ஒரு அம்புக் வந்து உட்கார்ந்தபடி விசும்பி
நின்று கொண்டிருந்தது. நாதன் ஒரேயடியாகக் குழம்பிப்
வசிக்கிறார்! மாசே...
யான வீட்டை ...ங்களா...தயவு செய்து என்ன நடந்தது
எடுத்துக் ... விளக்கமாகச் சொல்ல முடியுமா?''—பரிவுடன்
தில் ...படி எதிரே ஒரு ஆசனத்தில் வந்து அமர்ந்து
...கொண்டான்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... தன்னை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள். அண்ணா வீட்டிலிருந்து வெளியேறி...ஹாஸ்டலுக்கு வந்து தங்கியதில் ஆரம்பித்து, அன்று அவளுக்கேற்பட்ட அந்த அனு

காசிநாத் குறிப்பிட்ட அந்த இரண்டாவது குறுக்குத் தெருவுக்குள்தான் அவள் இப்போது விரைந்து கொண்டிருக்கிறாள். இதோ வந்து விட்டதே. அந்தக் கைகாட்டிப் பலகை!

மகிழ்ச்சியும் திகிலும் தாங்க முடியாது நெஞ்சு விம்ம துணிவையெல்லாம் திரட்டிக் கொண்டு நடந்தாள்.

பின் தொடர்ந்த அவர்கள் மிக அருகில் நெருங்கி விட்டனர். கட்டுக்கொள்ள முடியாத பயத்திலே அவள் கீரிச் சென்று அலறிவிட்டாள்.

"ஏன்...என் பின்னாடியே தொடர்ந்து வர்றீங்க? போங்க அப்பாலே!" கோபத்துடன் கூறிவிட்டு அவர்களை வெறுப்புடன் உற்றுப் பார்த்தாள்.

"காரணம் உனக்குத் தெரியவில்லையா?" சிரித்துக் கொண்டு மிக அருகில் நெருங்கிய ஒருவன் அவளது சேலைத் தலைப்பைப் பற்றி இழுக்க கையை நீட்டினான். மங்களாவும் பாய்ச்சலாக மூன்றாவது வீட்டின் கேட்டை தள்ளித் திறந்து கொண்டு தோட்டத்திற்குள் ஓடி அழைப்புமணியை

அடிட்

...டத் தோன்றாது...படபடவென்று கதவைத் தட்

இரண்டு

கையெழுத்துக்காக

" ஆண் குரலைக் கேட்டதுமே'

20

அதி

படுக்கப் போகுமுன் சிறிது முடி

வாசிப்பது வழக்கம். அலுவலக எல்லே

புத்தகத்தைப் பிரித்து முன் மேனை

விட்டு இரவு உடைகள் அணிந்தி விழுந்

ருந்தான். பைஜாமாவும் வனத்தில்

டிரஸ்ஸிங் கவுனைக் கையி நெருங்கினா

இடிபடவே திடுக்கிட்டுப் முக்கம்...அப்படி

மேலே போட்டு இடு

கதவைத் திறந்தான் வைக்கு வைத்த

அதிர்ச்சி.

னமான அவனது

"இந்த வே கையெழுத்தும் போடு

தேடிக்கொண் சிரிப்பு எதுவுமே இல்

திலே மனதி ஒரு சலசலப்பு ஏற்பட்ட

கேட்ட காலை கொண்டிருந்தான்... அ

கின்ற மங்கம் போது அந்தப் பட்டுப்

கேட்லைவத் தவறியதேயில்லை.

எட்டிப் பா என்ன இது'...தன்னைத்தா

ளிருவா அடிந்து கொண்டதுண்டு.

யோசி

விட் இப்போது அவன் முழுவதுமாக அ

டின் முன் அறை சோபாவில்...

பார்க்கும் பெண் ஊழியர்கள் அதிகம் நெருங்கிப் பழக முயன்றால்...அவனால் தாளவே முடியாது... அதை விஷமாக வெறுப்பான்...ஆண்கள் எல்லோருமே வைராக்கியமற்ற விஸ்வாமித்திரர்கள். மேனகைகளின் பகட்டுச் சிரிப்புக்கு மயங்கித் தடுமாறி விழுந்து விடுவார்கள் என்ற கணிப்புடன் அவனது நிறுவனத்தில் உள்ள எந்தப் பெண்ணாவது அவன் அருகில் நெருங்கினால், அவன் துர்வாஸராக மாறிவிடுவது வழக்கம்...அப்படி ஒரு கோபக்காரன் அவன்.

அவன் பார்வைக்கு வைத்த ஃபைலின் பக்கத்தைக் குறிப்பிடும் சன்னமான அவளது விரல்களை மட்டுமே பார்த்தபடி கையெழுத்தும் போடுவான்... அனாவசியமான பேச்சு சிரிப்பு எதுவுமே இல்லாதிருந்தும், மௌனமாய் அந்த ஒரு சலசலப்பு எற்பட்டதைப் பலமுறை அவன் உணர்ந்து கொண்டிருந்தான்... அறையை விட்டு அவள் வெளியேறும் போது அந்தப் பட்டுப் பாதங்கள் மீது அவன் பார்வை நிலவத் தவறியதேயில்லை.

'சே! என்ன இது'...தன்னைத்தானே பலமுறை இதற்காகக் கடிந்து கொண்டதுண்டு.

இப்போது அவள் முழுவதுமாக அவன் முன்... அவனது வீட்டின் முன் அறை சோபாவில்... அவன் உதவியை வேண்டி அந்த வேளையில் வந்து உட்கார்ந்தபடி விசும்பியதைக் கண்டு காசிநாதன் ஒரேயடியாகக் குழம்பிப் போனான்.

"மிஸ்...மங்களா...தயவு செய்து என்ன நடந்தது என்று விளக்கமாகச் சொல்ல முடியுமா?"—பரிவுடன் கேட்டபடி எதிரே ஒரு ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டான்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... தன்னை ஒருவாறு சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள். அண்ணா வீட்டிலிருந்து வெளியேறி...ஹாஸ்டலுக்கு வந்து தங்கியதில் ஆரம்பித்து, அன்று அவளுக்கேற்பட்ட அந்த அனு

வத்தைப் பற்றிச் சொல்லி முடிப்பதற்குள் அவளுக்கு வெட்கமும் துக்கமும் தாங்க முடியவில்லை.

காசிநாதன் சோபத்திலே முகம் இறுகிப் போனான்.

"உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த அனுபவத்தைக் கேட்கிற போது எனக்கு இரண்டு விஷயங்கள் மனச் சங்கடத்தைக் கொடுக்கின்றன. சமூகத்திலே பெண்களுக்கு ஏற்படும் சகல துன்பங்களுக்கும் ஆண்கள்தான் பொறுப்பாளிங்கறது தவறு. பெண்களுக்கு முதல் எதிரி பெண்களே தான். இந்த அனுபமா போல அர்த்தமற்ற பிடிவாதத்தாலே ஒரு பெண் மற்றொரு பெண்ணுக்கு எப்படிப்பட்ட தீங்குகளை விளைவிக்க முடியும்னு நினைச்சுப் பார்த்தாலே ரொம்ப வேதனையாயிருக்கு.

'என் நாட்டில் எப்பொழுது ஒரு பெண் நிர்பயமாக இரவில் கூட தெருவில் நடக்க முடியுமோ அப்போது ராம ராஜ்யம் வந்துவிட்டதென்று கொள்வேன்' என்று காந்தியடிகள் கூறியிருப்பதை நினைத்துக் கொள்கிறேன். ராம ராஜ்யத்துக்கு ரொம்ப ரொம்ப தொலைவில் இருக்கிறோம் என்று எண்ணும் போதே என் மனசு ரொம்ப கஷ்டப்படுகிறது..."

தன் மனம் பற்றிய கவலைகளை மறந்தாள் மங்களா. அவளுக்கு மெத்த வியப்பு. "ஸார்! நீங்க ரொம்ப நன்னா தமிழ் பேசறேளே?"—ஆச்சரியமாகக் கேட்டாள்.

"பெயரைக் கேட்டதும் காசியிலிருந்து வந்தவர்னு முடிவு கட்டி விட்டேன்"

"ஆபீசிலேயும்...எல்லாரிடமும் பொதுவா ஆங்கிலத்திலே பேசுவதைக் கேட்டு...வடக்கேயிருந்து வந்தவர்னு உங்கள் முடிவு. உண்மையைச் சொல்லப் போனால் திருச்சிப் பக்கத்தைச் சேர்ந்தவன். காவேரித் தண்ணியைக் குடிச்சு வளர்ந்தவன்னு பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய... பூர்ணமான தமிழன் தான்." சிரித்துக் கொண்டே எழுந்திருந்தான். அலமாரியைத் திறந்து ஒரு சுத்தமான துவாலையை எடுத்துக் கொண்டு வந்தான்.



"வாஷ்பேசின்கிட்டே சோப்புப் பெட்டி இருக்கு. கொஞ்சம் முகத்தை அலம்பிண்டு வாங்கோ, இன்னிக்கு என் குருவின் பிறந்தநாள். அதனால் நான் நாள்முழுவதும் எதுவும் சாப்பிடுவதில்லை... ராத்திரி மட்டும் கொஞ்சம் பால் சாப்பிடுகிற பழக்கம். கொஞ்சம் சாப்பிட்டதுபோக மீதியை அப்படியே பிரிஜ்ஜில் வச்சிருக்கேன். ஒரு நொடியில் காய்ச்சித் தரேன். முதல்ல அதைக் கொஞ்சம் சாப்பிடுங்கோ. அப்புறம் மேலே என்ன செய்கிறதுன்னு யோசிப்போம்"—பதிலுக்குக் காத்திராமல் உள்ளே போய் விட்டான்.

முகத்தைக் கழுவி-கூந்தலைக் கோதி சீராக்கிக் கொண்டு மெல்ல முன்னறைக்கு வந்தாள் மங்களா. சிறிது அமைதி ஏற்பட்டதும் அவளால் தன்னைச் சுற்றி நிதானமாக பார்க்க முடிந்தது.

முன்னறையில் தேவையான சோபா நாற்காலிகள் ஒழுங்காகப் போடப்பட்டிருந்தன. பொன் எழுத்துக்கள் கொண்ட அட்டை போர்த்திய தடிமனான புத்தகங்கள் தொழில்...விற்பனை...முன்னேற்றம் இத்யாதி பற்றியவை கண்ணாடி அலமாரியில் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. தவறிப்போய் தரைமீது ஒரு சிறு துண்டுக் காகிதத்தைக்கூட காணவில்லை. மொசாயிக்கில் மின்னிய தரைகூட பளிச்சென்று சுத்தமாகத் தெரிந்தது. இடையில் வேஷ்டியும், திறந்த மார்பும், மொட்டைத் தலையுமான கிழவர் ஒருவரின் படம்...மேஜைமீது விரித்து வைக்கப்பட்டிருந்த விற்பனை வரி பற்றிய புத்தகத்தின் அருகே இருந்ததைப்பார்த்தபடி அவள் நின்று கொண்டிருந்தாள். அந்தப் படத்தின் சட்டத்தைச் சுற்றி சன்னமானதொரு சந்தனமணிமாலை தொங்கிக் கொண்டிருந்தது.

"அவர் என் குருநாதர்."—சொல்லிக் கொண்டே கையில் தூக்கிவந்த டம்ளரை அருகிலிருந்த முக்காலிமீது அவன் வைத்தான்.

"வீட்டை சுத்தப்படுத்த ஒரு வேலைக்காரியும்— சமைக்க ஒரு பையனும் இருக்கிறார்கள். நான் சாயங்காலம் வீட்டுக்கு வந்ததும் அவர்கள் கிளம்பி விடுவது வழக்கம். அதனால் நான் தனியாகத்தான் இருக்கிறேன். இந்த நிலைமையில் உங்களை நான் இங்கே தூங்கச் சொல்வது முறையல்ல அதனால் உடனே அந்த ஹாஸ்டலில் கொண்டு போய்விட உதவுகிறேன். அனுபமா அவர்களிடம் பேசி வற்புறுத்தப் போறேன்."

"ஐயோ வேண்டாம். உங்களையும் என்னையும் சேர்த்துப் பார்த்துவிட்டு அவள் தவறாக எண்ணிக் கொண்டு விடுவாள். வீணாக உங்களுக்கு என்னால் அவமதிப்பு எதுக்கு? என் சிநேகிதி லதா-திருவல்லிக்கேணியில் இருக் கிறாள். அவள் வீட்டில் கொண்டு போய் என்னைச் சேர்த்து விட்டால் போதும். இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்"

"சரி, அப்படியே செய்கிறேன். காரை ஷெட்டிலிருந்து எடுத்து வெளியே தயாராக நிறுத்திவிட்டு வரேன்." வெளியே போக அவன் திரும்பினான்.

"நீங்க காரில் அழைச்சுண்டு போய் ஆபீசிலே விட்டு விடுவதாக உதவி செய்ய முன் வந்தப்போ அன்னிக்கு நான் மறுத்தேன்."

"முன்பின் தெரியாதவன் என்ற எச்சரிப்பு உணர்விலே மறுத்தது நியாயந்தானே?"

"இப்போ உங்ககிட்ட வலியவந்து நானே கேட்கிறது உங்களுக்கு கொஞ்சம் வேடிக்கையாக இருக்கலாம் இல்லையா?" வேதனையோடு மங்களா கேட்டாள்.

"இல்லை. இப்போது என்னை ஓரளவுக்கு நீங்க தெரிஞ்சு கொண்டதால் அந்த நம்பிக்கையின் பேரில் வந்து உதவி கேட்கிறேள். அதைப்பத்தி நான் பெருமைபட றேன்." சொல்லிவிட்டு மெல்லியதாக முறுவலித்தான். மங்களாவின் மனதில் ஒரு கணம் ஒரு பரவச உணர்வு.



அவளது அபிப்பிராயங்களுக்கு அவன் அத்தனை மதிப்புக் கொடுக்கிறானா? வியப்பும் மகிழ்ச்சியுமாக அவள் அவன் பின்னால் வெளியே வந்தாள்.

காரை ஷெட்டிலிருந்து கிளப்பி தெருவில் கொண்டு நிறுத்தி விட்டு அவசரமாக வீட்டைப் பூட்டினான்.

காரின் பின் கதவைத் திறந்து அவளை ஏறிக் கொள்ளச் சொல்லி உபசரித்தான்.

டிரைவர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு நிதானமாக வண்டியை ஓட்டத் தொடங்கினான்.

வழி நெடுகிலும் அவன் எதுவும் பேசவேயில்லை.

சில்லென்று முகத்திலே மோதிய காற்றை அனுபவித்த வண்ணம் தன்னைத்தாண்டி பின்னோக்கி நழுவிய கட்டி டங்களையும் விளக்குக் கம்பங்களையும் அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த நிசப்தத்தில்...இருவர் மனதிலும் மௌனமான தொரு கனிப்பு.

மரியாதையிலிருந்து இம்மிகூட பிசகாது பேசத் தெரிந்த கண்யமான மனிதர்...ம். இவரை எனக்குப் பிடிக்கிறது...

ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகப் பேசும் கபட மற்ற சுபாவம்...இந்த ஒரு குணத்திற்காகவே எனக்கு இவனை ரொம்பப் பிடிக்கிறதோ? வண்டி திருவல்லிக் கேணியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

## 21

ஒண்டுக் குடித்தனமாதலால் தங்கள் அறையை உட்பக்கம் தாளிட்டுக் கொண்டு தாயும் மகளும் படுத்து விட்டிருந்தனர். வாயிற்பக்கம் சிறு ஜன்னல் வழியே

எப்பொழுதாவது காற்று எட்டிப்பார்த்தால் உண்டு. தலைக்கு மேல் தொங்கிய பால் பியரிங் தேய்ந்து போன பழைய மின் விசிறி கடபுடவென்று கோஷமிட்டபடி அனல் காற்றை அள்ளி வீசிக்கொண்டிருந்தது. இள வயது—சலியாத உழைப்பு-உண்ட களைப்பு. லதா நன்றாக உறங்கிவிட்டிருந்தாள் பற்பல சிந்தனைகளில் உறக்கம் வராது புரண்டு கொண்டிருந்த காமு அம்மாள் அப்பொழுதுதான் கண் அயர்ந்தாள்.

கனவிலே கேட்பது போன்ற நினைப்பு.

"லதா! லதா!" ஜன்னல் அருகே மெல்லியதாகக் கேட்ட குரல் விழிப்படையச் செய்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள் காமு அம்மாள். லதா ஆழ்ந்து உறங்குவதைக் கவனித்துவிட்டு மெல்ல சுவற்றைப் பிடித்துக் கொண்டு எழுந்து ஜன்னல் அருகே வந்தாள்.

"நான் தான் மங்களா வந்திருக்கேன். கொஞ்சம் கதவை திறக்கிறேளா?"

வெளியே எட்டிப் பார்த்த அவளுக்கு ஒரே குழப்பம்.

"இரவின் அந்த நேரத்தில் யாரோ ஒருத்தனுடன் மங்களா காரில் வந்து இறங்கியிருக்கிறாளே? இதெல்லாமென்ன? பலர் குடியிருக்கும் வீடு. பதட்டமாகப் பேசக் கூடாது' என்று எண்ணியவளாக, லதாவை எழுப்பிவிட்டு கதவைத் திறந்து கொண்டு வந்து சப்தமிடாமல் வாயிற் பொதுக் கதவை மெல்லத் திறந்தாள்.

தூக்கக் கலக்கத்துடன் தாயின் பின்னே தொடர்ந்து வெளி வந்த லதாவுக்கு தோழியைப் பார்த்ததும் ஒரே மலைப்பு.

மற்ற குடித்தனக்காரருக்கு தன்னால் வீண் தொல்லை கூடாது என்ற எண்ணத்துடன் காசிநாதன் விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

"மிஸ் மங்களாவே எல்லாவற்றையும் விவரமாக சொல்வாங்க. பஸ் தாமதமாகிவிட்டதால் ஹாஸ்டல்



கேட்டை மூடிவிட்டார்கள். வேறு வழியில்லாமல் என்னை உங்கள் வீட்டில் கொண்டு வந்துவிட்டு உதவும்படி கேட்டு கொண்டாங்க. அழைத்து வந்தேன்" என்று முடித்த காசிநாதன், மங்களாவின் பக்கம் திரும்ப, "இன்றைய அனுபவங்களினால் ரொம்ப அதிர்ந்து போயிருக்கீங்க. அதனால் நாளைக்கும் மறுநாளும் லீவு எடுத்துக்கொண்டு திங்கள் அன்று வேலைக்கு வந்தால் போதும். பின்னால் முறைப்படி லீவு பாரங்களை நீங்கள் வந்து பூர்த்தி செய்து கொடுத்தால் போதும். நான் வருகிறேன்..." கூறிவிட்டு காருக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டான். மங்களா வாயைத் திறக்குமுன் கார் தெருக்கோடியிலிருந்து மறைந்து விட்டது.

அவர்கள் மூவரும் அதிக சப்தமிடாது வாயிற் கதவைத் தாளிட்டுவிட்டு அறைக்குள் வந்தனர். காமு அம்மாள் மூலையில் சுருட்டிக் கிடந்த பாயை எடுத்துத் தரையில் சுவரோரமாக விரித்துப் போட்டுவிட்டுக் கூட ஒரு தலையணையையும் எடுத்துப் போட்டாள். லதா அறையின் கதவை மெல்லத் தள்ளித் தாளிட்டுவிட்டு தோழியின் அருகில் வந்து கையைப் பற்றி பாயின் மீது இருத்தினாள்.

"இந்த அசட்டுப் பெண் கொடுத்த ஊறுகாய் பாட்டிலை அப்படியே மறந்து வச்சுட்டுப் போயிட்டுதேன்னு நினைச்சிண்டு இருந்தேன்."

"ஏம்மா மங்களா! என்ன நடந்தது? மூஞ்சியைப் பார்த்தால், ரொம்ப அழுதிருக்காப்பல தெரிகிறது." பரிவுடன் கேட்டபடி காமு அம்மாள் அருகில் வந்து அமர்ந்து கொண்டாள். "சூடா கொஞ்சம் ஹார்லிக்ஸ் தரட்டுமா...?" அன்போடு விசாரித்தபடி அவள் கரத்தைப் பற்றி அழுத்தினாள்.

அதுவரை அடக்கி வைத்துக்கொண்டிருந்த துக்கம் பீறிட்டுக் கொண்டு எழ மங்களா தாங்க முடியாத விம்மலில் குலுங்கினாள்.

"அசடு. அழக்கூடாது. ராத்திரிவேளை. அக்கம் பக்கத்திலே இருக்கிறவா காதிலே எதுவும் படக்கூடாது. என்ன நடந்ததுன்னு மெள்ளச் சொல்லு." அன்புடன் முதுகைத் தடவிக் கொடுத்தாள் காமு அம்மாள்.

துயரத்தில் வார்த்தைகள் தடுமாற மங்களா ஒரு வழியாக எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னபோது தாயும் மகளும் அயர்ந்து போனார்கள்.

"எனக்கு வரும் ஆத்திரத்தில் அந்த அனுபமாவின் முகத்திலே ஓங்கி நாலு குத்துக் குத்தி பல்லை உடைக்க மாட்டோமான்னு இருக்கு" சீறினாள் லதா.

'தனியே சுதந்திரமாக வாழ முடியும் என்று புறப்பட்டால் ஒரு பெண்ணுக்கு இப்படியெல்லாம் இடர்களா!' காமு அம்மாளுக்குக் கேட்க மிக்க வேதனையாக இருந்தது.

"லதாவுக்கு எடுத்து வச்சேன். அவள் சாப்பிடாம தூங்கிப் போயிட்டா. நீ சாப்பிடு" சுவரோரமாக வைத்திருந்த பிளாஸ்கைத் திறந்து தம்ளரில் சூடான ஹார்லிக்ஸை ஊற்றி மங்களாவிடம் நீட்டினாள்.

காமு அம்மாளின் பரிவு—உபசரணை எல்லாம் துயர் வசப்பட்ட மங்களாவின் மனதிற்கு மிக்க ஆறுதலாக இருந்தது.

அண்ணன் வீட்டில் தனி அறையில் மெத்தென்று கட்டிலின் மீது உறங்கியபோது கிட்டாத நிம்மதியும், சுகமும் தரையில் கிடந்த அந்தப் பாயில் காமு அம்மாளின் அருகே நெருங்கிச் சுருண்டு கொண்ட போது அவளுக்குக் கிட்டியது.

"அசடு. எதுக்கு இன்னமும் அழறே? பத்திரமா அந்தப் புண்ணியவான் இங்கே கொண்டு வந்து சேர்த்துட்டார், மேலே யோசிச்சி முடிவு எடுக்க ரெண்டு நாள் அவகாசம் இருக்கு. பேசாம தூங்கு" அன்புடன் கடிந்தபடி கண்ணீரைத் தன் கரங்களால் துடைத்து விட்டாள் காமு அம்மாள்.



கடினமான வேலைகளைச் செய்து கரடு தட்டிப்போன அவளது விரல்கள் பூப்போல மெல்லத் தன் முகத்தை வருடுவதை உணர்ந்து புல்லரித்துப் போனாள் மங்களா.

"என் தாயார் மட்டும் இப்போ உயிரோடு இருந்திருந்தால்..." மங்களா முடிக்குமுன் காமு அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, "அதுக்குப் பதிலா நான் தான் உனக்கு இருக்கேனே? பெற்றதால் மட்டும் தாய் மகள் என்கிற உறவு அமைகிறதில்லை. என்னைப் பொறுத்தவரை நீயும் என் மகள்தான். அதனாலே அமைதியா தூங்கு." நெஞ்சம் நெகிழ்ந்து போன மங்களா காமு அம்மாளின் அணைப்பிலே உறங்க வசப்பட்டாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ராஜேஸ்வரி ஹாஸ்டல் வாசிகள் இன்னமும் எழுந்திருக்கவில்லை. படுக்கையினின்று எழுந்த மங்களா ஜன்னல் அருகே வந்து தோட்டத்தை எட்டிப் பார்த்தாள்.

மங்கையர் இல்லத்துடன் ஒப்பிடும் போது ராஜேஸ்வரி ஹாஸ்டலின் அமைப்பு வசதிகள் எல்லாமே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசத்திலிருந்தது. அதை நிர்வகித்த தலைவி சியாமளா அம்மாளின் சிரித்த முகமும் பரபரப்புடன் அவளது கட்டளைகளை நிறைவேற்ற சிட்டாகப் பறந்த அந்த இரண்டு இளம் பணிப்பெண்களின் முகத்தில் நிலவுகின்ற மலர்ச்சியும், மனதிற்கு நிறைவைக் கொடுத்தன. பத்து கிரவுண்டுக்கு மேற்பட்ட நிலத்தின் நடுவே வேலை பார்க்கும் பெண்கள் தங்கி வசிக்க என்ற நோக்கத்துடன் ஆராய்ந்து திட்டமிட்டுக் கட்டப்பட்ட இரண்டடுக்கு மாடிக் கட்டடம். கீழ்ப் பகுதியில் அலுவல் அறை—அடுத்தபடியாக பெண் உறவினர்களைச் சந்தித்துப் பேச ஒரு சிறு அறை—அதற்கடுத்ததாக டெலிவிஷன் வசதி கொண்ட பெரிய பொது ஹால் அடுத்தபடியாக சாப்பாட்டறை—அதை ஒட்டி சுத்தமான சமையலறை. ஒவ்வொரு மாடியிலும் இருபது தனி அறைகள். தேவையான குளியலறை இத்யாதி.

ஹாஸ்டல் வாசிகள் ஒவ்வொருவருக்கும் தனி அறை கொடுக்கப்பட்டிருந்தது. இரவு எந்த நேரத்தில் என்ன உதவி தேவைப்பட்டாலும் தந்து உதவ பணிப்பெண்கள், மாடியின் இறங்குபடி போன்ற பகுதி அறையில் தங்கியிருந்தார்கள். தொலைபேசி, மருத்துவ வசதி என்று ஒரு உயர்மட்டத்து ஹாஸ்டலுக்குத் தேவையான வசதிகளும் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் சுத்தமான படுக்கை, மின் விசிறி, சாமான்களை வைத்துப் பூட்டிக் கொள்ள இரும்பு பீரோ என்று பல வசதிகள் இருந்தன.

அங்கே இருந்த பெண்கள் பெரும்பாலானவர்கள் கல்லூரி ஆசிரியர்கள், பாங்க் ஆபீசர்கள் போன்ற பதவிகளில் இருந்தனர். தாங்களே முன்வந்து அறிமுகம் செய்து கொண்டு கலகலப்பாக வார்த்தையாடினார்கள். அதே சமயம் தாமுண்டு, தம் வேலையுண்டு என்று ஒதுங்கிப் போகும் நளினமும் தெரிந்தவர்களாயிருந்தனர்.

தோழியை அழைத்துக் கொண்டு ஹாஸ்டலுக்கு வந்த போது லதா சுற்றிலும் கண்களை ஓடவிட்டுப் பிரமித்துப் போய் நின்று விட்டாள்.

"தலைகீழாக நீ நின்றாலும் இந்த ஹாஸ்டலில் இடம் கிடைத்திருக்காது. காசிநாதன் அவர்களுக்கு, சியாமளா அம்மாளைத் தெரியுமாம். அந்தச் சலுகையை உபயோகித்து உனக்கு இங்கே இடம் வாங்கித் தந்திருக்கிறார். உங்க மானேஜர் உண்மையில் ரொம்ப நல்லவர்தான். உனக்காக எத்தனை சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார். இதற்கு என்று காரணம் ஏதாவது இருக்குமோ?"—கண்களைச் சிமிட்டிக் கொண்டு தோழியின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள்.

'ஐயோ பாவம் என்று இரக்க வசப்பட்டு செய்த உதவியா அல்லது?'—மங்களாவின் கற்பனை, சிறகு விரித்துக் கொண்டு உல்லாசமாகப் பறந்தது.



காசிநாதனின் உத்தரப்படியே அவள் திங்கட்கிழமை அலுவலகத்திற்குப் போனபோது, சிறிது நேரத்தில் மானேஜரிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

"ராஜேஸ்வரி ஹாஸ்டல் என்பதில் உங்களுக்கு ஒரு அறை தரும்படி சிபாரிசு செய்திருக்கிறேன். இந்தப்பாரங்களைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். இங்கேயும் இரண்டு மாதம் முன் பணம் கட்ட வேண்டியிருக்கும். முதல் தரமான ஹாஸ்டல். இதில் வசிக்க மாதம் நானூறு ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது"

அவளது சம்பளத்தில் பாதி ஹாஸ்டலுக்குப் போய் விட்டால்? கேட்கவும் அவளுக்கு அச்சமாகத்தானிருந்தது.

"இன்னொரு சந்தோஷ சங்கதியை சொல்லப்போகிறேன். பழைய மானேஜர் உங்களுக்கு சம்பள உயர்வு தரும்படி சிபாரிசு செய்து அனுப்பிய கோரிக்கையை ஏற்று, நேற்றைய தினம்தான் தலைமை அலுவலகத்திலிருந்து அதிகாரப்பூர்வமான சம்பள உயர்வு அறிக்கை வந்திருக்கிறது. இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து சம்பள உயர்வு தொடருவதால், விட்டுப் போன மாதங்களைக் கணக்கிட்டு விரைவில் ஒரு கணிசமான தொகை வரப்போகிறது. இந்த வாரக் கடைசியிலே அது வந்து சேர்ந்து விடும். அதனால்..." கூறி விட்டுப் புன்னகைத்தான்.

நன்றி உணர்வு நெஞ்சையடைத்தது. மங்களா வார்த்தைகளுக்குத் தடுமாறினாள்.

"என்ன சொல்றதுன்னு தெரியலை சார் நீங்க தெய்வம் போல..." அவள் முடிக்கு முன்னே கையை அமர்த்தினான் காசிநாதன்.

"சாதாரண மனிதனாக இருப்பதைத்தான் நான் விரும்புகிறேன். தெய்வமாக்கி கோயிலில் வச்சுப் பூட்டிடாதீங்க..."

உத்தியோக தோரணையை மீறி அவன் சகஜமாகச் சிரித்தபோது, மங்களா முகம் சிவந்து தடுமாறிப் போனாள்.

"தாங்க்யூ வெரி மச் சார்." சட்டென்று வெளியே வந்து விட்டாள். அன்று வெகுநேரம் அவள் மனம் ஆனந்தத்திலே படபடத்துக் கொண்டிருந்தது உண்மை.

தினசரி அந்த ஹாஸ்டலில் காலையில் சாப்பாடு—வேலைக்குப் போகும் பெண்களுக்கு கையில் டிபன்— மாலை காப்பி—இரவு மறுபடி சாப்பாடு என்ற முறையை அனுசரித்தனர். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் காலையில் டிபன், பகல் பன்னிரண்டு மணிக்கு இனிப்புடன் சாப்பாடு என்று சிறிது மாற்றம் அனுசரிக்கப்பட்டது. அன்று பகல் உணவுக்குப் பால் பாயசம் செய்திருந்தார்கள். ஒரு கரண்டி கூடுதலாக வாங்கிச் சாப்பிட்டு விட்டிருந்தாள் மங்களா. உண்ட களைப்பில் தன் அறையில் நிம்மதியாக, பொழுது போனது தெரியாமல் நன்றாகவே உறங்கிவிட்டிருந்தாள். விழித்துக் கொண்டது. பொழுது மாலை காப்பி சாப்பிடும் நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்து பரபரப்பாக முகத்தைக் கழுவி, கூந்தலை வாரி முடித்து வேறு உடை உடுத்திக் கொண்டு . கீழே இறங்கி வந்தாள் சாப்பாட்டறையில் அவளைத் தேடிக் கொண்டு ஒரு பணிப்பெண் வந்தாள்.

"உங்களைப் பார்க்க ஒரு விசிட்டர் வந்திருக்கிறார். ஆண்களை ஹாஸ்டலுக்குள் அனுமதிப்பது இல்லை. மரத்தடியில் கிடக்கும் சிமெண்ட் ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்."

'யாராக இருக்கும்...?' ஒரே வாயில் காப்பியைக் குடித்துவிட்டு தோட்டத்திற்கு விரைந்தாள் மங்களா. கொஞ்சம் தூரத்திலேயே பார்த்துவிட்டாள். நெஞ்சில் மகிழ்ச்சிப் படபடப்புடன் வேகமாக அவன் அருகே வந்தாள்.

அவளைக் கண்டதும் காசிநாத் எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தான். ஆசனத்தின் ஒரு ஓரத்தில் அவளை



உட்காரச் சொல்லி உபசரித்துவிட்டு, தான் இன்னொரு ஓரத்தில் அமர்ந்து கொண்டான்.

"என் சிபாரிசின் பேரில், இந்த ஹாஸ்டலில் சேர்ந்தீங்க. எல்லாம் சௌகர்யமா இருக்கான்னு விசாரித்து விட்டு, அப்படியே இதைக் கொடுத்துட்டுப் போக வந்தேன்." சொல்லிக் கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடித உறையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

வியப்புடன் மங்களா அதைப் பெற்றுக் கொண்டாள்.

"மங்கையர் இல்லத்தில் தங்கியிருந்த சில நாட்களுக்கு உண்டான தொகை போக மீதிப் பணத்தை உங்கள் பெயருக்கு ஒரு செக் எழுதித் தர வேண்டுமென்று நான் அதன் தலைவியை வற்புறுத்தினேன் அந்த அனுபமா அம்மாள் முன் பணத்தை திருப்பத் தருவதில்லை என்று இடக்குச் செய்தாள். 'எங்கள் அலுவலகத்தைச் சேர்ந்த ஒரு ஊழியரை முன்பின் விசாரிக்காது முரட்டுத்தனமாகக் கதவை அடைத்து, இரவின் இந்த வேளையில் வெளியில் அனுப்பியது தவறு. அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு ஈடு கோரி இந்த ஹாஸ்டல் மீது வழக்குத் தொடர உத்தேசித்திருக்கிறேன்'என்றதும் ஆடிப் போய் விட்டாள். வக்கீல், கோர்ட் என்றதுமே பற்கள் தடதடவென்று தட்ட வேகமாகக் கணக்கிட்டு உங்களுக்குச் சேர வேண்டிய தொகைக்கு செக் எழுதித் தந்துவிட்டாள்." 'பளிச்சென்று' பற்கள் மின்ன சிரித்தான் காசிநாத்.

அலுவலகத்தில் மானேஜர் என்று கண்டிப்பும் கறாருமாக காட்சியளிக்கும் அவன் அவளிடம் இத்தனை இயல்பாக, நெருக்கமாக, நேசமாகப் பேசி சிரிக்கிறானே?—வியப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நீங்க செஞ்சிருக்கிற உதவிக்கு நான் ரொம்பக் கடமைபட்டிருக்கிறேன்..." தடுமாறினாள்.

"நாமெல்லோரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்க்கிறவர்கள். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்களைப் போல, ஒருவருக்கு கஷ்டம் ஏற்பட்டால் அதை மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருப்பது நியாயமா?"

"என்னைப் பொறுத்தவரை நீங்க பல வழியிலும் எனக்கு தெய்வம் போல', அவள் முடிப்பதற்குள் அவன் சிரித்துக் கொண்டே எழுந்து விட்டான்.

"மறுபடியும் என்னைக் கல்லாக்கி கோயிலுக்குள் பூட்டப் பார்க்கிறீர்கள். நான் மனுஷனாக இருக்கத்தான் ஆசைப்படறேன். வரட்டுமா..." விடை பெற்றுக் கொண்டு சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த காரை நோக்கி நடந்தான்

இன்னும் கொஞ்சம் அந்தச் சிரிப்பைக் கேட்க மாட்டோமா? அந்த களையான முகத்தைப் பார்க்க மாட்டோமா...? என்று அவள் எண்ணி முடிப்பதற்குள்... 'ஆனாலும் உனக்கு ரொம்ப பேராசைதான்' என்று பதிலளிப்பது போல உறுமிக் கொண்டு அந்தப் பியட் தோட்டத்தினின்று வெளியேறி மறைந்தது

## 22

தன் வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டு விட்டதாகத்தான் மங்களாவுக்குத் தோன்றியது. எதிர் பாராத சமயம் வந்து சேர்ந்த சம்பள உயர்வை எண்ணி மிகவும் மகிழ்ந்து போனாள். முன்னைவிட வேலையில் உற்சாகமும் ஊக்கமும் ஏற்பட்டன. வேலை செய்யுமிடத்தில் ஒவ்வொரு ஊழியருக்கும் மனநிறைவு வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதை அனுபவத்திலே அவள் புரிந்து கொண்டாள். அவள் செய்து வந்த வேலை முன்னைவிட அவளுக்கு இப்போது மிக்க திருப்தியாக இருந்தது. காலில் தைத்த முள்ளாக சதா



உறுத்திக்கொண்டிருந்த உதவி மானேஜர் நந்தகோபாலை பெங்களூர் அலுவலகத்திற்கு மாற்றியாகி விட்டது என்ற செய்தியைக் கேட்ட போது அவள் மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள்.

அந்த அலுவலகத்திற்கு உதவி மானேஜர் என்று இன்னொரு ஆள் மேற்பார்வைக்குத் தேவையில்லை என்பதை காசிநாத் அழுத்தமாக தலைமை அலுவலகத்திற்கு எழுதி அறிவித்ததின் விளைவுதான் அந்த மாற்றலாகும். வழக்கம் போல அலுவலகத்திலிருந்து வெளியேறப் போகும் உதவி மானேஜருக்கு ஊழியர்கள் அனைவரும் கூடி ஒரு பிரிவு உபசாரக் கூட்டம் நடத்தி தேநீர் வழங்கினர். தன் பங்கிற்கு ஐந்து ரூபாய்கள் தான் கொடுத்து உதவ வேண்டுமென்றிருந்த போதிலும் மங்களா தாராளமாக பத்து ரூபாய்களை அந்த தேநீர் விருந்துக்கு கொடுத்து உதவினாள். அலுவலகத்தைப் பிடித்த பீடை ஒழியட்டும் என்று உள்ளூர ஏற்பட்ட தொரு ஆதங்கத்தான் அதற்குக் காரணம்.

வேலை முடிந்ததும் முன்பெல்லாம் வீட்டிற்குத் திரும்பும் போது பாதி வழியிலேயே அவள் மனதைக் கவலை குடையத் தொடங்கிவிடும்.

தலைவலி என்று காலை படுத்த மன்னி எழுந்திருந்து சமைத்தாளோ இல்லையோ, வீட்டுக்குள் நுழைந்ததும் கரண்டியைப் பிடிக்க நேருமோ? என்று கசந்து கொண்டு தான் வருவாள். இப்போது நிம்மதியாக ஹாஸ்டலுக்குள் நுழைந்து நேரே சாப்பாட்டறை மேஜையருகே சென்று உட்கார்ந்து கொள்ள முடிந்தது. அவளைக் கண்டதும் சமையலறையில் வேலை பார்க்கும் பணிப்பெண் சிரித்த முகத்துடன் விரைவாக வந்து கோப்பையில் சூடான காப்பியும், கூட கொறிப்பதற்கு ஒரு சிறு பீங்கான் தட்டில் பக்கவடாமும் எடுத்துக்கொண்டு வந்து எத்தனை அன்புடன் உபசரித்தாள். காசுக்குக் கிடைத்த பணிவிடை என்றாலும்

VGS LENDING LIBRARY
AMBATTUR (OT) CHENNAI-53.

மகிழ்ச்சியுடன், கனிவுடன் சுறுசுறுப்பாக அந்தப் பணிப் பெண்கள் ஹாஸ்டல் வாசிகளை மிகவும் நன்றாகவே கவனித்துக் கொண்டனர்.

காப்பியைக் குடித்துவிட்டு மெல்ல எழுந்து தன் அறைக்குள் சென்று துவாலை, சோப்புப்பெட்டி—மாற்றுடையுடன் குளியல் அறைக்கு விரைவாள். நாள் முழுவதும் நினைத்த சமயம் குளிக்க வெந்நீர் வசதி கிடைத்த குளியல் அறை தேய்த்துக் கழுவி எப்போதும் பளிச்சென்று சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. வெயில் நாட்களில் சில்லென்ற குளிர்ந்த நீரில்தான் குளிக்க அவளுக்குப் பிடிக்கும்.

"இன்னுமா குளிச்சு முடிக்கலை?" என்று அதட்டிக் கூப்பிட இங்கே மன்னி கிடையாது. பூத் துகளாக நீர், மேனியைத் தழுவ மனங் குளிருமட்டும் நிதானமாகக் குளித்துவிட்டு வேறு உடுத்திக்கொண்டு கீழே வருவாள்.

பாட்மிட்டான், டென்னிகாய்ட் போன்ற விளையாட்டுகளில் பயிற்சி பெற தோட்டத்திலே அவைகளுக்கான முற்றங்கள் இருந்தன. வேலையிலிருந்து திரும்பியதும், சில பெண்கள் அம்முற்றங்களில் பந்து விளையாடிக் கொண்டிருப்பதுண்டு. சுற்றுச் சுவர் அருகே ஓங்கி உயரமாக வளர்ந்துள்ள மரத்து நிழலில் புல்தரை மீது உட்கார்ந்து கொண்டு, கொஞ்ச நேரம் அவர்கள் விளையாடுவதை வேடிக்கை பார்ப்பாள். மஞ்சள் வெயில் மங்கி இருட்டத் தொடங்கியதும் தோட்டத்து நடுவே ஒரு கம்பத்தின் மீது பெரிய முட்டை வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் மின்விளக்கு பளிச்சென்று எரியத்தொடங்கும். உடனே விளையாட்டை நிறுத்திவிட்டுப் பெண்கள் அவரவர் அறைக்குக் கிளம்பி விடுவார்கள். ஏழு மணி அளவிலே சாப்பாட்டறையில் சிரிப்பும்—பேச்சுமாக சுடச் சுட தட்டுக்களில் பரிமாறப்படும் உணவு வகைகளை அவர்கள் ஒரு கை பார்க்கத் தொடங்குவார்கள்.

பின்னர் டெலிவிஷன் பார்க்க விரும்புகிறவர்கள் பொது ஹாலுக்கு சென்று விடுவார்கள். ஓய்வாக இருக்கப்



பிரியப்படுகிறவர்கள் தங்கள் அறைகளுக்குப் போய் விடுவார்கள். நிலா நாட்கள் தோட்டத்துப் புல் தரைமீது கும்பல் கும்பலாகப் பெண்கள் அமர்ந்து கொண்டு வெகு நேரம் பேசிக் கொண்டிருப்பதும் உண்டு. மொத்தத்தில் கட்டுப்பாடும், அதேசமயம் கலகலப்புமாக இருந்த அந்த ஹாஸ்டலின் வாழ்க்கை மங்களாவுக்கு மிகவும் பிடித்து விட்டிருந்தது. தன்னால் சுதந்திரமாய் வாழ முடியும் என்றதொரு தன்னம்பிக்கையையும் அது தந்தது உண்மை.

ஹாஸ்டல் தோட்டத்திலே நிழல் கொடுக்கப் பல மரங்கள் இருந்தன. வந்த முதல் நாளே அவள் கவனித்து விட்டிருந்தாள். சுவரோரமாக அடுத்தடுத்து இரண்டு பெரிய மகிழ மரங்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன காலை வேளையில் அவைகளின் அடியில் பாய் விரித்தாற் போல கொட்டிக் கிடக்கும் பூக்களை ஹாஸ்டல் வாசிகள் யாரும் கவனித்ததாக தெரியவில்லை. தினசரி விடியற்காலை எழுந்து பல் விளக்கி முகம் கழுவியதும், முதல் வேலையாக அவள் கீழே இறங்கி வந்து தோட்டத்திற்குள் சென்று ஒரு சிறு பிளாஸ்டிக் கூடை நிறைய அந்தப் பூக்களை வாரிச் சேர்த்து எடுத்துக் கொண்டு வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள். பொறுமையாக அந்தச் சிறு பூக்களைக் கோர்த்து ஆபீசிற்குப் போகுமுன் தன்கூந்தலில் அணிந்து கொண்டு போகத் தலைப்பட்டாள்.

முதல் தடவை ஹாஸ்டலிலிருந்து அவள் தலை நிறைய அந்தப் பூச்சரத்தைச் சூட்டிக் கொண்டு வேலைக்குச் சென்றிருந்த போது நிகழ்ந்த அந்தச் சிறு சம்பவம் ஏனோ அவள் மனத்தில் பல இன்பக் கனவுகளைத் தூண்டிவிட்டு ஒரு பெரிய கற்பனைக் கோட்டையையே எழுப்பி விட்டிருந்தது. அதை நினைத்தபோதெல்லாம் அவள் மேனி சிலிர்த்துப் போவாள். மனதிலே மகிழ்ச்சி பொங்க குமிழிட்டது. அப்படியென்றால்? அவள் மேலே சிந்திக்கத் தோன்றாது...வெகுநேரம் தன்னை மறந்து ஒரு இன்ப நிலையிலே அவள் தன் எண்ணங்களுடன் அடிக்கடி

உறைந்து போவதும் ஒரு வழக்கமாகி விட்டிருந்தது.

அந்தச் சம்பவம் மிகவும் சாதாரணமானதுதான். ஆனால் அதனின்று விரிந்த அவளது கற்பனையோ...மிக மிகப் பெரியதாகிக் கொண்டே போயிற்று. காசிநாத்தின் அழைப்புக்குப் பணிந்து அவன் கேட்ட ஃபைல்களைத் தேடி எடுத்துக் கொண்டு அவனது அறைக்குள் அன்று அவள் நுழைந்தாள்.

தனது உதவியால் அவள் இப்பொழுது சுகமாக வாழ்கிறாள் என்ற முகாந்திரத்தைக் கொண்டு அவன் அலுவலகத்தில் அவளிடம் நெருக்கமாக பழகவோ,பேசவோ முற்பட்டதேயில்லை. எப்பொழுதும் போல் அதிகார வரம்பை விட்டு இம்மியும் நகராது அதே கண்டிப்பும் கறாருமாகவே தான் நடந்து கொண்டான். மங்களாவுக்கு அவனது நடத்தை மிகவும் பிடித்திருந்தது. அதேசமயம், ஹாஸ்டல் தோட்டத்திலே அவளை நிமிர்ந்து ஊன்றிப் பார்த்துக் கனிவுடன், சிரித்த அந்தச் சிரிப்பை மறுபடியும் கேட்க மாட்டோமா என்ற ஏக்கம் என்னவோ மனத்தை அரித்துக் கொண்டுதானிருந்தது. அவளும் தனக்கு அவன் உதவி செய்தான்-ஹாஸ்டலில் வந்து பார்த்துப் பேசிவிட்டு போனான் என்கிற காரணங்களை வைத்துக்கொண்டு அவனிடம் மிக நெருக்கமாகப் பேசிப் பழக முற்படவில்லை. எப்பொழுதும் போல மிகவும் பணிவும் மரியாதையுமாகவே நடந்து கொண்டாள்.

ஃபைல்களை வாங்கிப் புரட்டியவன்...திடீரென்று வியப்புடன் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

மங்களா திடுக்கிட்டுப் போனாள். 'என்ன தவறு நேர்ந்து விட்டது. ஏன் அப்படிப் பார்க்கிறார்?' குழம்பிப் போனாள்.

பார்க்க வேண்டிய பகுதிகளை விரைவில் படித்து முடித்து கையெழுத்திட்டு அவளிடம் கொடுத்து விட்டு தொலைபேசியில் யாரையோ அழைத்துப் பேசத் தொடங்கினான்.



மங்களா ஃபைல்களை அடுக்கி எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

"மிஸ் மங்களா! கொஞ்சம் நில்லுங்கள்." திகைப்புடன் திரும்பினாள்.

தொலைபேசியை ஸ்டாண்டில் வைத்துவிட்டு எழுந்து வந்தான் அவன். மென்மையாகப் பாதம் பதிய, அறைக்குள் தரை மீது விரிக்கப்பட்டிருந்த பாரசீக கம்பளத்தின் மேல் சுருண்டு கிடந்த பூச்சரத்தைக் குனிந்து கையில் எடுத்தான்.

"இந்த வாசனை எங்கேயிருந்து வாதுன்னு எனக்கு ஆச்சரியமாயிருந்தது. இப்ப புரியறது. உங்க தலையிலிருந்து இந்தப் பூச்சரம் நழுவி கீழே விழுந்துவிட்டிருக்கு. மகிழம்பூ வாசனை எனக்கு ரொம்பப் பிடிக்கும். நான் வசிக்கிற வீட்டுத் தோட்டத்திலே கூட ஒரு சின்ன மரம் இருக்கு. ஆனால் அது இன்னமும் பூக்க ஆரம்பிக்கலை." சொல்லிக் கொண்டே தன் இரு உள்ளங்கைகளுக்குள்ளே அடங்கிய மலர்ச்சரத்தை முகத்தருகே வைத்து மெல்ல முகர்ந்து வாசனையை அனுபவித்தான்.

தன் அருகே நெருங்கி நின்றபடி தன் கூந்தலில் சூட்டியிருக்கும் மலரை முகர்ந்து பார்ப்பது போன்ற உணர்வில், திகைத்துப் போய் முகம் சிவக்க அவனைப் பிரமிப்புடன் பார்த்தாள் அவள்.

"இந்தப் பூவுக்குத் தனிப்பட்ட விசேஷம் உண்டு தெரியுமா? இது வாட வாட வாசனை அதிகரித்துக் கொண்டே போகும். மற்ற மலர்களுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு." சொல்லிக்கொண்டே அருகில் வந்து அந்தச் சரத்தை அவள் கரத்தில் மெல்ல வைத்தான்.

"தாங்க் யூ ஸார்..." எச்சிலை விழுங்கிக்கொண்டு வெளியே வந்தாள் மங்களா. அவன் கைப்பட்ட அந்த

மலர்ச்சரத்தை பத்திரமாக மேஜை இழுப்பறைக்குள் வைத்து விட்டு வேலையைக் கவனிக்க முயன்றாள். ஆனால் மனம் வேலையில் ஓடினால்தானே?

அவள் தலையில் சூட்டிக்கொண்டிருந்த அந்த மலரை மிகவும் சகஜமாக எடுத்து முகர்ந்து பார்த்தாரே? வாட வாட வாசனை அதிகம் என்று அவளிடம் ஏன் சொல்ல வேண்டும்?

ஹாஸ்டலுக்கு வந்ததும் முதல் வேலையாக அந்த மலர்ச்சரத்தை ஒரு பிளாஸ்டிக் டப்பாவிற்குள் போட்டு மூடிப் பத்திரமாக அலமாரியில் வைத்தாள். ஒவ்வொரு நாளும் படுக்கப் போகுமுன் அந்த டப்பாவைத் திறந்து காய்ந்து கொண்டிருந்த அந்த மலர்ச் சரத்தைக் கையால் எடுத்து முகர்ந்து பார்த்தாள். உண்மைதான். அவர் சொன்னது போல காயக்காய அந்த மலர்களுக்கு வாசனை அதிகரித்துக் கொண்டே வருகிறதே? எனக்கு மகிழம் பூவின் மணம் ரொம்பப் பிடிக்கும் என்றாரே... அதற்கு என்ன அர்த்தம்? நினைத்து நினைத்து கற்பனையில் மிதந்தாள். தினசரி அவள் மகிழம் பூச்சரத்தை சூட்டிக் கொண்டுதான் ஆபீசிற்குப் போனாள். அவன் அறையிலிருந்து அழைப்பு வந்தால் உடனே அதை எடுத்து மேஜை இழுப்பறைக்குள் வைத்து மூடி விட்டுத்தான் அவனைக்காணச் சென்றாள்.

தன்னை மகிழ்விக்க அவள் அந்த மலர்களை தினமும் அணிந்து கொண்டு வருகிறாள் என்று அவர் தவறாக எண்ணிக் கொண்டு விட்டால்...? என்ற அச்சம்.

மாதத்திற்கு ஒரு முறை முன் அறிவிப்புக் கொடுத்து விட்டு தங்கள் பெண் உறவினர், அல்லது தோழிகளை ஹாஸ்டல் வாசிகள், விருந்தினராக ஹாஸ்டலுக்கு சாப்பிட அழைக்கலாம் என்ற ஒரு உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்குத் தனிக்கட்டணம் செலுத்த வேண்டும். லதா அவளுக்கு மிகவும் அன்பான தோழி. எத்தனையோ முறைகள் அவள் வீட்டில் மங்களா



சாப்பிட்டிருக்கிறாள். தங்கியிருக்கிறாள். ஆனால் அண்ணாவுடன் வாழ்ந்த காலத்தில் ஒரு நாளாவது தன் வீட்டிற்குக் கூப்பிட முடியவில்லை. லதாவைக் கண்டால் மன்னி அனுசூயாவுக்குப் பிடிக்காது. ஏதாவது மனம் நோகப் பேசிவிடுவாள் என்ற பயம். ஆனாலும் தோழியை அழைத்துத் தன் அண்ணன் வீட்டில் ஒருவாய் காப்பிகூடக் கொடுக்க தனக்கு உரிமை இல்லையே என்று பெரியதொரு ஏக்கம் இருந்தது.

ஹாஸ்டலுக்கு வந்து ஒரு மாதத்திற்கு மேலாகி விட்டதால் தனது உரிமையை உபயோகிக்கக் கருதி, அந்த ஞாயிற்றுக் கிழமை லதாவைத் தன்னுடன் சாப்பிட ஹாஸ்டலுக்குத் தன் விருந்தாளியாக மங்களா அழைத்திருந்தாள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் எப்பொழுதும், பகல் சாப்பாடு சம்பிரதாயமாக இருக்கும். அன்று இனிப்புக்கு ஜிலேபி செய்திருந்தார்கள்.

சாப்பிட்டதும் தோழிகள் இருவரும் அறைக்குள்ளே அடைந்திருக்க மனமின்றி ஒரு சிறு பாயை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்கு விரைந்தனர். சுவரோரமாக இருந்த அந்தப் பெரிய மகிழ மரத்தின் நிழலில் பாயை விரித்துப் போட்டு தோழியை உட்காரச் சொல்லி உபசரித்தாள் மங்களா.

"அட! உங்கள் ஹாஸ்டலில் மகிழ மரங்கள் இருக்கே? நிறைய பூத்திருக்கே...?" லதா ஆச்சரியப்பட்டாள்.

"உனக்குக்கூடத் தலைக்கு வச்சுக்க கோர்த்து வச்சிருக்கேன். வீட்டுக்குப் போகும்போது மறக்காம எடுத்துண்டு போ. உன்கிட்டே ரொம்ப பேசணும்... அதுக்காகவே உன்னை இன்னிக்கு சாப்பிடக் கூப்பிட்டேன்." சிரித்துக் கொண்டு மங்களா தோழியின் அருகில் பாயின் மீது உட்கார்ந்து கொண்டாள்.

என்ன இருந்தாலும் லதா அவளைவிட கெட்டிக்காரி, பக்திசாலி, ஊகம் அதிகம் உடையவள்... அந்த மகிழம்பூ

சங்கதியை அவளிடம் சொன்னால் கட்டாயம் விளக்கம் கொடுப்பாள். பற்பல சிந்தனைகளுடன் தோழியின் முகத்தைப் பார்த்தாள்.

"உன்கிட்டே ஒரு முக்கிய சங்கதியைப் பத்திப் பேசத்தான் நான் இன்னிக்கு இங்கு வந்திருக்கேன்." நிமிர்ந்து உட்கார்ந்தாள் லதா.

"என்ன?" என்று மங்களா கேட்குமுன் லதா அவளது கரங்களை ஆவலுடன் பற்றிக் கொண்டாள்.

"இத்தனை நாள் உன்னிடம் சொல்லாமல் மறைச்சு வச்சதுக்கு நீ கோபிச்சுக்கக் கூடாது. நான் கல்யாணம் செய்துக்கொள்ளப் போகிறேன்.

மிக எளியமுறையில் வடபழனியில் எங்கள் கல்யாணம் அடுத்த வாரம் புதன்கிழமை நடக்கவிருக்கிறது. அதிர்ச்சியடையாதே காதல் கல்யாணம்தான். அவர் என்னை மிகவும் விரும்பிக் கேட்டார். நானும் அவரை விரும்புகிறேன். சரியென்று ஒத்துக்கொண்டு விட்டேன். அம்மாவும் சம்மதம் தந்துவிட்டாள். நீ கட்டாயம் என் கல்யாணத்துக்கு ஒருநாள் லீவு போட்டுட்டு வந்து சேர வேண்டியது. சொல்லி விட்டேன். கல்யாணமான பின் சில தினங்களில் நாங்கள் பம்பாய்க்குப் புறப்படவிருக்கிறோம்...இனி எனக்கு அங்கே தான் வாசம்..."

திடுக்கிட்டுப் போன மங்களா எழுந்து நன்றாக உட்கார்ந்து கொண்டாள்.

'லதாவுக்குக் கல்யாணமா...காதல் கல்யாணமா... இருந்த ஒரு சிநேகிதியும் அவளைவிட்டுக் கணவனுடன் பம்பாய் போய்விடப் போகிறாள். அவள் தனியாக... ஐய்யய்யோ...நினைத்துப் பார்க்க முடியாத தனிமையில்'

"என்ன பதிலைக் காணோம்..." லதா வெடுக்கென்று தோழியின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள்.



"மனம் நிறைந்த பாராட்டுதல்கள்..."— மங்களா திணறியபடி அவள் கரங்களைக் குலுக்கினாள்.

"அசடு! ஏன் அழறே? பம்பாய்க்குத்தானே போகப் போகிறேன். வெளிநாட்டுக்குப் போய் குடியேறிவிடப் போறாப்பலே கவலைப்படறியே, பம்பாய் அப்படி தொலை தூரத்திலா இருக்கு? என் கணவருக்கு இருக்கும் வசதியை நான் நினைச்சால் பறந்து வந்து உன்னைப் பார்த்துவிட்டுப் போக முடியும். எப்பவும் போல டெலிபோனில் அடிக்கடி பேசுவேன்...மங்களா! நான் சந்தோஷமா வாழணும்னு நினைச்சு என்னை வாழ்த்திப் பாராட்டு. எங்கே கொஞ்சம் சிரி பார்க்கலாம்" என்றாள் லதா உற்சாகத்துடன்.

கண்களில் நீர் பனித்திட, துயரம் நெஞ்சை அடைக்க, தோழியைப் பார்த்து முறுவலித்தாள் மங்களா.

## 23

லதா பாயின் மீது கற்பனைக் கோலமொன்றை விரல்களால் வரைந்துகொண்டு குனிந்தபடி பேசத் தொடங்கினாள். மங்களாவுக்கு ஒரே ஆச்சரியம். வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு என்று வெளிப்படையாக யாரிடமும், அச்சமின்றிப் பேசும் சுபாவமுள்ள லதாவுக்கு கூட வெட்கமா? காதல் வந்து விட்டால் வாயாடிக்குக் கூட வார்த்தைகள் தடுமாறுகின்றனவே.

"என்கிட்டே இதுவரை சொல்லாதது எனக்கு என்னவோ போல்தான் இருக்கு. இதுவரை நமக்குள் ஒருவருக்கு மற்றவரைப் பற்றித் தெரியாத ஏதாவது ரகசியம் இருந்திருக்கா?" மங்களா மனத்தாங்கலை ஒளிக்காது கேட்டு விட்டாள்.

"சொல்லியிருப்பேன். ஆனால் எனக்கே முதலில் நம்பிக்கை ஏற்படவில்லை. விபரமாய்ச் சொல்றேன், கேள்.

சூறாவளி போல நடந்த விவகாரம் என்பார்களே, அப்படித் தான் எங்கள் காதல் விஷயமும். ஒரே மாதத்தில் புயலைப் போல ஓகோவென்று பிய்த்துக்கொண்டு புறப்பட்ட விஷயம். சுப்பராமன் என்ற எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் மாரடைப்பு வந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட செய்தி உனக்குத் தெரியுமே? பிறகு அவர் இறந்து போனது, அவர் பேத்திக்கு வேலை தேடி-ஹாஸ்டல் தேடிக் கொடுத்து உதவியது எல்லாம் உனக்குத் தெரிந்த கதைதானே? சுப்பராமன் நோயாளியாக ஆஸ்பத்திரியில் இருந்தபோது அந்தச் சூழ்நிலையில் தான் முதன் முதலில் நான் கங்காதரனைச் சந்தித்தேன்."

மங்களா வியப்புடன் தோழியின் முகத்தைப் பார்த் தாள்.

"பம்பாயிலிருந்து அலுவலகக் காரியமாக கங்காதரன் சென்னைக்கு வந்திருந்தார். தமக்கு மிகவும், பழக்கமான சுப்பராமன் இருதய நோயாளியாக ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி அவருக்கு எப்படியோ தெரிந்துவிட்டிருந்தது. அவரைப் பார்க்க ஒரு நாள் மாலை வந்திருந்தார்.

'எங்கள் பக்கத்து வீட்டுப் பெண் லதா. இவள் இல்லா விட்டால் நான் அன்னிக்கு மார்வலியில் வீட்டிலேயே போயிருப்பேன்...ரொம்ப தயாள குணம் இந்தப் பெண் ணுக்கு...' என்று என்னை சுப்பராமன், தட்டுத் தடுமாறி மூச்சிறைத்துக் கொண்டு அவருக்கு அறிமுகப்படுத்தி வைத் தார்.

'அப்படியா?' என்று என்னை கங்காதரன் நிமிர்ந்து பார்த்தபோது, என் மனசிலே இதுவரை வராத ஒரு பட படப்பு ஏற்பட்டது எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

கொஞ்சம் நேரம் பேசிவிட்டு, நான் வீட்டுக்குக் கிளம்பினேன்.



'நான் காரில்தான் போகப் போகிறேன். ஆட்சேபனை இல்லை என்றால் உங்களை வீட்டில் கொண்டு விட்டு விடு கிறேன்...' பதிலுக்கு என் முகத்தை அவர் ஆவலுடன் பார்த்தார். முன்பின் தெரியாத மனிதர் காரில் கொண்டு விடுகிறேன் என்றாலே நமக்கெல்லாம் அலர்ஜியாச்சே. நான் தயங்கினேன். 'வீடு கிட்டத்தான் இருக்கு. நிறைய பஸ் இந்த வேளைக்குக் கிடைக்கும். உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?' என்று தட்டிக் கழிக்கப் பார்த்தேன்.

'கங்காதரன் எங்களுக்கு ரொம்பத் தெரிஞ்சவன் அம்மா கிராமத்திலே நாங்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள். இவர் அண்ணன் எனக்கு ரொம்ப சிநேகிதம். இப்போ அவன் இல்லை.' பெருமூச்செறிந்த சுப்பராமன் அவரைப் பற்றி சிலாகித்துப் பேசி பாரிசு செய்தார்.

'நீங்க பின்னாடி உட்கார்ந்தால், எனக்கு என்னவோ போலிருக்கு. அதனால் முன் பக்கத்து ஆசனத்திலேயே உட்காருங்க. அதுக்கும் மறுப்பு ஏதேனும் உண்டா?' பரிகாசமாக அவர் சிரித்துக் கொண்டு காரின் முன் கதவைத் திறந்து விட்டார்.

என்னைப் போல ஒரு வயது முதிர்ந்த பெண்ணை, அவரைப் போல ஒரு கண்ணியமான மனிதன், பட்டப் பகலில் எனக்குப் பழக்கமான சென்னையில் காரில் என்ன செய்துவிட முடியும் என்கிற துணிச்சல் எனக்குள் மறுப்புச் சொல்லாமல் நானும் புன்னகைத்தபடியே ஏறி உட் கார்ந்தேன். வீட்டுக்குப் போகும் வழியைக் காட்டினேன், வழி நெடுகிலும் வேடிக்கையாக நட்புரிமையோடு பேசிச் சிரித்துக் கொண்டு வந்தது எனக்கு ரொம்பப் பிடித்துப் போச்சு. வீட்டுக்கு வந்ததும் உள்ளே அழைத்தேன். அவர் அலுவலகம், அவருக்கு பைவ் ஸ்டார் ஹோட்டலில் தங்கும் வசதி—கார்வசதி எல்லாம் கொடுத்திருந்தது. எங்களது எளிமையான ஒண்டுக் குடித்தன வீட்டுக் கூடத்தில் வந்து அந்தப் பழைய பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து அம்மா

போட்டுக் கொடுத்த காப்பியைக் குடித்துவிட்டு மகிழ்ச்சியுடன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட பாங்கு, எனக்கு ரொம்ப பிடிச்சுப்போச்சு. பார்த்த அளவில் அவரது வெளிப்படையான வெகுளித்தனமான பேச்சும், சிரிப்பும் மனசை ஈர்த்துக் கொண்டு விட்டன.

அதற்குப் பின்னர், நாலைந்து நாள் அவர் சென்னையில் தங்கியிருந்த போது தினமும் ஆஸ்பத்திரியில் சந்தித்தார். காரில் தினமும் வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டார். அப்போதுதான் ஒருநாள் அவர் கடற்கரை சாலையில் காரை நிறுத்திவிட்டுத் தன்னைப் பற்றிப் பேசத் துவங்கினார்."

"ஆனாலும் உனக்கு ரொம்ப துணிச்சல். நாலு நாள் பழகிவிட்டு அவருடன் தனியாகப் பேச."—மங்களா தோழியின் கரத்தை செல்லமாகக் கிள்ளினாள்.

லதா கலீர் என்று பதிலுக்குச் சிரித்தாள். "ஒருத்தரை நட்புக்கு பிடிக்கிறதுக்கு நாள்தாள் கூடத் தேவையில்லை. நாலே வினாடிகள் போதும். பிடித்தம் ஏற்படாவிட்டால் நானூறு வருஷம் பழகினால் கூட மனம் அசைந்து கொடுக்காது. தெரியுமா?"

"கதை ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கு. மேலே சொல்லு" தூண்டினாள் மங்களா.

"அவர் தன்னைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்ததுமே எனக்குப் பளிச்சென்று புரிந்து விட்டது. பதிலையும் மனதில் தயார் செய்து கொண்டு விட்டேன்."

"அப்படி உன்னாலே அவர் மனசைப் பத்தி சட்டுனு புரிஞ்சுக்க எப்படி முடிஞ்சது?" மங்களா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"ஒரு மனிதன் தன்னைப் பற்றியும், தன் குடும்பத்தைப் பற்றியும் விளக்கமாக மனம்விட்டு ஒளிவு மறைவு இன்றி ஒரு பெண்ணிடம் பேசினால் அவனுக்கு அந்தப் பெண் மேல் அன்பு ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம்."



—மென்மையாகச் சிரித்தாள்.

'காசிநாத்திடம் அன்று இரவு அவன் உதவி தேடிக் கொண்டு அவன் வீட்டில் நுழைந்து அழுதபோது மங்களா பைத்தியக்காரி போல தன்னைப் பற்றி—தன் குடும்பத்தைப் பற்றி— அண்ணாவைப் பற்றி—எல்லாவற்றையும் கொட்டி விட்டாளே? ஆனால் அவர் தன்னைப் பற்றி அவளிடம் ஒரு வார்த்தைகூட மூச்சுவிடவில்லையே? அப்படியென்றால்...' மங்களாவின் மனதில் மின்னலாக ஒரு ஏக்க சிந்தனை இழையோடியது.

"அடுத்தபடி நான் சொல்லப் போவது உனக்குத் திகைப்பைக் கொடுக்கலாம். கங்காதரன் ஐந்து வருஷங்களுக்கு முன்னர் தமது மனைவியை இழந்து விட்டவர். அவரது மூத்த மகன் டாக்டராக தன் மனைவியுடன் ஸ்டேட்ஸில் வாழ்கிறானாம். அவருடைய ஒரே பெண்ணும் கல்யாணமாகி தன் கணவனுடன் குவைட்டுக்குப் போய் விட்டாளாம். கொலாபாவில் அவருக்குச் சொந்தமாக ஒரு பிளாட் இருக்கிறது. சமையற்காரன் வடித்துப் போட்டதைத் தின்று விட்டுத் தனிமையாய் வாழ்ந்து அவருக்கு அலுத்துப் போய் விட்டதாம்."

"இரண்டாவது தாரமாகவா கல்யாணம் செய்துக்கப் போறே? காதல் கல்யாணம்னு சொன்னியே?" திகைத்தாள் மங்களா.

"காதலுக்கு கண் இல்லை என்பார்கள் இல்லையா? இரண்டந்தாரம் மூன்றாந்தாரம் என்று பார்த்துண்டு காதல் ஏற்படறதில்லையே? மேலும் எனக்கும் கொஞ்சமாவா வயசாகிறது? இந்த ஆகஸ்டோட முப்பது முடியப் போகிறது. அவருக்கு நாற்பத்தாறு ஆகிறது. சின்ன வயதிலே அவருக்குக் கல்யாணமாகி விட்டதாம். இருபத்திரண்டு வயசிலே தகப்பனாராகி விட்டாராம். எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சுப் போச்சு என்னைக் கல்யாணம் பண்ணிப்பியான்னு அவர் கேட்டதும் நான்ஒப்புதல் கொடுத்து விட்டேன்."

"ஒரு ரெடிமேட் குடும்பத்தின் தலைவியாகப் போறேன்னு சொல்லு." கேலியாகச் சிரித்தாள்.

"ஆமாம். உண்மைதான். என் தாயாரை தவிக்க விட்டு பம்பாய்க்கு அவரோட கிளம்புவது சாத்தியப்படாதே என்றுதான் தயங்கினேன். மாமியாரையும் கூட தம் வீட்டில் கடைசி வரை வைத்து ஆதரிக்க ஒப்புக் கொண்டு விட்டார், கல்யாண செலவு முழுவதும் அவருடையது. மூத்தாளின் நகைகளில் சிலவற்றை மகளுக்குக் கொடுத்து விட்டு சிலவற்றை வைத்திருக்கிறாராம் அந்த நகைகளை எனக்குத் தரப்போகிறார். பம்பாய் பிளாட்டை என் பெயருக்கு எழுதி வைக்கப் போகிறார். தமக்கு ஏதாவது ஆகி விட்டால் நான் தவிக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு இன்ஷுரன்ஸ் பாலிசியின் பணம் முழுவதும் எனக்குச் சேர வேண்டும் என்று மாற்றி அமைக்கப் போகிறார். அவரது உயிலில் எனக்குக் கணிசமானதொரு தொகையை ஒதுக்கி வைக்கப் போகிறார். ஒரு பெண்ணுக்குப் பொருளாதாரப் பாதுகாப்பும்-உணர்வுகளுக்குப் பாதுகாப்பும் ஒருங்கே வழங்க மிகவும் துணிவுடன் ஒருவன் முன் வந்தால் அவன் எத்தனாவது தாரக்காரனாக இருந்தால் என்ன? எனக்கு அவர் மேல் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டன."

"எப்படியாவது நீயும் அவரும் சந்தோஷமாக வாழ்ந்தால் சரி...அதுவே என்மனசுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்." மங்களா பாராட்டினாள்.

"இத்தனை வயசுக்குமேல் என் வயசையொத்த ஒருவனைத் தேடி, அந்த இளைஞனுக்கு வரதட்சிணை கொடுத்து, அவனுக்கு அடிமையாக சலாம் போட்டுக் கொண்டு, அவன் சொல்லும் அறுவை ஜோக்குகளைக் கேட்டு -கூடச் சிரித்து கொண்டு போலியாக என்னால் வாழ முடியவே முடியாது...என் உடம்பு முதிர்ந்து விட்டது போல உணர்வுகளும் கொள்கைகளும் எண்ணங்களும் முதிர்ந்து விட்டிருக்கின்றன. கங்காதரனைப் போன்று வாழ்க்கையில் அனுபவப் பட்ட கண்ணியமான-பண்பான மனிதனுடன் தான் என் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள முடியும். எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். மனம் விட்டுப் பேசி சிரிக்க முடியும். அதனால்தான் நான் அவரை மணந்து கொள்ள மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டேன். புரிகிறதா? பிறகு அவர் புறப்பட்டு பம்பாய்ச் சேர்ந்துவிட்டார்...அதற்கு பின் சுப்பராமன் காலமாகி விட்டார்...இடையே நாட்கள் ஓடின. போனவாரம் அவர் வந்து அம்மாவிடம் விவரமாக பேசினார். அம்மாவும் ஒப்புதல் கொடுத்து விட்டாள். புதன்கிழமை எங்களுக்குக் கல்யாணம். புடவைகள் கூட வாங்கியாச்சு. நேற்று அவர் எனக்குப் பரிசாகக் கொடுத்த இந்த மோதிரத்தை நீ பார்க்கலையே..." லதா சிரித்தபடி தன் இடது கையை அவள் முன் நீட்டினாள்.



மெல்லிய நீண்ட அவளது மோதிர விரலில் ஒரு வைர மோதிரம் பளபளத்துக் கொண்டிருந்தது.

"கல்யாணத்தன்று மற்ற நகைகளைக் கொண்டு வந்து போடப்போகிறார்...நான் அதைப்பற்றி கவலைப் படவில்லை அவரது பிள்ளையும், பெண்ணும் இந்தக் கல்யாணத்திற்கு ஒத்துக்கொள்ள வேணுமே என்று பயந்துண்டு இருந்தேன். வேண்டாத ஒரு சிறிய தாயாக அவர்கள் வீட்டுக்குப் போக என் மனம் சங்கடப்படும். நல்லவேளை, அவர்கள் இருவரும் இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதம் தெரிவித்து விட்டார்கள். அதுவே எனக்குப் பெரிய சந்தோஷமாக இருக்கு."

"இத்தனை விஷயங்கள் நடந்திருக்கு...நீ என்னிடம் சொல்லாம மூடி வச்சது மன்னிக்க முடியாத குற்றம்..." மங்களா குறைப்பட்டுக் கொண்டாள்.

"இல்லை, ஒரு குழந்தை ஆசை அதிகத்தினால் பலூனுக்கு அதிகக் காற்றை ஊதி அது டப்பென்று வெடித்து விட்டால் எப்படியிருக்கும்...அதுபோல நான் அவசரப்பட்டு உன்னிடம் சொல்லி—இந்தக் கல்யாணம்

நடக்காது போய்விட்டால் ரொம்ப ஏமாந்து போய்விடு வேனே? அதனால்தான் சொல்லலை. கோவிச்சுக்காதே ...இங்கே நான் இன்னிக்கு வருமுன் அவர் தங்கியிருக்கிற ஹோட்டலுக்கு போன் பண்ணிட்டுதான் வந்தேன், சாயங் காலம் அவர் இங்கே வந்து என்னை அழைத்துப் போக காருடன் வருவார். அப்போது உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்—சரிதானே'' லதா மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

அன்று மாலை கங்காதரன் காரை வேகமாக ஓட்டிக் கொண்டு ஹாஸ்டலுக்குள் வந்தார். தயாராக தோட் டத்திலேயே காத்துக்கொண்டு அவர்கள் இருவரும் நின் றனர், வண்டியினின்று இறங்கிய அவரைப் பார்த்து மங்களாவுக்குச் சட்டென்று மனதில் கொஞ்சம் ஏமாற்றம் கமலா ஆரஞ்சுப் பழத்தை உள்ளங்கையில் வைத்து அழுத்தி, சாறு பிழிந்து சக்கையாகிவிட்டது போன்ற தோற்றம். சிறிது நேரம் மூவரும் சிமெண்ட் ஆசனத்தில், அமர்ந்துபேசிக்கொண்டிருந்தனர்.வேடிக்கையாகப்பேசிவிட்டு பளிச்சென்று அவர் சிரித்தபோது அந்த முகத்திலே ஒளிவிட்ட அலாதி களையைக் கண்டு மங்களா பிரமித்துப் போனாள்.

லதா புத்திசாலிப் பெண். அவள் ஆழமாக ஒரு மனி தனைக் காதலிக்கவேண்டுமென்றால் அவருக்கு அதற்குப் பல தகுதிகள் இருக்கவேண்டும். கங்காதரன் படித்தவர். பெரிய பதவியில் வசதியாக வாழ்கிறவர். புத்திசாலித் தனமாக, பண்பு குறையாது சிரிக்க சிரிக்கப் பேசத் தெரிந் தவர். லதா மயங்கிப் போனதில் வியப்பில்லை. தனக் குள்ளே எண்ணிக் கொண்டாள்.

அன்று இரவு மங்களாவுக்கு உறக்கமேயில்லை. அந்த அதிசய மனிதர் கங்காதரனைப் பல தடவைகள் நினைத்துப் பார்த்தாள். லதாவும் அவரும் நடத்தப்போகும் வாழ்க் கையை கற்பனை செய்து பார்த்தாள். விரைவில் உயிருக் குயிரான தோழியைப் பிரிய நேருமே என்கிற அச்சம் ஒரு புறம் அவளை அலட்டிக்கொண்டு தான் இருந்தது.



அந்தப் புதன்கிழமை அவள் லீவு எடுத்துக் கொண் டிருந்தாள். காலை ஒன்பது பத்து மணி இடைவெளியில், லதாவின் திருமணம் மிக எளிய முறையில் வடபழனியில் நடந்தேறியது. மணமக்கள் இருவரும் பெங்களூருக்கு ஒரு வாரம் சென்று தங்கிவிட்டுத் திரும்பினார்கள். அதற்குள் காமு அம்மாள், ஊருக்குக் கிளம்ப மூட்டை கட்டி விட்டிருந் தாள்.

அதிகப்படியாக சாமான்கள் இருந்ததால், அவர்கள் மூவரும் பம்பாய்க்கு ரயில் வண்டியில்தான் பயணப் பட்டனர். காலை புறப்பட்ட தாதர் எக்ஸ்பிரஸில்தான் கிளம்பினார்கள். அன்று காலையில் கொஞ்ச நேரம் வேலைக்குத்தாமதமாக வருவதற்கு மானேஜரிடம் முன்ன தாகவே மங்களா அனுமதி வாங்கிக்கொண்டு ரயில் நிலை யத்திற்குப் போயிருந்தாள்.

கல்யாணத்திற்குப் பின்னர் லதாவிற்கு இளமை அதி கரித்துவிட்டது போன்றதொரு தோற்றம். மாந்தளிர் மேக வண்ண காஞ்சிபுர பட்டுச் சேலையும், தலை நிறைய மல்லிகைப்பூவும், நெற்றியில் பளிச்சிட்ட குங்குமமுமாக லதா சிரித்துக்கொண்டு—கண்களில் மை கரிய தோழிக்கு விடை கொடுக்க கை அசைத்தபோது, வண்டி மெல்ல நிலையத்தினின்று நகர ஆரம்பித்தது.

''அடிக்கடி கடிதாசி போடு''—காமு அம்மாள் தலையை நீட்டிப் புன்முறுவலித்தாள். வண்டி வேகத்தைக் கூட்டிக் கொண்டு நகரத் தொடங்கியபோது, மங்களாவால் அழுகையை அடக்கவே முடியவில்லை.

# 24

வேலைக்குப் போவதும் ஹாஸ்டலுக்குத் திரும்புவதுமான ஒரு வெறுமையான வாழ்க்கையில் ஒரு மாத காலம் ஓடிச் சென்றுவிட்டிருந்தது பகல் உணவின் போது அலுவலகத்து அறையிலேயே உட்கார்ந்து கொண்டு சாப்பிடும்போது பதஞ்சலி மேஜைமீது மௌனமாக இருக்கும் தொலைபேசி மங்களாவின் மனத்தைத் துன்புறுத்தியது.

லதா மட்டும் சென்னையில் தொடர்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்தால் வாரத்திற்கு இருமுறைகளாவது அவளை உணவு நேரத்தின்போது அழைத்து ஊர் வம்பை அவிழ்த்துக் கொட்டிச் சிரிக்க வைத்திருப்பாளே? 'ஹலோ!' என்று நேச பாவத்துடன் அவளைத் தொலைபேசியில்கூட அழைக்க அவளுக்கு இப்போது யாருமே இல்லையே!

ஸ்வப்பனா ஈட்டிங் ஹவுசைத் தாண்டி பஸ் நிலையத்திற்கு நடக்கும்போது சுமையாக துக்கம் நெஞ்சை அழுத்தியது.

எத்தனை தடவை, 'இந்த முறை நான் வாங்கித் தருகிறேன். இப்போ நீ ஸ்வப்பனாவின் ஸ்பெஷல் தயிர் வடையை ஒரு கை பார், ரொம்ப பிகு பண்ணிக்காதே' என்று அன்போடு உபசரித்திருக்கிறாள் லதா.

'ஏ மக்குப் பெண்ணே! இந்தக் காசட் டேப்ரிகார்டரை என் ஆபீசில் வேலை பார்க்கும் தம்பிபோல இருக்கும் கிளார்க் சுந்தரத்திடம் கடன் வாங்கிண்டு வந்தேன். இந்தப் பாட்டைக் கேள்' கையோடு கொண்டு வரும் காசட் டேப்ரிகார்டரை...கடற்கரைச் சாலையில் பாட வைத்து வேடிக்கையாகப் பேசுவாளே...?

தான் சாப்பிட விரும்புவதை சிநேகிதியும் சாப்பிட வேண்டும். தான் ரசிக்கும் பாடல்களை அவளும் ரசிக்க வேண்டும். தன்னைப்போலவே கவலைகளை உதறிவிட்டு மனம் விட்டுச் சிரித்துக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.



எப்படிப்பட்ட தோழி லதா! அவள் இல்லாமல் சிறகொடிந்த பறவையைப் போல எப்படித் தவிக்கிறாள்?

அன்று ஏற்கனவே அவளுக்குப் பொறுக்க முடியாத தலைவலி. லேசாகக் காய்ச்சல் வீசுவது போன்று உடலில் ஒரு எரிச்சல். தோழியின் நினைவிலே கலங்கிய கண்களிலிருந்து பெருகிய நீரை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

உணவு நேரத்தின் போது சாலையின் எதிர்ப்பக்கத்து மருந்துக் கடையில் தலைவலி மாத்திரை ஒரு பட்டை வாங்கியிருந்தாள்

அதில் ஒன்றை உரித்து வாயில் போட்டுக் கொண்டு பையன் கொண்டு வைத்திருந்த தண்ணீரை இரண்டு வாய் விழுங்கினாள். சிறிது பொழுதில் எச்சிலை விழுங்க முடியாது வலித்த தொண்டைவலி சற்றுக் குறைந்தது. ஆனாலும் ஃபைல்களில் கவனம் செலுத்த முடியாதபடி அழுத்தமானதொரு தலைவலி மண்டையை இடித்தது.

கொளுத்தும் வெயிலுக்குப்பின் கொட்டிய மழையோ என்னவோ, அவளுக்கு நல்ல குளிரும் காய்ச்சலும் வந்து விட்டிருந்தன. பற்களைக் கடித்துக் கொண்டு மாலை அலுவலகம் மூடும் நேரத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த மானேஜர் அறையிலிருந்து அழைப்பு வந்தது.

முடித்து விட்டிருந்த ஃபைல்களைக் கட்டிச் சுமந்து கொண்டு உடனே எழுந்து சென்றாள்.

தனது வேலையிலிருந்து நிமிர்ந்த காசிநாத் ஒருகணம் துணுக்குற்றான். "மிஸ் மங்களா! உங்க உடம்புக்கு...?" அனுதாபத்துடன் அவன் கேட்கும் முன் அவள் சொல்லி விட்டாள்.

"நானே நேரில் வந்து உங்ககிட்டே கேக்கணும்னு இருந்தேன். நீங்களே இப்போது கூப்பிட்டது நல்லதா

போச்சு, இன்னிக்கு எனக்குக் கொடுத்த எல்லா வேலைகளையும் முடிச்சுட்டேன். ஆபீஸ் முடியும் நேரம்கூட ஆயிடுந்து...காலையிலிருந்து எனக்கு தலைவலியும் காய்ச்சலும் தொடங்கிவிட்டிருக்கு. இப்ப இருக்கிற நிலையிலே நாளைக்கு வேலைக்கு வரமுடியும்னு தோணலை. அதனால் நான் ஒரு நாலு நாளைக்கு லீவு போட விரும்பறேன் ஸார்." திணறிக் கொண்டு நிற்க முடியாது நடுங்கியபடி ஃபைல் கட்டை மேஜை மீது வைத்தாள்.

"அடடா! இதை முன்பே என்னிடம் சொல்லியிருந்தா உங்களைக் காலையிலேயே ஹாஸ்டலுக்கு அனுப்பியிருப்பேனே! உடம்புக்குச் சுகமில்லாதபோது ஏன் இத்தனை வேலைகளையும் செய்தீங்க? பரவாயில்லை... இப்படி உட்காருங்கோ. முதன் முதலாக தன் பதவியின் நிலையை ஒதுக்கிவிட்டு...நாற்காலி ஒன்றை நகர்த்திப் போட்டு உபசரித்தான் காசிநாத்.

நிற்க முடியாது தவித்த மங்களா சட்டென்று உட்கார்ந்து கொண்டாள். கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு எழுந்தான் காசிநாத்.

"இந்த நிலையில் நீங்கள் பஸ் பிடித்து ஹாஸ்டலுக்குப் போவது சாத்தியமில்லை. அதனால் நானே வீட்டுக்குப் போகு முன் என் காரில் உங்களை ஹாஸ்டலில் விட்டு விட்டுப் போகிறேன்...சரிதானே?" மெல்லியதாக அவன் முறுவலித்த போது மங்களாவால் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை.

'வேண்டாம். நானே ஒரு டாக்சி பிடித்துப் போய்க் கொள்கிறேன்.' என்று அழுத்தலாக பதிலளிக்க அவளுக்குத் துணிவிருக்கவில்லை.

அந்த ராத்திரி வேளையில் அவனே அவள் வீட்டிற்குள் ஓடி வலிய உதவும்படி கேட்டுக் கொண்டு விட்ட பின் இனி மறுப்புச் சொல்ல வாய்ப்பு எது?



ஆனால் பாம்புக்கண் பதஞ்சலி பார்த்துவிட்டால்... கதை கட்டிவிடுவாரே! உள்ளூரக் கொஞ்சம் அச்சமாகவும் இருந்தது.

அவள் நினைத்தபடியேதான் ஆயிற்று. அலுவலக நேரம் முடிந்ததும் அனைவரும் கிளம்பினார்கள். காசிநாத்தின் உத்தரவுப்படியே அவள் அவனைப் பின் தொடர்ந்து கீழே இறங்கித் தோட்டத்திற்கு வந்தாள். ஓரமாக ஒரு இடத்தில் அவளை நிற்கச் சொல்லிவிட்டு அவன் தன் காரை ஓட்டிக் கொண்டு அருகில் வந்து நிறுத்தினான். பின் கதவைத் திறந்து அவளை ஏறிக்கொள்ளச் சொல்லி உபசரித்தான்.

அப்போது மங்களா ஓரக்கண்ணால் பார்த்து விட்டாள். டிபன்கெட், பத்திரிகைகள் முதலியவற்றால் வயிறு உப்பியிருந்த துணிப்பையை தூக்கிக்கொண்டு வெற்றிலையைக் குதப்பியபடி பின்னால் ஆடி அசைந்தபடி வந்த பதஞ்சலி, தன் அருகே வந்துகொண்டிருந்த தாமோதரனின் தோளைத் தட்டினார். கண்களைச் சிமிட்டினார்.

'பார்... பார்... பட்டணத்தில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்' என்று அவர் கண்கள் பேசின. நாளைக்கு அலுவலகமே அமர்க்களப்படப் போகிறது. ஆபீஸ் பையன்வரை, மானேஜருக்கும் மங்களாவுக்கும் என்று கிசுகிசுப்பார்கள். கடவுளே! இவர் கண்களிலா தென்பட வேண்டும்?

காசிநாத் தன் செய்கையைப் பிறர் கண்டு ஏதேனும் பேசக் கூடும் என்று கவலைப்பட்டதாகத் தெரியவேயில்லை.

காரை ஓட்டிக்கொண்டே மங்களாவிடம் அவன் பேசிக் கொண்டே சென்றான்.

"காலையிலே நீங்கள் லீவு எடுத்துக்கொண்டு போயிருக்க வேண்டும். காய்ச்சலுடன் வேலை செய்தது தப்பு. போனதும் ஹாஸ்டல் தலைவியிடம் சொல்லித் தக்க வைத்திய உதவி எடுத்துக்கோங்க. பரிபூரண குணமாகி

விட்டது என்று டாக்டர் சொன்ன பிறகு வேலைக்கு வந்தால் போதும் அதுவரை உங்களுக்கு சிக் லீவு என்ற சலுகை உண்டு. இப்போ உங்களுக்குச் சம்பள உயர்வுடன் வேலை உயர்வும் ஏற்பட்டிருக்கு. அதற்கு வைத்திய செலவு சலுகை உண்டு. மறக்க வேண்டாம். டாக்டர் பில், மருந்துக்கான செலவு ரசீது எல்லாவற்றையும் அலுவலகத்தில் சேர்த்து விட்டால், பின்னர் அந்தத் தொகையைச் சரிக்கட்டித் தர எங்களால் முடியும்.''

பச்சைக் குழந்தைக்குப் பன்னிப்பன்னிச் சொல்வதுபோல் விளக்கமாக அன்பாகக் கூறிக்கொண்டே வண்டியை ஓட்டிச் சென்றான்.

ஹாஸ்டலில் இறங்கியதும் கூடவே வந்து தலைவியிடம் மங்களாவின் உடல் நிலையைப் பற்றிக் கூறிவிட்டு கவனித்துக் கொள்ள சிபாரிசு செய்துவிட்டுக் கிளம்பினான்.

மாடி அறைகளைக் கவனிக்கும் பணிப்பெண்கள் பரப் பரப்புடன் அவளை அழைத்துச் சென்று அவள் அறையில் சுத்தமான படுக்கை விரிப்பின் மீது படுக்க வைத்தனர்.

சிறிது பொழுதில் ஹாஸ்டலைச் சேர்ந்த டாக்டர் காந்தாமணி அம்மாள் வந்துவிட்டாள். நோயாளியைப் பரிசோதித்து ஊசிபோட்டு—சாப்பிடத் தேவையான மருந்து களை எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

மங்களா அறையைவிட்டு அனாவசியமாக எழுந்து கொள்ளவே தேவை இருக்கவில்லை. ஒரு பணிப்பெண் அடிக்கடி உள்ளே வந்து அவளைக் கவனித்துக் கொண்டாள். தலைவி வந்து விசாரித்துவிட்டுப் போனாள். வைத்தியர் உத்தரவுப்படியே ஒரு பணிப் பெண் இரவு சாப்பிடக் கஞ்சியும்-படுக்குமுன் அருந்த பாலும் கொண்டு வந்து கொடுத்து உதவினாள்.

இரண்டே நாளில் காய்ச்சல் மறைந்து—உடலில் தெம்பு கூடி அவள் எழுந்து உட்கார்ந்துவிட்டாள்.



பணத்திற்குத்தான் இந்தப் பராமரிப்பு கிடைக்கிறது என்றாலும் பணிப் பெண்ணிலிருந்து-தலைவி-வைத்தியர் வரை அவளை எப்படி கவனித்துக் கொண்டார்கள்?

மாதச் சம்பளத்தின் பெரும்பகுதியை மன்னி கையில் கொட்டிக் கொடுத்தும். சேமிப்பு எல்லாவற்றையும் பாங்கியிலிருந்து எடுத்து அண்ணாவிடம் சமர்ப்பித்தும், அப்பா வைத்துவிட்டுப் போன சொந்த நகைகளை ஷைலாவின் வாழ்க்கை மலர தியாகம் செய்தும்-ஒரு சமயம் அவளுக்கு நேர்ந்த அனுபவத்தை மறக்க முடியுமா?

இப்படித்தான் ஒரு கோடை நாளில் திடீரென்று கொட்டிய மழையில் நனைந்து கொண்டு வீடு திரும்பியதால் அடுத்தநாளே கடும் தலைவலியும் சளியும் பிடித்துக் கொண்டு விட்டன. காய்ச்சலும் குளிருமாக வீட்டுக்குத் திரும்பினாள்.

''மன்னியும், ஷைலாவும் சினிமா பார்க்கப் போயிருக்கா ...ராத்திரி எல்லோருக்கும் ரொட்டியும் சப்ஜியும் பண்ணி வச்சா போறுமாம். வந்ததும் வராததுமா அண்ணா உத்தரவு போட்டான்.

''உடம்பெல்லாம் ஒரே வலி—கணகணன்னு ஜுரம் போல தலைபாரமா இருக்கு'' என்று அவள் கூறி முடிக்கு முன் அண்ணா கோபத்துடன் வெடித்தார்.

''எனக்குக் கூடத்தான் ஜலதோஷம். அதற்காக ஆபீசுக்கு மட்டம் போட்டேன். கொஞ்சம் சளி பிடிச்சுண்டு இருக்கு...ஒரு ஆஸ்பரோவை போட்டுண்டா சரியாயிடும்...''

கத்தி அழவேண்டும் போன்ற துக்கம் அவளுக்கு. அப்பா உயிருடன் இருந்தால் காய்ச்சலுடன் அவள் அடுப் பருகே நிற்க அனுமதிப்பாரா?

சினிமாவிலிருந்து வரும்போதே மன்னி தலையைப் பிடித்துக்கொண்டு வந்தாள். அவளுக்கு அவள் தலைவலி தான் பெரிதாக இருந்தது. வீடு தூள்பட்டது.

ஷைலா ஒப்புக்குக்கூட, 'ஏன் அத்தை உடம்புக்கு என்ன கண்ணும் முகமும் சிவந்திருக்கே'ன்னு கேட்கவில்லை.

ஆனால கூராக்கித் தீட்டி நகப்பூச்சில் மின்ன வைத்துக் கொண்டிருக்கும் நகங்களில் ஒன்று சிறிது ஒடிந்து விட்டால் கூட பிராணன் போய்விட்டது போல ஷைலா அலறிவிடுவாள். அவர்களுக்கு அவர்களைப் பற்றியேதான் நினைப்பு. சுயநலக்காரர்கள்.

அந்த வார முழுவதும் ஓய்வாக இருந்துவிட்டு மறுவார துவக்கத்திலே அவள் அலுவலகம் போகலாம் என்று வைத்தியர் உத்தரவு கொடுத்து விட்டார்.

பகல் உணவுக்கு சாப்பாட்டு அறைக்கு இறங்கி வந்து சாப்பிட்டாள். பின்னர் நிம்மதியாக உறங்கினாள். மாலை விழித்துக் கொண்டு எழுந்து முகத்தைக் கழுவி முடியைச் சீராக்கிக் கொண்டு சுத்தமானதொரு நூல் புடவையை எடுத்து உடுத்திக் கொண்டு கீழே வந்தாள். காப்பியைச் சாப்பிட்டதும் பொது அறையில் சற்று நேரம் அமர்ந்திருக்க நுழைந்தாள்.

"உங்களைப் பார்க்க உங்கள் ஆபீஸ் மானேஜர் வந்திருக்கிறார். தோட்டத்தில் காத்திருக்கிறார்." பணிப்பெண் ஓடிவந்து அறிவித்தாள். நன்றி உணர்வும் மகிழ்ச்சியும் கட்டுக்கொள்ளாது மங்களா தோட்டத்திற்கு விரைந்தாள்.

பட்டுக்கரை வேஷ்டியும், லக்னோவும் குர்த்தாவும் அணிந்து கொண்டிருந்த காசிநாதன் அவள் கண்களுக்கு மிக்க வசீகரமாகத் தெரிந்தான். வணக்கம் தெரிவித்துவிட்டு சிமெண்ட் ஆசனத்தில் ஓரத்தில் அமர்ந்து கொண்டான்.

"டெலிபோன் மூலம் உங்கள் தலைவிகிட்டே பேசினேன். திங்கள் கிழமையிலிருந்து வேலைக்கு வரலாம்னு டாக்டர் உத்தரவு கொடுத்துட்டதாக தெரிஞ்சுது...நேரில் பார்த்து விசாரித்து விட்டுப் போகலாம்னு வந்தேன்..."

மங்களாவின் நெஞ்சு பரவசத்தில் துடித்தது. அவளைப் பற்றி இப்படி ஒரு அக்கறையா...? அப்படியென்றால்?



அது சமயம் தோட்டத்திற்குள் விரைந்த பியட் ஒன்று அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தைத் தாண்டி சற்று தூரத்தில் வந்து நின்றது. கதவைத் திறந்து கொண்டு இறங்கிய மனிதனைக் கண்டு ஒரு கணம் அதிர்ந்து போய் விட்டாள் மங்களா.

அத்தான் வஸந்த், ஷர்ட் பித்தான்கள் வெடித்துவிடும் போலப் பருத்து விட்டிருந்தான். ஆமாம்! அவனுக்கு அங்கே என்ன வேலை? கணவன் பின்னால் காரிலிருந்து இறங்கி நின்றவள்...அந்தக் கொடி ரஜனியா? பீப்பாயைப் போல கணவனுடன் போட்டியிட்டுக் கொண்டு உப்பி விட்டிருக்கிறாளே?

வஸந்தின் விஷமக் கண்கள் காசிநாத்தையும், அவளையும் மாறி மாறிக் கவனித்தன வேகமாக அருகில் வந்தான்.

"கேள்விப்பட்டேன்...இப்போ நீ தனியா இங்கே ஹாஸ்டலில் வந்து தங்கியிருக்கிறாயாமே? கேட்க கஷ்டமா இருந்தது." சூள் கொட்டினான். ஊர் வம்பை உழக்கால் அளக்கும் சுபாவம் அவனை இன்னமும் விட்ட பாடில்லை. மங்களாவுக்கு எரிச்சலாக இருந்தது.

"சௌக்கியந்தானே?..." அரை மனதுடன் விசாரித்தாள்.

வம்புக்கார வஸந்த் அத்துடன் விட்டுவிடவில்லை. "நான் யார்னு அவருக்கும் அவர் யார்னு எனக்கு அறிமுகம் செய்து வைக்கலையே? ஹி...ஹி..." தெத்துப்பற்கள் தெரிய ராக்ஷஸ சிரிப்பு சிரித்தான். "இவர் நான் வேலை பார்க்கும் நிறுவனத்தின் மானேஜர், திரு காசிநாத்." வெறுப்புடன் கூறிவிட்டு மங்களா காசிநாத் பக்கம் திரும்பினாள்.

"இவர் என் அத்தை மகன் வஸந்த்...அவர் மனைவி ரஜனி" என்று சுருக்கமாக முடித்தாள்.

"ரஜனியின் தங்கைக்கு இங்கே ஒரு பாங்கில் வேலை கிடைச்சிருக்கு. தங்க ஒரு நல்ல ஹாஸ்டல் தேவையின்னு

தேடிண்டு இருந்தோம். டெலிபோன் செய்துகேட்டோம் தலைவி இடமில்லைன்னு சொல்லிட்டா. நேரே வந்தா ஒரு சமயம் கிடைக்காதாங்கற ஆவலில் வந்திருக்கோம்... உங்களைச் சந்தித்ததைப் பற்றி ரொம்ப சந்தோஷம் மிஸ்டர் காசிநாத்...ஒரு காலத்திலே மங்களாவை அவள் அப்பா எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க விரும்பினார். ஆனால் ஜாதகம் ஒத்துக்கலை...ஹி...ஹி'' வஸந்த் உரக்கச் சிரித்தபடி காசிநாத்தின் கையைப் பிடித்து அழுத்திக் கை குலுக்கினான்.

மங்களா வெட்கத்தில் முகம் சிவந்து நெஞ்சு பதறிப் போனாள்.

'அந்தக் கதையெல்லாம் யார் இப்போ இவனைக் கேட்டது? விவேகம் இல்லாத மடையன்?' பற்களைக் கடித்துக்கொண்டு அவள் அவனை முறைத்துப் பார்க்கு முன் வஸந்த் விடை பெற்றுக் கொண்டு தன் குண்டு மனைவியை தன் முன்னே மெல்லத் தள்ளிக் கொண்டு நகர்ந்து விட்டான்.

காசிநாத் அவனிடம் சொல்லிக்கொண்டு கிளம்பி வெகு நேரம் ஆகியும், தோட்டத்தை இருள் சூழத் தொடங்கிய பின்னரும், முட்டை விளக்கு பளிச்சென்று எரியத் தொடங்கிய பின்னரும், சாப்பாட்டறை மணி ஒலித்து முடிந்து சில நிமிஷங்கள் ஆகியும் அவள் அசைவற்று அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

'இந்த அத்தான் வஸந்த் தன் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்து விடுவானா...? ஒரு பெரிய கதையைத் திரித்து பரப்பத் தொடங்கிவிடுவானோ?'

ஆபீசில் பதஞ்சலி—இங்கே வஸந்த்...இவர்கள் எல்லாம் ஏன் அவள் வாழ்க்கையில் புகுந்து குழப்ப வேண்டும் மங்களா கவலைக்குள் மூழ்கி கல்லாக சமைந்து போனாள்.

# 25

தங்கள் நிறுவனத்தின் எல்லா அலுவலகங்களையும் பார்வையிட்டுவிட்டுக் கடைசியாக சென்னை அலுவலகத்தைக் கவனிக்க ஸீனியர் டைரக்டர் பிரசாத் வருகிறார் அன்று காலை விமானத்தில் வந்து இறங்கப்போகிற வரை காசிநாத் சந்தித்து அழைத்து வரப்போகிறார் என்ற செய்தி எப்படியோ ஒழுகி எல்லோரையும் விழிப்படையச் செய்திருந்தது. பரபரப்பும் சுறுசுறுப்புமாக அன்று காலை அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

மானேஜர் காசிநாத்தின் கட்டுப்பாட்டில் பெட்டிப் பாம்பாகி விட்ட பதஞ்சலி, பிரசாத்தின் வருகையைக் கேட்டு துவைத்த துணியாக துவண்டு விட்டிருந்தார். வழக்கமாக முகம் முழுவதும் பளிச்சிடும் தம் பற்களை உதடுகளால் இறுக்கமாக மூடிக்கொண்டு ஃபைல்களை ஒழுங்கு செய்து கொண்டிருந்தார். டைப் இயந்திரங்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தன. எல்லோரிடமும் ஒரு அழுத்தமான ஆவல்.

தோழி லதா கணவனுடன் ஊருக்குச் சென்ற பின்னர் சுருக்கமாக ஒரு கடிதம் எழுதியிருந்தாள். அதற்குப் பின் நீண்டதொரு மௌனம். அலுவலக முகவரிக்கு தனக்கு கடிதம் ஏதாவது வருகிறதா என்று மங்களா நித்தமும் எதிர் பார்த்து ஏமாந்து கொண்டிருந்தாள்.

''டைரக்டர் நம்ப மானேஜரோட மொத்த வியாபாரக் கிடங்குகளைப் பார்த்துவிட்டு வந்துட்டு இருக்காராம்.' எப்படியோ கிடைத்த தகவலை ஆபீஸ் பையன் தேநீர் கோப்பையுடன் விநியோகித்தான்.

அப்படியே அன்று காலை தபாலில் வந்த ஒரு கடிதத்தையும் மங்களாவின் முன் வைத்தான். லதா அவளுக்கு எழுதியிருந்த கடிதம் அது. கையில் எடுத்தபோதே கனமாக

இருந்தது. பக்கம்பக்கமாக வரிந்து தள்ளியிருக்கும் லதாவின் கடிதத்தை உடனடியாக படிக்க ஆவலாக இருந்தது. ஆனால் எந்தச் சமயமும் டைரக்டர் வரலாம் என்ற அச்சத்தில் சட்டென்று அதைத் தன் கைப்பைக்குள் அடக்கப்படுத்திக் கொண்டு விட்டாள்.

கண்ணாடிக் கதவை அகலத் திறந்து கொண்டு பையன் பணிவாக நின்றான். வியப்பு கலந்த பரபரப்பு எல்லோருடைய தொண்டையையும் அடைத்தது ஒரு தந்தி மூலம் அவர்கள் எல்லோரையும் ஆட்டிப்படைத்த அந்த மனிதர் எப்படியிருப்பார்? உற்றுப் பார்க்க மங்களாவுக்கும் ஆவல். ஆனால் அதே சமயம் அச்சம். ஒரு ஃபைல் குவியலுக்குள் தலையைப் புகுத்திக்கொண்டு விட்டாள்.

"நமஸ்தே..." கம்பீரமான குரலும், டக்டக்கென்று ஒலித்த காலணிகளின் ஓசையும் எல்லோரையும் எழுந்து நிற்கச் செய்தன. வேகமாக மார்பு துடிக்க மங்களா நிமிர்ந்தாள்.

பலதரப்பட்ட வியாபாரங்களைக் கொண்ட அந்த மாபெரும் நிறுவனத்தின் தலைவராக இருக்கத் தகுதி வாய்ந்த கம்பீரமான தோற்றம். கோட்—ஸூட்—டை அலங்காரத்தில், பளபளத்த ஷூக்கள் தரையில் தாளமிட அவர் உள்ளே வந்து நின்றபோது கூரையை தொட்டு விடுவார் போன்ற உயரம் அதற்கேற்ற பருமன்... மிடுக்கான பார்வை...பிரமித்துப்போன மங்களாவின் குரல்... ஒட்டு மொத்தமாக எழுந்த 'நமஸ்தே' சப்தத்தில் ஒளிந்து கொண்டது.

கைகூப்பிக் கொண்டு பணிவாக நின்ற தன்னை அவர் ஏன் அப்படிப் பார்த்தார்...? அவளுக்குள் ஒரு சிறு கலவரம். சிறிது பொழுதில் அவளுக்கு ஆபீஸ் அழைப்பு வந்தது. பையன் மேஜை மீது கொண்டு வந்து வைத்த துண்டுக் கடிதத்தில் காணப்பட்ட குறியீடுகள் கொண்ட ஃபைல்களை விரைவாகத்தேடி அடுக்கி எடுத்துக் கொண்டு அவள் உள்ளே சென்றாள்.



அப்பாவும் பிள்ளையும் அருகருகே அமர்ந்து கொண்டு குடும்ப விஷயங்களைக் கொட்டி அளந்து சிரிப்பது போன்று உள்ளே ஒரு காட்சி. மேஜை மீது கிடந்த பைல்களைத் திறந்துகூட பார்க்காது. காசிநாத் சொன்ன எதையோ கேட்டுவிட்டு... உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருந்தார் பிரசாத்...அவர் உடம்பும், நாற்காலியும் குலுங்கிக் கொண்டிருந்தன. எப்பொழுதும் போல காசிநாத்தின் முகத்திலே லேசாக புன்னகை அரும்பிக் கொண்டிருந்தது.

இருவருக்கும் சாப்பிட சூடான சமூசாக்களோடு—கோப்பைகளில் தேநீரைக் கொண்டு வந்து பையன் வைத்து விட்டுப் பறந்தான்

ஒரு சமூசாவைக் கையில் எடுத்துக் கொண்டு மெல்ல கடித்தபடி திரும்பினார் பிரசாத், எதிரே வந்து நின்ற அவளை ஏற இறங்க உற்றுப் பார்த்தார்.

"இவங்கதான் மிஸ் மங்களா...நம்ப அக்கௌண்ட் செக்ஷனில்..." காசிநாத் முடிக்கவில்லை.

"ஓ! சம்பள உயர்வுக்கு சிபாரிசு செய்யப்பட்ட பெண் தானே? ஐ.ஸி" என்றார் டைரக்டர்.

தோலுரிக்காத வாதுமை பருப்பைப் போன்று லேசானதொரு சுருக்கம்; கன்னத்துத் தசைகள் மீது பரவி கண்களின் கடைசியில் இறுக்கமாவதைக் கவனித்தாள் அவள். மேஜை மீது ஃபைல்களை வைத்துவிட்டு தரையைப் பார்த்தாள். அவர் எதற்காக அப்படி தமக்குள்ளே சிரித்துக் கொள்கிறார்? அவளது காதுகளிரண்டும் வெட்கத்திலே கபகபவென்று எரிந்தன.

"தாங்க்யூ மிஸ் மங்களா." காசிநாத் கணீரென்று சொன்னான். "நின்று கொண்டிருக்கத் தேவையில்லை. நீங்கள் போகலாம்" என்று தொனித்த அந்தக் குரலின் அழுத்தத்தைப் புரிந்து கொண்டாள். சட்டென்று திரும்பி அங்கிருந்து வெளியேறினாள். கதவை முழுவதும் மூடு

மூன் இடுக்கு வழியே புகுந்து புறப்பட்ட பிரசாத்தின் சிரிப்பொலி அவள் காதுகளைக் குடைந்தது.

காசிநாத் மெல்லியதாகப் புன்னகைத்துக் கொண்டிருந்தான். ஆனால் உடம்பெல்லாம் குலுங்க உரத்த குரலில் டைரக்டர் சிரிக்க, மானேஜர் அப்படியென்ன ஒரு நகைச்சுவைக் கதை சொல்லிவிட்டிருப்பார்? மங்களாவுக்குத் தாங்கொணாத வியப்பு. மானேஜருக்கும், டைரக்டருக்கும் இடையே அப்படி ஒரு நெருக்கமான நேச உறவா? அவளது எண்ணங்களின் எதிரொலி போல டைப்பிஸ்ட் மாலினி பதஞ்சலியிடம் தாழ்ந்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தாள்: "மானேஜர் லேசுப்பட்டவர் இல்லை. டைரக்டரை அப்படியே தன் கைக்குள் போட்டு வச்சிருக்கார்." மேலே என்னவோ சொல்ல வந்ததை அவள் டக்கென்று நிறுத்திக் கொண்டு விட்டாள். மங்களாவால் ஊகிக்க முடிந்தது

அத்தனை கெட்டிக்கார மானேஜர் இப்போது மங்களாவின் கைக்குள்ளே!

அலுவலகம் முழுவதும் பரவியிருக்கும் கிசுகிசுக்களை அவள் எப்படி தடுத்து நிறுத்த முடியும்? வெறும் வாயை மெல்கிறவர்களுக்கு அவல் கிடைத்தது போல காய்ச்சலடித்த அன்று காசிநாத் காரில் அவள் போனது பெரிய கதையாகி விட்டிருக்கிறது!

கோபத்தில் கனன்ற விழிகளால் அவர்களிருவரையும் வெறித்துவிட்டு மங்களா தன் இருக்கையில் உட்கார்ந்தாள்.

பகல் உணவின்போதுதான் அவளுக்கு தன் தோழியின் கடிதத்தைப் பிரித்துப் படிக்க நேரம் கிடைத்தது.

அவள் எதிர்பார்த்தபடியே லதா தன் இல்வாழ்க்கையைப் பற்றி வரிந்து தள்ளியிருந்தாள்.

'இப்படிப்பட்டதொரு நிறைவான வாழ்க்கை எனக்கு அமையும் என்று கனவில் கூட நான் நினைக்கவில்லை. என் கணவர் மிகவும் நல்லவர். என் விருப்பு வெறுப்புகளை மதிக்கத் தெரிந்தவர். அதே சமயம் வெகுளியான மனம் படைத்தவர். அம்மா, சமையலை கவனித்துக் கொள்கிறாள். வீட்டு வேலை செய்ய வேலைக்காரி இருக்கிறாள். அவர் அலுவலகம் போனதும்... நான் பொழுதை ஓட்ட நிறையப் புத்தகங்கள் படிக்கிறேன்... டேப் ரிகார்டரில் நிறைய பாடல்களைக் கேட்கிறேன். நிறைய சினிமாக்களை அவருடன் பார்க்கிறேன். வாழ்க்கை சுவாரஸ்யமாக—சுவையாக நழுவிக் கொண்டு போகிறது. உள்ளடங்கிய குளியலறைகள் கொண்ட மூன்று பெரிய படுக்கை அறைகள்—சாப்பாட்டறை— வரவேற்பறை- சமையலறை இத்யாதி வசதிகள் கொண்ட பெரிய ஃபிளாட் எங்களுடையது. அம்மாவுக்கு ஒரு தனி அறை கொடுத்துவிட்டிருக்கிறோம். இப்போது அவளுக்கு வழக்கமாக வரும் வயிற்று வலி கூட மறைந்துவிட்டிருக்கிறது. ஆமாம் மங்களா! ஒரு வேண்டுகோள்—வருஷ முடிவிலே உனக்கு ஒரு மாதம் சம்பளத்துடன் லீவு கிடைக்குமே? அப்போது ஏன் நீ பம்பாய்க்கு வந்து எங்களுடன் தங்கக்கூடாது? அம்மா உன்னை இங்கு வரும்படி கேட்டுக்கொள்கிறாள். என் கணவரும் என்னுடன் சேர்ந்து உன்னை எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக விரும்பி அழைக்கிறார். யோசித்து பார். மற்றவை பிறகு...'

அன்று ஹாஸ்டலுக்குத் திரும்பிய பின்னர், அறைக்குள் போய் உட்கார்ந்துகொண்டு மறுபடியும் ஒரு முறை தோழியின் கடிதத்தை ரசித்துப் படித்தாள்.

தோழி லதாவுக்குத் தாராள மனம். இப்பொழுதுதான் கல்யாணமாகி அவள் கணவனுடன் வாழத் தொடங்கியிருக்கிறாள். அதற்குள் தோழியை அழைத்துத் தன் வீட்டில் சீராட்ட வேண்டுமென்ற ஆவல். மங்களாவுக்கும் மணமான தமக்கைகள் இருக்கிறார்களே அவர்களில் ஒருத்தி எப்பொழுதாவது 'லீவுக்கு நாலுநாள் தங்கி விட்டுப் போக எங்க வீட்டுக்கு வாயேன்' என்று அழைத்திருக்கிறார்களா? ஊஹூம் குளித்து முடித்து வேறு

உடுத்திக்கொண்டு கண்ணாடி முன் தலையை வாரியபடி நின்று கொண்டிருந்தாள். கதவு மெல்ல தட்டப்பட்டது.

"உங்களைக் காண ஒரு அம்மா வந்து பொது ஹாலில் காத்திருக்காங்க." பணிப்பெண் புன்னகைத்து விட்டு மறைந்தாள். கூந்தலை வாரி முடித்து பொட்டு வைத்துக் கொண்டு விரைவாகக் கீழே வந்தாள்.

அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுதான். ஆனாலும் அச்சத்திலே நெஞ்சு படபடத்தது. எப்படி சமாளிக்கப் போகிறோம்...? பயத்தில கால்கள் பின்னின. நல்ல வேளை, பொது ஹாலில் அதுசமயம் யாரும் இருக்கவில்லை. கூட்டம் சாப்பாட்டு அறையிலிருந்தது:

"வாங்கோ மன்னி! நாங்க இப்போ காப்பி சாப்பிடற வேளை. நீங்களும் என்னோட வந்து கொஞ்சம் ஹாஸ்டல் காப்பி சாப்பிட்டுப் பாருங்கள்."—பதட்டத்தை சமாளித்துக் கொண்டு புன்முறுவலித்தாள் மங்களா.

கோபம் கண்களில் தெறிக்க அனுசூயா சட்டென்று உட்கார்ந்திருந்த நாற்காலியிலிருந்து எழுந்து நின்றாள்.

"இங்கே விருந்து சாப்பிட நான் வரலை. ஒரு வார்த்தை உன்னை கேட்கணும்னு மனசு துடிச்சுது. வந்திருக்கேன். உங்கண்ணா காரிலே வெளியே காத்திண்டிருக்கார்."

"உட்கார்ந்து பேசுங்கோ மன்னி"

"உட்கார நேரமில்லை...மனசும் இல்லை... பெத்த குழந்தையைப் போல உன்னை நானும் அண்ணாவும் தவளிச்சுக் கொண்டதுக்கு இதுதானா எங்களுக்குப் பரிசு?"

"மன்னி ரெண்டுபேருக்கும் நான் ரொம்ப கடமைப் பட்டிருக்கேன். எப்பவும் உங்களை நன்றி உணர்வோட நினைச்சுக்கறேன்."

"எவ்வளவு நன்றியோட இருக்கேங்கிறதைத்தான் நிரூபிச்சுட்டியே? வீட்டைவிட்டு தனியா இங்கே வந்து



உட்கார்ந்துண்டு எங்க மூஞ்சியிலே கரியைப் பூசிட்டே. எங்க சம்பந்தி கேட்கிற ஒரு கேள்விக்கே நாக்கைப் பிடுங்கிண்டு சாகலாமான்னு அவமான இருக்கு. 'உங்க மேலே குத்தமில்லை... அந்தப் பொண்ணு அத்தனை திமிர் பிடிச்சவ... அடங்காப்பிடாரி...' அப்படின்னார் சம்பந்தி."

மங்களா முகம் சிவந்து போனாள். பொங்கிப் புரண்ட ஆத்திரத்தில் அவள் உதடுகளும் மூக்கும் துடித்தன.

"உங்க சம்பந்திக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவருக்கு என்னைப்பத்திப் பேச என்ன அதிகாரம் இருக்கு?"

"சம்பந்தியை விட்டுத் தள்ளு...ஊர் வாயை உன்னால் மூடமுடியுமா? அத்தான் வஸந்த் வந்து சொன்ன சங்கதியைக் கேட்டு உங்க அண்ணா அப்படியே இடிஞ்சுப் போயிட்டார். எனக்குத் தலைதூக்க முடியலை. இப்படிக் கெட்டழிஞ்சு போறதுக்குத்தான் வீட்டை விட்டுக் கிளம்பினியோ?"

பீறிக்கொண்டு வந்த சீற்றத்தில் மங்களாவால் பேச முடியவில்லை.

அனுசூயாவைக் கோபத்துடன் வெறித்துப் பார்த்தாள்.

"உங்க ஆபீஸ் மானேஜராமே அவன்-தினமும் இங்கே வரானாம், அவன் காரிலே நீ ஊர் சுத்திண்டிருக்கியாம். இதெல்லாம் கேட்க எத்தனை அசிங்கமாயிருக்கு?"

அத்தான் வஸந்த் கதையைப் பலமாகத் திரித்திருக்கிறான். தடியன்!

"அத்தான் சொன்னது நிஜந்தான் மன்னி."

'என்ன சொல்றே? இந்த மானேஜருக்கும் உனக்கும்...' மன்னியின் குரல் கிரீச்சிட்டது.

"ஆமாம் மன்னி. அவர் என்னை விரும்பறார், நானும் அவரை விரும்பறேன். கல்யாணம் பண்ணிக்கப் போறோம்."

"அடி...பாவி! எத்தனை துணிச்சல்?"

"இஷ்டப்படுகிறோம்: கல்யாணம் பண்ணிக்கப் போகிறோம். எல்லோரையும் போல வாழப் போகிறோம். அது தப்பா? ஷைலா கல்யாணம் பண்ணிண்டு வாழலாம்; நான் பண்ணிண்டு வாழக் கூடாதா?"

"உனக்கு அதுக்கு யோகமில்லாதிருந்தது. நாங்க எத்தனையோ பாடுபட்டோம்... முடியலை."

"உங்களால் முடியலை. இப்போ நானே பார்த்து ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கத் துணிஞ்சுட்டேன்... அதுகூட தப்பா...? ஆண்பிள்ளை போல படிச்சுட்டு வேலைக்குப் போகலாம். குடும்பத்துக்கு சம்பாதிச்சுக் கொடுக்கலாம். தன் கல்யாணத்தைப் பத்தி தானே தீர்மானிச்சு ஒரு முடிவெடுக்கிறதுக்கு மட்டும் இன்னும் வயசாகலை? நல்ல வேடிக்கை.' ஏளனமாக, மெல்லியதாகச் சிரித்தாள் மங்களா.

"அவன் யாரோ...எவனோ...?" அனுசூயா உறுமினாள்.

"அவர் ஒரு நல்ல மனிதர். அதுவரை எனக்குப் போதும்."

"கடைசியாகவாவது ஒரு வார்த்தை சொல்லி உன்னைத் திருத்தலாம்னு பார்த்தேன்...ஊஹூம்... நீ உருப்படமாட்டே..."

மங்களாவினால் தாளமுடியவில்லை. "மன்னி! என் கல்யாணத்துக்கு நான் உங்ககிட்டேயிருந்து ஒரு செல்லாத காசைக்கூட எதிர்பார்க்கலை. எங்கேயிருந்தாலும் நீ நன்னாயிருன்னு வாயாலேகூட சொல்ல உங்களுக்கு தோணலையே? உங்களுக்கு எத்தனை குறுகிய மனசு! ஆனால் நீங்கள்ளாம் நன்னாயிருக்கணும்னு என் மனம் எப்பவும் நினைக்கிறது."

"ரொம்பத்தான் பேசக் கத்துண்டிருக்கே. பிழைச்சுக்குவே. இத்தோட நமக்குள்ளே இருந்த சொந்தம் பந்தம் எல்லாம் போச்சுன்னு தெரிஞ்சுக்கோ..." அனுசூயா விடுவிடுவென்று வெளியே நடந்தாள். தொண்டையை அடைத்த துக்கத்தை விழுங்கிக்கொண்டு, கண்களில் பனித்த நீரைச் சமாளித்தபடி மங்களா சாப்பாட்டறைக்குள் நுழைந்தாள்.



காசிநாத் இதைக் கேள்விப்பட்டால் என்ன நினைப்பார்? 'மங்களா ஒரு சந்தர்ப்பவாதி. அசாத்திய துணிச்சலுடையவள் ஆளை அமுக்கிவிட திட்டம் தீட்டிவிட்டிருக்கிறாள். பார்த்தால் பூனைபோல இருந்து கொண்டு பலே கைகாரியாக இருக்கிறாளே!' இப்படி அவருக்கு ஒரு அபிப்பிராயம் வந்ளவிட்டால்...ஐயோ...! உதட்டைச் சுட்டதைக் கூட பொருட்படுத்தாது, ஆவி பறந்த சூடான காப்பியை வேகமாக விழுங்கினாள்.

## 26

அந்த இரண்டு நாட்களில் பதஞ்சலி மிகவும் பாடுபட்டுவிட்டார். ஊர்க்கதை பேசி வீணாக்கிய நேரத்தின் விலையை அவரிடமிருந்து பிரசாத் கக்கிக் கொண்டு விட்டார். "அந்த ஃபைலைப் பார்க்க வேண்டும்; அதைக் கொண்டு வாரும்" என்ற அவரது அதிகாரக் கட்டளைகளைக் கேட்டு அதிர்ந்து, மானேஜர் அறைக்கும் தமது இருக்கைக்கும் இடையே பந்தாக உருண்டு விட்டார். முக்காலி மீது ஏறி நின்று ஃபைல்களைத் தேடிய விளைவு கழுத்தும், தோள் பட்டையும் விண்விண் என்று தெறித்தன.

அடுத்த நாள் காலை விமானத்திலேபிரசாத் பம்பாய்க்கு பறந்து விட்டார் என்றசெய்தியைக் கேட்டபின்னர்தான். நிம்மதியான மூச்சு அவருக்கு மானேஜர் வர அன்று சிறிது நேரம் ஆகும் என்ற அடுத்த செய்தி மாபெரும் நிம்மதியைக் கொடுத்தது. துணிப்பையிலிருந்த பிளாஸ்கை எடுத்துத் திறந்து மூடியைக் காப்பியால்'நிறைத்துக் கொண்டார்.

''எம்மா மாலினி, உனக்கும் கொஞ்சம் காப்பி தரட்டுமா? பாவம், ரெண்டு நாளா கையொடிய டைப் அடிச்சுண்டு இருக்கே '' அனுதாபத்தில் கரைந்தார்.

''வேண்டாம் ஸார்!'' டைப் யந்திரத்திலிருந்து நிமிராமலே அவள் பதில் கொடுத்தாள்.

'மானேஜர் திடீர் என்று வந்துவிட்டால்? காலை வேளையில் இங்கே ஒரு காப்பி பார்ட்டியா என்று நினைத்துக் கொண்டால்...?'

டைரக்டர் வந்துபோன அதிர்ச்சியிலிருந்து அவள் இன்னும் மீளவில்லை. வேலை பிழைக்கணும் என்றால உண்மையாக உழைக்கணும். வீண் கதைகள் கூடாது. தனக்குள்ளே தீர்மானித்தவளாக, படபடவென்று எழுத்துக்களை வேகமாகத் தட்டிக் கொண்டிருந்தாள்.

யாருமே அவரிடம் பேசத் தயாராக இருக்கவில்லை. ஆனாலும் பதஞ்சலிக்கு தன் வயிற்றெரிச்சலை எவரிடமாவது சொல்லி அழவேண்டுமென்றதொரு ஆதங்கம்.

''இதுக்கு முன்னாடி எத்தனையோ தடவை இந்த டைரக்டர் இங்கே வந்திருக்கார். வயசு ஏறிண்டு போறதினாலோ என்னவோ ரொம்ப குணம் கெட்டுப் போயிருக்கு மன்ஷன் ஆனாலும் பிரண்டையாவா மாறணும்? அது இதுன்னு அரிச்சுச் தள்ளிவிட்டாரே அப்பப்பா...?'' காப்பியை ஒரே மூச்சில் விழுங்கிவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டு சுற்று முற்றும் பார்த்தார் பதஞ்சலி...யாரும் அவரது பேச்சைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. அவருக்கு ஒரே எரிச்சல்...தமக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டார். ஃபைல்களைத் தொப்பென்று மேஜைமீது போட்டார். துண்டை உதறி நாற்காலி கைமீது வீசினார்... 'ஹாவ்' என்று பெரிதாக ஒரு ஏப்பம் விட்டார்.



ஒன்றுக்கும் யாருமே அசையக் காணோம். வேறு வழியில்லை... அமைதியாக வேலையைக் கவனிக்கத் தொடங்கினார்.

அன்று காலை, அலுவலகம் இயங்கத் தொடங்கிய சிறிது நேரத்தில் மங்களாவை மானேஜர் அழைப்பதாகப் பையன் தகவல் கொடுத்தான். கவனித்துக் கொண்டிருந்த ஃபைல்களையெல்லாம் கட்டாக வாரிக்கொண்டு அவள் உடனே எழுந்து உள்ளே சென்றாள்.

வழக்கத்துக்கு மாறாக காசிநாத் அங்கே நின்றபடி தொலைபேசியில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தான் அவளைக் கண்டதும் விரைவாகப் பேச்சைத் துண்டித்து கொண்டுவிட்டான். ஆனால் உட்காரவில்லை. முகம் முழுவதும் பரவிய பெரியதொரு முறுவல்,

'மிஸ் மங்களா! உங்களுடன் மிகவும் முக்கியமான ஒரு சங்கதியைப் பற்றி பேச வேண்டியிருக்கிறது...உங்களை நான் இன்று மாலை ஹாஸ்டலில் சந்திக்க வரலாமா? இதை கேட்கத்தான் அழைத்தேன்'' அதிகாரமும் மிடுக்கும் மறைந்த சன்னமான குரலில் வினவினான்.

மங்களா திடுக்கிட்டுப் போனாள். 'என்ன பேச வேண்டுமாம்?' மனதிற்குள்ளே ஒரே குழப்பம்.

''உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா...இங்கேயே பேசலாம்...நான் கேட்கத் தயாராக இருக்கேன்.'' எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

'இந்த மன்னி அண்ணாவை ஏவிவிட்டிருக்கிறாள். அவர் வந்து இவரிடம் கத்தியிருக்க வேண்டும்.'

நெஞ்சம் பயத்தில் துடிக்க... பைல்களை வைத்துவிட்டு ஆதரவுக்கு மேஜை ஓரத்தைப் பிடித்துக்கொண்டு நின்றாள்.

''விவரமாகப் பேச வேண்டிய விஷயம்...அலுவலக நேரத்தை வீண் அடிப்பதில் பயன் இல்லை.'' மீண்டும் அவன் இனிமையாகப் புன்னகைத்தான்.

"மாலை... நாலரையிலிருந்து ஆறரை வரைதான் பார்வையாளரின் நேரம்..."

"தெரியும். சரியாக ஐந்தரைக்கு அங்கே தோட்டத்தில் உங்களைச் சந்திக்கிறேன். இந்த ஃபைல்களையெல்லாம் நீங்கள் மெதுவாகக் கவனித்து அனுப்பினால் போதும். இப்போது தேவையில்லை."

அவன் தொலைபேசியில் எண்களைச் சுழற்றத் தொடங்கியதும் அவள் கட்டாகப் பைல்களை வாரிக் கொண்டு அறையை விட்டு நகர்ந்தாள்.

இருக்கையில் அமர்ந்ததும் வியர்வையில் ஈரமாகிவிட்டிருந்த தன் உள்ளங்கைகளைக் கைக்குட்டையில் அழுத்தித் துடைத்துக் கொண்டாள் காசிநாத் கோபமாக விளக்கம் கேட்டால், என்ன பதில் சொல்வது? சுவாசிக்க முடியாது போல நெஞ்சுக்குள்ளே ஒரு இறுக்க உணர்வு...

அன்று அவள் தன் மாலைக் குளியலை அவசரமாக முடித்துக்கொண்டு கீழே வந்தாள். மாலை ஐந்தரை மணியை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்ததும் அவள் சாப்பாட்டு அறைக்குப் போகாது. தோட்டத்திற்குள் நடந்தாள். அதற்குள் அவனது கார் நடைபாதை மீது விரைவாக வந்து கொண்டிருப்பதைக் கண்டதுமே அவள் முதுகில் சில்லென்று பயம் கவ்விக்கொண்டது. மெல்ல சிமெண்ட் ஆசனத்தை நோக்கி நடந்தாள்.

'அலுவலக உடையே மாற்றிக்கொள்ள வேண்டித்தான் அவர் வீட்டிற்குச் சென்றிருக்க வேண்டும். அத்தனை விரைவாகத் திரும்ப வேண்டுமானால்... பேச வேண்டிய சங்கதி மிகவும் முக்கியமானதாக இருக்க வேண்டும்.' கலவரத்துடன் ஆசனத்தில் ஓரத்தில் மெல்ல உட்கார்ந்து கொண்டாள். வேட்டியும் ஜிப்பாவுமாக யாரோ ஒரு நெருங்கிய உறவினன்போல அவன் தோற்றம் மனதிற்கு இதமாக இருந்தபோதிலும், இடையே



மன்னியின் நினைவு முள்ளாக நெருடியது. காசிநாத் வழக்கம் போல ஆசனத்தின் மறு ஓரத்திலே அமர்ந்து கொண்டான். சட்டென்று பேசவில்லை. தொண்டையைப் பலமாகச் செருமினான்.

மங்களாவிடம் பதட்டமும் பயமும் அதிகரித்தன.

"முதலில் இதைப் பாருங்கள். நம் டைரக்டருக்கு யாரோ எழுதியிருக்கா." பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

'அண்ணாவா? அத்தனை அவசரமா அவருக்கு...?' லேசாக நடுங்கிய விரல்களால் மங்களா கடிதத்தைப் படித்துப் பார்த்தாள்.

இரண்டு வாரத்திற்கு முன்னர் யாரோ டைரக்டர் பிரசாத்திற்கு எழுதியிருந்த மொட்டைக் கடிதம் அது.

'பல ஆண்டுகளாக உங்கள் நிறுவனத்துடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருக்கும் வாடிக்கைக்காரர் என்று என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். மேலும் ஒரு நல்ல நண்பன் என்ற முறையில் தங்களை எச்சரிக்க விரும்புகிறேன். சமீபத்தில் சென்னை அலுவலகத்தின் மானேஜராக வந்திருக்கும் காசிநாத்தின் நடத்தை, தங்கள் மாபெரும் நிறுவனத்தின் கௌரவத்தைப் பாதிப்பதாக இருக்கிறது. உங்கள் அலுவலகத்தில் உள்ள மங்களா என்னும் பெண்ணுடன் அவர் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறார். அந்தப் பெண் இவரை நம்பி வீட்டை விட்டு இவரது பொறுப்பில் ஹாஸ்டலில் தங்கி வாழ்கிறாள். இன்னும் எத்தனையோ அசிங்கமான விஷயங்கள் அலுவலகம் முழுவதும் பரவி விட்டிருக்கிறது. தங்கள் றுவனத்தின் மானேஜராக பதவியிலிருக்கும் ஒரு பெரிய அதிகாரிக்கு ஒவ்வாத செய்கை இது. உடனடியாகக் கண்டிக்கவும். தங்கள் நன்மை கோரும்—நண்பன்.'

கோபமும் வெட்கமும் தாளாது முகம் சிவந்து போனாள் மங்களா. உடல் முழுவதும் ஆத்திரத்தில்

ஆடியது. 'அண்ணாவா இத்தனை மட்டமாக இருப்பார்... இல்லை...ஒரேயடியாக வந்து வெளிப்படையாகப் பேசி ஆத்திரத்தைக் கொட்டிவிடும் ஆளாச் ச? அவர்? இது கட்டாயம் ஆபீசில் உள்ளவர்கள் செய்த விஷமந் தான்.'

வியப்பும் வேதனையுமாகப் பேச முடியாது தவித் தாள்.

'அன்னிக்கு நம் டைரக்டரை விமான நிலையத்தில் சந்திச்சு தான் அவர் தங்க ஏற்பாடு செய்திருந்த ஹோட்ட லுக்கு அழைச்சிண்டு போகக் காத்திருந்தேன், இந்தக் கடிதத்தை ஹோட்டல் அறைக்குள்ளே நுழைந்ததும் என் கிட்டே கொடுத்தார். படிச்சேன் இதை யார் எழுதியிருக்க முடியுமுன்னு ஓரளவு ஊகிக்க முடிகிறதுன்னு சொல்லிச் சிரிச்சேன். அவரும் கூடவே சிரிச்சார்...டைரக்டர் பிரசாத் துக்கு என்மேலே தனியான தொரு அன்பு அவர் மேலே எனக்கும் அபார மதிப்பு."

"ஆனால் என்னைப்பத்தி அவர் ரொம்ப தப்பா நினைச் சிருப்பார். அதனாலோ என்னவோ ஆபீசிற் குள்ளே வந்ததுமே ஒரு மாதிரி என்னைப் பார்த்துவிட்டு சிரிச்சார் போலிருக்கு." துயரத்துடன் புல் தரையைப் பார்த்தாள் அவள்.

"அவர் சிரிச்சதுக்குக் காரணமே வேறே...அதுக்கு நான்தான் பொறுப்பு. 'இது ஒரு மொட்டைக் கடிதம்... ஒத்துக்கிறேன். ஆனால் நெருப்பில்லாம புகையாதுன்னு சொல்வாங்க...உன் பதில்?' அப்படின்னு அவர் அடுத்த படியாக என்னை மடக்கினார், நான் அசந்து போயிட்டேன்.

'ஆமாம் இந்தக் கடிதத்திலே இருக்கிறது ஓரளவு உண்மை. இந்தப் பெண் மங்களா அவளுடைய குடும்பத்தா ரோடு மனத்தாங்கல் பட்டுக்கொண்டு ஹாஸ்டலில் தங்கியிருப்பது உண்மை. ஆனால் அதுக்கு நான் காரண மில்லை. அவளை அந்த ஹாஸ்டலில் சேர்க்க உதவியது நான்தான். அடிக்கடி சந்திக்க முயலுகிறேன்...உண்மை.'



'ஒரு மானேஜர்...தன் நிறுவனத்தில் வேலை செய்கிற பெண்ணை தினமும் சந்தித்து பேசினால் என்ன அர்த்தம்?' பிரசாத் கேள்வி எழுப்பினார்.

'அர்த்தம் இருக்கு அவளை நா...மானேஜர் என்ற அந்தஸ்தில் போய்ச் சந்திப்பதிலை... ஒரு சாதாரண மனிதன் என்கிற முறையில் சந்திக்கிறேன்...'

'இந்தச் சந்திப்பின் முடிவு?' பிரசாத் என்னைவிட வில்லை...

'முடிவு கல்யாணம்...விரைவில் எங்கள் திருமணம் நடக்க இருக்கிறது. உங்கள் கம்பெனி மானேஜர் என்பதில் எனக்கும் பெண்ணைக் காதலிக்கவும், கல்யாணம் செய்து கொள்ளவும் உரிமையில்லையா? அந்தப் பெண் அதே அலுவலகத்தில் வேலை செய்வது என் தவறா?' நான் சளைக்காது பதிலளித்து விட்டுச் சிரித்தேன்.

"பலே ஆள் நீ; இந்தக் குறுகிய காலத்துக்குள் கல் யாணம்வரை வந்துட்டியே...உன் மனசை மயக்கின அந்தப் பெண்ணை பார்க்கா விட்டால் எனக்கு ராத்திரி தூக்கம் வராது—வேடிக்கையாகச் சிரித்தார். அன்று உங்களை என் அறைக்கு வரச் சொன்னபோது பார்த்து விட்டு நீங்கள் போகத் திரும்புமுன் முதுகைத் தட்டிப் பலமாக சிரிச்சு ஆர்ப்பாட்டம் செய்து விட்டார்."

மங்களாவின் முகம் மேலும் சிவந்தது. நெஞ்சு இன்னும் வேகமாகத் துடித்தது. சிமெண்ட் பெஞ்சியின் ஓரத்தை நகங்களால் வருடிக் கொண்டு மௌனமாக இருந்தாள்!

"மிஸ் மங்களா! நான் டைரக்டரிடம் இப்படிப் பேசினது உங்களுக்கு ரொம்ப அதிர்ச்சியாக இருக்கா...? ஆனால் அது அப்பட்டமான உண்மை..."

மீண்டும் திடுக்கிட்டுப் போனாள். அவள் மெல்ல தலையை நிமிர்த்திப் பார்த்தபோது...அவன் அவளது அருகிலே நகர்ந்து நெருக்கமாக உட்கார்ந்திருப்பதை உணர்ந்தாள்.

"நேரிடையாகக் கேட்டுவிட வேண்டும் என்கிற தீர்மானத்தோடு தான்...இங்கே வந்திருக்கேன்...நான் உங்களை ரொம்ப விரும்புகிறேன்...கல்யாணம் செய்துக்க ஆசைப்படறேன். உங்கள் பதில்...?" மகிழ்ச்சியிலே நெஞ்சு பூரிக்க...உதடுகள் துடிக்க...மங்களா அவனை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்த்தாள்.

"இதே போல ஒரு விசித்திரமான நிகழ்ச்சி இரண்டு நாளைக்கு முன்னால் நிகழ்ந்தது. உங்களை என்னுடன் அசிங்கமாக சம்பந்தப்படுத்தி யாரோ சொன்ன தகவலை வைத்துக் கொண்டு, மன்னி இங்கே வந்து சண்டை பிடிச்சா... கோபம் தாங்க முடியாமல் உங்க பேருக்கு இழிவு வரக் கூடாதுன்னு சட்டுனு நான் இப்படித்தான் சொல்லிவிட்டேன். அப்புறந்தான் அதனுடைய பாதிப்பு பற்றிய சிந்தனை வந்தது... நடுங்கிப் போயிட்டேன்."

"உங்க மன்னிகிட்டே என்ன சொன்னேள்?"

"உங்களைக் கல்யாணம் பண்ணிக்கப் போவதாகச் சொல்லிவிட்டேன்.'

"இப்போ என்கிட்டே என்ன பதில் சொல்லப் போறேள்?"

"மிஸ் மங்களான்னு கூப்பிடறதை விட்டு மங்களான்னு கூப்பிட்டு நீங்கள்ங்கிறதை விட்டு, ஒருமையிலே கேட்டா... மன்னிகிட்டே சொன்ன பதிலையே சொல்வேன். ஏன்னா, என்னைவிட வயசிலே கொஞ்சம் நீங்க மூத்தவர் இல்லையா? அதுக்கு மதிப்பு..."

"மங்களா இப்போ என்ன சொல்றே?"

அவள் பதில் சொல்லாது மோகனமாக, மகிழ்ச்சியாக சிரித்தாள்.

அப்பொழுதுதான் உணர்ந்தாள். அவனது கரம் அவளது வலது கையை எத்தனை இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருந்தது!

# 27

அன்று இரவு அவள் உறங்கவேயில்லை. வருங்காலத்தைப் பற்றிய இன்பக்கனவிலே மிதந்தவாறு பொழுதைக் கழித்தாள். மறுநாள் காலை அலுவலகத்துக்குக் கிளம்பத் தயாராகி, சாப்பாட்டறைக்குள் வந்தவளுக்கு பசியே இருக்கவில்லை. மகிழ்ச்சி மனதை நிறைத்துக் கொண்டிருந்தது சிறிதளவு மோர் மட்டும் பருகிவிட்டுக் கிளம்பிவிட்டாள். போர்டிகோவின் மீது ஒரு பக்கம் சுமையாகப் படர்ந்து. தொங்கிய நித்யமல்லி கம்மென்று மணந்து கொண்டிருந்தது. கைக்கெட்டிய ஒரு மலர்க்கொத்தைப் பறித்துக் கன்னத்தின் மீது மென்மையாக— மலர்களை அழுத்திக் கொண்டு கேட்டைத் தாண்டி வெளியே வந்தாள். ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள்.

காசிநாத் காருடன் அவளுக்காக அங்கே காத்திருந்தான். அவளைக் கண்டதும் இறங்கி—காரின் முன் கதவைத் திறந்தான்.

"இனிமேல் என் அருகே காரில், பக்கத்தில் உட்கார ஆட்சேபனை இருக்காதே?" கேலியாகக் கேட்டுவிட்டு மெல்லச் சிரித்தான்.

"ஆபீஸ் அதிக தொலைவில் இல்லையே! பஸ்ஸிலே வந்திருப்பேன்.' இன்பக் கிளர்ச்சியில் முகம் சிவக்க, நெஞ்சு பதற அவன் காட்டிய முன்பக்கத்து ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

"வருங்காலத்தில் தன் மனைவியாகப் போகிறவளைக் கொஞ்ச தூரம் கூட அலையவிட்டுப் பார்க்க மனம் இல்லை." புன்முறுவலித்தபடி காரை அவன் ஓட்டினான்.

கேட்க மிக்க ஆனந்தமாகவும் இருந்தது, பெருமையாகவும் இருந்தது.

''தாங்க்யூ!'' என்று மெல்லியதாகப் பதிலளித்துவிட்டு மௌனமாகக் கையிலிருந்த பூங்கொத்தை முகர்ந்து மணத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு மெல்ல அசைந்து வந்த பதஞ்சலிக்கு மாபெரும் அதிர்ச்சி. வாயிலிருந்ததைத் துப்பத் தோணாது லபக்கென்று விழுங்கிவிட்டார். வெற்றிலைச் சாற்றின் காரம் மாரை அடைத்தது. பார்த்த காட்சியின் நயம் மண்டையை உடைத்தது. யாரிடம் சொல்வோம் என்ற ஆதங்கத்திலே வேகமாக மாடிக்குப் பறந்தார்.

பிளாஸ்டிக் உறையை நீக்கி டைப் யந்திரத்திடம் குனிந்து கொண்டிருந்த மாலினியிடம் ஓடி வந்தார் அவர் வாயைத் திறக்கு முன் கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் மங்களாவும், மானேஜரும் ஜோடியாகத் தெரிந்தனர். பெரிய இடத்துப் பொல்லாப்பு என்று உள்ளுணர்வு உந்தவே பதஞ்சலி தமது இருக்கைக்கு விரைந்தார்.

'பின் ஆசனத்திலிருந்து, காரில் சரிசமமாக முன் ஆசனத்தில் உட்காரும் அளவு ரொம்ப நெருக்கமாகி விட்டாப் போலிருக்கு. மங்களா கெட்டிக்காரியாச்சே! இது விரைவில் கல்யாணப் பந்தலில் வந்து முடியப்போகிறது. இவளுக்கு இப்படிப்பட்டதொரு யோகமா?'

பொறாமையால் மௌனமாகப் பெருமிக் கொண்டு மேஜை மீது இல்லாத தூசியை மேல் துண்டால் ஓங்கித் தட்டத் துவங்கினார். அழுத்தக்காரியான 'அவளுக்கு வரப் போகிற அதிர்ஷ்டத்தை எண்ணியெண்ணி அவர் வயிறு எரிந்தது.

பகல் உணவு நேரம் நெருங்கும் சமயம், தனது அறையினின்று வெளிப்பட்ட காசிநாத் வேகமாக மங்களாவின் மேஜை அருகே வந்தான்.

''இன்று பகல் எனக்கு ஒரு முக்கிய வேலை. இருக்கு. ஆபீசிற்கு லீவு போட்டுட்டுக் கிளம்பறேன். சாயங்காலம் ஐந்தரை மணிக்கு ஹாஸ்டலில் சந்திக்கலாம்.'' அவளுக்கு மட்டுமே கேட்கும் அடிக்குரலில் சொல்லிவிட்டு மிடுக்காக வெளியேறி விட்டான்.



பதஞ்சலிக்கு மூச்சே நின்றுவிடும் போன்று அழுத்தமானதொரு ஆவல்! மானேஜர் மங்களாவிடம் சொன்ன ரகசியம் என்ன?

அன்று மாலை மங்களாவுக்கு இருப்பே கொள்ளவில்லை. காசிநாத்தின் வரவிற்காக முன்னதாகவே தோட்டத்திற்குள் வந்து அந்த சிமெண்ட் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டுவிட்டாள். குறித்த நேரத்திறகு அவன் காரை ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்தான். காரிலிருந்து இறங்கியவன் உட்காரவில்லை

''என்னோடு கொஞ்சம் வெளியே வர முடியுமா? நிம்மதியாகத் தனியாக உட்கார்ந்து பேசவேண்டிய விஷயம்.''

மங்களா மறுக்காது புறப்பட்டாள்.

கடற்கரையில் கூட்டமில்லாது ஒரு பக்கத்தில் மணலில் வந்து உட்கார்ந்து கொண்டனர்.

''என்ன விஷயமாக இருக்கும்?'' ஊகிக்க முடியாத குழப்பத்தில் மண்ணை விரலால் அளைந்தபடி மௌனமாகக் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உங்கண்ணாவைப் பார்க்கத்தான் இன்று பகல் வெளியே போயிருந்தேன்.'' திடுக்கிட்டுப் போனாள் அவள்.

''அண்ணாவா? அவர் எங்கே இருக்கார்னுகூட உங்களுக்கு இன்னமும் நான் சொல்லவில்லையே?'' வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

''அன்னிக்கு என் உதவியைத் தேடி என் வீட்டுக்கு வந்தப்போ நீயே உன்னைப் பத்தி மளமளன்னு சொன்னதிலேயே உங்க அண்ணா எங்கே வேலை பார்க்கிறார்னு தெரிஞ்சு கொண்டுவிட்டேன். உன்னைப்

பத்தி மேலே விவரமாக எதையும் யாரிடமும் கேட்க நான் முயன்றதில்லை. என் மனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு. ஆனால் உனக்கு என்னைப் பிடிக்கிற தான்னு தெரியும் வரை உன்னைப்பத்திக் கேட்கிறது ரொம்பத் தப்பாக எனக்குப் பட்டது"

மங்களா மௌனமாக மணலைக் கிளறிக் கொண்டிருந்தாள்.

"நேற்று சாயங்காலம் என் மனதுக்கு ஏற்ற பதில் கிடைச்சதும் உடனடியாக நான் உன் அண்ணாவைச் சந்திக்க விரும்பினேன். அது என் கடமை என்று நினைச்சேன்."

முதுகு சில்லிட்டுப் போனதொரு அச்ச உணர்வில் அவள் திகைப்புடன் அவனை வெறித்தாள்.

"அண்ணாவைப் பார்த்தேளே? என்ன சொன்னார்" கேட்குமுன் பயத்தில் வார்த்தைகள் தொண்டையில் சிக்கின.

"ஆபீசில் போய்ப் பார்த்தேன். விசிட்டிங் கார்டைப் பார்த்துவிட்டு உடனே உள்ளே வரச் சொன்னார். தனியாகத்தானிருந்தார். பேச சௌகர்யமாக இருந்தது. நாமிருவரும் எடுத்துக் கொண்ட முடிவைப் பற்றிச் சொன்னதும் கோபத்திலே அவர் வெடித்து விட்டார்.

'பட்டம் பதவி இருந்தா சரியாப் போச்சா? உனக்குச் சரியான பேக்கிரவுண்ட் கிடையாது. எந்தத் தைரியத்திலே என்கிட்ட பேச வந்துட்டே?' என்று ஆத்திரமாக இரைந்து கத்தினார்.

'மங்களா சம்மதிச்சாச்சு. என்னைப்பத்தின விவரத்தை உங்ககிட்டே ஒளிக்காம சொல்லியாச்சு. நீங்க பெரியவராக இருந்து கல்யாணத்தை நடத்தி வச்சு எங்களை வாழ்த்தணும்னுதான் உங்களைக் காண வந்தேன்...'என்றேன்.

'முடியாது. முதல்லே இங்கிருந்து மரியாதையாகப் போயிடு...கொஞ்சம்' உரக்கவே சத்தம் போட்டு விட்டார். வேறு வழியில்லாம எழுந்து வந்துட்டேன்."



மங்களாவின் முகமும் நெஞ்சும் நெருப்பாக எரிந்தன, அண்ணா இவரை அவமானப்படுத்தி அனுப்பியிருக்கிறாரே மனத்திற்குள் வேதனைப்பட்டாள்.

"மனிதர் அத்தோடு என்னை விடலை. வெளியே போகத். திரும்பினவனைக் கூப்பிட்டார்.

'மங்களாவைக் கல்யாணம் பண்ணிக்க நீ விரும்புகிறாய் என்பது எனக்கு ரொம்ப வேதனையாக இருக்கிறது; பரிதாபமாகவும் இருக்கிறது. ஏற்கெனவே அவளுக்கு இரண்டு முறை கல்யாணம் நிச்சயமாகி... நின்று போன விஷயம் தெரியுமா உனக்கு...? அவள் ஜாதகத்தில் ரொம்ப தோஷம் இருக்கு... அந்த ரெண்டு வரனும் நிச்சயமாகிக் கல்யாணம்னு கூடிவந்த சமயம் திடீர்னு செத்துப் போய்விட்டார்கள். என் தங்கை ஜாதகத்தை தூக்கிண்டு வெளியில் புறப்பட்டாலே கால் இடறி-நகம் பெயர்ந்து ரத்தம் கொட்டும். அப்படி ஒரு துரதிருஷ்டம். உனக்கு சாகறதுக்கு ஆசையாக இருந்தால்... என் தங்கை கழுத்தில் தாலியைக் கட்டு' என்று வெறுப்புடன் சீறினார்."

மங்களாவுக்குக் கேட்கக் கேட்க தாங்கொணா அதிர்ச்சி. என்ன பயங்கரம்? கூடப்பிறந்த தமையன் தங்கைக்கு இப்படியா ஆசீர்வாதம் செய்வார்? ஆனாலும் அண்ணா மனதில் இப்படி ஒரு வன்மம் தேவையில்லை. அவளுக்கு அழுகை குமுறிக் கொண்டு வந்தது.

"என்ன இது மங்களா? நடந்ததைச் சொன்னேன் இதுக்குப் போய் அழுவானேன்...? சே! சே!" சொல்லிக் கொண்டே தன் சட்டைப்பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"கண்ணைத் துடைச்சுக்கோ. எனக்கு வரப்போகிற மனைவியைக் கண்கலங்காம பார்த்துக்கிடணும்கிறது என் கொள்கைகளில் முக்கியமானது..." புன்னகைத்தான்

கண்களைத் துடைத்துக் கொண்டு வெட்கத்துடன் அவளும் புன்முறுவலித்தாள்.

"அண்ணா உங்களை மட்டமாகப் பேசி அவமானப்படுத்தியதற்கு நான் மன்னிப்புக் கேட்கிறேன், அண்ணா சொன்னது பொய்யில்லை. அந்தக் கசப்பான, சம்பவங்களுக்குப் பின்னர் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள சட்டென்று யாருக்கும் துணிவில்லை. என் ஜாதகத்தின் மீதும், அதிர்ஷ்டத்தின் மீதும் பழி போட்டு என்னை ரொம்பப் பழி வாங்கிட்டா எல்லாரும்..." பேச முடியாது துயரத்தில் திணறினாள். அவன் மௌனமாக இருந்தான்.

"இதைக்கேட்ட பிறகு உங்க மனசிலே ஏதாவது..." முடிக்காது தயக்கமாக நிறுத்தினாள்.

"மங்களாவைத் தவிர வேறு யாரையும் மணப்பதில்லை என்கிற உறுதி ரொம்ப அழுத்தமாக மனசில் பதிஞ்சு போய் விட்டது. போதுமா? உன்னைப்பற்றி ஓரளவு நீ சொன்னே... உங்கண்ணா மீதியைச் சொல்லிவிட்டார்... ஆனால் என்னைப் பற்றி நீ எதுவுமே தெரிஞ்சுக்கலையே...?"

"ரொம்ப நல்ல மனிதர்-என் மனதிற்குப் பிடித்தவர் அன்பானவர்... அப்படின்னு தெரிஞ்சு கொண்டிருக்கேனே அது போதாதா?"

"என்னைப் பற்றி எல்லா விவரமும் நீ தெரிஞ்சு கொள்ள வேணும்... நமக்குள் ரகசியம் இருப்பதை நான் விரும்பவில்லை அன்னிக்கு என் வீட்டில் ஒரு படத்தைப் பார்த்தியே, நினைவிருக்கா? என் குருநாதர்னு சொன்னேனே. அவர்தான் என் வளர்ப்புத் தந்தை. திருச்சியைச் சேர்ந்த மருதநல்லூர் கிராமத்தில் அவர் அப்போ ஒரு டாக்டராக வாழ்ந்த காலம். கிராம மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்றதொரு இரக்க மனம். பட்டணத்தில் தொழிலைத் துவங்காமல் அங்கேயே தங்கி விட்டிருந்தார். அவர் பின்னர் சொல்லித்தான் எனக்கு என்னைப்பற்றியே தெரியும். ஒரு சமயம்



ஊர் முழுவதும் டைபாய்டு காய்ச்சல் பெருவாரியாகப் பரவி விட்டிருந்ததாம். பலர் இறந்து போனார்களாம். பக்கத்துக்கிராமத்தில் பிள்ளையார் கோவில் அர்ச்சகரும், அவர் மனைவியும் ஆறு மாதச் சிசுவை தனியே விட்டு விட்டு டைபாய்டுக்குப் பலியாகி விட்டனராம் அனாதையான குழந்தைக்குப் பாதுகாப்பு யார் கொடுப்பது என்ற விஷயம் பஞ்சாயத்து வரை வந்துவிட்டது யாரும் குழந்தையின் பொறுப்பை ஏற்க முன் வரவில்லை. டாக்டர் சதாசிவம் அது சமயந்தான், தனது ஒரே மகனை நோய்க்குப் பலி கொடுத்த துக்கத்தில் மூழ்கியிருந்தார் இது தெய்வச் செயல் என்று தோன்றியதாம் அவருக்கு. அந்தக் குழந்தையைத் தாம் எடுத்து வளர்ப்பதாக முன் வந்தாராம்.

ஏழு வயதுவரை அவரது ஆதரவில் வளர்ந்தேன். எனது எட்டாவது வயதில் வளர்ப்பு அன்னையும் மரணமடைந்து விட்டாள். ஊட்டியிலிருந்த பள்ளி ஒன்றில் என்னை ஹாஸ்டலில் தங்கிப் படிக்க ஏற்பாடு செய்து விட்டு டாக்டர் சதாசிவம் ஊரைவிட்டே கிளம்பிவிட்டார். பரோடா அருகில் விஸ்வபுரியில் தமது நண்பர் நடத்தி வந்த அனாதை இல்லத்தில் வைத்தியராகப் பணிபுரியச் சென்றுவிட்ட அவரை நான் கல்லூரியில் சேருமுன் தான் மறுபடி சந்திக்க முடிந்தது. காவி வேட்டியும், மொட்டைத் தலையுமாக சந்நியாசி கோலத்தில் ஸகஜானந்தராக மாறிவிட்டிருந்தார்.

"அவர் இன்னமும்..." மங்களா முடிக்கவில்லை.

"இன்னமும் உயிரோடு இருக்கிறார். ஆனால் வயசில் தளர்ந்துபோய் விட்டிருக்கார். அப்பாங்கிற உறவு முறை அறுந்து போச்சு. ஆனால், குருநாதர் என்கிற நிலையிலே எனக்கு ரொம்ப வழிகாட்டியா இருந்துண்டு இருக்கார் சென்னைக்கு வரும்போது அவரைப்போய் பார்த்து ஆசீர்வாதம் வாங்கிண்டுதான் வந்தேன்."

"அப்படியா?"

"உபகாரச் சம்பளத்தில் கல்லூரிப்படிப்பை முடிச்சுட்டு பிரசாத் நிறுவனத்தில் சேர்ந்தேன். எனது கடும் உழைப்பு டைரக்டரின் கவனத்தையும் அன்பையும் கவர்ந்தது. கம்பெனி உதவியால் எம்.பிஏ படிச்சு முடிச்சேன். வெளிநாடு களுக்குக் கம்பெனி சார்பாகப் போய் வர சந்தர்ப்பம் கிடைச்சுது. பதவி உயர்ந்தது. சலுகைகள் அதிகமாச்சு. சென்னைக்கு மாற்றலாகி வந்தேன். இப்போது கடற் கரையில் உன் முன்னே உண்மைகளைக் கொட்டிவிட்டுப் பதிலுக்குப் பயந்து கொண்டு காத்திருக்கேன்." மெல்லச் சிரித்தான்.

"அதான் ஒரேயடியாக முதலிலேயே சொல்லிவிட் டேனே?"

"இன்னொரு தடவை கேட்க ஆசையாக இருக்காதா?" குரல் குழைய அவளை மென்மையாகப் பார்த்து முறுவலித் தான்.

"என்னைப் பற்றி அண்ணா சொன்னதைக் கேட்டு உங்க மனசிலே எதுவும் ஏற்படலையா?"

"அதான் முதலிலேயே நானும் சொல்லிட்டேனே?"

"திரும்ப கேட்க எனக்கு மட்டும் ஆசை இருக்காதா?" மணலில் அளைந்த அவளது கரத்தை சட்டென்று பற்றிக் கொண்டான்.

"திரும்பத் திரும்ப இந்தக் கரத்தைப் பற்றி என்னோ டேயே எப்பொழுதும் இருக்க வச்சுக்கணும்னு எனக்கு ஒரு ஆசை ரொம்ப ஏற்படுகிறது என்று சொன்னால், உன் பதில்?"

மங்களா மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

# 28

அதற்குப் பின் நாட்கள் வேகமாக நகர்ந்தன. காலை யில் காசிநாத் அவளைத் தன்னுடைய காரில் தினமும் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றான், பகல் உணவிற்குத் தன்னுடன் கூட ஸ்வப்னா ஈட்டிங் ஹவுஸிற்குக் கூட்டிச் சென்றான். மாலையில் அவளை ஹாஸ்டலில் கொண்டு சேர்ப்பித்ததும் தன் வீட்டிற்கு விரைந்து உடை மாற்றிக் கொண்டு வந்து, மறுபடி அவளைத் தன்னுடன் கடற்கரைக்கு அழைத்துச் சென்றான். சில நாட்கள் மணல் மீதும், சில பொழுது காரிலும் அமர்ந்தபடி... வருங்காலத்தைப் பற்றி இனிக்கப் பேசினான்.

தன் வாழ்வில் ஏற்பட்ட இந்த திருப்பத்தை எண்ணி மங்களா மனம் பூரித்துப் போனாள்.

'கண்ணியமான, அன்பான காசிநாத் அவளுக்கு விரை வில் கணவனாகப் போகிறான். இன்பமான அந்த எதிர் பார்ப்புக்கிடையே எந்தத் தடங்கலும் ஏற்படக் கூடாது... கடவுளே!' தனக்குள்ளே அவள் அடிக்கடி பிரார்த்தித்துக் கொண்டாள்.

மகிழ்ச்சிக்கு நடுவே மனதில் ஒரு பரபரப்பான நடுக்க மும் இருக்கத்தான் இருந்தது. முன்புபோல இடையே அது...மெல்ல குத்தி நெருடியது. பழைய கசப்பான சம் பவங்களின் பாதிப்பின் சலனங்களினின்று அவள் பூரண மாக விடுபட வில்லையே! அதை மறக்க முடியாது அவளது தமையனே காசிநாத்திடம் அழுத்தமாக சுட்டிக் காட்டி விட்டிருந்தாரே...? சில சமயங்களில்... அதை எண்ணி அவள் அமைதி குலைந்து தவித்துக் கொண்டிருந் தாள்.

அன்று மாலை அவர்களிருவரும் கடற்கரை மணல் மீது உட்கார்ந்து கதைகள் பல பேசிக்கொண்டிருந்தனர்.

"இன்னிக்குப் பகல் நாம் சேர்ந்து சாப்பிடலை... அவசரமாக நான் வெளியே போகணும்னு கிளம்பிட்டேன். நீ அதைப்பற்றி ஒண்ணுமே கேட்கலையே?" கேலியாகச் சிரித்தபடி காசிநாத் அவளை அன்போடு பார்த்தான்.

"ஆபீஸ் வேலை ஏதாவது முக்கியமா இருந்திருக்கும்னு, கேட்கலை."

"ஆனாலும் உனக்குப் பொறுமை ரொம்பத்தான் இருக்கு..." செல்லமாக அவன் கன்னத்தை மெல்லத் தட்டினான் காசிநாத்.

"அப்பா உயிரோடு இருந்தவரை அவர் கொடுத்த சலுகையில் நான் பிடிவாதக்காரியாகத்தான் வளர்ந்தேன்... பிறகு ஏற்பட்ட பல அனுபவங்கள் கத்துத் தந்த பாடங்களில் பொறுமை, தானே ஏற்பட்டுடுத்து. இதில் என்ன அதிசயம் இருக்கு?"

"வாழ்க்கையில் சின்ன வயசில் அனாதையாகிவிட்டேன் கண்டிப்பாக வளர்க்கப்பட்டேன். அதனால் தானே என்னவோ சாதாரணமாகவே எனக்குப் பொறுமை அதிகம். ஆனால் இப்போ...அது ஒரேயடியாகக் குறைஞ்சு போச்சுன்னு தோணறது."

"ஆபீஸ் பொறுப்பு சுமையாக உங்களை அழுத்தறது... அதனால் இருக்கும்."

"முக்கியமான காரணம் வேறே...உனக்கும் தெரியும்... சிக்கிரமா நம்ம கல்யாணத்தை முடிச்சுக்கணும்னு துடிக்கிறேன்...அந்த ஆசை மனதை நெருக்கிறதினாலே பொறுமை பஞ்சாகப் பறந்தே போச்சு." அவளது கண்களுக்குள் பதிலைத் தேடியபடி முறுவலித்தான்...

அவனைப்போல வெளிப்படையாக சொல்லி கொள்ள அவளுக்கு வெட்கமாக இருந்தது. ஆனால் அவள் மனதும் அதே ஆசையுடன் இன்ப மயக்கத்துடன்...துடிப்புடன்...



ஆவலுடன் அந்த நன்னாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது என்பது உண்மை.

இன்பச் சிலிர்ப்பில் முகம் சிவந்து... படபடத்தை மறைக்க மணல் மீது கிடந்த கிளிஞ்சல்களை மெல்ல பொறுக்கத் தொடங்கினாள்.

"சென்னை ஆபீஸிற்கு வேலைக்கு வந்ததிலிருந்து கவனிச்சுக் கொண்டுதான் வரேன்... நீலப்புடவையிலே நீ ரொம்ப அழகா இருக்கே, தெரியுமா?" கிளிஞ்சல்களைப் பொறுக்கிய...அந்த மெல்லிய விரல்களை வேகமாகப் பற்றித் தன் பிடியில் இறுக்கிக் கொண்டான்.

"நீங்க ரொம்பப் பொல்லாதவர். பெண்களை இப்படி ஊன்றிப் பார்க்கிற வழக்கம் உங்ககிட்டே இருக்குன்னு என்னால் நம்ப முடியலே." வேடிக்கையாகச் சிரித்த மங்களா, மெல்ல தன் கரத்தை அவன் பிடியினின்று விடுவித்துக் கொண்டாள்.

"நம் ஆபீசில் பல பெண்கள் இருக்கா...ஆனால் நீ மட்டுந்தான் சதா என் கண்களில் பட்டுண்டு இருக்கேன்னு உண்மையை ஒப்புக் கொண்டால் கூட பொல்லாத பட்டமா...?"

அர்த்தமில்லாத பேச்சுக்காக தேவையில்லாத சிரிப்பு, மனம் ஒன்றுபட்டவர்களுக்கு எல்லாமே மகிழ்ச்சியைக் கொடுக்கும் காவியங்களாக, கதைகளாக, இன்பமாக இருக்கின்றனவே! வியப்புடன் மங்களா அவனை அன்போடு பார்த்தாள்.

"சாப்பாட்டு நேரத்தின் போது நான் கடைத்தெருவுக்குப் போயிருந்தேன்...இதுதான் என் முதல் அனுபவம்...அப்பக் கூட சாமர்த்தியமாகத்தான் முடிச்சிருக்கேன்...நீ பார்த்த பிறகு சந்தோஷப்படுவே..."

"பூடகமாகப் பேசினால்...எனக்கு ஒண்ணும் புரியலை..." மெல்லச் சிணுங்கினாள்.

"சில சமயம் வெளிப்படையாகப் பேசி... குங்குமமாக சிவக்கிற உன் முகத்தைப் பார்க்க ஆசையாக இருக்கு. சில சமயம் மர்மமா பேசி...உன் கண்களில் ஏற்பட்ற திகைப்பைப் பார்த்து ரசிக்கத் தோணுறது. இன்னும் சில சமயங்களில் உன்னையே ஊகிக்க விட்டு வேடிக்கை பார்க்கணும்னு ஆவலா இருக்கும். மங்களா! புரியவில்லையா? என் உணர்வுகள் அத்தனையும் இப்படி உன்னையே சுற்றி வட்ட மடிச்சுண்டு...விளையாடறது. நான் என்ன பண்ணுவேன்...?"

இந்தச் சில நாட்களில் அவன் எப்படித்தான் மாறி விட்டான்? கண்டிப்பும் கறாருமாக இருந்தவன், இப்போது கொஞ்சி, குழந்தையைப் போல—இனிக்க இனிக்கப் பேசி அவளை எப்படியெல்லாம் மயக்குகிறான்...? வேலையில் திறமைசாலியாக இருப்பது போல... காதலிப்பதிலும்... அப்பப்பா... எண்ணி மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள். அவனது ஆழமான அன்பைக் கவர்ந்து கொண்டு விட்டதைப் பற்றி பெருமையில் நெஞ்சு விம்மியது.

"நேரமாகிறது. இப்போ கிளம்பினால்தான் ஹாஸ்டலுக்குப் போகச் சரியாக இருக்கும்..." நினைவுபடுத்தினாள்.

ஹாஸ்டல் வாசலில் அவளை இறக்கிவிடுமுன்...டிக்கியிலிருந்து ஒரு பார்சலை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

"என்ன இது?" ஆவலை அடக்க முடியாது வண்ணக் காகிதத்தைப் பிரித்து உள்ளிருந்த அட்டைப் பெட்டியைத் திறந்தாள்.

கருநீல வண்ணத்தில், அரக்குக்கரையில், சரிகை பளபளத்த காஞ்சிபுர பட்டுச் சேலையும், ரவிக்கைத் துண்டு ஒன்றும் அட்டைப் பெட்டிக்குள் காணப்பட்டன.

"என்ன இது...?" என்று கேட்டபடியே, அதன் மேல் வைக்கப்பட்டிருந்த சிறு சீட்டைப் பார்த்தாள்.

"என் வருங்கால இனியமனைவிக்கு என் அன்பளிப்பு."



"இப்போ இதுக்கெல்லாம் என்ன அவசரம்?" நெஞ்சு நன்றியில் நெகிழ, கண்கள் பனிக்க, மெல்லிய குரலில் கேட்டாள்.

"ரொம்ப அவசரம் நாளைக்குக் காலையில் ஆபீசுக்கு அதைக் கட்டிக் கொண்டு வரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். சரியா...?" பிரிய மனமில்லாது கையை ஆட்டி விட்டுக் கிளம்பி விட்டான் அவன்.

மறுநாள் காலை புதுப் புடவை சரசரக்க அவள் காரில் வந்து ஏறிக்கொண்டாள். "உன்னைப் பார்த்தால் இப்போ எப்படி இருக்குத் தெரியுமா? ஆபீஸிற்குப் போறாப் போல இல்லை. நேரே கல்யாண பந்தலுக்குப் போய் மணையில் உட்காரப் போகிற கல்யாணப் பெண் போல...ஜோரா இருக்கு" வேடிக்கையாகச் சிரித்தபடி காரை ஓட்டினான் காசிநாத்.

காதும் மூக்கும் கபகபவென்று சூடடைவதை உணர்ந்தாள் அவள்.

அவனும் அன்று காலை கோட்டும் சூட்டுமாக அதிகப்படியான அலங்காரத்தில்தான் வந்திருந்தான்.

'உங்களைப் பார்த்தால்கூட கல்யாண மாப்பிள்ளை போலத்தான் இருக்கு.' மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

இலுவலகத்தில் அன்று ஒரே பரபரப்பு எல்லோர் பார்வையிலும் வியப்பு இரண்டு பேரும் ஜோடியாக அலங்காரமாக வந்திருக்காங்களே என்ன விசேஷம்?

தேநீர் வேளையின் போது மானேஜர் எல்லோரையும் பொது ஹாலுக்கு அழைத்ததாகப் பையன் வந்து சொன்னான். தாமதமின்றி அனைவரும் அங்கே வந்து கூடினார்கள்.

மங்களாவுடன் ஜோடியாக அவர்கள் நடுவே வந்து காசிநாத் நின்றான். அவனது முன் ஏற்பாட்டின் படியே

ஆபீஸ் பையன்...எல்லோருக்கும் இனிப்பும் தேநீரும் ஒருங்கே வழங்கினான்.

"நீங்கள் எல்லோரும் இங்கே வந்ததற்கு நன்றி உங்கள் அனைவருக்கும் ஒரு இனிப்பான செய்தியைச் சொல்லத்தான் இனிப்பை முதலில் வழங்கச் சொன்னேன் மிஸ் மங்களாவுக்கும், எனக்கும் விரைவில் திருமணம் நடத்த நிச்சயமாகியிருக்கிறது. அழைப்பு வரும் எல்லோரும் வந்து வாழ்த்தி கௌரவிக்க வேண்டும்...நன்றி." கை குவித்து எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்தான்.

பதஞ்சலிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியால் ஜிலேபியை ஒரே வாயில் விழுங்கி, தேநீரை ஒரே மூச்சில் குடித்துத் தீர்த்தார்.

மங்களாவுக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமா...புளியங் கொம்பைப் புடிச்சுவிட்டிருக்காளே? பொறாமையால் அவர் வயிறு நெருப்பாக எரிந்தது.

"கன்கிராஜுலேஷன்ஸ்..." உரத்த குரலில் பாராட்டி னார். அலுவலகத்தில் வயதிலும் அந்தப் பகுதியில் தகுதி யிலும் பெரியவராச்சே—ஏதாவது இந்தச் சமயம் சொல்லித் தானே ஆகணும்? எரிச்சலோடுதான் பாராட்டு தலை வழங்கினார். எல்லோரும் தொடர்ந்து பாராட்டி விட்டு நகர்ந்தனர்.

பகல் உணவிற்கு வெளியே வந்து காரில் ஏறிக்கொண்ட போது கேட்டாள் "எல்லார் எதிரிலும் நீங்க இப்படிச் சொன்னதைக் கேட்க எனக்கு ரொம்பக் கூச்சமாக இருந்தது...அவர்களுக்கெல்லாம் இப்போ இது தெரிஞ் சாகணுமா?"

தெரிஞ்சுக்கணும்கிறதுக்குத்தான் வெளிப்படையா... எல்லாருக்கும் நம் நிலையைப் பத்தி விளக்கமா சொல்லி விட்டேன், இனிமே ஆபீசிலே உன்னையும் என்னையும் பற்றி...கிசுகிசுக்கள் இருக்கவே இருக்காது. மானேஜருக்கு, மங்களா மேலே ஒருஇதுன்னு...நினைக்கிறபோது ரொம்ப, சுவையான வம்புகள் கிளம்பிடுத்து...மங்களாவுக்கும்



மானேஜருக்கும் கல்யாணம் நிச்சயமாயிட்டதுன்னு தெரிஞ்சதும் வம்புகள் உப்பு சப்பில்லாமல் அடங்கிப் போயிடும். புரிகிறதா?'

மங்களா மகிழ்ச்சியுடன் இருந்தாள். "ஆழமான நீரோட்டத்தைப் போல... நீங்க பார்வைக்கு...ரொம்ப அமைதியா தெரியறேள். உண்மையில் ரொம்பப் பொல்லா தவர்தான்." செல்லமாக அவனது கையை மெல்லக் கிள்ளினாள்.

அதற்குப் பின்னர் அவர்களிருவருக்கும் ஓய்வு ஒழிச்சல் இன்றி பல வேலைகள்.

வருங்காலத்தில் கணவன் மனைவி என்று அவர்கள் வாழப் போகிற வீட்டிற்குத் தேவையான பொருள்களை மங்களாவின் விருப்பப்படி வாங்கி நிறைப்பதில் அவன் முனைந்து விட்டிருந்தான். அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று சுற்றிக் காட்டி ஆலோசனைகள் கேட் டான். தேடித்தேடி சாமான்களை வாங்கிச் சேர்ப்பதில் தான் அவர்களுக்கு எத்தனை உற்சாகம் ஆனந்தம்!

அன்று மாலை ஹாஸ்டலுக்குத் திரும்பியபோது... அறைக் கதவைத் திறந்தவுடன்...அவள் பெயருக்கு வந்த கடிதம் ஒன்று உள்ளே தரை மீது கிடந்தது.

காசிநாத் தன்னை விரும்பி மணந்து கொள்ளக் கேட்ட சங்கதியை அவள் தோழி லதாவுக்கும் எழுதியிருந்தாள். அவளிடமிருந்து பாராட்டுக் கடிதமும் வந்து விட்டிருந்தது. இது யாரிடமிருந்து வந்திருக்கிறது?

வியப்புடன் கையில் எடுத்தாள். பழக்கமில்லாத கை யெழுத்து. அவசரமாக கடித உறையைப் பிரித்தாள். திக்கென்ற உணர்வில் தடுமாறிப் போனாள். அது ஒரு மொட்டைக் கடிதம்.

'காசிநாத்தை நீ நேசிப்பது உண்மையென்றால் உடனே இந்தக் கல்யாணத்தினின்று விலகி ஒதுங்கிக்

கொள்வதுதான் முறை உன் கழுத்தில் தாலி ஏறினால் அதுவே பாம்பாக மாறி கட்டின கணவனைக் கொத்திவிடும் அத்தனை அதிர்ஷ்டக்காரி நீ. உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள முன் வந்த இரண்டு பேர்களுக்கு நேர்ந்த துர்பாக்கியம் காசிநாத்துக்கும் ஏற்பட வேண்டாம், பாவிப் பெண்ணே அவனை வாழவிடு.'

கடிதத்தை மடித்துக் கைப்பைக்குள் வைத்துவிட்டு அவசரமாகக் குளியலறைக்கு விரைந்தாள்.

அன்று காசிநாத்தும் அவளும் அருகிலிருந்த பிள்ளையார் கோவிலுக்குப் போய் வருவதென்று ஒரு ஏற்பாடு. குழாய்த் தண்ணீருடன் போட்டியாகப் பொங்கிக்கொண்டு வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு குளியலை சீக்கிரம் முடித்துக் கொண்டு வேறு உடுத்திக் கொண்டு தயாரானாள்.

கோயிலில் அர்ச்சனையை முடித்துக் கொண்டதும், காசிநாதன் காரை நேரே தன் வீட்டிற்கு செலுத்தினான்.

கதவைத் திறந்து விளக்குகளைப் பளிச்சென்று எரிய விட்டான்.

"வீடு இப்போ எப்படி இருக்கு? நீ விரும்பினபடி முன்னறைக்கு கரும்பச்சைத் திரைச் சீலை போட்டாச்சு இந்தப் பெரிய இரும்புப் பீரோவை உனக்காக வாங்கியிருக்கேன் கொஞ்ச நாளில் இது போதாதுன்னு சொல்லும்படி புடைவைகளை வாங்கி அடுக்கிடுவேன். சமையலுக்கு வாங்கின பாத்திரங்களையெல்லாம் அலம்பித்துடைச்சுத் தயாராக அலமாரியிலே அடுக்கி வெச்சிருக்கேன். கல்யாணத்திற்குப் பிறகு ஆபீஸ் வேலையிலிருந்து நீ வீட்டை கவனிக்கும் வேலைக்கு மாற்றலாகி வரப் போறே, ஆபீசைக் கவனிச்சாப்பல சமையலையும் நன்னாக் கவனிப்பேன்னு நம்பறேன்..."

மங்களாவால் மனம்விட்டு அவனுடன் கூட மகிழ்ச்சியோடு சிரிக்க இயலவில்லை.



அவள் உள்ளத்திற்குள்ளே புகுந்து கொண்டு விஷத்தைக் கக்கிக் கொண்டிருந்தது அந்தக் கடிதத்தின் வாசகம்.

எந்தப் பாவியோ அவள் சந்தோஷமாக இருக்கப் போறதைக் காண சகிக்காது...இப்படி ஒரு கடிதத்தை எழுதிக் காய்ந்து போன ரணங்களைக் கிளறி விட்டிருக்கிறான்.

அவளது மனப் போராட்டத்தை கவனிக்காது காசிநாத் மேலே பேசிக் கொண்டு போனான்.

"முக்கியமான ஒரு பொருளை உன்னிடம் காட்டத்தான் இன்னிக்கு இங்கே அழைச்சிண்டு வந்திருக்கேன். என் குருநாதருக்கு ஏற்கெனவே நம்மைப் பத்தின சங்கதியை எழுதி விட்டிருக்கேன்னு சொன்னேன் இல்லையா? அவரைக் காண நான் அடுத்த வாரம் பரோடா வரை ஒரு பயணம் போக வேண்டியிருக்கு."

திடுக்கிட்டு மங்களா அவனைக் கவலையுடன் பார்த்தாள்.

"என் குருநாதர் மனைவிதான் என் வளர்ப்புத் தாயார்ங்கிறதும் உனக்குத் தெரியும். தான் போட்டுண்டு இருந்த தங்க சரட்டை எனக்குச் சொத்தாக என் தாய் விட்டுட்டுப் போயிருந்தா. என் குருநாதர் அதைப் பத்திரமாக வச்சிருந்து நான் இங்கே வரத்துக்கு முன்னாடி தான் என் கிட்டே ஒப்படைச்சார். 'உன் வருங்கால மனைவிக்கு உன் தாயார் பரிசு'ன்னு சொல்லி ஆசீர்வதித்தார். உன் சம்மதம் கிடைச்சதும் நான் உடனடியாக இதை இங்கே தெரிஞ்ச நகைக்கடையில் கொடுத்து...திருமாங்கல்யம் செய்து...சரட்டில் கோர்த்துத் தர ஏற்பாடு பண்ணியிருந்தேன். நேத்திக்கு அது கிடைச்சது. கடையிலிருந்து எடுத்து வந்து... என் குருநாதர் படத்துக் கிட்டே வச்சிருக்கேன். நேரே இதை எடுத்துண்டு போய் அவர் ஆசியுடன், அவர் குறிப்பிட்டுக் கொடுக்கும் தேதியில் இங்கே பந்து மித்திரர்கள் சூழ...சுபயோக சுபதினத்தில்... இந்தப் பொண்ணு கழுத்திலே...கட்டப் போகிறேன்...வா. வந்து பாரு" அவளது கையைப் பற்றிக்

கொண்டு முன்னறைக்கு அழைத்துச் சென்றான்...படத்தின் முன்னாலிருந்த நகைப் பெட்டியை எடுத்து அவள் கையில் வைத்தான்.

"பழைய காலத்து தங்கச்சரடு புது மெருகில்...திருமாங்கல்யத்தோடு எத்தனை கச்சிதமாக...அழகா இருக்கு பார்."

பெட்டியைத் திறந்து விளக்கொளியில்... புதுமெருகில் தகதகத்ததை மிரட்சியுடன் பார்த்தாள்.

'ஐயோ! என்ன இது, நகைப்பெட்டிக்குள்ளே ஒரு பாம்பல்லவா இருக்கு...அவரைக் கடிச்சுட்டா...?' வீடே சுழல்வது போன்ற திகைப்பும்—பிரமிப்பும்— துயரமும் தனாது அவள் விம்மினாள்.

"மங்களா-என்ன இது...?"

பதற்றமாக காசிநாத் அவளை நெருங்கினான்.

# 29

அலுவலகத்தில் இப்போது மங்களாவின் அந்தஸ்து திடீர் என்று உயர்ந்துவிட்டிருந்தது.

"அம்மாவுக்குன்னு ஸ்பெஷல் டீ கொண்டு வந்திருக்கேன்." பற்கள் அனைத்தையும் காட்டி ஆபீஸ் பையன் தேநீர் கோப்பையை அவள் மேஜை மீது வைத்தான்.

மங்களா மௌனமாக அவனைப்பார்த்தாள்.

"கல்யாணமானதும் அம்மா வேலை செய்யப் போவதில்லையாமே? அப்போ என் தீபாவளி, பொங்கல் தினத்துக்கு நான் ஐயாவோட பங்களாவுக்குத்தான் வந்து வசூல் செஞ்சுக்கணும் போலிருக்கு." சிரித்தான் அவன்.



'அலுவலகத்து சங்கதியை வீட்டிற்கும், வீட்டு விஷயங்களை அலுவலகத்திற்கும் கொண்டு குழப்பிக் கொள்கிறவர் காசிநாத் இல்லை நீ அங்கு வந்து நின்றால் இனாம் கிடைக்காது. ஐயாவின் கோபந்தான் கிடைக்கும்.' சொல்ல வேண்டுமென்ற ஆவலில் துடித்தாள்.

ஆனால் மௌனமாக முறுவலித்துவிட்டு தபாலில் வந்திருந்த கடிதங்களைச் சேர்த்து அவன் கையில் கொடுத்தான் "மானேஜரிடம் கொண்டு கொடு" என்று ஜாடை காட்டினாள்.

தேநீர் கோப்பையுடன் மாலினி அவள் மேஜையருகே வந்தாள்.

"மிஸ் மங்களா! ஒண்ணு கேட்கிறேன், கோவிச்சுக்கக் கூடாது. உத்தேசமா உங்க கல்யாணம் எப்போ நடக்கப் போகுதுன்னு சொல்ல முடியுமா?"

"ஏன்?" என்ற பாவனையில் மங்களா அவளை வெறித்தாள்.

"உங்களுக்கு நல்லதாக ஒரு கல்யாணப் பரிசு வாங்கித் தர திட்டமிட்டிருக்கோம். முன்னதாக தேதி தெரிஞ்சால் எல்லார் கிட்டேயிருந்தும் பணத்தை வசூல் பண்ண சுலபமாக இருக்கும். அந்தப் பொறுப்பு என்னுடையதாகிவிட்டிருக்கு."

'ஒரு மொட்டைக் கடித ரூபத்தில் ஏற்கெனவே கல்யாணப் பரிசு வந்தாச்சு. இன்னும் என்ன எனக்குக் கொடுக்கப் பாக்கி வச்சிருக்கேள்?' என்று கேட்க வேண்டும் போல நெஞ்சு வரை எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

"மானேஜரைக் கேட்டுத் தெரிஞ்சுக்கோங்க. அதுதான் முறை." மெல்லச் சிரித்தாள்.

"அப்பாடி! அவர்கிட்ட போய் கேட்க முடியுமா?" மாலினி மிரட்சியுடன் அப்பால் நகர்ந்தாள்.

அன்று மாலை பதஞ்சலி வெற்றிலையைத் துப்பி வாயைக் கொப்பளித்து விட்டுப் பின்னாலிருந்து வந்தவர். நேரே அவளிடம் வந்தார்.

''கல்யாணத்துக்குப் பிறகு நீங்க இல்லாம இந்த ஆபீஸ் வெறிச்சோடி போயிடும் ஆனால் அதுதான் சரி. வேலையில்லாது அவதிப்படும் ஒரு ஆளுக்கு அந்த வேலை உதவும் இல்லையா? மேலும் குடும்பத் தலைவிங்கிற ஸ்தானம் இந்த அலுவலகத்து வேலையைவிட ரொம்ப உயர்ந்த பதவியாச்சே! ஹி...ஹி! முகூர்த்த தேதிகூட நிச்சயமாயிருக்கும். என்னா இந்த சென்னையில் இப்ப வெல்லாம் கல்யாண மண்டபம் கிடைக்கிறது கஷ்டமா யிருக்கே?''

மங்களா பதிலளிக்காது மௌனமாக இருந்தாள்.

''என் மூத்த பெண் விஜயாகூட இரண்டு மாசமா டவுனிலே ஒரு காகிதக் கம்பெனியில் டைபிஸ்ட் வேலை பார்க்கிறா. இந்தக் காலத்திலே ரொம்ப பசங்கள் வேலை பார்க்கிற மனைவிதான் வேணும்னு கேட்கிறார்கள். நிறைய அப்படிப்பட்ட வரன்கள் வரது. எனக்குப் பிடிக் கலை. என் பெண்ணுக்குக் கல்யாணம் ஆனதும் அவள் நிம்மதியா குடும்பத்துத் தலைவியா ஒதுங்கி வீட்டிலே தங்கிடணுங்கிறது என் ஆசை. ஆபீஸ்—வீடுன்னு சுமக்க மாட்டாத ரெட்டைப் பொறுப்பை குழந்தைத் தலையில் கட்டக்கூடாது. அவள் நிம்மதியா வாழணுங்கிறது என் ஆவல்.''

'உங்க பெண் மட்டும் நிம்மதியா சந்தோஷமாக வாழணும். மற்றவர்களின் பெண்கள் சஞ்சலத்திலே தவிக் கணும். ஏன் ஸார்! நீங்கதானே அந்த மொட்டைக் கடி தங்களை எழுதினீர்? வயசாகியும் உங்களுக்குக் கொஞ்ச மும் விவேகம் இல்லையே? இப்படி ஒரு கோணல் புத்தி ஏன் ஸார்?' படபடவென்று கேட்க மனம் துடித்தது.

ஆனால் அவர்தான் அவைகளை எழுதினார் என்ப தற்கு என்ன ஆதாரம்? வீணாக அவருடன் மனஸ்தாபங்கள் ஏன்?



மங்களா பிடி கொடுத்துப் பேசாது வழக்கம் போல மௌனமாக இருந்தது அவருக்கு எரிச்சலை மூட்டியது.

ஆனாலும் இந்தப் பெண்ணுக்கு மண்டை கர்வம் அதிகம். தமக்குள்ளே எண்ணி வெகுண்டவராக தமது இருக்கையை நோக்கி நடந்தார். தன் பெயருக்கு வந்த அனாமதேயக் கடிதத்தை அவள் காசிநாத்திடம் காட்டத் தான் விரும்பினாள்.

அன்று மாலை அவளைச் சந்திக்க அவன் ஹாஸ்டலுக்கு வந்திருந்தான். கைப்பைக்குள் அந்தக் கடிதத்தைப் போட்டுக் கொண்டு விரைவாகக் கீழே வந்தாள்.

''உட்கார நேரமில்லை, நாம் உடனடியாகக் கடைக்குப் போகணும்'' பரபரப்பாக பேசினான் அவன்.

குழப்பத்துடன் அவள் காரில் ஏறி உட்கார்ந்து கொண் டாள். அதை ஓட்டிக் கொண்டே வந்த காசிநாத் பேசினான்.

என் குருநாதர் கிட்டேயிருந்து வீட்டுக்கு கடிதம் வந் திருக்கு. அதில் அவர் கல்யாணத்துக்கு மூன்று தேதிகள் குறிப்பிட்டிருக்கார். அடுத்த மாசம் பதினைந்தாம் தேதி ஒரு முகூர்த்தநாள். அப்பவே நம்ப கல்யாணத்தை வைச்சுக்க லாம்னு என் முடிவு. உனக்கும் சம்மதம்தானே?

அத்தனை விரைவில் அவர்களது திருமணமா? மங்க ளாவுக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை.

''உங்கள் இஷ்டம். எனக்கும் சம்மதம்.'' மெதுவான குரலில் பதிலளித்தாள்.

''கல்யாணத்தை என் குருநாதர் குறிப்பிட்டுள்ள முதல் முகூர்த்தத்தில் வச்சுக்க நான் ஏன் அவசரப்படறேன், தெரியுமா? சித்த முன்னேதான், டைரக்டர் பிரசாத் என்னைப் ஃபோனில் கூப்பிட்டார் அடுத்த வாரம் நான் அவரைப் பம்பாயில் சந்திக்கணுமாம். வியாபார விஷயமாக ஜெர்மனிக்கு நான் அடுத்த மாதம் போய் வரணுமாம். அதைப் பத்திப் பேசி முடிவு செய்ய உடனே வந்தாகணும்னு சொன்னார்.''

திகைப்புடன் இருந்த மங்களாவின் கரத்தைத் தன் இடது கையால், பிடித்து மென்மையாக அழுத்தினான்.

"பிரசாத்தான் எனக்கு இந்த யோசனையைச் சொன்னவர். 'சீக்கிரமா கல்யாணத்தை முடிச்சுக்க. மனைவியோடேயே வெளிநாட்டுப் பயணத்துக்குக் கிளம்பு. செலவு முழுவதும் என்னுடையது. நான் உங்களுக்குக் கொடுக்கிற கல்யாணப் பரிசு இது. ஹாய்யா புது மனைவியோட வெளிநாட்டிலே தேன்நிலவு கொண்டாடிக் கொள்ளுன்னு சொல்றேன்—ரொம்ப யோசிக்கிறயே?'னு அதட்டினார். சரின்னு ஒப்புக் கொண்டு விட்டேன், வெளிநாட்டுப் பயணம் உனக்கு இஷ்டம் தானே?"

மூச்சுத் திணறுவது போன்று ஆனந்தம் அவளுக்கு. "உங்கள் இஷ்டம்" என்று நெருக்கமாக அவனருகே நகர்ந்து கொண்டாள்.

"கல்யாணத்துலே வீண் செலவு செய்கிறது எனக்குப் பிடிக்காத விஷயம் அதனாலே நம்ம கல்யாணத்தை எளிமையா ஒரு கோவிலில் முடிச்சுப்போம். ஆபீசில் உள்ளவர்களுக்கும், டைரக்டர் பிரசாத்துக்கும் ஹோட்டலில் விருந்து கொடுத்திடுவோம்...என்ன சொல்றே...?"

"எல்லாத்துக்கும் என் இஷ்டம்னு தலையாட்டிக் கொண்டு இருக்கத் தேவையில்லை. நம் வாழ்க்கையில் எந்த ஒரு முடிவுக்கும் இருவருடைய சம்மதமும்தான் தேவை' ஏதாவது பிடிக்காட்டி உடனே சொல்லணும். பேசாமல் இருக்கக் கூடாது. வாழ்க்கையிலே நாம் ஒருவருக்கொருவர் துணை யாருக்கும் யாரும் அடிமையில்லை."

இவைகளையெல்லாம் அவன் சொல்லக் கேட்க அவளுக்குப் பெருமையாகத்தான் இருந்தது.

"கல்யாணத்துக்குத் தேவையான ஜவுளிகளை இப்பவே எடுத்து முடிச்சுடுவோம். அடுத்த வாரம் எனக்கு நிறைய வேலை இருக்கு." சொல்லிக்கொண்டே காரை



கடைத் தெருவில் ஜவுளிக்கடை முன் நிறுத்திவிட்டு இறங்கினான். அவள் தொடர்ந்தாள்.

தேவைப்பட்டதை வாங்கிக்கொண்டு அவர்கள் திரும்பினார்கள். ஹாஸ்டல் தோட்டத்தில் வழக்கமான இடத்திலே காரை நிறுத்திவிட்டு, பளுவான ஜவுளி பார்சலைத் தூக்கிக் கொண்டு ஹாஸ்டல் வாசற்படிவரை கூட நடந்து வந்தான்.

"முகூர்த்தப் புடவை உனக்குப் பிடிச்சி இருக்கிறதை பத்தி எனக்குத் திருப்தி. ஹாஸ்டல் வார்டன்கிட்டே புடவைகளைக் கொடுத்துப் பத்திரமா இரும்பு பீரோவில் வச்சிருக்கச் சொல் இன்னும் ஏதாவது தேவையா? நினைச்சுப் பார்த்தியா?" அன்போடு அவன் கேட்டான்.

புடவைப் பார்சலை வாங்கி நெஞ்சோடு அணைத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் முறுவலித்தாள். "ஒண்ணு உண்டு... உங்கள் அருகாமை சதா தேவைன்னு சொன்னால்...?" வேடிக்கையாகக் கேட்டாள்.

"வெளிநாட்டுப் பயணத்தின்போது, அந்த அருகாமை ரொம்ப சலித்துப்போயிடும்னு நான் சொன்னால்...?" பதிலுக்குப் பரிகசித்தான் அவன்.

"காலம் முழுவதும் சலிக்கவே சலிக்காது என்று நான் சொன்னால்...?" சிரித்துக்கொண்டே அவள் விடை பெற்றுக் கொண்டு உள்ளே சென்றுவிட்டாள்.

மகிழ்ச்சியான, உல்லாசமான மன நிலையிலிருக்கும் அவனிடம், அந்தக் கடிதத்தைப் பற்றிப் பேசாமல் இருப்பதுதான் முறை என்று நினைத்துக் கொண்டாள். புடவைப் பார்சலைப் பத்திரப்படுத்தி வைக்கும்படி வார்டனிடம் ஒப்படைத்துவிட்டு அறைக்கு வந்தாள். அடுத்த வேலையாக அந்தக் கடிதத்தை சுக்கு நூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டாள்.

மறுநாள் மாலை. தையற் கடையைத் தேடி அந்த ஷாப்பிங் சென்டருக்கு வந்திருந்தாள். காரை வெளியே

உரிய இடத்தில் நிறுத்திவிட்டு காசிநாத் போயிருந்தான். புடவைகளுக்கேற்ற ரவிக்கைத் துண்டுகளைத் தைக்கக் கொடுத்துவிட்டு, தையற்காரர் கொடுத்த ரசீது சீட்டைப் பெற்றுக்கொண்டு வெளியே வந்தவள், திடுக்கிட்டு நின்று விட்டாள்.

அவள் அண்ணா ஏதோ காரியமாக வேகமாக அங்கே வந்து கொண்டிருந்தவர். அவள்மீது மோதிக் கொள்ளாத குறையாக திகைப்புடன் அவரும் நின்று விட்டார்.

சமாளித்துக் கொண்டாள் மங்களா!

"அண்ணா! உங்களை வந்து வீட்டிலே பார்த்து நேரே சொல்லணும்னுதான் இருந்தேன். அதுக்குள்ளே இப்படி சந்திக்க நேர்ந்துவிட்டது. எனக்கும் எங்கள் ஆபீஸ் மானேஜர் காசிநாத்துக்கும் வர மாசம் பதினைந்தாம் தேதி கல்யாணம் நடக்கிறதாக நிச்சயமாயிருக்கு."

"ரொம்ப சந்தோஷம். அதை என்கிட்டே ஏன் வந்து சொல்லணும்?"

மங்களா துயரத்தை மென்று விழுங்கினாள். "அண்ணா!" அவள் குரல் தழுதழுத்தது.

"அண்ணா வேண்டாம்னு வீட்டை விட்டுப்போனே இப்போ நீயே ஒருத்தனைத் தேடிக்கல்யாணம் வரைக்கும் வந்துட்டே, இதுக்கப்பறம் நான் எதுக்கு...?" அண்ணாவின் குரல் சீறியது. முகம் நெருப்பாகத் தகித்தது.

"அப்பா இருந்தா இந்த சமயம் என்ன பண்ணியிருப்பாரோ. அந்த ஸ்தானத்தில் நீங்கள் இருந்து எங்களை ஆசீர்வாதம் பண்ணணும்னு கெஞ்சிக் கேட்கிறேன்."

"குடும்பத்தின் மானத்தைக் குலைச்சதுக்கு அப்பா இருந்திருந்தா பேசாம சமுத்திரத்திலே இறங்கி உசிரை மாய்ச்சுண்டிருப்பார். ஆனால் அதைச் செய்ய என்னால் முடியலை. எனக்குப் பெண்டாட்டி பெண் என்கிற



பொறுப்பெல்லாம் இருக்கே. வெட்கத்தை முழுங்கிண்டு எல்லாத்தையும் சகிச்சுண்டு போறேன்."

"அண்ணா!" துக்கம் நெஞ்சையடைக்க சுற்றிலும் மனிதர்கள் நடமாடுவதைகூடப் பாராட்டாது லேசாக விசும்பிவிட்டாள்.

"அந்த உறவு அத்துப்போச்சுன்னு அப்பவேதான் சொல்லிட்டேனே. மறுபடியும் அண்ணான்னு கூப்பிட்டு எரிச்சலைக் கிளப்பாதே. ஆனால் ஒண்ணு சொல்லாம இருக்க முடியலை. முன்பின் தெரியாத எவனையோ நம்பிண்டு கல்யாணத்துக்கு ஒப்புகொண்டிருக்கே. பேர் கெட்டது மிச்சம்னு சந்தியிலே நிக்கப் போறே கடைசி நிமிஷத்திலே வேண்டாம்னு அவன் ஒதுக்கிட்டா அவனை உன்னால் என்ன செய்ய முடியும்? பெரியவா நாலு பேர் இருந்து நடத்தி வைக்கிற கல்யாணத்திலேயே எத்தனையோ சண்டை சச்சரவுகள் வந்து புகுந்துடறது பேக்கிரவுண்டே இல்லாத பயலை நம்பி சே! சே...உன் பழைய விஷயங்களைக் கேள்விப்பட்டால் கல்நெஞ்சுக்காரன்கூட கலங்கிக் கவலைபடத் தொடங்கிவிடுவான். நமக்கிந்தப் பெண் வேண்டாம்னு இவன் நகர்ந்து கொள்ள எத்தனை நேரம் பிடிக்கும்? நான் உருப்பட மாட்டேன். அழிஞ்சுதான் போவேன்னு வீம்பு பிடிச்ச விளைவை அனுபவி" என்று மேலே நடந்து சென்று விட்டார்.

ஆத்திரமும் அழுகையும் பொத்துக் கொண்டு வந்தது அவளுக்கு. உணர்ச்சிகளைச் சமாளிக்க முயன்றபடி அவர் போன திசையையே வெறித்துக் கொண்டு நின்றாள்.

அவள் வாழ்க்கையில் ஏன் இப்படி எங்கு திரும்பினாலும் முட்டுக்கட்டைகள். அலுவலகத்தில் பதஞ்சலி. வெளி உலகில் அத்தான் வஸந்த் உறவினர்களில் அண்ணா, மன்னி...

இன்னும் கண்களுக்குப் புலப்படாத எத்தனை இடைஞ்சல்கள்.

அவள் என்ன பெரிய அரசியல் பதவிக்கு ஆசைப் பட்டாளா? எல்லாப் பெண்களைப் போல மனதுக்குப் பிடித்தவனை மணந்து கொண்டு ஒரு சாதாரண குடும்பத் தலைவியாக வாழத்தானே ஆசைப்பட்டாள்! அதற்குக்கூட இத்தனை இடையூறுகளா...? எதிர்ப்புகளா? கடவுளே! கன்னத்தில் உருண்ட நீர்த்திவலையை விரலால் சுண்டி விட்டு—துயரத்தை சமாளித்தபடி அவள் திரும்புமுன் காசிநாத் அருகில் வந்துவிட்டான்.

"என்ன ஒரு மாதிரியிருக்கே? கண்கள் கலங்கிப் போனாப்பல தெரியறது..." வியப்பும் திகைப்புமாகக் கேட்டான்.

"உதவிக்கு மனுஷா ஒருத்தரும் இல்லையே. நம்ப ரெண்டு பேருமே எல்லாத்தையும் எத்துண்டு அலையற மேன்னு நினைச்சேன். அப்பா உசிரோட இருந்திருந்தால் இப்படி அனாதையா விட்டிருக்க மாட்டார்னு நினைப்பு வந்ததும் கண் கலங்கியது. மன்னிச்சிக்கோங்க."-திணறி னான்.

"உன் அண்ணா இந்தப் பக்கம் போறதை நான் பார்த்தேன். ஏதாவது கோபமா அவர் பேசியிருக்கணும். அது என்னன்னு உன்னைக் கேட்டு உன் மனசை புண்படுத்த நான் விரும்பலை...உனக்கு நான்... எனக்கு நீன்னு இருக் கும்போது நாம் அனாதைகளில்லை. அதை நீ நன்னா புரிஞ்சுக் கொள்ளணும்"—அன்போடு கடிந்து கொண்டான்.

மறுபடியும் அவள் கண்கள் கலங்கின

வழியில் இருந்த ஹோட்டல் அருகே காரை நிறுத்தி விட்டு அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

"அந்த வாஷ் பேசினில் முகத்தை அலம்பிக்கோ. இந்தா, துடைச்சுக்கோ.' தன் கைக்குட்டையைக் கொடுத்து விட்டுக் குடும்ப அறைக்குள்ளிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.



முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியில் கலைந்துவிட்ட கூந்தலை சீராக்கிக் கொண்டு அவன் எதிரே வந்து உட்கார்ந்தாள்.

பையன் கொண்டு வந்த காப்பிக் கோப்பைகளில் ஒன்றை அவள் அருகே நகர்த்தினான்.

''ரொம்ப அழுது விட்டிருக்கே. தலைவலிக்கப் போறது. முதல்லே காப்பியைச் சாப்பிடு. சந்தோஷமாக இருக்க வேண்டிய சமயத்திலே சஞ்சலப்படக் கூடாது. ப்ளீஸ், மங்களா.'' சொல்லிக் கொண்டே மேஜை மீது கிடந்த மிருதுவான அவளது கரங்களைப் பற்றி மெல்ல அழுத்தினான்

' மங்களா! நீ வருத்தப்பட்டால் என் மனம் ரொம்ப வேதனைப்படும். அதையும் புரிஞ்சுக்கோ." மென்மையாக முறுவலித்தான்.

அன்று இரவு வெகுநேரம் அவள் உறங்கவே இல்லை. அவனைப் பற்றியேதான் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

'அவள் கண் கலங்குவதைக் காணப் பொறுக்காது துடித்துப் போன காசிநாதனா அவளுக்கு துரோகம் செய் வார்?'

'அண்ணாவுக்கு ஆனாலும் இத்தனை ஆத்திரம் தகாது...கொஞ்சமும் தகாது... ஊஹும்... தகாது.' படுக்கை யில் அமைதியின்றி பலமுறை புரண்டாள் அவள்.

# 30

மறுநாள் காலை விமானத்தில் காசிநாத் பம்பாய்க் குப் பயணப்படுவது என்று ஏற்பாடாகி விட்டிருந்தது. டைரக்டர் பிரசாத்தைச் சந்தித்துப் பேசிவிட்டு அடுத்த நாள் அவருடன் காரில் சூரத்திற்குச் சென்று அவருடைய

தாயின் ஆசியைப்பெற்று, பின்னர் தனியே அவன் மட்டும் பரோடாவுக்குப் புறப்பட்டுச் செல்வது என்று திட்டம். எல்லாவற்றிற்கும் முன்கூட்டியே ஏற்பாடுகள் செய்து விட்டிருந்தான். எந்த நேரத்தில், தான் எங்கே இருக்கக் கூடும் என்று தனது பயணத்திட்டத்தையும் அவளிடம் விரிவாகச் சொல்லியிருந்தான்.

மாதம் ஒருமுறை ஹாஸ்டல் வாசிகள் ஏதோ காரணம் பற்றி வெளியே தங்கிவிட்டு நேரம் கழித்து வரலாம். ஆனால் முன்கூட்டியே அனுமதி பெற்றிருக்க வேண்டும் இரவு பத்து மணிக்குள்ளாக திரும்பிவிட வேண்டுமென்ற தொரு சலுகை அந்த ஹாஸ்டல் விதிகளில் அடங்கியிருந் தது! இதுவரை அவள் அதை உபயோகித்ததில்லை. அன்று காலையிலேயே அந்தத் தனிப்பட்ட அனுமதியை மங்களா பெற்றுக் கொண்டுவிட்டிருந்தாள்.

அன்று மாலை நீண்ட நேரம் அவனுடன் பேசிக் கொண்டிருக்க விரும்பினாள். பல காலம் பழக்கப்பட்ட அன்பனைப் பிரியப் போகிறதொரு நெடுந்துயரம் அவளுள். அது முடிவில்லாததொரு பிரிவு போன்ற திகிலும் கூட அழுகையும் துக்கமும் நெஞ்சை அடைக்க, அவள் ஹாஸ்டல் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந் தாள்.

மாலை வெயில் மறைந்து இருள் லேசாகப் பரவிக் கொண்டு வந்தது. அனுமதி நேரம் வீணே கரைகிறதே என்ற ஆதங்கத்துடன் அடிக்கொரு தடவை கேட்டையே பார்த்துக் கொண்டிருந்தாள். நேரம் யுகமாக நீண்டு கனத்தது. கம்பத்திலிருந்த முட்டை விளக்கு எரியத் தொடங்கியபோது தான் காசிநாதன் காரை ஓட்டிக் கொண்டு வந்தான்.

"நாளை காலைப் பயணத்துக்கு எல்லாம் தயார் செய்யறதுக்குள்ளே நேரம் ஆயிடுத்து மன்னிச்சுக்கோ..." கூறியபடி காரின் கதவைத் திறந்து விட்டான்.

வழக்கம்போல கடற்கரைக்குக் காரை செலுத்தாது நேரே தன் வீட்டிற்கு ஓட்டினான்.



"இன்னிக்கு வெள்ளிக்கிழமை. என் வீட்டு மகாலட்சுமி உள்ளே காலை வைக்கணும்னு ஆசை" சிரித்தபடி காரை வாசலில் நிறுத்தினான்.

கதவைத் திறந்தபோது கம்மென்று ஊதுவத்தியின் நறுமணம் முகத்தில் மோதியது. விளக்கைப் போட்டான். முன்னறை மேஜை மீது அவளை வரவேற்பது போன்று ஒரு பீங்கான் பூந்தொட்டியில் ரோஜா மலர்கள் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன. சாப்பாட்டறை மேஜையைச் சுத்த மானதொரு விரிப்பு மூடிக் கொண்டிருந்தது. அதன் மேல் இரண்டு தட்டுகளும், டம்ளர்களும், தண்ணீர் கூஜாவும் தயாராக இருந்தன.

"என்ன விசேஷம் இன்னிக்கு...?" வியப்புடன் மங்களா வினவினாள்.

"உன்னோடு தனிமையில் கொஞ்சநேரம் பேச வாய்ப்புக் கிடைக்கும் நாளெல்லாம் என் விசேஷ நாட்கள் தான்..." கண்களைச் சிமிட்டிக் கொண்டு அவன் சிரித்தான்.

அவள் முகம் சிவந்து போனாள். மார்பு மகிழ்ச்சியால் விம்மித் தணிந்தது.

"பரிகாசம் இருக்கட்டும்...விஷயத்துக்கு வாங்கோ." செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"ஹோட்டலில் சாப்பிட்டு அலுத்துப் போச்சு. ஒரு வார காலம் உன்னைப் பார்க்காமல் இருக்கப் போகிறோமேன்னு கவலை மனசைக் குடையறது. அதனாலே இன்னிக்கு வீட்டிலேயே நாமிருவரும் சாப்பிடறதுன்னு முடிவுசெஞ்சேன். சமையல்காரப் பையனிடம் எல்லாம் தயார் செய்யச் சொல்லி யிருந்தேன்."

"என்னத்துக்கு இந்தச் சிரமம்?"

"உனக்காக நான் எந்தச் சிரமத்தையும் பொருட் படுத்த மாட்டேன். தெரிஞ்சுக்கோ...ரொம்பப் பசியா

இருக்கே போல இருக்கு. முதல்லே கையை அலம்பிண்டு வா.. சாப்பிடுவோம்...''

அவனது கண்கள் பனித்தன. எத்தனை அன்பான மனிதர்? சிரிக்க சிரிக்கப் பேசி அவள் சிந்தை முழுவதையும் கொள்ளை கொண்டு விட்டாரே! அவரைக் கணவனாக அடையப் போகிறவள் பாக்கியவதி என்பதில் சந்தேகம் ஏன்? துரதிர்ஷ்டக்காரி என்று பேசின எல்லோரும் சீக்கிரம் வாயை மூடிக்கப் போகிறார்கள்!''

அவளும் உதவி செய்ய, இருவரும் சமையலறை மேடை மீதிருந்த உணவுப் பாத்திரங்களை எடுத்து வந்து, மேஜை மேல் வைத்துக் கொண்டனர்.

''உனக்குப் பிடிச்சதெல்லாம் செய்யச் சொல்லியிருக்கேன். அவியல், உருளைக்கிழங்கு வறுவல், வெங்காய சாம்பார்'' அடுக்கிக்கொண்டே போனான்.

''பாயாசம் கூட வச்சிருக்கே!'' அதிசயப்பட்டாள் அவள்.

''வீட்டின் வருங்கால எஜமானி முதல் முதலாக விருந்து சாப்பிட வருகிறாள்; அதனால் தான்.''

நாவில் பட்ட பாயசத்தில் இனிப்பு உடல் முழுவதும் பரவி விட்டது போன்ற மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள்.

ஹாஸ்டல் வாசலில் அவளைத் திரும்பக் கொண்டு வந்து விட்டபோது, பிரிய மனமில்லாதது போன்று அவள் கரத்தை அழுத்திப் பிடித்தான்.

திரும்பிப் பார்க்கறதுக்குள்ளே ஒருவாரம் ஓடிப் போயிடும்... கவலைப்படாதே... நாளைக்கு பம்பாயிலிருந்து டெலிபோன் பண்ணுவேன். பரோடாவுக்குப் போனதும் விவரமாகக் கடிதம் போடுகிறேன். ஒருசமயம் கடிதத்துக்கு முன்னாடி நானே நேரில் வந்துடுவேன். எங்கே முகத்திலே சிரிப்பைக் காணோமே?'' கேட்டுக் கொண்டு காரின் கதவைத் திறந்து விட்டான்.



மங்களா இறங்கி வெளியேறும் முன், ''இந்தா, இதை வச்சுக்கோ. நான் வரும்வரை இது என் ஞாபகமாக உன்னோட இருக்கட்டும்.'' கூறிக்கொண்டே தன் விரலில் போட்டிருந்த மோதிரத்தைக் கழற்றி அவள் கை விரலில் போட்டான்.

சன்னமான அவள் விரலில் மோதிரம் கடகடத்தது. கீழே விழா வண்ணம் கையைச் சட்டென்று இறுக்கி மூடி கொண்டாள்.

இன்னும் கொஞ்ச நேரம் தாமதித்தால் அழுதுவிடுவாள் போன்ற துக்கம் அவளுக்கு. தலையை அசைத்து விட்டு புன்முறுவலுடன் மௌனமாக விடைபெற்றுக் கொண்டான்.

கேட்டைத் திறந்த காவல்காரனுக்குப் பொறுமை இருக்கவில்லை. பலமாக இருமிவிட்டு டார்ச்சை அவர்கள் பக்கம் சுழற்றினான்.

அதற்குமேல் நிற்க முடியாது. அவள் கையை அசைத்து விட்டு உள்ளே நுழைந்துவிட்டாள். கார் வேகமாக நகர்ந்தது. அத்துடன் தன் உயிரும் நகர்ந்து விட்டது போன்ற உணர்வுடன் அறையைத் திறந்து விளக்கைப் போட்டாள். கதவைத் தாளிட்டுக்கொண்டு படுக்கை மீது உட்கார்ந்தாள்.

கைவிரலினின்று அந்த மோதிரம் கழன்று தரையில் உருண்டோடியது. திக்கென்ற உணர்வு நெஞ்சை அழுக்க ஓடிச்சென்று எடுத்துப் புடவைத் தலைப்பால் துடைத்து உள்ளங்கைக்குள் வைத்துக்கொண்டு வெளிச்சத்தில் நன்றாகப் பார்த்தாள். 'கே' என்று ஆங்கிலத்தில் எனாமலில் பொறிக்கப்பட்ட தங்கமோதிரம். அவள் விரலுக்குப் பெரியது. அதை அணிந்து சென்றால் நழுவி விழுந்து காணாமல் போனாலும் போகலாம். 'சகுந்தலை மோதிரத்தைத் தொலைத்த பின்தானே சகல கஷ்டங்களுக்கும் ஆளானாள்?''

'சே! என்ன இது! அசம்பாவிதமான உவமை!' மோதிரத்தைப் பத்திரமாகக் கைக்குட்டையில் வைத்துச் சுற்றி

தன் கைப்பைக்குள் வைத்துவிட்டு, விளக்கை அணைத்தாள். படுக்கைமீது வந்து சாய்ந்து கொண்டதும் குபுக்கென்று அழுகை பொத்துக் கொண்டு விட்டது. தலையணைமீது முகத்தைப் பதித்துக்கொண்டு விம்மி அழுதாள்.

மறுநாள் முழுவதும் அலுவலகத்தில் அவளுக்கு வேலை ஓடவேயில்லை...பார்த்த ஃபைல்களையே பைத்தியக்காரி போலத் திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டிருந்தாள். மாலை ஹாஸ்டலுக்கு வந்ததும் விரைவாகப் பொது ஹாலுக்குள் வந்து உட்கார்ந்துகொண்டு விட்டாள். இரவு உணவுக்குப் பின்னர் ஒன்பது மணி அளவில்தான் காசிநாதன் பம்பாயிலிருந்து அவளைத் தொலை பேசியில் அழைத்தான்.

ஒன்பது நிமிஷங்களுக்கு மேல் பேசினான். என்ன பேசினானோ அவளுக்குத் தெரியாது. அவனது குரலை கேட்ட மகிழ்ச்சியில் அவள் திக்குமுக்காடிப் போய்விட்டிருந்தாள்.

"நாளைக்கு நாங்கள் சூரத்திற்குக் கிளம்பறோம முடிந்தால் அங்கயிருந்து மறுபடி கூப்பிடறேன்...வைக்கட்டுமா போனை..." அவன் வைத்துவிட்டான். வெகு நேரம் அவள் பொது அறையில்...தொலை பேசியின் அருகில் பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள்.

மறுநாளும் அவளுக்கு அலுவலகத்தில் இருப்புக் கொள்ளவேயில்லை. தொலைபேசி கிணுகிணுத்த போதெல்லாம் தூக்கிவாரிப் போட அமைதியில்லாது தவித்தாள்.

அதற்குப் பின்னர் மூன்று தினங்கள் எந்தவித தகவலுமின்றி நாட்கள் நகர்ந்தன. பகல் உணவு நேரத்தின் போது பையன் கொண்டு வந்து வைத்த தபால் கட்டை அவசரமாக ஆராய்ந்தாள். அவள் பெயருக்குக் கடிதம் ஏதும் இருக்கவில்லை. ஏமாற்றமாகத்தான் இருந்தது.

தொய்ந்துவிட்ட உணர்வை உற்சாகப்படுத்திக் கொண்டு அன்று மாலை வேலையிலிருந்து ஹாஸ்டலுக்குத் திரும்புமுன் அந்த ஷாப்பிங் சென்டருக்குத் தனியே



ஒரு ஆட்டோவில் போனாள். அவள் தைக்கக் கொடுத்திருந்த ரவிக்கைகள் தயாராகி விட்டிருந்தன. அவைகளைப் பெற்றுக் கொண்டு திரும்பினாள். ஹாஸ்டலில் தன் அறைக்குள் வந்ததும் பொட்டலத்தை அவிழ்த்து அவைகளைப் படுக்கை மீது பரத்தலாகப் போட்டாள். கூலி அதிகமாக வாங்கினாலும் தையற்காரர் அவைகளை நேர்த்தியாக, நன்றாகத் தைத்துக் கொடுத்திருந்தார். எந்தப் புடவைக்கு எது பொருத்தம்? மனதிற்குள் கணக்கிட்டபடி மானசீகமாக அவைகளை அணிந்துகொண்டு அவனுடன்...எங்கெங்கேயோ மகிழ்ச்சியுடன் வளைய வந்தாள். கற்பனையிலே அன்றையப் பொழுதை அப்படித் தள்ளிவிட்டாள்.

அன்று இரவு வெகு நேரம் பொது ஹாலில் காத்திருந்தாள். அவனிடமிருந்து தொலைபேசியில் அழைப்பு வரவில்லை. தாங்க முடியாத ஏமாற்றம் நெஞ்சை துக்கமாக அடைத்துக் கொண்டது.

ஏழாவது நாள் காலை அலுவலகத்தில் அவள் அலுப்புடன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"ஐயா இல்லாம ஆபீசே வெறிச்சுனு இருக்கு..." பையன் பற்களைக் காட்டியபடி தேநீர் கோப்பையை அவள் முன் கொண்டு வந்து வைத்தான். அது சமயம் பதஞ்சலி மேஜையிலிருந்த தொலைபேசி கிணுகிணுத்தது. தாம் கொண்டு வந்த காப்பியை பிளாஸ்கிலிருந்து டம்பளரில் ஊற்றி சாப்பிடக்கையில் எடுத்தவர்...கீழே வைத்தார்... போனை எடுத்தார்...

"ஹலோ! பம்பாய் காலா...யார் பேசறது? மிஸ் மங்களாவைக் கூப்பிடணுமா...? ஒரு நிமிஷம்" என்றார் உரத்த குரலில்.

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் மங்களா. அவள் நெஞ்சு தீவிரமாக அடித்துக் கொண்டது.

"மிஸ் மங்களா...! உங்களுக்கு பம்பாயிலிருந்து கால் வந்திருக்கு" அலுவலகம் முழுவதும் கேட்கும் குரலில் கூவியழைத்தார். ஒரே நொடியில் மங்களா விரைந்து ரிஸீவரைக் கையில் எடுத்துக் கொண்டாள். மகிழ்ச்சியான எதிர்பார்ப்பில் அவள் உடல் முழுவதும் லேசாக ஆடியது.

"ஹலோ! மிஸ் மங்களா...! டைரக்டர் பிரசாத் பேசறேன்."

'பிரசாத் எதுக்காகப் பேசணும்?' குழப்பம் தாளாது எச்சிலை விழுங்கிக் கொண்டாள். தொண்டை காய்ந்து போயிற்று. "யெஸ்" என்று சன்னமான குரலில் முனகினாள்.

"ஒரு கஷ்டமான செய்தியைச் சொல்ல வருந்துகிறேன். நேற்று காலை பரோடாவுக்கு அருகே, மிஸ்டர் காசிநாத் பயணம் செய்து கொண்டிருந்த கார் விபத்துக்குள்ளாகியது... மிஸ்டர்காசிநாத்தும் என் டிரைவரும்காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்காங்க."

"ஸார்...நான்...நான்..." பேச முடியாது தாங்கொணா அதிர்ச்சியால் திணறினாள் அவள்.

"நான் நேரே போய் எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டு வந்திருக்கிறேன். கொஞ்சம் குணமானதும் என் டிரைவரை இங்கேயுள்ள எங்கள் குடும்ப டாக்டரின் நர்ஸிங் ஹோமுக்கு மாற்றிட ஏற்பாடு செய்துட்டேன். ஆனால் மிஸ்டர் காசிநாத்தைக் கவனிக்கிற பொறுப்பு தம்முடையதென்று சுவாமி ஸகஜானந்தர் ஏற்றுக் கொண்டு விட்டதால் குறுக்கிட முடியலை வந்துட்டேன்."

"அப்போ..." பேச முடியாது கண்ணீர் கன்னங்களை நனைக்க, அவள் குமுறுவதைக் கண்ட பதஞ்சலியும் மற்றவர்களும் பதட்டமாக அருகில் ஓடி வந்தனர்.

"என்ன! என்ன ஆச்சு?" ஏக காலத்தில் கேட்டபடி அவளைச் சூழ்ந்து கொண்டனர்.



"நீங்க இங்கே வந்து செய்யப்போவது ஒன்றுமில்லை. பொறுமையாகக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு இது சமயம் அமைதியாக இருக்கணும்." டைரக்டர் பிரசாத்தின் குரல் தேய்ந்து மறைந்தது. தொலைபேசியின் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

போனை வைத்துவிட்டு அந்த பயங்கர அதிர்ச்சியின் சுமையைத் தாளாது மேஜையைப் பிடித்துக் கொண்டு அவள் விம்மலுடன் குலுங்கினாள். காலடியிலிருந்து பூமி நழுவி, முடிவில்லாத பள்ளத்திலே அவள் விழுந்து கொண்டிருப்பது போன்றதொரு திகில் உணர்வில் தன் முன்னால் நின்றவர்களை நடுக்கத்துடன் பார்த்தாள்.

"என்னம்மா ஆச்சு?"—பதஞ்சலியின் ஓங்கிய குரல் மண்டையில் அடிப்பது போன்ற வேதனை.

"மானேஜர் போன காருக்கு விபத்து ஏற்பட்டு, அவரும் டிரைவரும் காயத்துடன் ஆஸ்பத்திரியில் கிடக்காங்களாம். டைரக்டர் தெரிவிச்சார்..." அதற்கு மேலே பேச முடியவில்லை... விம்மிக்கொண்டே தன் இருக்கையில் போய் உட்கார்ந்தாள்.

அந்த அறை முழுவதும் சுழன்றுகொண்டு வந்தது. கண்கள் இருண்டன...எங்கேயோ ஒரு பள்ளத்திற்குள்ளே போய்க்கொண்டே இருப்பது போன்ற திகைப்பில் தன் நினைவை இழந்து மேஜை மீது சாய்ந்துவிட்டாள்.

## 31

கண்களை மெல்லத் திறந்தபோது தன்னைச் சுற்றிலும் ஒரு புகைமண்டலம் கவிழ்ந்து கொண்டிருப்பது போன்ற உணர்வில் தடுமாறிய மங்களா, மெல்ல நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"கொஞ்சம் தண்ணியைக் குடிங்கோ...... சரியாப் போயிடும்."

கிணற்றுக்குள்ளிருந்து யாரோ சொல்வது போல் காதருகில் ஒரு குரல் கேட்டது.

உதட்டின் மீது யாரோ டம்ளரின் ஓரத்தை வைத்து அழுத்துவது புரிந்தது. உலர்ந்துவிட்ட வாய்க்குள் 'சிலீர்' என்று விழுந்த தண்ணீர், உணர்வுகளை உலுப்பிவிடவே பரக்கப் பரக்க விழித்த மங்களா, தன்னைச் சுற்றிலும் பார்க்க முயன்றாள்.

"இன்னும் கொஞ்சம் தண்ணி குடியுங்கோ..." மாலினி வற்புறுத்தியது புரிந்தது.

"எப்படியம்மா இருக்கீங்க? சூடா காப்பி கொண்டு வந்து தரவா?" ஆபீஸ் பையன் விசாரிப்பது கேட்டது.

"நல்லவேளை. கீழே விழுந்துடாம உட்கார்ந்துட்டீங்க... இல்லாட்டா மண்டை சிதறிப் போயிருக்கும்." பதஞ்சலி பரிதாபப்பட்டதையும் புரிந்துகொண்டாள்.

புகை மண்டலம் லேசாகிச் சுற்றிலும் நின்றவர்களின் முகம் நிழலாக...பின்னர் நிஜமாகத் தெரிந்தபோது தன் நிலையைப் பூரணமாகப் புரிந்துகொண்டு விட்டாள்.

மின்னல்போல எல்லாம் மீண்டும் நினைவுக்கு வர, அவள் அவர்கள் யாரையும் பார்க்க மனமின்றித் தலையைக் குனிந்து கொண்டு மீண்டும் நாற்காலியின் பின் புறத்தைத் தழுவிக் கொண்டு குலுங்கக் குலுங்க அழுதாள்

அவளது உயிருக்கு இனிய காசிநாதன் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்பது உண்மைதான். அவர்கள் எல்லோருடைய முகங்களும் சொல்கின்றனவே...அவருக்கா இப்படி ஒரு இடி?

தாங்க முடியாத துயரத்தில் கண்ணீரைக் கட்டுப்படுத்த இயலாது குமுறிக் குமுறி அழுதாள்.



"மிஸ் மங்களா...தைரியமா இருங்கோ." ஷீலா அனுதாபத்துடன் அவள் தோளை மெதுவாகத் தடவினாள்.

"மிஸ் மங்களா! டாக்சி கொண்டு வரச் சொல்றேன். மாலினியைத் துணைக்கு அனுப்பறேன். லீவு எடுத்துண்டு நீங்க இது சமயம் ஓய்வா ஹாஸ்டலில் இரண்டு நாள் இருப்பதுதான் நல்லது..." பதஞ்சலி ஆலோசனை சொன்னார்.

"நான் கூட வரேன் அம்மா. கவலைப்படாதீங்க. சீக்கிரம் நல்ல சேதி கிடைக்கும்." ஆபீஸ் பையன் ஆறுதல் கூறினான்.

"மிஸ் மங்களா! கொஞ்சம் எழுந்து வந்து முகத்தைக் கழுவிக்குங்கோ. அப்பத்தான் மயக்கம் பூராவும் தெளியும்." கையைப் பிடித்து உதவ மேரி முன் வந்தாள்.

பரிதாபத்துடன் அவளைச் சூழ்ந்துகொண்டு நிற்கும் அத்தனை பேரும் கொஞ்ச நேரத்தில் அவள் பின்னால் என்ன பேசுவார்கள் என்பதை எண்ணியபோது உடல் குறுகிப் போன உணர்வும், துயரமும், வெட்கமும் மனதைக் கனத்தன. எல்லாருடைய உதவியையும் மறுத்து விட்டு மெல்ல நடந்து பின்பக்கத்து அறைக்குள் நுழைந்தாள்.

நெற்றிமீது முடி புரண்டு—மூக்கும் கண்களும் சிவந்தபடி கண்ணாடி காட்டிய உருவத்தைப் பார்த்த போது மறுபடியும் அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

அவள் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வடிப்பதைப் பார்க்க சகிக்காது துடித்துப் போகும் காசிநாத். அவளைப் பிரிய பிரிய இப்போது அழ வைத்துவிட்டு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறாரே... யார் அவரிடம் போய் அவள் படும் துயரத்தைச் சொல்லப் போகிறார்?

முடியை அசட்டையாகக் கையால் தள்ளிக் கொண்டு முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டாள்.

தன் இருக்கைக்கு வந்து கைப்பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டாள்.

இந்த மன நிலையில் அவளால் தொடர்ந்து வேலை செய்வது சாத்தியப்படாது என்பது உண்மை.

'இனி அழக்கூடாது. அழுது அவர்கள் முன்னிலையில் தன் மன பலவீனத்தைப்பறை சாற்றிக்கொள்ளக்கூடாது.' பல முறை தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள். பதஞ்சலியிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டாள். பொது ஹாலைத் தாண்டுமுன் மானேஜர் அறை முன்னால் காசிநாத் என்று பெயர் பொறித்த பலகை கண்களில் பட்டபோது சுக்கல் சுக்கலாக நெஞ்சு வெடித்து விடும் போல துயரத்திலே துவண்டு போனாள்.

டாக்ஸியில் வந்து சேர்ந்த மங்களாவினால் நடக்கக்கூட முடியவில்லை. உயிர் பிரிந்து உடல் தக்கையாகி விட்டது போல—மாலினியின் கைத்தாங்கலால் தன் அறைக்குள் வந்து படுக்கைமீது சரிந்து கொண்டாள். உடனடியாக மாலினி ஹாஸ்டலின் தலைவியிடம் விஷயத்தை விளக்கி விட்டுச் சென்றாள்.

ஹாஸ்டலில் மங்களா தங்கத்தொடங்கி கொஞ்ச காலந்தான் ஆயிற்று. என்றாலும் தலைவிக்கு அவளை மிகவும் பிடித்து விட்டிருந்தது. காசிநாத் ஏற்கெனவே அவளுக்கு மிகவும் தெரிந்தவன். மங்களா விரைவில் அவனை மணந்து கொள்ளப் போகிறாள் என்ற செய்தியில் தலைவி மனம் மகிழ்ந்து போயிருந்தாள். விபத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதில் அவள் மிகவும் கலவரமடைந்து போனாள்

மங்களாவை கவனிக்க உடனடியாக ஹாஸ்டல் வைத்தியரை வரவழைத்துவிட்டாள். கூட இருந்து உதவ, பணிப் பெண்களுக்கு உத்தரவிட்டாள். தானே நேரில் வந்து மங்களாவைக் கண்டு ஆறுதல் பல சொல்லி தேற்ற முயன்றாள்.

எதிர்பாராத அதிர்ச்சியால் மங்களாவின் உடல்நிலை மிகவும் பலவீனமாகிவிட்டிருக்கிறது. இரண்டு நாட்கள் படுக்கையில் ஓய்வாக இருக்க வேண்டும், டாக்டர்



உத்தர விட்டுவிட்டு, மருந்துகளை எழுதிக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

இரண்டு தினங்களும்—இரண்டு யுகங்களாகத்தான் தெரிந்தன. நேரம் மெல்ல ஊர்ந்து சென்றது. மூன்றாவது நாள் அவள் பிடிவாதமாக வேலைக்குப் புறப்பட்டு விட்டாள்—தன் பெயருக்குத் தந்தியோ, கடிதமோ வரலாம் என்றதொரு பரபரப்பான எதிர்பார்ப்பு. பையன் கொண்டு வந்து வைத்த தபால் கட்டை வேகமாகப் பிரித்துத் துழாவினாள். பெருத்த தொரு ஏமாற்றம்.

டைரக்டர் பிரசாத் ஒரு சமயம் அவளைத் தொலைபேசியில் அழைத்துத் தகவல் கொடுக்கலாம்...தவிப்புடன் எதிர்பார்த்துக்கொண்டு வேலைகளில் பொழுதை ஓட்ட முயன்றாள்.

காசிநாத்திற்கு உடல்நிலை எவ்வாறு இருக்கிறது என்று ஒருவருக்குமே தெரிந்திருக்கவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்று மானேஜர் இல்லாத அந்த அலுவலகத்து ஊழியர்கள் மௌனமாக வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். நாட்கள் நத்தைகளாக நகர்ந்தன.

ஒரு வாரமாகியும், டைரக்டர் பிரசாத்திடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. அவள் பெயருக்குத் தனிப் பட்ட முறையில் கடிதமும் காணவில்லை.

அழுது, துயரத்தில் தவித்த அவள், இப்போது சந்தேகத்திலும் கவலைகளிலும் துடித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அண்ணா சொன்னபடி ஒரு சமயம் அந்த விபத்தில் மனமுறிவு ஏற்பட்டு காசிநாத் அவளைக் கைவிட்டு விட்டாரோ? இல்லை...இருக்கவே இருக்காது நினைவு திரும்பாத அளவு ஆபத்து நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கிறாரோ என்னவோ? தொலைபேசியில் டைரக்டரைக் கூப்பிட்டு விசாரித்தால் என்ன?

ஊகும்...கூடாது...என்ன இருந்தாலும் அவள் அவரது அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒரு சாதாரண

ஊழியர் டைரக்டருடன் சரி சமமாக அந்தஸ்து பாராட்டி எப்படி அவரை அழைத்துப் பேச இயலும்? காசிநாத்தின் வருங்கால மனைவி என்கிற நிலையில் அவருக்குப் பணிவுடன் ஒரு கடிதம் எழுதிக் கேட்டால்?

பலவாறு தன்னையே குழப்பிக்கொண்டு பின்னறை பக்கம் எழுந்து சென்றாள். இரவு முழுவதும் அழுததில் வீங்கி எரிச்சல் கொடுத்த கண்களைக் குளிர்ந்த நீரில் கழுவித் துடைத்துக் கொண்டு வெளிப்பட்டபோது பதஞ்சலியின் மேஜையருகே ஷீலாவும், மாலினியும் அவரிடம் ரகசியமாக என்னவோ பேசுவதைக் கண்டாள்

சிக்கென்ற உணர்வுடன் நடைவழியில் நின்றுவிட்டாள்.

காசிநாத்துக்கு ஏதாவது நேர்ந்துவிட்டதா? என்ன பேசிக் கொள்கிறார்கள்?'' அவள் நெஞ்சு படபடத்து மூச்சு முட்டியது. பதஞ்சலிக்குக் குரலை அடக்கிப்பேசவே பிடிக்காத விஷயம். இப்போது மானேஜர் இல்லை என்று தெம்பு வேறு கூடிவிட்டிருந்தது. மங்களா இருக்கையில் இல்லை என்ற தைரியத்தில் அவர் உரத்த குரலிலேயே பேசிவிட்டார்.

''கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேணும்? இந்தக் கல்யாணம் நடக்கப் போகிறதில்லை...ஏற்கனவே மனுஷன் மங்களாவின் மற்ற பழைய கதைகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறார். துணிஞ்சு கல்யாணம் செய்துக்கமுன் வந்தவருக்கு இப்படி ஒரு விபத்து நேர்ந்துவிட்டது. அவர் இப்போது ஆடிப்போயிருப்பார். அதனால்தான் கம்னு பேசாம பரோடா ஆஸ்பத்திரியில் கம்பளியை இழுத்துப் போர்த்திண்டு தூங்கிண்டு இருக்கார் டைரக்டருக்கும் விஷயம் புரிஞ்சுருக்கணும். அதான் மௌனமாக இருக்கிறார்.''

கீழே விழுந்து விடாவண்ணம் மங்களா சுவரை ஆதாரமாகப் பற்றிக் கொண்டாள்.

களுக்கென்ற சிரிப்பொலி மிதந்து வந்து காதைக் கிழித்தது.



''ஆரம்பத்திலிருந்து நான்தான் சொல்லிண்டு இருக்கேனே. இந்தப் பெண்ணுக்கு அப்படி ஒரு தரித்திர ஜாதகம். இவ பேரைச் சொல்லிண்டு புறப்பட்டுப் போகிற காரியம் உருப்படாதுங்கிறது... நிஜமாகிவிட்டது. பார்த்தியா?''

''அப்படின்னா இந்தக் கல்யாணம்?''

கல்யாணமாவது மண்ணாங்கட்டியாவது... பிழைச்சு எழுந்தா போறும்னு காசிநாத் ஆஸ்பத்திரியில் பல்லைக் கடிச்சுண்டு கிடக்கார். நீங்க வேணும்னா பாருங்கோ... அவர் உடம்பு குணமானதும் இங்கே வராமல் அப்படியே மாத்திண்டு வேறே பிராஞ்சுக்குப் போகாட்டா என் பெயரை மாத்தி வச்சுக்கறேன்.''

''மிஸ் மங்களாவுக்கு ஒண்ணும் தெரிவிக்காமல் போவாரா?''

''ஆள் கிலி பிடிச்சுப் போயிருப்பார். இவள் முகத்திலே முழிச்சால் உயிரே போனாலும் போயிடும்னு ஓடிவிடுவார். அக்கறை இருந்தால் இத்தனை நாள் சும்மா இருந்திருப்பாரா? ஒரு தந்தியாவது அனுப்பியிருக்க மாட்டாரா? கம்பி நீட்டறதுக்குத்தான் மனிதன் இப்படி கம்னு இருக்கார். ஹா... ஹா...''

பதஞ்சலியின் பயங்கரச் சிரிப்பு நெருப்பாய் நெஞ்சைச் சுட, பொறுக்க மாட்டாது மங்களா திரும்பவும் பின் அறைக்கு விரைந்தாள். கதவைத் தாளிட்டுக் கொண்டு அதன்மேல் சாய்ந்தபடி கட்டுக் கொள்ள முடியாத துக்கத்திலே விம்மி விம்மி அழுதாள்.

'ஒரு சமயம் பதஞ்சலி சொல்வது போல் நேர்ந்து விட்டால்?' அவளால் அந்த அதிர்ச்சியை—அவமானத்தை—துயரத்தை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

அதற்குப் பின் அவள் வாழ்ந்துதான் ஆக வேணுமா?

அண்ணாவால் கைவிடப்பட்டு, காசிநாத்தால் உதறப்பட்டு அணு அணுவாக தேய்ந்து மாய்ந்து போவதைவிட, அவனே ஒரு முடிவுக்கு வந்துவிட்டால்? மனதை வதைத்த துயரத்தின் பளுவைத் தாளாத கண்ணீருடன் வெகுநேரம் அந்தக் கதவின் மீது சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

## 32

மாலையில் மங்களாவுக்கு ஹாஸ்டலிலும் இருப்புக் கொள்ளவில்லை. வழக்கம் போல் அறையினின்று கீழே வந்தவள், தோட்டத்திற்குள் நுழைந்தாள். காலியாகக் கிடந்த அந்த சிமெண்ட் ஆசனத்தைப் பார்த்த போது வெளியே சொல்லிக் கொள்ள முடியாத வேதனையில் மனம் புலம்பி அழுதது.

'காசிநாத்! நீங்கள் கூடவா இப்படி நடந்து கொள்வேள்? ஒரு தந்தி... வேண்டாம்...ஒரு கடிதம்... அதுவும் வேண்டவே வேண்டாம். ஒரு கார்டு போட்டாவது நிலைமையை விளக்கியிருக்கக் கூடாதா? எழுத முடியவில்லை என்றால் ஆஸ்பத்திரியில் உதவி செய்ய ஆளா அகப்படவில்லை? நர்ஸிடம் சொன்னால்கூட உங்கள் சார்பில் ஒரு கடிதம் எழுதி போட்டு விட்டிருப்பாளே காசிநாத்! இந்த மௌனம் ஏன்...? பதஞ்சலி சொன்னது போல உதறிவிட்டபின்... அவளிடம் பேச என்ன இருக்கிறது என்பதாலா இந்த மௌனம்?'

தனக்குள்ளே எண்ணி எண்ணி மருகினாள். தன் வேதனையை வெளியே சொல்லி ஆறுதல் பெற யாருமின்றி கொடிகளையும், செடிகளையும் வெறித்தபடி தோட்டத்திற்குள் பித்தம் பிடித்தவள் போல வளைய வந்தாள்.

மகிழ மரத்தடியில் நாடுவார் இன்றி உதிர்ந்து கிடந்த பூக்களைக் கண்டதும் கண் கலங்கிப் போய் விட்டாள்.



இந்தச்சில தினங்களில் அவள் அவைகளைச் சேகரித்து கோர்த்துத் தலையில் சூட்டிக் கொள்வதை மறந்து விட்டிருந்தாள்.

குனிந்து ஒரு சில மலர்களை எடுத்துத் தன் உள்ளங்கைகளில் வைத்து மூகர்ந்தாள். தொடர்ந்து சங்கிலி போல பல நினைவுகள், தன் அறைக் கம்பளத்தின் மீது சுருண்டு கிடந்த அந்த மலர்ச் சரத்தைக் கையால் எடுத்து வைத்துக் கொண்டு கனிவுடன் அவளைப் பார்த்துச் சிரித்தானே, அந்த லேசான அழகான மயக்கும் சிரிப்பு...

"நான் வசிக்கிற வீட்டுத் தோட்டத்திலே கூட ஒரு சின்ன மரம் இருக்கு. ஆனால் பூக்கத் தொடங்கலை. இந்தப் பூவுக்குத் தனிப்பட்ட விசேஷம் உண்டு தெரியுமா? இது வாட வாட வாசனை அதிகரித்துக் கொண்டே போகும் மற்ற மலர்களுக்கு இல்லாத சிறப்பு..."

அவன் சொன்னதை நினைத்துப் பார்த்ததுமே கண்களிலிருந்து பொலபொலவென்று உள்ளங்கை மீது உதிர்ந்த கண்ணீரைச் சமாளிக்க முடியாது திணறினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். தோட்டத்தில் அங்குமிங்கும் சில பெண்கள் தோழியருடன் பேசியபடி உலவிக்கொண்டிருந்தனர். வெட்கத்துடன் கண்ணீரை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். ஆனால் மேலே தொடர்ந்த நினைவுகளை மனதினின்று துண்டித்துக்கொள்ள முடியவில்லை.

ஊருக்குப் புறப்படுமுன் ஒருநாள் மறந்து போன மணிப்பர்சை எடுத்து வர, தன் வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு, உள்ளே விரைந்தான் காசிநாத் அவள் காருக்குள்ளேயே உட்கார்ந்திருந்தாள். சிறிது பொழுதில் வெளிப்பட்டவன், அவள் தலையில் சுமையாகக் குலுங்கிய மகிழம்பூச் சரத்தைத் தன் கையால் மெல்ல அளைந்து விட்டுச் சிரித்துக்கொண்டே காரில் ஏறிக்கொண்டான்.

"எனக்குச் சொல்லக் கூடாதா? நீங்க மட்டுமே சிரிக்கிறேளே?" சிணுங்கினாள் அவள்.

"இந்தத் தோட்டத்திலே இருக்கிற மகிழமரம் சீக்கிரம் பூக்காட்டா என் பாடு திண்டாட்டாந்தான்னு நினைச்சுண்டேன்!"

அவள் செல்லமாக கோபத்துடன் அவனைப் பார்த்தாள்.

"இந்தப் பூவுக்காக பூக்கடைவரை தினமும் நான் ஒரு தடவை ஓடவேண்டியிருக்கும். ஏன்னா என் மங்களாவுக்கு இந்தப் பூ மேலே ரொம்ப ஆசையாச்சே?" அவனது கன்னத்தை மெல்லத் தட்டினான்.

"என் காசிநாத்துக்கும் இந்தப் பூ ரொம்பப் பிடிக்குமே அதை மறந்துட்டேனே..."

"இதுக்கு ஒரு வைத்தியம் செய்யப் போறேன் நீ கேள்விப்பட்டிருப்பாய். அசோக மரம் மலராது மலடாக நிற்கும்போது அந்தப்புரத்து பெண்கள் தங்களது அழகான பாதங்களால் அதை உதைப்பார்களாம். சிவந்த அவர்களது பாதம் பட்டதும் அசோக மரம் பூக்கத் தொடங்குமாம். எப்பவோ எங்கேயோ படித்தது...நீ படிச்சிருக்கிறாயோ?"

'உங்க வீட்டு மகிழ மரத்தை உங்க அந்தப்புரத்து அழகி தன் பாதத்தால் உதைக்கணும் என்கிறேள்...பேஷ்-" சிரித்துக் கொண்டு அவன் தோள்மீது, மெல்ல தன் கன்னம் பட மிக நெருக்கமாக உட்கார்ந்து கொண்ட போது... வருங்காலத்தின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் கற்பனையில் விரிய, வாழ்வு...சுவர்க்கம்போல இனித்த அந்த நினைவை எப்படி சுலபத்தில் அழித்துவிடமுடியும்?

வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டு, அவள் உள்ளத்துடனும் உணர்வுகளுடனும் ஒன்றாகிவிட்ட காசிநாத் அவளை இப்போது உதறிவிட நினைப்பாரா?"

சட்டென்று யாருக்குமே கிடைக்க முடியாத ஒரு தனிப்பட்ட சிறந்த மனிதர் என்று அவள் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தாளே?



முடிவில்—அவர் கூட ஒரு சராசரி மனிதர்தானா? மூட நம்பிக்கைகளைக் கண்டு அஞ்சி, அவளை ஒதுக்கிவிடத் துணியும் மிகச் சாதாரண மனிதரா அவர்...? கடவுளே!

அன்று ஞாயிற்றுக்கிழமை. அந்த ஹாஸ்டலின் ஆண்டு விழா எல்லோருக்கும் விடுமுறை நாள். தலைவி விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு ஒரு பிரார்த்தனைக் கூட்டம். அதற்குப் பின்னர் கலைநிகழ்ச்சி—பின்னர் பலத்த சாப்பாடு என்று திட்டம். கேட்டின் இருபக்கத்திலும் வேலையாட்கள் வாழை மரங்களைக் கட்டிவிட்டிருந்தனர். வாயிற்படியில் மாவிலைத் தோரணம் தொங்கியது. ஹாலின் கூரையிலிருந்து வர்ணக்காகிதச் சங்கிலி குறுக்கும் நெடுக்குமாக தலைக்கு மேல் அலங்காரமாகத் தொங்கியது.

வராந்தாவிலிருந்து படியிறங்கியதும்... பாவியிருந்த சலவைக் கல் தளத்தின் மீது ஹாஸ்டல்வாசி—ஒரு பெண் விஸ்தாரமாக மாக்கோலம் போட்டிருந்தாள். வராந்தாவின் ஒரு பக்கத்தில் தலைவியின் உருவத்தை ரங்கோலி முறையில் வண்ணப்பொடிகளால் சித்தரித்திருந்தாள் மற்றொருத்தி... அதைச் சுற்றிலும் சதா ஒரு கூட்டம் கவிந்து கொண்டு வேடிக்கை பார்த்தது...

ஹாலுக்குள் சுவரோரமாக பெஞ்சுகளைப் போட்டு இணைத்து, ஜமுக்காளம் விரித்து ஒரு மேடையைத்தயார் செய்துவிட்டிருந்தனர். அதன் இரு பக்கத்திலும் ஆள் உயர திருச்சூர் வெண்கல குத்துவிளக்குகளை பீரோசோவில் மின்னவிட்டு—தாராளமாக எண்ணையும் திரியும் போட்டு ஏற்றிவிட்டிருந்தனர். ஒரு கத்தை கஸ்தூரி ஊதுவத்தி ஒரு புறம் எரிந்து...மணத்தை தோட்டம் வரை பரப்பிக் கொண்டிருந்தது.

ஹாஸ்டலுக்குள் கல்யாணம் போல தடபுடல் பட்டுக் கொண்டிருந்தது. ஹாஸ்டல்வாசிகளில் சிலர் கலை

நிகழ்ச்சிகளில் பங்கு எடுத்துக்கொண்டு ஹார்மோனியம்-தபேலா சகிதம் மேடையில் அமர்ந்து கொண்டு விட்டனர்.

கல்யாண வீட்டைப் போன்று ஒரே அமர்க்களம். பட்டுப் புடவைகளின் சரக்சரக் ஓசை... மல்லிகைப் பூவின் மணம்... கலீர் சிரிப்பு...ஏககாலத்தில் எல்லோரும் பேச முயலும்போது ஏற்படும் சளசள சப்தம்.

ஒரு பக்கம் மங்களா நாற்காலியொன்றில் உட்கார்ந்திருந்தாள். அவள் மனம் அந்த மகிழ்ச்சியில் ஒன்ற முடியாது தவித்துக் கொண்டிருந்தது.

நிகழ்ச்சியின் முடிவில் ஹாஸ்டல்வாசியான ஒரு இளம் பெண் மேடையேறி சில நகைச்சுவை துணுக்குகளை உதிர்த்து சபையை கலகலக்கச் செய்து விட்டாள் கைத் தட்டலும்-சிரிப்பும் சந்தடியுமாக விழா கோலாகலமாக இருந்தது ...சிறிது பொழுதில் இனிதே முடிவடைந்தது... எல்லோரும் எழுந்து சாப்பாட்டிற்கு விரைந்தனர். அன்றைய விசேஷத்தை ஒட்டி சமையலறையில் ஹாஸ்டல் வாசிகளுக்கும், விழாவுக்கு வந்திருந்த முக்கிய விருந்தினர்களுக்கும் பிரமாதமானதொரு சாப்பாடு தயாராகக் காத்துக் கொண்டிருந்தது...

சிரோட்டி மீது சர்க்கரையைத் தாராளமாகத் தூவிக் கொண்டு, பாதம் அரைத்துக் கலந்த காய்ச்சின பாலை ஊற்றிப் பிசைந்து...ஹாஸ்டல் பெண்கள் ஒரு பிடி பிடித்தனர்...

ஆனால் மங்களாவுக்கு சாப்பாடு வேம்பாக இருந்தது காயமுற்று படுத்து கிடக்கும் காசிநாத்துக்கு உணவு-கஞ்சியா...காய்ந்த ரொட்டியா...? சாப்பிட முடியாது குழாய் வழியாக குளுகோஸ் ஏத்துகிறார்களோ என்னவோ... அவனை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தாள். மோர்கூட குடிப்பதற்குக் கசந்து வழிந்தது.

எல்லோரும் சிரித்தார்கள்— பேசினார்கள். வயிறு கொண்ட மட்டும் சாப்பிட்டார்கள்.



அவள்? மேலுக்கு மட்டும் மற்றவர்களுடன் தன் துயரத்தை மறைத்துக் கொண்டு பேசினாள் சிரிக்க முயன்றாள். ஆனால் மனம் ஓவென்று கத்தி அழுது கொண்டிருந்தது.

உணவுக்குப் பின்னர்...நீண்ட நேரம் ஹாலில் இருக்க விரும்பாது அவள் தன் அறைக்குள் வந்தாள். தாளிடாது கதவைச் சாத்திவிட்டுப் படுக்கையில் சாய்ந்து கொண்டாள்... நெஞ்சு மட்டும் துக்கம்...அழ முடியாது...யாரிடமும் சொல்லிப் பகிர்ந்து கொள்ள முடியாது மனதை வலித்த பயங்கர துக்கம்.

அடுத்த அறையிலிருந்த பெண்...தன்னுடைய டேப் ரிகார்டரை தட்டி விட்டிருந்தாள். 'சிலர் சிரிப்பார்...சிலர் அழுவார்...சிலர் சிரித்துக்கொண்டே அழுகின்றார். நான் அழுதுகொண்டே சிரிக்கின்றேன்...' டி.எம்.எஸ்.சின் கணீர் குரல் துல்லியமாகக் காதில் விழுந்தது. பல முறை அவள் கேட்டுவிட்டிருந்த பாட்டு...அவளுக்காகவே பாடின பாட்டு போல குரலும் பொருளும் மனதைத் தொட... கண்கள் பனிக்க, உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் எழுந்து நிமிர்ந்து படுக்கை மீது உட்கார்ந்து கொண்டாள்.

நல்லவேளை, அடுத்த அறைகளில் உள்ளவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்று உணர்ந்தவள் போல—அந்தப் பெண் ரிகார்டரை மூடிவிட்டாள், பாட்டு சட்டென்று நின்றுவிட்டது, ஆனால் மங்களாவின் மனதிலே மூண்டு எழுந்த சிந்தனைகள் நிற்காது தொடர்ந்தன.

சிந்தித்தபடியே ஜன்னல் வழியே தெரிந்த தோட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தாள்.

கல்லூரி மாணவியாக அவள் இருந்த காலத்தில் தன் அப்பாவின் நிழலாக வளர்ந்துகொண்டிருந்தாள். எங்கேயாவது வெளியே கிளம்பினால் அப்பா அவளைக் கூட துணைக்கு அழைத்துக்கொண்டு செல்வது உண்டு.

தனியார் மருத்துவமனையில் நோயாளியாகப் படுத்திருந்த ஒரு நண்பரை அவர் ஒரு சமயம் பார்க்கப் புறப்பட்டபோது அவளையும் கூட அழைத்துச் சென்றிருந்தார். பார்வையாளர் நேரத்திற்கு முன்னதாகவே வந்துவிட்டதால், அவர்கள் வெளியே தோட்டத்தில் காத்துக் கொண்டிருக்க நேர்ந்தது. அலுத்துப் போன மங்களா மெல்ல அங்கிருந்து நழுவி வராந்தாவிற்கு வந்து...மேலே நடந்து மருத்துவமனையின் மற்றொரு பகுதிக்கு வந்துவிட்டாள்.

அது பிள்ளை பேறு பகுதி...முன்னறையில் ஒரு கூட்டம். அதிலும் பெண்கள்தான் அதிகமாக இருந்தனர். காலியாகக் கிடந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து கொண்டு சுற்றிலும் கவனித்தாள். முதிர்ந்த முகத்துடன் பற்கள் தெரிய சிரித்துக் கொண்டு சில பெண்கள் உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தனர்.

"என்ன குழந்தை? பிள்ளையா...? பலே! பலே! பாட்டியாகி விட்டேன்?"

"ஆமாம் ஹிஹி!...ஹி!" பலத்த சிரிப்பு...

"நேத்திக்குத்தான் பிறந்தது...குழந்தை அப்படியே அம்மாவை உரிச்சுண்டு வந்திருக்கு..." இன்னொரு பெண்ணின் மகிழ்ச்சியான குரல் ஓங்கி ஒலித்தது.

"இன்னும் சித்த நாழி பொறு வார்டுக்குள்ளே போக அனுமதிப்பா...அப்போது உங்க அக்காவையும், பாப்பாவையும் பாக்கலாம் அவசரப்படாதே." ஒரு அம்மாள் தன் இளம் மகளுக்கு பொறுமையை உபதேசித்துக் கொண்டிருந்தாள்.

## 33

எல்லோரும் மலர்ந்த முகத்துடன் இனிய எதிர்பார்ப்புகளுடன் இருந்த அந்தச் சூழ்நிலையில் ஒரு மூலையில் வயதான ஒருதாய் கண்களும் மூக்கும் சிவப்பாகிவிட அழுகையை அடக்க முடியாது...புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு...திகிலுடன் அடிக்கொரு தடவை சற்று தூரத்திலிருந்த பிரசவ அறையைப் பார்த்தபடி இருந்தாள்.



'அந்தம்மாளுடைய பெண்ணுக்கு...அபாயமா இருக்காம் நம்பிக்கை சொல்ல முடியாதுன்னு டாக்டர் கையை விரிச்சுட்டாளாம். வலிப்பு வந்துடுத்தாம்.'

யாரோ தன் அருகிலிருந்த மற்றொரு பெண்ணிடம் ரகசியம் பேசியது மங்களாவுக்குக் கேட்டது. தலைத் திறந்து கொண்டு வந்த நர்ஸ், நேராக அந்த அம்மாளிடம் எதையோ சொல்ல...அவள் ஓவென்று குரல் கொடுத்து அழ. இது ஆஸ்பத்திரி...மத்தவங்களைப் பத்தி நினைச்சுப் பார்க்கணும். சத்தம் போடக்கூடாது." நர்ஸ் ஆணையிட அந்தத் தாய் துக்கத்தின் சுமையுடன் நடக்க முடியாதவளாகத் தடுமாறியபடி, கண்களில் மாலையாகக் கண்ணீரை வழிய விட்டுக் கொண்டு, மார்பு விம்மலேசாக விம்மியபடி நர்ஸைப் பின் தொடர்ந்த போது மங்களா அதிர்ந்து போனாள்.

'அந்தம்மாவின் பெண் செத்துவிட்டாளாம்.' யாரோ சொன்னது தலையில் அடித்தாற்போல... விண்ணென்று வலித்தது அ ளுக்கு. இத்தனை பேர் மகிழ்ச்சியாக சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் ஒருத்தி மட்டும் துக்கத்திலே துவண்டு போகும்படி இப்படி ஏன் ஒரு விபரீதம் ஏற்படவேண்டும்? ஏன்? ஏன்...? விடை காண முடியாது அவளது இளம் மனம் துயரத்தில் தள்ளாடிச் சென்ற அந்த தாயாருக்காக மிகவும் உருகிப் போனது.

அப்பா, அண்ணா, மன்னி என்ற உறவினர்களின் அரவணைப்பில் செல்வத்தின் சுகத்தில் உயர்ந்த அந்தஸ்தில்—தேவைகளின் பாதிப்பே தெரியாது வாழ்ந்த அந்தக் காலத்தில் அவள் கூடத்தான் நம்பினாள், துன்பத்தின் நிழல் கூட அவர்கள் பக்கம்விழ முடியாது என்று. அவளது இளம் மனம் திடமாக நம்பியது உண்மை. ஆனால்?

"நீங்க ஃப்ருட் ஸாலட் அண்ட் ஐஸ்கிரீமைச் சாப்பிடாமல் வந்துட்டீங்களே...?" சிரித்தபடி கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் பணிப்பெண்களில் ஒருத்தி... மரத்தட்டில் சுமந்து வந்த கண்ணாடிக் கிண்ணத்தையும், ஸ்பூனையும் அருகிலிருந்த மேஜைமீது வைத்துவிட்டுக் கதவை லேசாக சாத்திக் கொண்டு போய்விட்டாள்.

பழத்துண்டுக் குவியல் மீது பனி பெய்தது போல கிண்ணத்தில் வழிந்து கொண்டிருந்த ஐஸ்கிரீமை அவள் வேதனையோடு பார்த்தாள்.

காசிநாத் காயமுற்று அங்கே ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடக்கையில்...அவள் இங்கே விழா கொண்டாடிக் கொண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டு...சே! சே...நியாயமாகவே இல்லையே...வேண்டாம் இதெல்லாம் அவளுக்கு வேண்டவே வேண்டாம்...வெறுப்புடன் எழுந்து வெளியே எட்டிப் பார்த்தாள். வராந்தாவிலே வேகமாகப் போய்க் கொண்டிருந்த பணிப்பெண் ஒருத்தியைக் கை தட்டி அழைத்தாள்.

"தயவு செய்து இதை எடுத்துக் கொண்டு போய் வேறு யாருக்காவது கொடும்மா. என்னால் சாப்பிட முடியாது. ப்ளீஸ்..." கேட்டுக் கொண்டாள்.

பணிப்பெண் அதை எடுத்துச் சென்றபின்...மறுபடியும் கதவைச் சாத்திக்கொண்டு...படுக்கை மீது வந்துட்கார்ந்து கொண்டாள்.

அடுத்தபடியாக அவள் செய்ய வேண்டியது என்ன?

துணியைத் திரட்டிக் கொண்டு ஒரு பயணம் அவள் பரோடாவுக்குப் போய் வந்தால்?

ஊகும்...அது முடியாத காரியம்.

அங்கே அவள் வரவேற்கப்படவில்லை என்றால் அவமானம்தான் மிஞ்சும். இன்னும் கொஞ்ச நாட்கள் பொறுத்துக் கொண்டிருந்தால்...? எத்தனை நாட்கள்



பொறுப்பது? என்ன செய்தி வருமோ என்று ஊகிக்க முடியாத நிலையில் உணர்வுகள் அழுத்த மண்டை வெடித்து விடும் போன்ற வேதனையில்—நாட்களை நரகத்திலே கழிப்பது போல அவள் இனி எப்படித்தான் பொறுமையாக இருக்க முடியும்? யாரும் உதவ முன் வரமாட்டேன் என்கிறார்களே... இதென்ன சோதனை? ஐயோ. கடவுளே! ஆமாம், லதாவுக்கு இன்னமும் விஷயத்தை தெரிவிக்காமல் இருப்பது சரியா...? தெரிவித்தால் அவளும் மற்றவர்கள் போல அவள் அதிர்ஷ்டத்தைக் குறித்து ஏளனமாக எண்ண ஆரம்பித்து விட்டால்?

லதா அப்படிப்பட்டவள் இல்லையே? ஜாதகம்... பொருத்தம் ... சகுனம்... நாள்... நட்சத்திரம் இவைகளை நம்பாத ஒரு புரட்சி மனம் படைத்தவளாயிற்றே? யார் கண்டது...? கல்யாணமாகி கணவனுடன் வாழ்கிறாள். இப்போது... அவரது கொள்கைகள்—கருத்துக்கள் எல்லாம் அவளைப் பற்றிக் கொண்டு லதா மாறிவிட்டிருந்தால்?

லதாவும் அவளைப்பற்றி குறைவாக-ஏளனமாக எண்ணத் தொடங்கிவிட்டால்...மங்களாவுக்குப் பின்னர் போக்கிடமே கிடையாது... இருக்கும் ஒரே ஒரு சிநேகிதியும் போய் விட்டால் அவள் தன் மனத் துயரத்தை யாரிடம் சொல்லி ஆறுதல் பெற முடியும்...?

'லதா! நீ கூட என் அதிர்ஷ்டத்தைப்பற்றி தப்பா எடை போடுவியா லதா?' கண்கள் கனக்க அவள் கால்களைக் கட்டிக்கொண்டு அழமாட்டாத துயரத்துடன் அறைக்குள்ளே அடைந்து கிடந்தாள்.

காலைப்பொழுது... எல்லோரும் மறுபடியும் சாப்பாட்டறையை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.

காப்பி டிபனுக்கு... அன்று பாதாம் அல்வாவும்... விஜிடபின் பஃப்சும் மெனு போர்ட்டில் எழுதியிருந்தார்கள்.

"உண்மையான பாதாம் பருப்பைப் போட்டு அரைத்து பசும் நெய் விட்டுக் கிளறிய அல்வா...வாங்கோ ஒருகை பார்ப்போம்." அடுத்த அறையிலிருந்த பெண் வந்து அழைத்தபோது அவள் விரக்தியாகச் சிரித்தாள்.

"நீங்க போங்க... நான் பின்னால் வரேன்..." சொல்லி விட்டுக் கதவை மீண்டும் சாத்திக் கொண்டாள்.

காசிநாத்துக்கு பாதாம் அல்வா என்றால் உயிர். ஹோட்டல்களில் அவளைக்கூட சாப்பாட்டிற்கு அழைத்துச் சென்றபோதெல்லாம் முதலில் அல்லாவை வரவழைத்து விடுவான்...

சுரீர் என்று அவன் நினைவு நெஞ்சைத் தைக்க, கண் இமைகளை நீர் சுட்டது.

காபி டிபனுக்கு எழுந்து போக மனமின்றி அவள் அறைக் குள்ளேயே உட்கார்ந்திருந்தாள்.

அதுசமயம் ஹாஸ்டல் பணிப்பெண்களில் ஒருத்தி... மெல்லக் கதவைத் தட்டித் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

"உங்களைப் பார்க்க ஒரு அம்மா வந்திருக்காங்க... பொது ஹாலில் கூட்டம் அதிகமாக இருப்பதால் நேரே அறைக்கே போகலாம்னு சொல்லியிருக்கேன். கொஞ்ச நேரத்திலே வருவாங்க."

திடுக்கிட்டு மங்களா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

"இவளைக் காண யார், எந்த விதமான சங்கதியுடன் வந்து கொண்டிருக்கிறார்கள்?"

நெஞ்சு படபடத்தது...ஏதாவது துன்பச் செய்தியோ?

அவளால் இதற்கு மேலும் எதையும் தாங்கிக் கொள்ள இயலுமா?



கதவை மெல்லத் திறந்துகொண்டு உள்ளே வந்து நின்ற மன்னி அனுசூயாவை அவள் வியப்புடன் பார்த்தாள்.

சட்டென்று எழுந்து நாற்காலியை இழுத்துப் போட்டாள்.

"உட்காருங்க மன்னி." உபசாரம் செய்தபோது அவள் குரல் அவளுக்கே புதியதாகக் கேட்டது.

"உங்கண்ணா கேட்டுக்கு வெளியே தெருவில் காரை நிறுத்திண்டு உட்கார்ந்திருக்கார். ஷைலா கூட வந்திருக்காள். அவளுக்கு இதுதான் மாசம்." சொல்லிவிட்டு அறையைக் கூர்மையாகப் பார்வையிட்டபடி அனுசூயா அமர்ந்து கொண்டாள்.

மங்களாவுக்கு குழப்பமாகத்தானிருந்தது. 'இத்தனை நாள் இல்லாத அன்பு, மன்னிக்கு அவளிடம் திடீர் என்று எதற்காக இன்று ஏற்பட்டிருக்கிறது? ஏதோ ஒரு காரணமாகத்தான் அவள் வந்திருக்கிறாள்' தனக்குள் எண்ணியபடி மௌனமாகப் பார்த்தாள்.

"ஆனாலும் பாதியா இளைச்சுப் போயிட்டியே! எத்தனை பணத்தை செலவழிச்சாலும்... ஹாஸ்டல் சாப்பாடு வீட்டுச் சாப்பாட்டுக்கு இணை ஆகாது..."

"சாப்பாட்டுக்கு ஒன்னும் இங்கே குறைச்சல் இல்லை மன்னி. வேண்டியதை தாராளமாகக் கொடுக்கிறா..."

"எல்லாம் நாங்கள் கேள்விப்பட்டோம் மானேஜர் காசிநாத் கார் விபத்திலே காயமடைஞ்சு பரோடா, ஆஸ்பத்திரியிலே கிடக்காராம். அதனாலே கல்யாணம் நின்னு போச்சாமே."

அவமானத்தில் அனலாக முகம் எரிவதை உணர்ந்தாள் மங்களா...

"யார் சொன்னது...?" அவள் குரல் ஒடுங்கி நடுங்கியது.

"யாரோ...உங்க ஆபீசிலிருந்துதான் உங்க அண்ணா வுக்குப் போன் பண்ணினாளாம்."

நெஞ்சம் பதைத்துப் போனாள் மங்களா...

"கர்ம சிரத்தையா அண்ணாவுக்குப் போன் பண்ணினவா தன் பெயரைச் சொல்லலையா?" ஆத்திரத்தை அடக்க மாட்டாது கேட்டாள் மங்களா...

"என்னவோ பேர் சொன்னார்...எனக்கு மறந்து போச்சு..."

'அலுவலகத்து வம்பில் ஊறித் திளைக்கும் பதஞ்சலியின் வேலையாகத்தானிருக்கும். அவருக்கும் பெண் குழந்தைகள் இருக்கிறார்களே? அதைப் பற்றிய நினைப்பே இல்லாமல் பிறத்தியார் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதே பிழைப்பாகிவிட்டதே? இந்த மனிதனுக்கு எப்பத்தான் புத்தி வருமோ?' பற்களைக் கடித்துக் கொண்டாள்.

மங்களா கோபத்துடன் பேசுமுன் அனுசூயா குறுக்கிட்டாள்.

"யார் அது, எப்போன்னு கேட்டுண்டு மனசைக் குழப்பிக்காதே. இப்படி நடத்தா தாஜுனிதமாகத்தான் பேசுவா. என் வார்த்தையை இப்போதாவது கேள்- பேசாம ஹாஸ்டலைவிட்டு என்கூட புறப்பட்டு வீட்டுக்கு வந்துடு...அப்பா செய்யாத முயற்சியா, சொல்லு? முடியலை; அவர் போய் விட்டார். அண்ணாவும் உன் ஜாதகத்தைத் தூக்கிண்டு கால் ஓய நடந்தார்... ஒண்ணும் சரிப்பட்டு வரலை...நீயோ இப்போ ஒரு வழி செஞ்சு பார்த்தே... அதுவும் இப்படியாச்சு...இதிலிருந்து தெரியலையா...?"

கோபமும் அழுகையும் பொங்கிவர, "என்ன தெரியறதுன்னு சொல்றேள் மன்னி?" மங்களா தழுதழுத்தாள்.

"உனக்குக் கல்யாணம் என்கிற பாக்கியமே இல்லை... நீ தனிக்கட்டையாக இருக்கணும்னு விதி போட்டிருக்கு... யாராவது விதியை மாத்த முடியுமா...?"



பற்களை இன்னும் சற்று அழுத்தமாகக் கடித்துக் கொண்டாள் மங்களா. மரியாதையை உதறிவிட்டு மன்னியைப் பிடித்து வெளியே தள்ளி, கதவை அடைத்து கொள்ள வேண்டும் போன்ற ஒரு வெறி அவளை ஆட்டிப் படைத்தது. நிதானித்துக் கொண்டாள்.

## 34

மங்களா தன் உள்ளத்திலே குமுறி எழுந்த ஆத்திரத்தை அழுத்திக்கொண்டு, மன்னியைப் பார்த்துக் கூறினாள்:

'மறுபடியும் இதே கதைதானா மன்னி?'

"பேசாம நீ புறப்பட்டு வந்துடு...எங்களோடு முன் போல இரு. உன்னாலே ஆன காரியங்களை செய்துண்டு எல்லோரோடையும் சல்லோபில்லோன்னு இரு. மனசுக்கு நிம்மதியா இருக்கும். மனுஷா எல்லாரும் கூட இருக்கான்னு உனக்குத் தெம்பா இருக்கும்..."

"எனக்கும் உங்களுக்கும் இருந்த உறவு விட்டுப் போச்சுன்னு அண்ணாவும் நீங்களும் சொன்னேளே? இப்போ அந்த உறவு எப்படி வந்து தொத்திக்கிறது?"

"என்னவோ கோபத்திலே ஆயிரம் சொன்னோம்... கஷ்டம் வரும்போது விட்டுக் கொடுக்க முடியுமா? நீரை அடிச்சா நீர் விலகுமா? அது போலத்தான் ரத்த சம்பந்தப்பட்ட உறவும்; தெரிஞ்சுக்கோ...உங்கண்ணா உன்னைப் பத்தி ரொம்ப மனக்கஷ்டப்படுகிறார். ஊரே இதைப் பத்திப் பேசறதைக் கேட்க சகிக்காது நொந்துக்கிறார்."

"ஊரே பேசும்படி நான் அத்தனை பிரபலமானவளா மன்னி...?"

"அண்ணாவை நாலு பேருக்குத் தெரிஞ்சிருக்கே? அவருடைய தங்கைக்கு இப்படி ஆச்சுன்னு பேசமாட்டாளா...?"

"எங்கேயோ ஒரு மூலையில் நான் தனியே வசிக்க விரும்பினாலும் அந்த நாலுபேர் என்னை விடமாட்டா போலிருக்கே?" கோபத்துடன் கேட்டாள் மங்களா.

"அதையெல்லாம் விட்டுத் தள்ளு. நீ என் பேச்சைக் கேளு. பேசாம உன் பெட்டி படுக்கையைச் சுருட்டிக் கொண்டு மறுபடியும் நம்ப வீட்டுக்கே வந்திடு..."

"மன்னி! அது என் வீடு இல்லையே...? அங்கே நான் வந்து இனி என்ன செய்வது?"

"தத்துபித்துன்னு பேசாதே...அது உன் வீடுதான். நாங்கள்ளாம் உன் மனுஷா...நீ தனியா இருக்கமாட்டே. ஷைலாவுக்குக் குழந்தை பிறக்கப் போகிறது...அத்தைன்னு உறவோட நீ அதை கையிலே வச்சுண்டுக் கொஞ்சிக் குலாவி சந்தோஷமா பொழுதைக் கழிக்கப் போகிறே..."

மங்களாவுக்கு சட்டென்று எல்லாமே விளங்கி விட்டது.

அவர்களுக்கு இப்போது அவளுடைய உதவி தேவை. ஷைலா பிரசவத்திற்கு தாய் வீட்டிற்கு வந்திருக்கிறாள். குழந்தை பிறக்கும் வரை, அவளைச் சீராட்டிப் பாராட்டிக் கவனித்துப் பின்னர் தாயையும் சேயையும் புக்ககத்திற்கு சீரும் சிறப்புமாக அனுப்ப வேண்டும். அதற்கு வீட்டில் கூட உதவி செய்ய ஒரு ஆள் தேவை. ஆகும் செலவை பகிர்ந்து கொள்ள சம்பாதிக்கின்ற தங்கை மிகவும் தேவை முன்போல அவளை மீண்டும் கொத்தடிமையாக்கத்தான் மன்னி சூழ்ச்சி செய்கிறாள்...நல்ல வார்த்தை சொல்லி... தங்களுடன் அழைத்துச் சென்று விடுவது என்ற திட்டத்துடன் வந்திருக்கிறாள்...

பலே! மன்னியின் கணக்கு... எக்கச்சக்கமாக இருக்கிறது.

"இதைக் கேள்விப்பட்டதிலிருந்து உங்கண்ணாவுக்கு நல்ல தூக்கமே கிடையாது...இந்தப் பொண்ணு மனக் கஷ்டத்தைத் தாங்காம ஏதாவது தப்புக் காரியம் செய்திடப் போறாளேன்னு மனசை அலட்டிக்கிறார்."



"மூட்டைப்பூச்சி மருந்து—ரயில் தண்டவாளம்—தூக்குக் கயிறு...எல்லாம் ஞாபகம் வந்துடுத்தாக்கும்...?" மங்களா வறட்சியாகச் சிரித்தாள்.

"இப்போவெல்லாம் பேப்பர்லே பலதும் பார்க்கறமே... மனசிலே திகில் ஏற்படாதா?"

"ஏற்கனவே உங்களைப் பொறுத்தவரை நான் செத்துப் போனவள் தானே? அதனாலே நான் எடுக்கும் எந்த முடிவும் உங்களைப் பாதிக்காதே...?"

"அசட்டுத்தனமா பேசாதே... அப்படி ஏதாவது முட்டாள் காரியம் பண்ணினால் ஊரில் இன்னும் நாலு பேர்...நாலுவிதமா கன்னாபின்னான்னுதான் பேசுவா... செத்தவா பாடு நிம்மதி...ஆனால் இருக்கிறவா பாடு திண்டாட்டம் அதை நினைச்சுப் பார்...மங்களா! வேண்டாம் இந்தப்பிடிவாதம். நாளைக்கு ஒரு டெம்போ எடுத்துண்டு வரேன். நீ சாமான்களை எடுத்துக் கட்டி வச்சுட்டு ஹாஸ்டலுக்குச் சேர வேண்டியதைக் குடுத்துட்டு தயாராக இரு உன் தாயார் ஸ்தானத்திலே இருந்துண்டு சொல்றேன் என் பேச்சைக் கேளு...இந்தச் சமயம் நீ இங்கே தனியா இருக்கிறது எங்களுக்கெல்லாம் ரொம்ப கவலையா இருக்கு. அண்ணா வாசல்லே எத்தனை நாழியா காத்துண்டு இருக்கார்.

"அவரை ஏன் வீணாக அலைக்கழிக்கிறேள் மன்னி? ஒரே முடிவோடத்தான் நான் அந்த வீட்டை விட்டுக் கிளம்பி வந்தேன். அந்த முடிவை இனி எதற்காகவும் மாத்திக்கப் போறதில்லை."

"என்ன சொல்றே...?" அனுசுயா பொறுமை குறைந்து அதட்டினாள்.

"இந்த உலகத்திலே தனியா வந்தோம்—தனியா போகப் போறோம். அதனாலே எனக்குத் தனிமையைக் கண்டு இனி பயமில்லை. உறவும் துணையும் தேவையில்லை..."

"இன்னும் உன் திமிர் கொஞ்சம் கூட அடங்கலை பார்த்தியா? ஆட்டுக்கு வால் பகவான் அளந்துதான் வச்சிருக்கான்..."

"மன்னி! உங்க வாயில் நல்ல வார்த்தைகள் வரக் கூடாதுன்னு பகவான் வச்சிருக்காரே அந்த அதிசயத்தைக் கவனிச்சேளா?"

அனுசூயா கோபத்துடன் விருட்டென்று எழுந்து கதவைத் தடால் என்று சாத்திக் கொண்டு வேகமாக வெளியே நடந்தாள்.

அடுத்த நாள் காலை அலுவலகத்திற்குள் வந்து தன் இருக்கையில் உட்கார்ந்தாள். ஆபீஸ் பையன் மேஜை மீது வைத்துவிட்டுப் போன தபால் கட்டைப் பரபரப்போடு பிரித்தாள்.

இன்றைக்காவது ஒரு கடிதம் வந்திருக்காதா? நெஞ்சு படபடக்க கடிதக் குவியலைத் துழாவினாள். அவளது முகவரி தாங்கிய கடிதம் ஒன்று கையில் தட்டுப்பட்டதும் மூச்சு நின்று விடும் போன்றதொரு அதிர்ச்சி. டைப் செய்யப் பட்ட முகவரி உள்ளிருந்த கடிதத்தை உருவி எடுப்பதற்குள் ஆயிரம் எதிர்பார்ப்புகள். விரல்கள் நடுங்க வேகமாகப் பிரித்தபோது முகம் சுருங்கிப் போனாள்.

மதுரையில் வாழாது வாழ்ந்து கொண்டிருந்த அக்கா சங்கரியின் கடிதம் அது செங்குத்தாக நின்ற அந்தக்கையெழுத்தைக் கண்டதுமே அக்கா சங்கரி இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு அவள் முன் உயரமாக... உக்கிரமாக வந்து நிற்பது போன்றதொரு மலைப்பு ஏற்பட்டது. அண்ணாவுக்கு அடுத்தபடியாகப் பிறந்து



விட்ட அக்கா சங்கரியின் கல்யாணத்தின்போது அப்பா ஓகோ வென்று வாழ்ந்து கொண்டிருந்தார்.

லட்சத்திற்கு மேல் தகப்பனுக்குச் செலவை வைத்து விட்டு வைர நெக்லசும்—வண்டி நிறைய சாமான்களுமாகப் புக்ககம் புறப்பட்டுப் போனவள் சங்கரி. பதினைந்து வருஷங்களுக்குட்பட்ட தாம்பத்ய வாழ்க்கை. நாலு குழந்தைகளுக்கு தாய். நாற்பது வயதை எட்டிக் கொண்டிருப்பவள் உடம்பு எடையிலும் பரப்பிலும்...இரண்டாகக்கூடி விட்டவள் அதைப் போலவே தூக்கி எறிந்து பேசும் துணிச்சல் நிறைந்தவள் சங்கரி. நினைத்தபோது பிறந்தகம் பக்கம் வந்து அவள் எட்டிப் பார்ப்பதுண்டு. மன்னி அனுசூயாவுக்கு என்ன மந்திரம் போட்டாளோ? அப்படியே அவளைத் தன் கைச்குள் அடக்கிக் கொண்டு விட்டிருந்தாள்.

ஒரு கிலோ குடை மிளகாயைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் பதிலுக்கு ஏதாவது வீட்டிலிருந்து தட்டிக்கொண்டு போகத் தவறவே மாட்டாள். அனுசூயாவுக்குப் பெரிய நாத்தனாரைக் கண்டால் நடுக்கம். அவள் எதிரில் பொம்மையாக ஆடுவாள். ஆமாம் போடுவாள்.

"உங்க அம்மா உபயோகித்த ஈயச் சொம்பையா கேட்கிறேள்? தாராளமாக எடுத்துண்டு போங்கோ..." வேலையாளைக் கூப்பிட்டுப் பரணியில் கிடக்கும் பழைய பாத்திரக் குவியலில் அதைத் தேடி எடுத்துக் கொடுத்து விடுவாள்.

வந்த ஒவ்வொரு தடவையும்...அண்டா...குண்டா என்று எதையாவது கூட எடுத்துச் செல்லாமல் அவள் தனியே சென்றதேயில்லை. பிறந்த வீட்டைச் சுரண்டுவதில் சங்கரி அக்காவுக்கு நிகர் யாருமே கிடையாது.

வீட்டில் கடைசிப் பெண்ணான மங்களா மீது அக்காவுக்கு எப்பொழுதுமே சிறிது பொறாமை. மற்றக் குழந்தைகளைவிட அப்பா அவளுக்கு அதிகச் செல்லம் கொடுத்து வளர்க்கிறார் என்றதொரு கோபம். அம்மா

AMBATTUR (OT) CHENNAI-53.
KINDLY RETURN

வின் நகைகளைப் பங்கு பிரிக்கும்போது அம்மாவின் வைரத் தோட்டை அப்பா மங்களாவுக்கு ஒதுக்கி வைத்தது சங்கரிக்கு சிறிதும் பிடிக்கவேயில்லை. சமயம் வந்த போதெல்லாம் தன் சூடான வார்த்தைகளில் அந்த விஷயத்தைக் கொட்டியளக்காது அவள் வீட்டை விட்டு நகர்ந்ததில்லை.

பிறந்த வீட்டுக்கு வரும்போது மன்னி அனுசுயாவுக்காவது ஒரு பிஸ்கட் பொட்டலம் வாங்கி வருவாள். அக்கா சங்கரி. ஆனால் தங்கை மங்களாவுக்கு ஒரு முழம் பூவைக் கூடப் பரிசாகக் கொண்டு வர மாட்டாள். அப்படி அவள் மேல் தமக்கைக்கு ஒரு வன்மம்.

அப்பா இறந்து போனபோது சங்கரி துக்கத்திற்கு வந்திருந்தாள். அதற்குப் பின் ஷைலாவின் கல்யாணத்திற்கு வந்து தலையைக் காட்டினாள் அதற்குப் பின்னர் மன்னிக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதி விசாரித்துக்கொண்டிருந்தாள். ஒப்புக்காக ஒரு வார்த்தை, "மங்களா சௌக்கியமா?" என்று விசாரிப்பதுண்டு. அத்துடன் சரி. தனிப்பட்ட முறையில் அவள் தங்கைக்குக் கடிதமே எழுதியதில்லை.

மங்களாவுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அக்கா சங்கரி மீது அத்தனை பிடித்தம் கிடையாது.

இரண்டாவது அக்கா மஞ்சுளாவின் போக்கே வேறு. நாலு மைத்துனர்கள், இரண்டு நாத்தனார்கள், மாமியார், மாமனார், கணவன், குழந்தைகள் என்றதொரு சம்சார சாகரத்திற்குள் அழுந்தி, பிறந்த வீட்டைப் பற்றி மறந்து விட்டாள். அவளிடமிருந்து அப்பாவுக்கோ—அண்ணாவுக்கோ சட்டென்று கடிதம் வந்துவிடாது. அபூர்வமாக ஒரு கார்டில் கடுகு விதை போன்ற எழுத்துக்களில் உலக விஷயங்கள் எல்லாவற்றையும் விசாரித்து எழுதி விடுவாள். தன் வீட்டிலிருந்து அவள் எதையும் கொண்டு வந்ததில்லை. பிறந்த வீட்டிலிருந்து எதையும் எடுத்துப் போக விரும்பியதுமில்லை. அப்படி ஒரு போக்கு... அவளுக்கு தங்கை மேல்



பாசம் பொங்கி வழிந்ததில்லை. மங்களாவைப் பத்தி அவள் பொறாமைப்பட்டதுமில்லை.

கடிதத்தைப் படிக்கு முன்பே...சங்கரி அக்கா தானாக எழுதவில்லை...மன்னியின் தூண்டுதல் பேரில் எழுதியிருக்கிறாள் என்று அவளால் ஊகிக்க முடிந்தது' வழக்கம் போல கடிதத்திலும் வார்த்தைகள் சுட்டன.

'எல்லாம் கேள்விப்பட்டேன். மனம் ரொம்ப சங்கடப்பட்டது. சின்ன வயசிலிருந்தே நீ பிடிவாதக்காரியாக வளர்ந்தவள். அதனால்தான் அண்ணாவை மதிக்காமல் வீட்டை விட்டு ஒரு ஹாஸ்டலில் போய் தங்கியிருக்கே. எவனையோ நீயே பார்த்து கல்யாணம் பண்ணிக்கிற அளவும் துணிஞ்சு விட்டிருக்கே. ஆனால் இந்தக் கல்யாணமும் வழக்கம் போல தடைப்பட்டு நின்னு போச்சுன்னு கேள்விப்பட்டேன். ஜாதகத்தில் தோஷம். பாவம், அந்தப் பெண் என்ன செய்யும்னு இத்தனை நாள் உன்னைப் பார்த்துப் பரிதாபப்பட்டவா, இப்போ என்ன சொல்லுவா தெரியுமா?' அடங்காப்பிடாரி, அண்ணாவை மதிக்காமல் புறப்பட்டுப் போய் எவனோடேயோ சுத்திண்டு இருந்தா. அவனும் கை விட்டுட்டான். இப்போ யாரைப் பிடிக்கலாம்னு அலைஞ்சுண்டு இருக்கா'ன்னு பேசுவா. உன்னோட கூடப் பிறந்ததற்கு நீ எங்கள் எல்லோருக்கும் கொடுக்கிற பரிசு, இந்த அவமானம். யோசிச்சுப்பார். நீ நடந்திருக்கிறது நியாயமா? மன்னி கேட்டுக் கொண்டபடி மரியாதையாக சாமான்களைக் கட்டிக்கொண்டு வீடு போய் சேர். அண்ணா உன்னை இத்தனை நாள் வச்சுக் காப்பாத்தினதை நினைச்சு நன்றியோட நடந்துக்கோ—உன் சகோதரி சங்கரி.'

கோபத்தில் கொதித்துப் போனாள் மங்களா. கடிததைப் பல சுக்கலாகக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் வீசினாள்.

# 35

இத்தனை நாள் இல்லாத அக்கறை சங்கரி அக்காவுக்கு இப்போது வந்து விட்டதா? எல்லாம் மன்னியின் தந்திரம். சாம தான பேத தண்டம் என்ற எல்லா உபாயங்களையும் கையாளத் தொடங்கி விட்டிருக்கிறாள். ஆனால் மங்களா இனி ஒரு பொழுதும் அவளிடம் ஏமாறப் போவதில்லை. பெட்டியைத் தூக்கிக் கொண்டு அண்ணன் வீட்டு வாசலில் போய் நிற்பதை விட கல்லைக் கட்டிக்கொண்டு கிணற்றில் இறங்கி விடுவது மேல்...

இமைகளை நனைத்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு, பொங்கி எழுந்த கோபத்தை அடக்கியபடி அவள் சிந்தித்தாள்; சிந்தித்தாள். சிலையாக உட்கார்ந்து கொண்டு சிந்தித்தாள்.

தொடர்ந்து அங்கேயே அவள் வேலை செய்து வாழ முடியாதபடி உறவினர்கள் அவளுக்கு இனி தொல்லை கொடுத்துக் கொண்டேதான் இருப்பார்கள். அதைத் தடுக்கும் வழி? வேறு எங்கேயாவது போய்விட்டால்...? எங்கே போவது...? லதாவின் வீட்டுக்குப் போகலாம். ஆனால் அது முறையாகாதே. கணவனுடன் மகிழ்ச்சியாக வாழும் சிநேகிதியின் வீட்டில் போய்த் தங்கி அவர்களுடன் ஒட்டிக் கொண்டு வாழ நினைப்பது தவறு. முன்பு ஒரு தரம் பெங்களூருக்குப் போனபோது பள்ளித் தோழி ஒருத்தி வீட்டில் சில நாட்கள் தங்கி ஊரைச் சுற்றிப் பார்த்த ஞாபகம் வந்தது. அவள் வீட்டுக்குச் சென்று விருந்தாளியாக சில நாட்கள் தங்கினால்? ஊகும். பெங்களூர் வேண்டவே வேண்டாம். ஷைலா தன் கணவனுடன் பெங்களூரில்தான் தங்கியிருக்கிறாள். தற்சமயம் அவள் பிரசவத்திற்கு சென்னைக்கு வந்திருக்கிறாள் என்றாலும் அவளது கணவனும், மாமியார் மாமனார் எல்லோரும் இந்திரா நகரில்தான் இருக்கிறார்கள். தப்பித்தவறி கடைத்தெருவில் அவர்கள்



கண்களில் பட்டுவிட நேரும். பெங்களூர் வேண்டவே வேண்டாம்.

ஹைதராபாத்துக்குப் போய்...ஐய்யய்யோ, அங்கே தானே மஞ்சுளாவின் புக்ககம் இருக்கிறது. அங்கேயும் போக முடியாது. அக்கா சங்கரியை நினைத்தாலே மதுரைப் பக்கமே திரும்பிப் பார்க்கக்கூட முடியாது. கன்யாகுமரிக்குப் போய் எங்கேயாவது தங்கிக் கொண்டால்? அவளைப் போன்ற ஒரு பெண் தனியாக ஒரு ஹோட்டலில் தங்கினால் பார்ப்பவர்கள் பலவிதமாக எண்ணிக் கொள்வார்களே? யாராவது வீணர்கள் வம்புக் கிழுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே. என்ன செய்வது? மேற்கொண்டு அவள் என்னதான் செய்ய முடியும்? எண்ணி எண்ணிக் கலங்கிப் போனாள்.

பற்பல சிந்தித்தபடி வேலையில் நாட்டமின்றி—உணவின் மீது பிடித்தமின்றி—உறக்கமின்றி சில நாட்களை அவள் ஓட்டினாள். அன்று மாலை அவள் அலுவலகத்தினின்று புறப்படு முன் அத்தான் வஸந்த் அவளைத் தொலைபேசியில் அழைத்தான்.

"உன் அண்ணாகிட்ட நேத்திக்குப் பேசின்டு இருந்தேன்."

"சந்தோஷம்."

"மன்னி உன்னைப்பத்தி வருத்தப்பட்டுக் கொண்டு அழறா."

"நீங்க ஆறுதல் சொல்றதுதானே? அதை விட்டுவிட்டு என்கிட்டே ஏன் சொல்றேள்?"

"மங்களா! நீ புத்திசாலி. புரிஞ்சுக்காதது போலப் பேசாதே. பெரியவா சொல்றதைக் கேளு. நீ உடனே புறப்பட்டு அண்ணா விட்டுக்கு வந்து தங்கிக்கோ. அப்பத்தான் குடும்ப கௌரவம் பிழைக்கும்."

மங்களா கோபத்துடன் சிரித்துவிட்டாள்.

"என்ன சிரிக்கிறியா?" வஸந்த் மறுபக்கத்தில் உரத்த குரலில் அதட்டினான்.

"மன்னி அழறாள். ஒரு மாறுதலுக்காக நான் சிரிக்கிறேன். அவ்வளவுதான்."

"ஏடாகூடமா பேசாதே மங்களா! குடும்ப கௌரவத்தைப் பத்தி கொஞ்சம் நினைச்சுப்பார்."

"ஏற்கெனவே செத்துவிட்ட கௌரவத்தை இப்ப திடீர்னு நான் தூக்கி வச்சிட முடியுமா...? அத்தான் வசந்த்! என் விஷயத்திலே உங்க தலையை நீட்டி குழப்பற பழக்கத்தை இத்தோட நிறுத்திக்கோங்க. அப்போதான் உங்க கௌரவம் பிழைக்கும்..."

பட்டென்று போனை வைத்துவிட்டு புடவைத் தலைப்பில் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். இப்படி ஒவ்வொருவராகக் கிளம்பி ஏற்கெனவே நொந்திருக்கும் அவளைக் குத்திக் குதறுகிறார்களே! என்ன நியாயம்? அவளது உள்ளம் பதைத்தது. கோபத்தை அடக்கிக் கொண்டு மெல்ல வெளியே வந்தாள். சில்லென்று தோட்டத்தில் வீசிய காற்று...மனதிற்குச் சிறிது இதமாக இருந்தது.

தொடர்ந்து சென்னையில் அவள் இருந்தால் விரைவில் பைத்தியக்காரியாகி ரயில் தண்டவாளத்தில் தானே போய் விழும்படி செய்துவிடுவார்கள் இந்த உறவினர்கள். அவளை வாழக்கூட விடமாட்டார்கள். அரக்கர்கள். இதற்கு ஏதாவது ஒரு வழி செய்தாக வேண்டும். அதுவும் உடனடியாகச் செய்தாக வேண்டும். சிந்தித்தபடியே பஸ் நிலையத்திற்கு நடந்தாள்.

ஹாஸ்டலுக்குள் நுழைந்தபோது மனதில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. நேரா அறைக்குப் போகாது தலைவி சியாமளாவைக் காண ஆபீஸ் அறைக்கு விரைந்தாள்.



துக்கத்தில் தடுமாறியபடி மங்களா சொன்ன விவரங்களைக் கேட்டாள் தலைவி...சட்டென்று பதில் சொல்ல முடியாது திகைப்புடன் அவளைப் பார்த்தாள். ஒரு பெண்ணுக்குத் தொடர் கதையாக கஷ்டங்கள் இப்படியா சங்கிலியாக வந்து கொண்டிருக்கும்? அவளுக்குச் சிறிது அதிர்ச்சி. அதில் எழுந்த ஒரு ஆழ்ந்த அனுதாபம்

"என்னால் ஒரு உதவி செய்ய முடியும். என் மூத்த சகோதரி கொஞ்சம் வயதானவள். விதவை. தனியாக நாக்பூரில் ஒரு பெரிய வீட்டில் வசிக்கிறாள். வீட்டு வேலைகளைக் கவனிக்கவும், சமைக்கவும் ஒரு வேலைக்காரி மட்டும் தான் துணையாக இருக்கிறாள். அவளுக்கு ஒரு கடிதம் போட்டுக் கேட்கிறேன். ஒருமாத காலம் நீ ஆபீசிலிருந்து லீவ் எடுத்துக் கொண்டு அங்கே போய் தங்கியிரு. புது சூழ்நிலை உன் மனதுக்கு அமைதி தரும். அதற்குள் காசிநாத் குணமடைந்து விட்ட செய்தியும் கிடைக்கும். பிறகு எல்லாம் நன்மையாக முடியும். என் சகோதரி நல்ல வசதியாக வாழ்ந்தவள். நீ கூட இருப்பதே பெரிய பாக்கியம்னு நினைப்பாள். உன்னிடம் இந்த உதவிக்கு எதையும் எதிர்பார்க்க மாட்டாள். நான் சிபாரிசு செய்வதால் உன்னை மகிழ்ச்சியோட தன் விருந்தாளியாக ஏற்றுக் கொள்வாள். என்ன சொல்றே?"

மங்களா நன்றி உணர்வில் கரைந்து போனாள். உறவினர்கள் காட்டாத அன்பை கொஞ்சநாளே பழகிவிட்ட தலைவி காட்டுகிறாளே? உலகில் எல்லோருமே கெட்டவர்கள் இல்லை. இப்படிப்பட்ட அதிசயமான அன்பானவர்களும் பலர் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

"என்ன பதிலைக் காணோம்...?" தலைவி மென்மையாகச் சிரித்தாள்.

"ரொம்ப நன்றி. தயவு செய்து விரைவாக ஏற்பாடு செய்யுங்க...இந்த உதவியை நான் மறக்க மாட்டேன்." விடை பெற்றுக் கொண்டாள்.

அறைக்குள் வந்து... நாற்காலி மீது சாய்ந்து கொண்டாள். மனம் லேசாகி துன்பத்தின் சுமை குறைந்து விட்டது போன்ற உணர்வில் வருங்காலத்தைப் பற்றிச் சிறிது தெம்பு ஏற்பட்டது உறவினர்கள் எட்ட முடியாத தூரத்தில் அவள் இதுசமயம் இருப்பது மிகவும் நல்லது... பின்னர் திரும்பி வந்ததும்...வேறு ஒரு அலுவலகத்தில் வேலை தேடிக் கொள்ள முயல வேண்டும்...அப்போது லதாவைக் கேட்டால் கட்டாயம் உதவி செய்வாள். வேலை தேடிக் கொடுப்பதில் அவள் புலியாச்சே?

அவளுக்கு இப்போது ஓரளவு நிம்மதி ஏற்பட்டது. அதை அனுபவிக்கிறவள் போன்று நிதானமாகக் குளித்து மாற்று உடை அணிந்து கொண்டாள் கண்ணாடி முன் வெகு நேரம் நின்று மெல்ல தலையை வாரி முடித்துப் பொட்டிட்டுக் கொண்டாள். கீழே இறங்கி வந்து சூடான காப்பியைச் சுவைத்துச் சாப்பிட்டாள். குளுமையாக காற்று வீசிக் கொண்டிருந்த தோட்டத்தில் அமைதியான மனத்துடன் வெகு நேரம் உலாவினாள். இரவு சாப்பாட்டை ஒதுக்காது நன்றாகவே சாப்பிட்டாள். நன்றாகத் தூங்கினாள். 'அப்பாடா!' என்று மனதில் ஏற்பட்ட நிம்மதியில் மறுநாள் காலை அவள் சீக்கிரமாக அலுவலகத்திற்குத் திரும்பி விட்டாள்.

முதல் வேலையாகத்தனது வருஷாந்திர லீவைப்பற்றி ஆராய்ந்து விடுப்புத் தாளைப் பூர்த்தி செய்து தயாராக வைத்துக் கொண்டாள். மானேஜர் இல்லாத சமயங்களில் முக்கிய வேலைகள் பற்றி முடிவு செய்து தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு பதஞ்சலியுடையதாக இருந்தது. அவரது வருகையை 'எதிர்பார்த்த வண்ணம் ஃபைல்களைப் பார்வையிட்டுக் கொண்டு காத்திருந்தாள். ஆனால் வெகு நேரமாகியும் அன்று பதஞ்சலி வேலைக்கு வரவில்லை. பகல் பன்னிரண்டு மணியாகி விட்டது. பதஞ்சலி வந்த பாடில்லை. ஏன்? பதஞ்சலி பெரிய வம்புக்காரர் என்பது பிரசித்தம். ஆனால் வேலைக்கு மட்டம்



போடும் ஆசாமியல்ல? அலுவலகத்திற்கு வந்தால்தான் அவருக்குப் பொழுத ஓடும் என்ற நிலையில் வாழ்கிற மனிதர். அன்று ஏன் வரவில்லை? அவரது உடம்புக்கு ஏதாவது? கவலையுடன் மங்களா ஃபைல் ஏடுகளைத் திருப்பிக் கொண்டிருந்தாள்.

ஆபீஸ் பையன், சுற்றும்முற்றும் பாத்துவிட்டு ஆவல் கலந்த பரபரப்போடு அருகில் வந்தான்.

"இன்னிக்கு பதஞ்சலி அய்யா வரமாட்டார்னுதான் தோணுது. நாளைக்குக்கூட வரது நிச்சயமில்லே. தாமோதரன் அய்யாதான் சொன்னார்." நமட்டுச் சிரிப்புடன் எதையோ சொல்லத் தவித்துக் கொண்டு அவள் முன் நின்றான்.

"அவருக்கு உடம்புக்கு முடியாம போயிட்டதா? அதனால் வர முடியலையா?" ஏமாற்றத்தை அடக்க முடியாமல் கேட்டு விட்டாள், மங்களா. சுற்றும்முற்றும் பையன் சிறிது அச்சத்துடன் பார்த்தான். மெல்லக் குனிந்து தாழ்ந்த குரலில் சொன்னான்:

"காரணம் வேறே. அவர் மூத்த மக வேலைக்குப் போய் கொண்டிருந்த பொண்ணு...வீட்டை விட்டு ஓடி விட்டது. அது வேலை செய்கிற ஆபீஸிலிருந்து ஒரு பையனை, இட்டுகிட்டு போயிட்டது...அந்தப் பொண்ணுக்கும் அந்தப் பையனுக்கும் ரொம்ப நாளா சிநேகிதமாம். அது ஊரே தெரிஞ்ச கதை. ஆனால் பதஞ்சலி அய்யாவுக்கு மட்டும் தெரியாதிருந்தது அதிசயந்தான். ஐயா ரொம்ப ஆடிப்போய் விட்டார், காய்ச்சல் வந்து விட்டது போலப் படுத்து விட்டாராம்."

"உனக்கு இதெல்லாம் யார் சொன்னது?" மங்களா சிறிது கோபத்துடன் அதட்டினாள்.

வயிற்றைப் பிசைவது போன்ற ஒரு வேதனையில் அவள் துடித்தாள். காசிநாத் போன்ற படித்த பண்பான மனிதனே முடிவில்...காதலித்து கல்யாணம் செய்து

கொள்ளத் தீர்மானித்தவளைக் கை விட்டிருக்கும் நிலையில்... இந்தச் சின்னப் பெண் உலக அனுபவம் அதிகமில்லாத ஒரு வாலிபனை நம்பிக் கொண்டு புறப்பட்டது தப்பாச்சே... முடிவில் அவளைக் கைவிட்டு அவன் தகர்ந்து விட்டால்? பாவம்? அந்தப் பெண் அவமானத்தில் வெந்து மடிவாளே? பதஞ்சலியின் மகளாக இருந்தாலென்ன? வேறு யாருடைய பெண்ணாக இருந்தால் என்ன? அவளும் தன்னைப் போல ஒரு பெண் தானே? தனக்குள் எண்ணிக் கவலைப்பட்டாள்.

"தாமோதர அய்யாவின் சிநேகிதர், பதஞ்சலி அய்யா வசிக்கிற அதே தெருவில்தான் குடியிருக்காராம் நேத்து அவங்க வீட்டிலே ஒரே அமர்க்களமாம். பதஞ்சலி அய்யா கோபத்திலே கத்திக் கூச்சலிட்டுச் செய்த கலாட்டாவால் தெருவிலே அத்தனை பேருக்கும் விஷயம் தெரிஞ்சிட்டதாம். இப்போ மனுஷன் அவமானப்பட்டுக் கொண்டு துண்டைத் தலையில் போட்டுகிட்டு வீட்டிலே உட்கார்ந்திருக்காராம்."

"சரி! நீ போய் உன் வேலையைக் கவனி." எரிந்து விழுந்தாள் மங்களா. வேகமாக ஃபைல் ஏடுகளைப் புரட்டினாள் ஆனால் அவளை வேலை செய்யவிடாது மாலினியும் ஷீலாவும் வந்து மேஜையைச் சூழ்ந்து கொண்டனர்.

"மிஸ் மங்களா! உங்களுக்கு சங்கதி தெரியுமா? பதஞ்சலி ஸாருடைய பெண் தன் காதலனுடன் வீட்டை விட்டு ஓடி விட்டாளாம்." மாலினி பற்கள் எல்லாம் தெரிய பகபகவென்று சிரித்தாள். மங்களா கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள். நிமிர்ந்து அவளை உறுத்துப் பார்த்தாள்.

இந்த மாலினி பதஞ்சலி ஸாருக்கு ரொம்ப வேண்டியவள் போல் பழகிக் கொண்டிருந்தவள். பின்னால் எப்படிப் பேசுகிறாள்? சிலருக்கு நன்றி விசுவாசம் என்பது இம்மியும் கிடையாது... ஆத்திரத்தில் குமைந்தாள்.

"பதஞ்சலி ஸார் ரொம்பக் கண்டிப்பாகப் பெண்ணை வளர்ப்பதாகப் பெருமை பேசுவார். இப்போ என்ன



ஆச்சு? ரொம்ப கண்டிப்பாக நடந்துகொண்டால் இப்படித் தான் விபரீதங்கள் நேரும். ஊருக்கெல்லாம் உபதேசிக்கத் தெரிஞ்ச மனுஷனுக்குத் தன் வீட்டைக் கவனித்து நடத்தத் தெரியலை." உரக்கச் சிரித்தாள் ஷீலா.

இந்த ஷீலாவுக்குப் பாவம். பதஞ்சலி ஒரு முறை வருஷலீவு வாங்கித்தர முன்பிருந்த மானேஜரிடம் எத்தனை பாடு பட்டார்! நேரம் கழித்து வேலைக்கு வந்ததை கவனியாதது போல் எத்தனை தடவை மன்னித்து விட்டிருக்கிறார். இதற்கெல்லாம் நன்றி பாராட்டா விட்டாலும் இப்படி அவரைப் பின்னால் நிந்தித்து, அவருக்கேற்பட்டிருக்கும் சரிவைக் கண்டு கைகொட்டியா சிரிக்கணும்? பதஞ்சலியை விட்டுத் தள்ளுவோம்... தவறு செய்து விட்டிருப்பவள் இவர்களைப் போல் இன்னொரு பெண்... அவளுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பைக் கண்டு இப்படியா மகிழ்வது? பெண்களுக்குப் பெண்களே சமூக விரோதிகளாக அமைகிறார்கள் என்று ஆண்கள் விவாதிப்பதில் கொஞ்சம் உண்மை இருக்கிறதே! சே! இவர்கள் எல்லாம் மனிதப் பெண்கள் இல்லை... அரக்கிகள். இத்துடன் நிற்காமல் இந்த இரண்டுபேரும் அலுவலகம் முழுவதும் தம்பட்டம் அடிக்கப் போகிறார்கள்.

'பதஞ்சலிசார் ஊர் வம்பை உழக்கால் அளந்தார். இப்போ அவர் வீட்டு வம்பை... ஊரே அறிய இவர்கள் அளக்கிறார்கள்... பதஞ்சலி ஸாருக்கு இப்படி ஒரு கஷ்டம் வரணும்னு எதிர்பார்த்தது போலல்லவா பேசுகிறார்கள்.

காதுகளைப் பொத்திக்கொண்டு, 'போங்கோ... வம்பிகளா... உங்களுக்கு வேறே வேலையில்லையா...?' என்று கத்தவேண்டுமென்ற ஆத்திரம் அவளுக்கு.

"எனக்கு வேலை தலைக்குமேல் கிடக்கு, தயவுசெய்து இதையெல்லாம் எங்கிட்டே சொல்ல வேண்டாம். பிறர் வீட்டு வம்பு தும்புகளில் எனக்கு ஈடுபாடு கிடையாது. புரிகிறதா...?" எரிச்சலோடு சொன்னாள். சட்டென்று

வேறுசில பைல்களை எடுத்து வைத்துக்கொண்டு வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள்.

## 36

முகத்தில் அடித்தது போலவும் அவர்களை விரும்பாதவள் போலவும் இருந்த மங்களாவின் செய்கை வம்பு பேச வந்தவர்களை முகம் கவிழ வைத்தது.

ஷீலாவும், மாலினியும் வாய் அடைத்துப் போனார்கள். மேலே தர்க்கித்துப் பேச அவர்களுக்குத் திறமை உண்டு. ஆனால் பயமாக இருந்தது. யார் கண்டது, பதஞ்சலியின் வார்த்தைகளை நம்பிக்கொண்டு மங்களாவை எதிர்த்துப் பேசிவிட்டால்...காசிநாத் குணமாகி வந்ததும் ஏற்பாட்டுப்படிக் கல்யாணமாகி விட்டால்...மானேஜரின் மனைவி என்ற அந்தஸ்தில் இந்தப் பொல்லாதவள் கண்களில் விரலை விட்டு ஆட்டுவாள்...வேண்டாம் பொல்லாப்பு.

"மன்னிச்சுக்கோங்க. ஏதோ...காதில் பட்டதை உங்ககிட்டே சொல்ல வந்தோம்..." மெல்ல தங்கள் இருக்கைகளை நோக்கி நழுவினர்.

இதுவரை தன்னைப் பற்றியே சிந்தித்துத் துயரத்திலே துடித்துக் கொண்டிருந்த மங்களாவுக்குப் பதஞ்சலிக்கு ஏற்பட்ட பாதிப்பு ஒரு அதிர்ச்சியைத் தந்தது.

"பாவம் பிள்ளை குட்டிக்காரர். சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மனிதர். அவருக்கு ஏற்பட்ட இந்தக் கஷ்டம், ஒரு பெரிய விபத்துதான். இதை அவர் தாங்க முடியாது. நோயாளிபோல் படுத்துக்கொண்டு விட்டதில் வியப்பென்ன?

அதிர்ச்சி மேல் அதிர்ச்சியை அடைந்த அப்பாவுக்கு முடிவில் பெண்ணால் ஏற்பட்ட கஷ்டங்களே இருதய நோயாக மாறிவிடவில்லையா?



பதஞ்சலி ஸாருக்கும் இந்த வயதில் ஒரு ஹார்ட் அட்டாக் வந்து தொலைந்தால், அவர் குடும்பத்தில் அந்தக் கஷ்டத்தை எப்படித் தாங்க முடியும்? பாவம் பதஞ்சலி சார்!" அவளது பெருந்தன்மையான உள்ளம் அவருக்காக மிகவும் கரைந்தது.

பங்களாக்கள், தோட்டங்கள், தனியார் மருத்துவமனைகள், செங்கொன்றை மரங்கள் அணி செய்யும் அவின்யூக்கள், ஸ்பானிஷ் ஸ்டைல் வீடுகள் என்ற மேல்மட்டப் பகுதிகளுக்கு அப்பால்—நெருக்கமான நடுச்சுவர் கொண்டு ஓட்டு வீடுகள் நிறைந்த தானப்ப முதலித் தெருவில்தான் பதஞ்சலி வசித்துக் கொண்டிருந்தார். ஒரு சமயம் லீவுக்கு மனு செய்து கொண்டபோது அவரது முகவரி அடங்கிய கடிதத்தைப் ஃபைலுக்குள் வைத்த ஞாபகம் அவளுக்கு. ஸ்டீல் ராக்கில் இருந்த ஃபைல் அடுக்குகளினின்று அதை மெல்ல தேடி எடுத்துக் கவனித்தாள். அலுவலகத்திலிருந்து அவர் வெகு தொலைவில் வசிக்கவில்லை என்று புரிந்து கொண்டாள்.

அன்று மாலை வேலை முடிந்ததும் அவள் ஹாஸ்டலுக்கு திரும்பவில்லை பதஞ்சலி, அலுவலகத்தில் ஒரு நெருடலான மனிதர்தான். பலரது வாழ்க்கையில் முன்னாகத்தானிருந்தார். ஆனால் பிறர் படும் கஷ்டங்களைக் கண்டு களிக்கும் மட்டமான குணமும், குரூர புத்தியும் மங்களாவுக்கு என்றும் இருந்தது கிடையாது.

அவரை நேரில் பார்த்துப் பேச வேண்டும் என்று அவள் மனத்திலே ஓர் ஆதங்கம்.

பஸ் நிலையத்தினின்று ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் அவள் தானப்ப முதலித் தெருவைத் தேடிக்கொண்டு வந்தாள்.

மாலைப் பொழுது அமிழ்ந்து கொண்டு இருளுக்கும் வெளிச்சத்திற்கும் நடுவிலிருந்த இடைவெளி நேரம். ஏழாம் எண் வீடு அந்தத் தெருவின் மத்தியிலிருந்த ஒரு சிறு ஓட்டுக் கட்டிடம். கோலம் போடாத வாசல் வெறிச்சென்று துக்க வீடு போன்ற தோற்றத்தைக் கொடுத்தது.

திண்ணைக்கு வெளியே பலத்ததொரு கம்பிகேட்டு. தாளிடப்பட்டு பூட்டு தொங்கிக்கொண்டிருந்தது. வாயிலின் பெரிய மரக்கதவு இறுக்கமாகச் சாத்தப்பட்டிருந்தது.

யாரையும் பதஞ்சலி பார்க்க விரும்பவில்லை என்பதற்கு இவை சான்றுகள்.

துணிவுடன் அவள் கேட்டின் முகப்பிலிருந்த அழைப்பு மணி பித்தானை அழுத்தினாள்.

கிர்... கிர்... என்று கத்தியது. யாரையும் காணவில்லை.

சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு மங்களா பித்தானை படியும் அழுத்தினாள்.

பதஞ்சலி அவளைப் பார்த்துப் பேச மறுத்து விட்டால்...? சிறிது அச்சமாகவும் இருந்தது. மூன்றாவது முறையாக மணியை அவள் அடித்த பின்னர்தான் கதவு லேசாகத் திறக்கப்பட்டு ஒரு சிறிய பெண் வெளியே எட்டிப் பார்த்தாள்.

வீங்கி இடுங்கிவிட்டிருந்த கண்கள்—உப்பிய முகம்—வாராத கூந்தல்-அலுங்கிப்போன புடவை-நடுத்தர வயதில் பருத்துவிட்ட தோற்றம். எல்லாம் அவள்தான் திருமதி பதஞ்சலி என்று அழுத்தமாக அறிவித்தன. 'யார் அது?' அவள் கேட்கவில்லை...இடுங்கிய கண்களில் தேங்கி இருந்த கோபம் கேட்டது.

"மங்களான்னு பேர், பதஞ்சலி ஸார் வேலை பார்க்கிற ஆபீசிலே நானும் வேலை பார்க்கிறேன்... அவருக்குக் காய்ச்சல்னு கேள்விப்பட்டேன். என் வீவு சம்பந்தமாக அவரைப் பார்த்து ஒரு வார்த்தை கேட்டுவிட்டுப் போக..." முடிக்காது நிறுத்தினாள்.

திருமதி பதஞ்சலி முகத்திலே சிறிது அமைதி தெளிவாகியது.



"கேட்டுச் சொல்றேன்..." உள்ளே சென்றாள். சிறிது பொழுதில் கதவை நன்றாகத் திறந்துகொண்டு வந்து கேட்டுக்கு உள்ளே தொங்கிய பூட்டைத் திறந்தாள்.

"வாங்கோ... உள்ளே கூடத்தில்தான் படுத்துண்டு இருக்கார்."

செருப்புகளை நடையில் கழற்றிவிட்டு...மங்களா பின் தொடரு முன் திருமதி பதஞ்சலி கூடத்து மின்விளக்கைப் பொருத்திவிட்டுச் சுவர் ஓரமாக உட்கார்ந்திருந்த இரண்டு சிறுவர்களை எழுப்பித் தன்னுடன் பின்பக்கம் தள்ளிக் கொண்டு சென்றுவிட்டாள்.

பனியனும் வேட்டியுமாக நெற்றியில் பட்டையாக மருந்து பத்து போட்டுக் கொண்டு...பெஞ்சுமீது படுத்துக் கிடந்த பதஞ்சலி விருட்டென்று எழுந்து உட்கார்ந்தார். மழிக்கப்படாத தாடையும்...சிவந்து வீங்கிய கண்களுமாக பதஞ்சலி ஒரே நாளில் பாதி உடலாக, பெரும் காய்ச்சலிலிருந்து எழுந்தவர் போல ஒடுங்கிவிட்டிருந்தார்.

மங்களாவைக் கண்டதும் அவரது கண்களில் ஆறாகக் கண்ணீர் பெருக்கெடுத்துக் கொண்டு விட்டது.

"உட்காருங்கம்மா...இன்னமும் நான் இந்த வேதனையையும் வெட்கத்தையும் சுமந்துகொண்டு உசிரோட இருக்கேன்." மேல துண்டில் வாயைப் பொத்திக் கொண்டு விம்மினார்.

ஓரம் சிறிது உடைந்துவிட்டிருந்த ஒரு ஸ்டுலின் மேல் அவள் உட்கார்ந்து கொண்டாள்.

சுவர் ஓரமாகக் கட்டப்பட்டிருந்த சுவர்க் கொடியில் சின்னச் சின்ன சட்டைகள், பாண்டுகள், பாவாடைகள் தொங்கின. மூலையில் இரண்டு புத்தக மூட்டைகள் சாய்ந்து கிடந்தன.

விஜயாவிலிருந்து தொடங்கி, மாடிப் படிகள் போல மனிதருக்கு வீடு கொள்ளுமட்டும் குழந்தைகள் பெரிய குடும்பந்தான்.

அதன் சுமையைத் தாமே தனியாகச் சமாளிக்க முடியாதுதான். மூத்த மகளை வேலைக்கு அனுப்பப் போக...விபரீதம் நடந்துவிட்டிருக்கிறது. மனிதர் ஓரேயடியாக நொறுங்கி விட்டிருக்கிறார். பார்வையை மெல்லப் பரவவிட்ட மங்களா, ஒரு நொடியில் நிலைமையை ஊகித்துக் கொண்டுவிட்டாள்.

வாய் கொண்ட மட்டும் வெற்றிலையாகப் குதப்பிக் கொண்டு வேடிக்கையாகப் பேசிச் சிரித்து அட்டகாசமாக அலுவலகத்தைச் சுற்றிவந்தவர், இப்போது பச்சைக் குழந்தையைப் போல விசித்து அழுவதைக் காண அவளுக்கும் பரிதாபமாகத்தான் இருந்தது.

"என்னவோ காதில்பட்டது...ஆனால் நான் உங்களைப் பார்க்க வந்தது வேறு காரியத்துக்காக...தப்பாக நினைச்சுக்க வேண்டாம்." குழைவாகக் கனிவாகச் சொன்னாள்.

கண்களைத் திறந்து அவளை மெல்ல நிமிர்ந்து பார்த்தார் பதஞ்சலி. உணர்ச்சிகளின் அழுத்தத்தில் வார்த்தைகள் நெஞ்சுக்குள் நொறுங்க அவரால் சட்டென்று பேச முடியவில்லை.

"எல்லாரைப் பற்றியும் வாய் கிழியப் பேசினேன். அதுக்குத் தண்டனையா இப்போ என்னைப் பார்த்து பலர் பேசும்படியா ஆச்சு...இந்த மூஞ்சியை வெச்சுண்டு ஆபீசுக்குக்கூட வர முடியலை. என் நிலையில் வேறொருத்தன் இருந்தால் இத்தனை நாழி மானம் வெடிச்சே செத்துப் போயிருப்பான். என் மனைவி தங்கம். வாயில்லாப் பூச்சி. அவளையும் குழந்தைகளையும் நினைச்சு..." எச்சிலை விழுங்கிக் கொண்டு திணறினார்.

"ஸார்! நீங்கவயசிலும் அனுபவத்திலும் என்னைவிடப் பெரியவர். இருந்தாலும் சொல்றேன். கஷ்டம், வேதனை



அவமானம் இதையெல்லாம் எப்பாவாவது ஒரு சமயம் நிச்சயம் வாழ்க்கையில் ஒரு கோணத்திலே ஏதோ ஒரு ரூபத்திலே அனுபவிக்காத மனுஷர் உலகத்திலே கிடையாது என்ற நினைக்கிறேன்.

உதாரணத்துக்கு என்னையே எடுத்துக்கோங்க. சின்ன வயசிலேயே தாயை இழந்து விட்டேன். அப்படி ஒரு துர்ப்பாக்கியம். நன்னா வாழ்ந்த எங்க குடும்பம் என் இளம் வயசிலே ரொம்ப சரிஞ்சு போனதாலே பல கஷ்டங்கள் அனுபவிச்சோம். அத்துடன் என் ஜாதக அதிர்ஷ்டம் பற்றிய கதை ஒண்ணு வேகமா பரவிடுத்து, அதைப் பத்திக் கூட உங்களுக்கெல்லாம் தெரியும் என்னைப் பத்தின கவலையே அப்பாவுக்கு எமனாகிக் கொன்னுட்டுது. அண்ணா மன்னியோட ஒத்துக்காம நான் வெளியேறி வாழ முயன்றதைப் பத்தி பலர் பலவிதமாகப் பேசினா. முடிவிலே நல்லதொரு வாழ்க்கை அமையப் போறதுன்னு நான் சந்தோஷப் பட்டபோது, ஒரு விபத்து குறுக்கிட்டு என் ஆசையில் மண்ணை வாரிப் போட்டுட்டது. இந்த நிலையிலும் நான் வாழ்ந்து கொண்டிருக்கேன்—சாகலை. அப்படியிருக்கும் போது உலக அனுபவம் நிறைஞ்ச நீங்க மனம் தளரலாமா?"

"என் பெண் என் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டாம்மா." மறுபடியும் பதஞ்சலி வாயைத் துண்டால் அடைத்துக் கொண்டு விம்மினார்.

## 37

பதஞ்சலி கண்ணீர் வழியத் துக்கம் தாளாமல் வாயைத் துண்டினால் மூடிக்கொண்டு விம்முவதைக் கண்ட மங்களாவின் மனம் நெகிழ்ந்தது.

"ஸார்! நீங்க இதை ஒரு விபத்துன்னு நினைச்சுண்டு மேற்கொண்டு என்ன செய்கிறதுன்னு யோசிச்சு நடந்துக்

கிறதை விட்டுட்டு இப்படி ஒரேயடியா உடைந்து போவதில் யாருக்கு லாபம்? வம்பு பேசகிறவாளுக்கு அசை போட ஒருபிடி அவல் கிடைச்ச மாதிரி நிலைமையை அப்படியே விட்டுடலாமா, தவறாச்சே?"

"அம்மா மங்களா! நீங்க வந்து இப்படி பேசறது என் மனதுக்கு ரொம்ப ஆறுதலா இருக்கு. ஆபீசிலிருந்து ஒருத்தர்கூட இதுவரை எட்டிப் பார்க்கலை."

"நான் கூட வீவைப்பத்திப் பேசத்தான் வந்தேன் உங்க துயரத்தைக் கிண்டிக் கிளறிக் கேட்க வரலை. ஸார்... எல்லோரும் ரொம்ப அனுதாபப்பட்டுக் கொண்டுதான் இருப்பா...நேரே வந்து பேச சங்கடப்பட்டுக் கொண்டு பதுங்கியிருக்கான்னு தோன்றது."

"என்னைப் பத்தி ஆபீஸே பேசி சிரிக்கிறாப்பல எனக்கு ரொம்ப மலைப்பா இருக்கு."

"முன் மட்டை விழுகிறதைப் பார்த்து பின் மட்டை சிரிக்க முடியுமா? யாருக்கு எந்த நிமிஷம் என்ன வருமோ யார் கண்டா? நம்ம ஆபீசிலே அப்படி குரூரமானவா யாரும் கிடையாதுன்னு நிம்மதியா இருங்கோ..."

"மிஸ். மங்களா! நீங்க சொல்றதைக் கேட்டு நான் ரொம்ப வெட்கப்படறேன். மனம் கூனிக்குறுகி வேதனைப் படறது. வயசிலே சின்னவா நீங்க. ஆனால் குணத்திலே ரொம்ப உசத்தவளா இருக்கேள்...நான் உங்க முன்னாடி ரொம்பத் தாழ்ந்து நிக்கறேன். உங்களுக்குத் தெரியாது, உங்களைப் பத்தி, உங்கள் ஜாதக தோஷத்தைப்பத்தி ரொம்ப கேவலமா பேசினவன் நான். எல்லார்கிட்டேயும் வேடிக்கையாக உங்கள் வாழ்க்கையின் கடந்தகால விவரங் களைக் கதையாகக் கட்டிவிட்டவன் நான் அத்தோடயா? உங்களைப்பத்தி டைரக்டர் பிரசாத்துக்கு மொட்டைக் கடிதம் எழுதினேன். கல்யாணம் நிச்சயமானதைக் கேட்ட தும் பொறாமைப்பட்டுண்டு உங்களுக்கும் ஒரு அனாம



தேயக் கடிதம் எழுதிப் போட்டேன். மானேஜருக்கு ஏற் பட்ட கார் விபத்தைப் பத்தி வேடிக்கையாகப் பேசி உங்கள் அதிர்ஷ்டத்தை இடிச்சுப் பேசி மகிழ்ந்தேன். இதைப் பத்தி உங்கண்ணாவுக்கு டெலிபோனில் யாரோ சொல்வது போல பெயரை மாத்திட்கொண்டு விளக்கினேன்.

இந்த அக்கிரமங்களுக்கெல்லாம் இப்போ எனக்குப் பெரிய தண்டனை கிடைச்சிருக்கு. கலிகாலத்திலே கைமேலே பலன்னு சொல்வா-ரொம்ப உண்மையம்மா உண்மை." தழுதழுத்தார்.

அந்தக் கடிதங்களைப் பற்றி அவரே சொல்லி ஒப்புக் கொண்டதைக் கேட்ட மங்களா, நெஞ்சம் துணுக்குற்றாள் ஒரு கணம் கோபத்தில் அவள் உள்ளமும் உடலும் நடுங்கின. விரைவில் உணர்வுகளைச் சமாளித்துக் கொண்டாள்.

"நீங்க செஞ்சதை ஒத்துக்கொண்டு விட்டேளே. அப்பவே அந்த தப்பெல்லாம் மறைஞ்சு போச்சுன்னு வச்சுக்கோங்க. எனக்கு உங்க மேலே வருத்தமில்லை, என் வாழ்க்கையில் சில துன்ப நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அதை மற்றவர்கள் பேசக் கூடாதுன்னு தடை உத்தரவு போட எனக்கு என்ன அதிகாரமிருக்கு? என்னைப் பொறுத் தவரை மத்தவா படற வேதனையைப் பார்த்து நான் அனு தாபப்படா விட்டாலும், சிரிச்சு மகிழக்கூடாது. அப்படி ஒரு கொள்கை. அவ்வளவுதான்..."

"உங்களைப் பத்தி இப்பத்தான் அம்மா நான் புரிஞ்சுக் கிறேன்...திமிர் பிடிச்சுப்போய் நான் உங்களுக்கு இழைச்ச தீமைகளை மறந்து மன்னிச்சுடுங்கோ...அப்பத்தான் எங்க குடும்பம் விளங்கும்." கண்களில் நீர் பொங்க, துயரம் தொண்டையை அடைக்க எழுந்து நின்று அவர் கையிரண்டும் கூப்பி வணங்கினார்.

மங்களா திடுக்கிட்டு எழுந்து விட்டாள்.

"ஸார்! என்ன இருந்தாலும் நீங்க வயசில் என்னை விடப் பெரியவர். மன்னிப்புன்னு பெரிய வார்த்தைகள்

வேண்டாம். நடந்ததையெல்லாம் நான் மறந்துட்டேன். நீங்க ஏன் நினைச்சுண்டு வருத்தப்படணும்? நாளைக்கு நீங்க ஆபீசுக்கு வந்தா என் லீவு மனுவைப் பார்த்து கையெழுத்திட்டு உதவணும்னு கேட்கத்தான் வந்தேன்."

"நான் ஆபீசுக்கு வர ரொம்பக் கூச்சப்படறேன். அம்மா. என் மகள் என்னை ரொம்ப அவமானப்படுத்திட்டாளே..."

"அப்படி நீங்க நினைக்கவே கூடாது. விஜயாவுக்கு அந்தப் பையனை பிடித்துவிட்டிருந்தது. அவனும் அவளை விரும்பினான். உங்ககிட்ட உங்க மகள் தன் விருப்பத்தைச் சொல்லப் பயந்துண்டு இருந்து...அவளை விட பத்து வயசு மூத்தவ நான்; எனக்கே என் வாழ்க்கையைப் பத்தி சட்டென்று ஒரு முடிவு எடுக்கத் தெரியலை' தடுமாடறேன்...அவள் சின்னக் குழந்தை. உணர்ச்சி வசத்திலே உங்களைக் கேட்காம ஒரு காரியம் செய்துட்டா' நடந்தது நடந்தாச்சு. நீங்க அவா ரெண்டு பேரையும் சந்திச்சுப் பேசி வீட்டுக்கு அழைச்சிண்டு வந்து முறைப்படி எல்லாம் செய்யுங்கோ."

"எப்படியம்மா அவளை வீட்டிலே சேர் கிறது...?"

"இப்போ என்ன நடந்துட்டதுன்னு அவளை நீங்க ஒதுக்கணும்? அந்தப் பையன் அவள் ஆபீசுக்கு அருகே வேலை செய்கிறான்னு கேள்வி. படிச்சவன்-புத்திசாலி சம்பாதிக்கிறான். உங்கள் மகள் மீது அவனுக்கும் விருப்பம். வீட்டில் சொன்னால் வரதட்சிணை பிரச்னை குறுக்கிடுமோன்னு பயம் அவனுக்கு. பையன் ஒருவழியில் உங்களுக்குத் தூரஉறவுதானேமே? அப்படியிருக்கும்போது இன்னமும் ஏன் தயக்கம்? உங்களால் அவன் தாய் கேட்கும் சீர், நகை இதெல்லாம் கொடுக்க முடியாதே. கல்யாணம் தடைப்பட்டுப் போகுமோன்னு பயந்துண்டு அந்தப் பையன் இந்தக் குறுக்குவழியை அனுசரிச்சிருக்கான். குடும்பத்திலே சம்பாதித்தும் போட வேண்டிய பொறுப்பை விட்டு இப்போ உனக்குக் கல்யாணம் எதற்குன்னு நீங்க அதட்டுவீங்களோன்னு விஜயா பயந்து



போயிருக்கலாம். அதனாலே வெளியே கிளம்பி தாங்களே கல்யாணம் செய்துகொண்டு விட்டா... இது ஒண்ணும் கேள்விப்படாத அதிசய சம்பவம் இல்லையே..."

"நீங்க பேசறதைக் கேட்டா இந்த விபரீதத்துக்குப் பெரியவதான் காரணம்னு ஒரு வழியில் தோணறது."

"உங்க பொண்ணை நீங்களே ஒதுக்கி வைத்து அவமானப் படுத்துகிறதை விட்டுவிட்டு... நீங்களே முன் வந்து அவர்களைத் தேடி அழைச்சிண்டு வந்து முறைப்படி எல்லாம் செய்து அவர்களுக்கு வாழ்க்கை அமைச்சுக் கொடுத்தேன்னா இப்ப பேசறவா எல்லாரும் வாயைக் கப்பென்று மூடிக் கொள்வா."

"நீங்க சொல்றதிலும் உண்மை இருக்கு..."

"இனிமேலே நீங்க செய்கிற காரியம் இதுதான் நாளைக்குப் பேசாம ஆபீசுக்கு வாங்க. ஒண்ணுமே நடக்காதது போல காரியங்களைக் கவனியுங்கோ... யாருக்குமே எதையும் உங்ககிட்டே 'கேட்க துணிச்சல் வராது...என் சொந்த அனுபவம் சார்..."

"தங்கமணி! மங்களா அம்மாவுக்கு சூடாகக் காப்பி கொஞ்சம் எடுத்துண்டு வா" 'உரத்த குரலில் பின்பக்கம் திரும்பி உத்தரவிட்டார். கதவு மறைவில் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு காப்பி டம்ளருடன் தயாராக நின்ற தங்கமணி சட்டென்று கூடத்திற்கு வந்தாள்.

உப்பியிருந்த அந்த முகத்தில் லேசான புன்னகை அரும்பிப் படர்ந்து வெளிச்சமிட்டது.

பெற்றவள் அவள்...பெண் பக்கம் பரிந்து கசிந்துருகிக் கொண்டிருந்தது அவள் உள்ளம். ஆனால் கணவனிடம் துணிவுடன் பேச முடியாது தவித்துக் கொண்டிருந்தாள். அவள் சொல்ல நினைத்ததையெல்லாம் சொல்ல, தெய்வம் போல வீட்டுக்குள்ளே வந்து உட்கார்ந்திருந்த மங்களாவை நன்றியுடன் பார்த்தாள். டம்ளரை முக்காலி மீது வைத்தாள்.

"உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசு அம்மா. நீங்க நன்னாயிருக்கணும்" பேச முடியாது தழுதழுத்தாள்.

"ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண் செய்ய வேண்டிய கடமை நமக்கு நாமே விரோதியாகி விட்டால் ஆண்கள் கிட்டேயிருந்து அனுசரணையை எப்படி எதிர்பார்க்க முடியும்?" மங்களா முறுவலித்தாள்.

"நாளைக்கு நான் கட்டாயம் ஆபீசுக்கு வரேன் கேட்கக் கூடாது...ஆனாலும் நாமெல்லாம் ஒரே இடத்தில் வேலை செய்கிற ஒரு உறவிலே...தமையன் ஸ்தானத்திலே இருந்துண்டு கேட்கிறேன். கொஞ்ச நாள் எங்கேயாவது வெளியூரில் போய் இருக்கணும்னு நானே லீவு எடுக்கறேன்...அவசரப்பட்டுக் கொண்டு நீங்க எந்த முடிவுக்கும் வந்துவிடக் கூடாது. மானேஜரைப் பற்றிய தகவல் சீக்கிரம் நம்ப டைரக்டரிடமிருந்து வரும். மிஸ்டர் காசிநாத் ரொம்ப நல்லவர்...நேர்மையானவர்... அவர்...வந்து..." முடிக்காது அவளைக் கனிவுடன் பார்த்தார் பதஞ்சலி.

மங்களாவின் கண்கள் கனத்தன நெஞ்சை என்னவோ அடைத்தது காப்பியைப் பருகிவிட்டு டம்ளரை வைத்தாள்.

"இருட்டிப் போச்சு...நான் வரேன் ஸார்...ரொம்ப நன்றி" கிளம்பினாள்.

பதஞ்சலி பரபரப்புடன் பேசினார். "கொஞ்சம் இருங்கோ. முகத்தை அலம்பிண்டு உடைமாத்திண்டு வரேன். இருட்டிப் போச்சு. நீங்க தனியா திரும்பி ஹாஸ்டலுக்குப் போவது எனக்கு விருப்பமில்லை. ஊர் ரொம்பக் கெட்டுக் கிடக்கு. நான் உங்க தமையன் நிலையில்கூட துணைக்கு வந்து ஹாஸ்டல் வாசலில் கொண்டு விட்டுட்டு வரேன்...இந்த உரிமையை தயவுசெய்து எனக்குகொடுங்கோ இதை ஒரு பிராயசித்தமாக நான் நினைக்கிறேன்." நாத் தடுமாற அவர் கெஞ்சிக் கேட்டபோது மங்களா மனம் கசிந்து போனாள்.

"ஆகட்டும், காத்துண்டு இருக்கேன்...நீங்க கிளம்பத் தயாராகுங்கோ ஒண்ணா போகலாம்" புன்முறுவலித்தாள்.



அடுத்த நாளே மங்களா வேலையினின்று ஐந்து வாரங்களுக்கு விடுப்பு எடுத்துக்கொண்டு விட்டிருந்தாள். அவள் சொற்படியே அலுவலகத்திற்கு வந்த பதஞ்சலி அதற்கு ஆவன செய்து உதவினார்.

மாலை அவர் கிளம்புமுன் எழுந்து, அவள் மேஜையருகே வந்தார்.

"என்னென்னவோ சொல்லணும்னு நினைக்கிறேன். பேசத் தோணலை. ஆனால் நீங்க புரிஞ்சுக்குவேள். இத்தனை துன்பங்களையும் தாங்கிண்டு ஒரு சிறு பெண் நீங்க துணிவா இருக்கிறதைப் பார்த்துதான் எனக்கு என் விஷயத்திலே தெம்பு வந்திருக்கு. ரொம்ப நன்றி மிஸ் மங்களா. நல்ல ஓய்வு எடுத்துண்டு சுகமா திரும்பி வாங்கோ. எல்லாம் நன்னா முடியணும்னு பகவானை பிரார்த்தித்துக் கொள்கிறேன்."

மெல்லிய குரலில் உணர்ச்சியோடு அவர் சொன்னார். அத்தனையும் உண்மை என்று அவரது பேச்சும் முகமும் சொல்லின. புன்முறுவலுடன் விடை பெற்றுக் கொண்டு அவள் கிளம்பினாள்.

இரண்டு தினங்கள் சென்றன. தலைவி சியாமளா தன் சகோதரியிடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள், ஒரு மாத காலத்திற்குக் குறைவாகவே நாக்பூரில் தங்கப் போவதினால் மங்களா எல்லாவற்றையும் மூட்டை கட்டிக் கொண்டு போக விரும்பவில்லை, அவசியமில்லாதவைகளை தனது பெரிய பெட்டியில் போட்டுப் பூட்டி விட்டு தலைவி வசம் பாதுகாப்புக்காக ஒப்படைத்தாள் தனக்குத் தேவையான சில புடவை ரவிக்கைகள், சோப்பு—சீப்பு இத்யாதிகளை ஒரு சிறு பயணப் பெட்டிக்குள் அடுக்கித் தயாராக வைத்துக் கொண்டாள். — நாக்பூரிலிருந்து பதில் வந்ததும் டிக்கெட்டுக்கு சியாமளா ஏற்பாடு செய்துவிடுவாள். அவள் கிளம்ப வேண்டியது. அவ்வளவுதான் என்ற நிம்மதியில் மங்களா ஓரளவு அமைதியாக இருந்தாள்.

அன்று காலை அவள் மெல்ல படுக்கையை விட்டு எழுந்திருந்தாள். அலுவலகத்திற்கு ஓட அவசரப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கவில்லை. தலைக்கு ஷாம்பு போட்டு வெந்நீரில் வெகு நேரம் சுகமாக ஸ்நானம் செய்தாள்.

ஈரத் தலையைத் துடைத்துக் கொண்டு கண்ணாடி முன் நின்றபடி மெல்ல ஒப்பனை செய்து கொண்டாள்.

'இனி கொஞ்ச நாட்களுக்கு அவள் அவசரமாக காரியங்களை கவனிக்கத் தேவையில்லை. மெல்ல நிதானமாக எழுந்து குளித்து சாப்பிட்டு—தூங்கலாம் பிற்காலத்தைப் பற்றி தீவிரமாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வர ஏராளமான நேரம் இருக்கிறது.' எண்ணியபடி குங்குமப் பொட்டைத் திருத்திக் கொண்டு துவாலையைத் தலையினின்று உருவிக் கொடியில் போடத் திரும்பினாள்.

அறைக் கதவு பலமாகத் தட்டப்பட்டது.

'யாராக இருக்கும்? அதுவும் காலை வேளையில்...'

தோள் மீது விமானப் பயணப் பையுடன் அவளது தோழி லதா கதவுக்கு வெளியே நின்று கொண்டிருந்தாள்.

திடுக்கிட்டுப் போன மங்களாவுக்கு சட்டென்று பேச வரவில்லை.

"நான் இருக்கிறதை நீ மறந்து போயிட்டியே? நியாயமா மங்களா?" கேட்டுக் கொண்டே உள்ளே வந்த லதா, தோழியை இறுகத் தழுவிக் கொண்டாள்.

அவ்வளவுதான், தாயைக்கண்ட குழந்தையைப் போல மங்களாவுக்குத் தோழியைக் கண்டதும் துக்கம் பொத்துக் கொண்டு விட்டது.

"சே! இப்ப என்ன நடந்துவிட்டது. இப்படி அழணும்? நான் எதேச்சையா உன் ஆபீசிற்கு நேத்தி பகல் போன் பண்ணினேன். பதஞ்சலி எல்லாத்தையும் விவரமா சொன்னார். நாளை ரெயிலுக்கு டிக்கெட் கிடைச்சா நீ நாக்பூர் கிளம்பி விடுவேன்னு சொன்னார். ஓடிப்போய் என் கணவர், எனக்கு இன்று காலை விமானத்துக்கு சென்னைக்கு ஒரு டிக்கெட்டும், இன்று



பகல் நாம் திரும்ப பம்பாய்க்கு ரெண்டு டிக்கெட்டும் வாங்கிண்டு வந்துவிட்டார். போய் முதல்லே உன் சிநேகிதியைக் கையோட நம்ப வீட்டுக்கு ஓய்வா இருக்க அழைச்சுண்டுவான்னு அம்மாவும் என் கணவரும் உத்தரவு போட்டு தெட்டித் தள்ளாத குறையா அனுப்பியிருக்கா. நான் நேரே விமான நிலையத்திலிருந்து வரேன். அதிருக்கட்டும். நீ என்னை மறந்துட்டு வேற ஒருத்தர் வீட்டுக்குப் போக திட்டம் போடலாமா?"

"உங்கள் இன்பவாழ்க்கை நடுவே இடைஞ்சலா வந்து இருக்க நான் விரும்பலை."

"பேஷ்! அப்புறம் சிநேகிதம் என்கிறதுக்கு என்ன அர்த்தம்? இதுமாதிரி சமயங்களில் உதவாட்டா சிநேகிதர்கள் இருந்து என்ன பிரயோஜனம்? உறவுக்கு மேலே சிநேகிதம் ஜாஸ்தின்னு எதுக்குச் சொல்வது?" அதட்டிக் கொண்டே லதா தன் கைக்குட்டையால் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"வா...வெளியிலே போய் ஏதாவது ஒரு ஹோட்டலிலே முதலில் காப்பி டிபன் சாப்பிடுவோம், அதுக்கு முன்னாடி சியாமளா அம்மா கிட்டே மன்னிப்பு கேட்டுண்டு நாக்பூர் பயணத்தை கான்சல் பண்ணு. பிறகு பம்பாய்க்குப் புறப்பட ஆயத்தம் பண்ணு. சரியா?" ஆறுதலாக, அன்பாகச் சொன்னாள்.

## 38

கொலாபாவில் அவர்கள் வசித்த ஃப்ளாட் மிகவும் வசதியாகத்தான் இருந்தது. லதா தன் தோழிக்கு தனியான தொரு அறையை ஒழித்துக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தாள். ஆனால் மங்களா, காமு அம்மாளுடன் ஒரே அறையில் கூடத் துணையாகத்தான் தூங்க விரும்பினாள் காமு அம்மாளின் அருகாமை, அவளது பேச்சு. ஆறுதல் மொழிகள் எல்லாம் புண்பட்ட நெஞ்சிற்கு இதமாக இருக்கவே,

மங்களாவைக் குழந்தையைப் போல அவளுடன் ஒட்டிக் கொண்டு விட்டாள்.

தம் வீட்டுக்கு வந்துள்ள விருந்தாளியை அந்த மூவரும் நன்றாகவே கவனித்துக் கொண்டனர். அவளுக்கு ஏற்பட்ட துயரத்தை எண்ணி அவள் மனம் புழுங்க நேரம் இல்லாத படி நாள் முழுவதும் லதாவும், அவள் தாயும், அவளைக் கட்டிக் காத்தனர்.

மாலை அலுவலகத்திலிருந்து திரும்பிய கங்காதரன். அவர்கள் எல்லோரையும் தமது காரில் வெளியே அழைத்துச் சென்று வந்தார். மங்களாவுக்குப் பம்பாய் வாசம் முதல் அனுபவம். போட்டி போட்டுக் கொண்டு அந்த மூவரும் பம்பாயின் பல இடங்களை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தனர்.

ஒரு நாள் மாதுங்காவிலிருந்த குருவாயூரப்பனை தரிசிக்க அவளை அழைத்துச் சென்றனர். காந்தி மார்க் கெட்டில் தன் தோழிக்கு வேண்டிய பாவாடைலேஸ்களை வாங்கிப் பரிசளித்தாள் லதா. இன்னொரு நாள் செட்டா நகர் முருகனை தரிசிக்கப் புறப்பட்டனர். ஆக்வேரியம்—பிளானட்டோரியம்—மலபார் ஹில்லின் தொங்கும் தோட்டம்—இந்தியா கேட்வே—எல்லாவற்றையும் அவளுக் குக் காட்டி மகிழ்விக்க முயன்றனர்.

ஜுஹு பீச்சின் பேல் பூரி—சௌபாத்தி பீச்—மரீன் டிரைவ்—குவீன்ஸ் நெக்லஸ் என்று எல்லாவற்றையும் அறி முகப்படுத்தினார். மகாலட்சுமியையும் செம்பூர் வெங்கடாசல பதியையும் தரிசிக்கச் செய்தனர். கிராப் போர்ட் மார்க்கெட், ச்சோர் பஜார், எம்.ஜி. ரோட் கடைகள் என்று பல இடங் களுக்கும் அழைத்துச் சென்றார்கள். மகாபலேஸ்வருக்குச் சென்று இயற்கைக் காட்சிகளைக் காட்சிகளைக் கண்டு களித்தபடி பிக்னிக் செய்தனர்

நாட்கள் வேகமாக ஓடின. தனக்கென அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமத்தை எண்ணி மங்களா நன்றி யால் கரைந்து போனாள். பம்பாய் வந்தது முதல்



அவளுக்கு காசிநாதின் நினைப்பு அதிகமாகிவிட்டிருந்தது. பரோடாவிற்கு அருகே இருக்கிறோமே என்றதொரு பிர மிப்பு—ஆனால் அவன் வெகு தொலைவில் மாயமாகிவிட் டானே என்றதொரு பெரும் துயரம், பகல் வேலைகளில் அவர்களின் உபசரிப்பிலே, அவள் தன்னைப் பற்றி மறந்து விட முடிந்தது.

ஆனால் இரவில்...உறங்குவதற்குத் தலையைப் படுக்கை மீது சாய்த்ததும் மனம் காசிநாத்தை நினைத்து துயரவசப் பட்டது. தலையணைமீது முகத்தைப் பதித்துக் கொண்டு ஓசைப்படாது மௌனக் கண்ணீர் வடித்தாள்.

அன்று காலை கங்காதரன் மிகவும் பரபரப்புடன் காணப் பட்டார்.

"அவசரம். நானும் அம்மாவும் என் கணவருடன் வெளியே போய் வரவேண்டியிருக்கிறது. கொஞ்ச நேரம் நீ தனியாக ஃப்ளாட்டில் இருக்கமுடியுமா?" மிகவும் குழை வாகக் கேட்டாள் லதா. மங்களா உடனடியாக ஒத்துக் கொண்டு விட்டாள். அவளுக்கிருந்த மனநிலையில் சற்று தன்னந்தனியே இருக்கவேண்டும் போன்றதொரு ஆவல் அவளுக்குப் புது அனுபவமல்ல...எத்தனையோ முறை அவளை சமைக்க வைத்துவிட்டு அண்ணாவும், மன்னியும் தங்கள் மகளுடன் சினிமாவுக்கும் போயிருக்கிறார்கள். லதா வும் அவள் தாயாரும் கங்காதரனுடன் கிளம்பிச் சென்று கொஞ்ச நேரம் ஆகிவிட்டிருந்தது.

பொழுதை வீணே கழிக்க மங்களாவுக்குப் பிடிக்க வில்லை. அவர்கள் திரும்பிவருவதற்குள் சமைத்து வைக்க விரும்பினாள். இந்தச் சில நாட்களில் அவளுக்கு அந்த வீட்டின் சமையலறை மிகவும் பழக்கமாகிவிட்டிருந்தது. பிரிட்ஜைத் திறந்து வேண்டிய காய்களை எடுத்துக் கொண்டு வந்து சமையல் மேடைமீது வைத்துக் கொண்டாள்.

என்ன சமைப்பது என்று அவள் மனதிற்குள் திட்டம் போட்டுக்கொண்டு நிற்கையில் அழைப்பு மணி கிணு

கிணுத்தது. திடுக்கிட்டுப் போனாள். தனியாக இருக்கும் போது சட்டென்று கதவை யாருக்கும் திறக்கக்கூடாது—ஆபத்து என்று லதா முன்கூட்டியே பம்பாயைப் பற்றி மிகவும் எச்சரித்து விட்டிருந்தாள்.

மறுபடியும் அழைப்புமணி அழுத்தமாகக் கூவியது.

"யாரது?" ஓங்கி அதட்டினாள். கையும் காலும் பதற, மெல்ல முன் கதவு அருகே வந்து...கதவில் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடி துவாரம் வழியே பார்த்தாள்.

மூச்சே நின்றுவிடும் போன்றதொரு அதிர்ச்சியில் நெஞ்சு படபடக்க உடல்முழுவதும் நடுங்க...கதவின்மேல் சாய்ந்து கொண்டாள்

மறுபடியும் அழைப்பு மணி ஒலிக்கத் தொடங்கியது, திடுக்கிட்டுப்போன மங்களா கதவினின்று அப்பால் நகர்ந்து கொண்டாள். இம்முறை அழுத்தமாக—வற்புறுத்தலாக—விடாது காதைக் கிழிக்கும் வண்ணம்—மணி ஒலித்துக் கொண்டிருந்தது.

இன்னமும் அவள் தயங்கிக்கொண்டு நிற்பதில் பயன் இல்லை. நெற்றிமீது லேசாகப் புரண்டு, கண்களை வருடிய முடியை அவசரமாக ஒதுக்கி விட்டுக் கொண்டாள் புடவைத் தலைப்பை ஒழுங்கு செய்து கொண்டாள். துணிவுடன் மெல்ல கதவின் தாழ்ப்பாளைத் திறக்க பிடிமீது கையை வைத்தாள்.

உடம்பும் மனமும் பதறிய வேகத்தில் ஏற்பட்ட நடுக்கத்தில் கைப்பிடியைக் சுழற்றக் கூடத் தெம்பு இல்லாது பலவீனமாகி விட்ட உணர்வில் திகைத்துப் போனாள்.

அதற்குள் இன்னொரு தடவை மணி ஓங்கி அலறவே, அவள் அழுத்தித் தாழ்ப்பாளின் பிடியை இறுக்கமாகச் சுழற்றி கதவைத் திறந்தாள்.

வெள்ளை ஸபாரி ஸூட்டில்...நெற்றியில் துளிர்த்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு உயிருடன் உண்மையாகவே அவள் எதிரில் மோகனமாக முறுவலித்தபடி காசிநாத் வெளியே நின்றுகொண்டிருந்தான்.



மங்களாவின் நெஞ்சு வெடித்துவிடும் போல வேகமாகத் துடித்துக்கொண்டது.

மெல்ல நிமிர்ந்து அவனை வியப்பும் துயரமுமாகப் பார்த்தாள். காசிநாத் அப்படியே அயர்ந்து போய் நின்றான். அவனது பார்வையில் அன்பும், கோபமும் தெரிந்தன.

ஒரே கணந்தான். ஆனாலும் யுகம் போல நேரம் நீண்டு மங்களாவின் உணர்வுகளை இறுக்கியது.

"இத்தனை நாள் என்ன ஏதுன்னு விபத்தைப் பற்றி ஒரு வார்த்தை ஒரு கடிதத்தில் கூட எழுதித் தெரிவிக்கவில்லை. இப்போது திடுதிப்பென்று என் சிநேகிதி வீட்டைத் தேடிக் கொண்டு வரத் தெரிந்திருக்கிறதாக்கும்?"

"தன் உடம்பைப் பற்றி ஏதாவது விவரம் தெரிவிப்பார்னு தினம் • தினம் கடிதத்தை எதிர்பார்த்து ஏமாந்து என்னையே சித்திரவதைக்குள்ளாக்கிண்டு நான் பட்ட துன்பம் உங்களுக்குத் தெரியுமா?"

"இப்படி சிரிச்சிண்டு வந்து நின்னால் செய்த தப்பை நான் சட்னு மறந்துடுவேன்னு நினைக்கிறேளாக்கும்? எத்தனையோ உசத்தியா நினைச்சுண்டு இருந்தேன், முடிவில் நீங்களும் ஒரு சராசரி மனிதர்தான்னு நிரூபிச்சுட்டேன் ரொம்ப நன்றி."

எதிர்பாராது சந்திக்க நேர்ந்தால் கேட்க வேண்டுமென்று மனதில் இதுவரை அடுக்கடுக்காக எழுந்து குவிந்து குமைந்துகொண்டிருந்த கேள்விகளின் இறுக்கம் கண்ணீராகப் பொங்க—உதட்டைக் கடித்துக்கொண்டு பீறி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாது அருகில் கிடந்த மேஜையை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு மௌனமாக உடல் குலுங்க விம்மினாள்.

கதவைத் தாளிட்டுவிட்டு வேகமாக உள்ளே வந்த காசிநாத், நொடியில் அவள் அருகே வந்தான். மிக்க உரிமையோடு அவள் முகத்தை நிமிர்த்திக் கன்னங்களில்

விழுந்த கண்ணீரைத் தன் கைக்குட்டையால் துடைத்து விட்டான்.

"என்ன இது? எனக்கு இப்படி ஒரு வரவேற்பா...?" செல்லமாக அதட்டினான்.

மெல்ல அவனது கரத்தைத் தள்ளிவிட்டு மங்களா நகர்ந்து கொண்டாள். "நான் இங்கே இருப்பதைப் பற்றி யார் உங்களுக்குச் சொன்னது?" ஜன்னல் பக்கம் பார்த்தபடி சிறிது கோபமாகக் கேட்டாள்.

"ஒரு குருவி சொல்லியது..." காசிநாத் சிரித்தான்.

"விளையாட்டு இப்போது தேவையில்லை. உண்மை எனக்குத் தெரிஞ்சாகணும்."

"பதஞ்சலி சொன்னார்னு வச்சுக்கோயேன்..."

"அவருக்கு வேறே வேலை கிடையாது..."

"வேறே வேலையில்லாமல் விஷமமாக எத்தனையோ செஞ்சிண்டு இருந்தார். இந்த ஒரு நல்ல காரியத்தை யாவது மனுஷன் செஞ்சிருக்காரேன்னு சந்தோஷப்படு. அது கிடக்கட்டும். எனக்கு ஒரு வார்த்தை தெரிவிக்காமல் சென்னையிலிருந்து இங்கே நீ வந்திருப்பது பெரிய தப்பு தெரியுமா?"

"எனக்கு ஒரு கடிதாசி போட்டு நிலைமையைத் தெரிவிக்காம நீங்க வாயை மூடிண்டு இருந்தது எத்தனை பெரிய தப்புன்னு உங்களுக்குப் புரிகிறதா?"

"எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லத்தான் நான் நேரிலேயே வந்திருக்கேனே! உணர்ச்சிவசப்படாம நிதானமாக கேளு. தப்பு யார் மேலேன்னு புரியும். நடந்ததைச் சொல்லிவிட்டு மேற்கொண்டு என்ன செய்யணுங்கிற முடிவோட வந்திருக்கேன்னு சொல்லப் போறேன். கொஞ்சம் பொறுமையா கேட்க முடியுமா?"

மங்களாவின் மார்பு திகிலில் வேகமாகத் துடித்தது. என்ன சொல்லப் போகிறான் என்பதை ஓரளவு அவளால் ஊகிக்க முடிந்தது போலத் தோன்றவே... அவளது கலவரம் ன்மடங்காகியது. சட்டென்று பேச முடியாது திணறினாள்.



நானும் உங்ககிட்ட கொஞ்சம் விவரமாகப் பேசத்தான் விரும்பறேன். சென்னையை விட்டுப் புறப்பட்ட போதே நானும் ஒரு முடிவோடத்தான் கிளம்பி வந்தேன். அதனாலே நீங்களும் கொஞ்சம் பொறுமையா நான் சொல்வதைக் கேட்க முடியுமா?" கோபத்துடன் அவனைத் தாண்டிச் சென்று சட்டென்று தாழ்ப்பாளை நீக்கிக் கதவை அகலமாகத் திறந்து வைத்தாள்.

"இது என் சிநேகிதியின் வீடு. அவர்கள் எல்லோரும் வெளியே போயிருக்கா. ஒரு சமயம் திடீர்னு வந்தாலும் வரக்கூடும். கதவைச் சாத்திண்டு அவர் வீட்டில் நாமிருவரும் உள்ளே தனியே பேசிண்டு இருப்பதைப்பார்த்தால் விகல்பமா தோணும். அதனால்..." அவள் முடிக்கு முன் காசிநாத் முன்னால் நடந்து சென்று கதவை மீண்டும் ஓங்கிச் சாத்தித் தாளிட்டான்.

"கதவைத் திறந்து போட்டு வைப்பது இங்கெல்லாம் ரொம்ப ஆபத்து. உன் சிநேகிதியும், அவள் கணவரும், தாயாரும் வருவதற்குள் நாம் பேச வேண்டியதை நிம்மதியாகப் பேசி முடித்துவிட முடியும். நான் இப்படி உட்காரலாமா? வந்ததிலிருந்து நின்னுண்டே பேசிக் கொண்டிருக்கேன். நீயும் என்னை உட்காரச் சொல்லலை—அப்படி ஒரு கோபம்!" சிரித்துக்கொண்டே அவன் முன்னறையில் கிடந்த ஒரு சோபாமீது சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுதுதான் மங்களா நன்றாகக் கவனித்தாள். அவன் சிறிது இளைத்து கருத்து விட்டிருந்தான்.

நெற்றியின் இடது பக்கத்தில் முடி ஓரமாகக் காதின் நுனி வரை கீற்று போல ஒரு வெள்ளை வடு-தலையில் அடி பட்ட காயத்தில் தையல் போட்டு பிரித்து விட்டிருந்த குறியுடன் காணப்படுவதைப் பார்த்த போது அவள் நெஞ்சம் துணுக்குற்றாள்.

இந்தச் சந்திப்பின் முடிவு என்னவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனாலும் அவன் இப்படி பண்பற்ற

வளாக-மரியாதை தவறியவளாக நடந்து கொள்வது மிகவும் பிசகாயிற்றே!

"காயம் ரொம்பப் பலமா பட்டுட்டாப் போல இருக்கு. எனக்கு டைரக்டர் கூட விவரமா சொல்லலை, மழுப்பி விட்டார். வேறே யாருமே எனக்கு எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை." அவள் குரல் தழுதழுத்தது.

"டைரக்டர் பிரசாத் உன் நன்மைக்காகத்தான் அப்படி சொன்னார். பத்துநாள் நினைவே தெரியாமல் நான் கிடந்ததைப் பார்த்திருந்தால் நீ ரொம்ப அயர்ந்து போயிருப்பே. அந்த விபத்திலே நானும் டிரைவரும் பிழைச்சதே அதிசயம். டிரைவருக்குப் பாவம் ரொம்பப் பலத்த அடி-இன்னமும் நர்ஸிங்ஹோமில் தான் இருக்கான் எனக்கு உடம்பிலே ஒரு சின்ன சிராய்ப்பு கூட ஏற்படலை. ஆனால் தலையில் நல்ல அடி என்னைக் கவனிச்ச டாக்டர் கூட முதல்லே ரொம்பப் பயந்துட்டாராம்."

அவன் விவரிக்க—அவள் திகிலுடன்... துக்கத்துடன் கேட்டுக் கொண்டு நின்றாள்.

அவள் அண்ணா சொன்னதில் தப்பே இல்லை. அவளை மணந்து கொள்ள முன் வருகிறவனையெல்லாம மரணம் துரத்துகிறதே?

"இதெல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாது. நான் எல்லாத்தையும் தப்பாப் புரிஞ்சுண்டு என்னையே குழப்பிண்டு இருந்தேன் கூட இருந்து உதவி செய்ய முடியாத தூரத்தில் இருந்தேனே என்று ரொம்ப வருத்தப்பட்டேன். ஒரு பெரிய ஆபத்திலிருந்த நீங்க தப்பிப் பிழைச்சு வந்திருக்கிறேள். உங்க குருநாதரின் ஆசிதான் இதற்குக் காரணம். என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு தீர்மானிச்ச உடனேயே ஒரு பெரிய விபத்து உங்க உயிரைக் குடிக்கப் பார்த்து விட்டது. எனக்கு அப்படி ஒரு யோக ஜாதகம் யாரையும் குத்தம் சொல்லிப் பிரயோஜனம் இல்லை. நீங்க எடுக்கப் போகிற முடிவு எதுவானாலும் நான் ஒப்புக் கொள்வேன். இந்தக் கல்யாண ஒப்பந்தத்தி



லிருந்து நான் பிரிஞ்சுட சம்மதிக்கிறேன். நீங்கள் கவலைப் பட வேண்டாம்."

சொல்லி முடிப்பதற்குள் துக்கம் தாங்க முடியாது விம்மி விட்டாள். அதற்கு மேல் அங்கே நிற்க இயலாது சமையலறைக்குள் புகுந்து கொண்டு சுவரில் சாய்ந்தபடி மெல்ல விசும்பி அழுதாள்.

# 39

வேகமாக எழுந்து சமையல் அறைக்குள் வந்த காசிநாத் அவளது தோள்களைப் பற்றித் தன் பக்கம் திருப்பிக் கொண்டான். "நான் வந்ததிலிருந்து பார்க்கிறேன்-என்ன இப்படி? நீ அழுகிறதைப் பார்க்க எனக்குச் சகிக்காதுன்னு தெரிஞ்சும் கண்ணீர்விடறது சரியா? சொல்லு" கொஞ்சலாக கேட்ட வண்ணம் மீண்டும் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான்.

"நீ பேசி முடிச்சதைப் பொறுமையாகக் கேட்டுண்டு இருந்தேன்...இப்போ நான் எந்த முடிவோட வந்திருக்கேன்னு சொல்லப்போவதை நீ நிதானமா கேட்க வேண்டாமா?" அன்போடு மெல்ல அதட்டினான். மௌனமாகக் கண்ணீருடன் அவள் தலையை அசைத்தபடி அவனது பிடியினின்று மெல்ல நகர்ந்து அப்பால் நின்று கொண்டாள்.

"இந்த அழுமூஞ்சிப் பெண்ணை அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை காலையில் திருத்தணியில் கல்யாணம் செய்து கொள்ளப்போறேன் என்கிற செய்தியைச் சொல்ல ஆவலுடன் நேரே வந்திருக்கேன்." உல்லாசமாகச் சிரித்தான்.

தாங்க முடியாத ஆனந்தம் மங்களாவுக்கு. ஆனாலும் மனதில் ஏன் இந்த லேசான ஒரு உறுத்தல்?

துரதிஷ்டம் பிடித்தவள் என்று அண்ணாவிலிருந்து அனைவரும் அவள் உணர்வுகளில் ஏற்படுத்தியிருந்த

அழுத்தமான நினைவு குறுகுறுத்தது. 'மங்களா!' என்று மனசாட்சி அதட்டுவதுபோன்ற ஒரு பிரமையால் அவள் திணறிப் போனாள்.

"அதுக்கு நான் ஒப்புக்கொள்ள வேண்டாமா?" துயரத்துடன் திக்கினாள்.

"ஏற்கனவே ஒப்புக்கொண்டாச்சு. இனிமே மாட்டேன்னா யார் விடப்போறா? எங்கேயாவது போய் ஒளிஞ்சுகொண்டாலும். தேடிப்பிடிச்சு தாலியைக் கட்டிவிட மாட்டேன்? என்னைப்பத்தி என்னதான் நினைச்சிண்டிருக்கே" வேடிக்கையாகச் சிரித்தான்.

"இந்த விபத்துக்குப் பிறகு எனக்கும் ஒரு சந்தேகம் ஏற்பட்டுடுத்து. என் ஜாதகத்தில் ஏதோ ஒரு தோஷம் இருக்கத்தானிருக்கு..."

"நான்சென்ஸ்...நான் நம்பலை. எனக்கு எந்தவிதமான சந்தேகங்களும் கிடையாது, நம்ம ரெண்டு பேருக்கும் மனப்பொருத்தம் ஏற்பட்டபிறகு மத்ததை யெல்லாம உதற வேண்டியதுதானே நியாயம்? எனக்கு ஏற்றத்தாழ்வு-ஜாதி மத வித்தியாசங்கள்-சில தவறான கொள்கைகள்-இவைகள் மேலே நம்பிக்கை கிடையாதுன்னு எத்தனையோ முறை உன்னிடம் பேச்சு வாக்கில் சொல்லியிருக்கேன். நான் தேர்ந்தெடுத்திருக்கும் பெண்ணை என் கண்கள் போலப் பாவிக்க சமஉரிமை தந்து என் துணைவியா எத்துண்டு நீண்டகாலம் வாழணும்கிறது என் ஆசை. அதுவும் உனக்கு தெரிந்த விஷயம்தான்-அப்படியிருந்தும், என் மேலே உனக்கு ஒரு சிறு சந்தேகம். ரொம்ப ரொம்ப தப்பு மங்களா" சொல்லிக்கொண்டே மிக அருகில் வந்தான்.

"ஆனால் நான் ரொம்ப துரதிருஷ்டம் பிடிச்சவள்னு ஒவ்வொரு நிகழ்ச்சியும் நிரூபிச்சுவிட்டதே..."



"இதெல்லாம் ஒருத்தர் வாழ்க்கையிலே ஏற்படும் எதிர்பாராத சம்பவங்கள்னு என் அபிப்பிராயம். இவைகளுக்கு ஒருவரைப் பொறுப்பாக்கி, குற்றம் சாட்டுவது ரொம்ப தவறான போக்கு. மதியீனம் என்றே சொல்லலாம். நடப்பது நடந்தே தீரும் என்று தெய்வ பலத்தின் மேலே நம்பிக்கை உடைய யாரும் இந்த எதிர்பாராத சம்பவங்களுக்குக்காரணம் அதில் சம்பந்தப்பட்ட மனிதர்கள் தான்னு பழிசுமத்தக்கூடாது. இது அறிவுக்கு ஒவ்வாத செய்கை. பண்பான மனிதர்கள் யாரும் செய்ய மாட்டார்கள்.

"என்னைப் பொறுத்தவரை எந்த சமயமும் என் மனதிலே உன்னைப்பத்தி இது மாதிரியான தப்பான எண்ணங்களே ஏற்பட்டதில்லை. உறுதியாகச் சொல்றேன். நீ நம்பலாம். உனக்கு இன்னும் சந்தேகமா?" மெல்லச் சிரித்துக்கொண்டு இன்னமும் சற்று அருகிலே நெருங்கி வந்தான்.

"அதிர்ஷ்டம் என்கிறதைப்பத்தி ஒரு நம்பிக்கை பல காலமா மனதிலே இருந்துண்டு இருக்கே." அவள் பேச முடியாது திணறினாள்.

"அதிர்ஷ்டத்திலே உனக்கு நம்பிக்கை இருக்குன்னா அது உன்கிட்டே பூரணமா இருக்குன்னு நான் சொல்லப் போறேன்?"

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு தீர்மானிச்சுட்டு மாங்கல்யத்தை எடுத்துண்டு குருநாதர்கிட்ட ஆசி வாங்கப்போன இடத்திலே மண்டையை உடைச்சுக் கொண்டேனே...அதைத்தான் அதிர்ஷ்டம்னு சொல்லப் போறேனா...?" உதட்டைக் கடித்துக்கொண்டு துயரமாகக் கேட்டான்

"ஆமாம்! மண்டையில் அடிபட்டது உண்மை. ஆனால் அத்துடன் ஒரு அதிசயம் நிகழ்ந்ததே...அதைச் சொல்றேன்.

கேட்டுக்கோ...கார் கதவைப் பூட்டாது...சாத்தியிருந்த தினால் நொறுங்கின வேகத்தில் கதவு திறந்துண்டு...நான் வெளியே உருண்டு சற்றுத் தொலைவில் விழுந்து கிடந்தேனாம். என் வலது கை சட்டைப் பையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்ததாம்...என் குருநாதர் சொன்னார்...அந்தச் சட்டைப் பையில்தான் உன் கழுத்தில் ஏறப்போகிற மாங்கல்யத்தை ஒரு காகிதத்தில் மடித்துப் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்தேன் அதுதான் என்னைப் பெரிய ஆபத்திலிருந்து என் மரணத்திலிருந்து காப்பாற்றியதுன்னு நினைச்சுக்கோயேன்...உனக்குத்தான் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கையாச்சே...உன் கழுத்திலேயேறு முன்பே...அது எனக்கு ஒரு பெரும் பாதுகாப்பளிக்கும் சக்தியாக இருந்தது. ஏறின பின்...எனக்குப் பல நலன்களை வாரி வழங்கி...என் வாழ்வை இனிமையாகப் போகிறதுன்னு ஏன் நீ நம்பக் கூடாது...?''

மிக மிக அருகில் நெருங்கி அவளது முகத்தை நிமிர்த்தி கண்களை மறைத்துக்கொண்டு நெற்றி மீது புரண்டது கூந்தலை ஒதுக்கிவிட்டு அன்போடு பார்த்தான்.

''மங்களா நீ என் உயிர்...இன்னும் என்மேல் சந்தேகமா...மங்களா...? கொஞ்சம்...சிரி வாழ் நாள் முழுதும் என் மனைவிங்கிற ஸ்தானத்திலே நீ எப்போதும் மகிழ்ச்சியா இருக்கணும்—அந்தத் தகுதியை நீதான் எனக்குத் தரணும்...எங்கே...கொஞ்சம் சிரிக்கணும்...''

மங்களா...தாங்க முடியாத மகிழ்ச்சியில் சிரித்தாள்... அழுதாள்...மறுபடி சிரித்து விட்டாள்...

''நாம ரெண்டு பேரும் வரும் வெள்ளிக்கிழமை திருத்தணியில் தம்பதிகளாகப் போகிறோம். அதுக்கு முன்னாடி நாளைக்கு நாம் பரோடா போய் என் குருநாதரிடம் முன் கூட்டியே ஆசீர்வாதம் வாங்கிக்கணும் நீ என்னோட புறப்படத் தயாராகணும். சரிதானே?''



மகிழ்ச்சி பொங்கிய மௌனத்தில் மங்களாவின் சம்மதம் தெரிந்தது.

''ஆமாம், இத்தனை நாழி நான் பேசிண்டே இருக்கேன், தொண்டை காஞ்சு போச்சு-ஒரு கப் டீ கூட போட்டுத் தர மாட்டேங்கிறியே? இப்படித்தான் நீ என்னை நம்ப வீட்லே கவனிச்சுக்கப் போறியா?''

துள்ளிக்கொண்டு மங்களா நகர்ந்தாள்.

''மன்னிச்சுக்கோங்க. ஒரு நிமிஷத்திலே டீ போட்டுண்டு [வந்துடறேன்...இப்பவே சொல்லிடறேன்...நான் சமைக்கும் போது நம்ப வீட்டிலே... நீங்க பின்னாடி வந்து கழுத்து மேலே மூச்சு விட்டுண்டு உதவி செய்கிறேன்னு வந்தா எனக்கு வேலை ஓடாது...'' என்று கூறியபடி சிரித்துக்கொண்டு...அவனை மெல்லப் பிடித்து செல்லமாக வெளியே தள்ளினாள். மசாலா பொடி தூவி... சுவையாகத் தயாரித்த தேநீரைக் கெட்டிலில் நிரப்பி— அத்துடன்கூட சாப்பிட...காமு அம்மாள் செய்து வைத்திருந்த நெய் முறுக்குடன் கொண்டு வந்து மேஜை மீது வைத்தாள்...

''இதுக்குத்தான் சொல்லுவா...அண்டை வீட்டுக்காரன் நெய்யோ...என் பொண்டாட்டி கையோன்னு...காசிநாத் குறும்பாக அவளைப் பார்த்தான்.

மங்களா குலுங்கக் குலுங்கச் சிரித்துவிட்டாள். முகம் குங்குமமாகச் சிவக்க...பற்கள் மின்ன கண்கள் பளிச்சிட மகிழ்ச்சி பூரிக்க...அவள் சிரித்ததையே மயக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் காசிநாத்.

இந்தப் பெண் மங்களா...அவனை எப்படித்தான் ஆட்கொண்டு விட்டிருக்கிறாள்?

இவளது கண்ணீர் அவனைத் துயரப்படுத்திவிடுகிறது. இவளது சிரிப்பு...அவனை மகிழ்ச்சியில் மிதக்கச் செய்கிறதே!

இவனது உணர்வுடன் ஒன்றிப்போன இந்தப் பிடிப்பை வெறும் காதல் அல்லது இளமையின் கவர்ச்சி என்று சொல்லி விட முடியாது. யுகயுகமாக...தொடர்ந்து கொண்டு வரும்... ஆன்மாக்களின் நேயமான பிணைப்பு. இவள் அவனுக்குப் பல காலமாகத் தெரிந்தவள்... புரிந்தவள்...அவனுடையவள்... சந்தேகமேயில்லை. தனக்குள் வியப்போடு எண்ணி மெய் சிலிர்த்துப் போன காசிநாத்...தேநீர் கோப்பையை எடுத்து மெல்ல...சுவைத்துப் பருகத் தொடங்கினான்.

"அடடா! சமைக்க எடுத்துவச்ச காய்களைப் பத்தி மறந்துட்டு இருக்கேன். அவாள்ளாம் திரும்பி வந்துடு வாளே...?" மங்களா நகர முயன்றபோது அவள் கரத்தைப் பற்றி எதிரே இருந்த நாற்காலியில் அமர்த்திக் கொண்டான்.

அவாள்ளாம் இப்போ வரமாட்டா. பதினோரு மணிக்கு மேலே தான் வருவா. அதுக்கு முன்னாடி ஒண்ணு சொல்ல விரும்பறேன். இந்தப் பெண்ணை இந்த காசிநாத் ரொம்ப நேசிக்கிறான். இப்போ மட்டுமல்ல; பல யுகங்களாக தொடர்ந்து இவளையே தேடிண்டு அலைஞ்சு கொண்டு திரியறான்...போதுமா?" அன்புடன் கேட்டான்.

"நான் சமையலைப் பத்திக் கவலைப்படும் போது நீங்க காதலைப் பத்திப் பேசறேள் அவாள்ளாம் வந்துட் டாக்கா...?"

"இப்போ வரமாட்டா...இன்னும் கொஞ்ச நாழி யாகும்..."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"இப்படித் திடீர்னு வந்து கதவைத் தட்டி உன்னைத் திகைக்க வச்சு...தனிப்பட்ட முறையிலே நம்ம கல்யாணத்தப் பத்தி உங்கிட்டே நானே சொல்லணும்னு ஏற்பாடு செய்தது உன் சிநேகிதி லதாவும், அவள் கணவருந்தான்."



"அப்படீன்னா அவாளுக்கு எல்லாம் தெரியுமா?" திகைப் புடன் கேட்டாள் அவள்.

மங்களாவுக்கு அவனது வார்த்தைகள் வியப்பையும், மகிழ்ச்சியையும் அளித்தன. அவளது திகைப்பைக் கண்ட காசிநாத் தொடர்ந்தான்.

"நீ வீணா பாவம் பதஞ்சலி மேலே தப்பு கண்டு பிடிச்சே...பரோடாவிலே நான் உடம்பு தேறி ஓய்வா இருக் கச்சே என்னோட கங்காதரன் டெலிபோனில் பேசினார். நீ இங்கே வந்து தங்கியிருப்பதைத் தெரிஞ்சு நான் கவலைப் படக் கூடாதுன்னு தைரியம் சொன்னார். லதா உன்னை ரொம்ப கவனிச்சுக்கிறதாகச் சொன்னார். உண்மையில் லதா ஒரு நல்ல சிநேகிதி. இதற்குப்பின் மலபார் ஹில்லில் டைரக்டர் பிரசாத்துக்கு இருக்கிற ஒரு கெஸ்ட் ஹவுசில் நான் ஓய்வுக்காகத் தங்கினபோது தினமும் லதாவும் அவள் கணவரும் என்னை வந்து சந்திச்சுக் கல்யாண ஏற்பாடு களுக்குப் பெரும் உதவி செய்தார்கள். இப்பகூட கல்யாணத் துக்கு வேண்டிய சில முக்கிய சாமான்களை வாங்கத்தான். போயிருக்கா...நான் உன்னை உடனடியாகச் சந்திக்கணும்னு துடிச்சப்போ லதா தான் கல்யாணத்துக்கு தேதி வச்சு எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு திடீர்னு சந்திச்சு உன்னை சந்தோஷப்படுத்தணும்னு நீர்மானிச்சா..."

"லதா ரொம்பப் பொல்லாதவள்...எங்கிட்டே இதெல் லாம் பற்றி மூச்சே விடலை..." வெட்கத்தில் மங்களா தன் கைவிரல்களை நெருடிக் கொண்டாள்.

"பதஞ்சலிகிட்டே நேத்திக்குப் போனில் பேசினேன். நம் கல்யாணத்தைப் பத்தி சொன்னபோது அவருக்கு மகிழ்ச்சி பிடிபடலை. 'ஸார், நீங்க லீவிலே அங்கே இருக்கிறப்போ...நான் ஆபீஸ் காரியங்களைக் கவனமா பார்த்துக்கறேன். கவலைப்பட வேண்டாம். அது என்

பொறுப்பு...அத்தோட ஒரு சின்ன வேண்டுகோள்...ஆபீஸை சேர்ந்த நாங்களெல்லாம் ஒன்றாகக்கூடி உங்களுக்கு ஒரு ரிசப்ஷன் உட்லண்ட்ஸிலே ஏற்பாடு பண்ணப் போறோம். அதை நீங்க மறுக்காம ஏத்துக்கணும்'னு கெஞ்சினார். சரின்னு ஒத்துக் கொண்டேன். கங்காதரன் தன் சிநேகிதன் மூலம் திருத்தணியில் கல்யாணத்துக்கு ஏற்பாடுகள் பண்ணி விட்டு, அழைப்பிதழ்களையும் அச்சிட்டுக் கொடுத்துட்டார்...'' முறுவலித்தபடி தன் ஸபாரி ஸூட் பையிலிருந்த அழைப்பிதழை அவள் முன் வைத்தான்.

"மிஸ் மங்களா! இந்தக் கல்யாணத்தை சுபமாக நடத்தி கொடுக்கணும்னு நான் ரொம்ப கேட்டுகிறேன்...முடியுமா?'' அவள் கரங்களிரண்டையும் பற்றிக்கொண்டு சிரித்தான்.

"மணி ஆறேது...விடுங்கோ... சமையல் அப்படியே நிக்கறதே?'' மனம் நிறைந்து மகிழ்ச்சியில் திளைத்தவளை, மீண்டும் நாற்காலியில் அழுத்தமாக இருக்கினான்.

"உனக்குக் குருவி ஜோசியம், கைரேகை பார்க்கிறது இதிலெல்லாம் நம்பிக்கை இருக்கும்னு நினைக்கிறேன். தேநீர் குடிச்சதும் அந்தக் கோப்பையின் அடியிலே தங்கிப் பரவிக் கிடக்கும் தேயிலைகளைப் பார்த்து ஆருடம் சொல்றதைப் பத்தி கேள்விப்பட்டிருப்பே...டீகப் ஜோசியம் பத்தி எனக்குக் கூட கொஞ்சம் தெரியும்...கத்துண்டு இருக்கேன்...''

"ரொம்ப வேடிக்கை பண்றேள்...'' செல்லமாகச் சிணுங்கினாள் மங்களா.

கையில் காலி கோப்பையை எடுத்துக்கொண்டு அதற்குள் கவனமாகப் பார்ப்பது போன்று நடித்துவிட்டுக் காசிநாத் சிரித்துக்கொண்டே சொன்னான்.

"இதிலே எல்லாம் என் கண் முன் பளிச்சென்று தெரியறது—இந்த மங்களாவுக்கும், காசிநாத்துக்கும் ரொம்ப விமரிசையா வெள்ளிக்கிழமை காலையில் திருத்தணியிலே கல்யாணம் ஜம்முன்னு நடக்கிறது...



சமையலை மேற்பார்வை செய்ய பதஞ்சலி ஓடிக் கொண்டிருக்கிறது தெரியறது...அவசரமாக ஒரு லட்டை விண்டு தின்னு ருசி பார்க்கிறார்...மனுஷன், பெரிய சாப்பாட்டு ராமன்...

அட இந்தக் கல்யாணப்பெண் ரொம்ப சிரிக்கிறாளே? ஆமாம். அவ அண்ணாவும் மன்னியும்கூட கல்யாணத்துக்கு வந்து ஆசி பண்றதைப் பார்த்ததும முகத்துலே அத்தனை பெரிய சிரிப்பு...

பிரசாத் என்னவோ...வேடிக்கையா மணமகளிடம் பேசறார்...கல்யாணத்தை உடனே பதிவு செஞ்சுக்கோங்க பிற்காலத்துக்கு அது நல்லதுன்னு உபதேசிக்கிறார் போலிருக்கு...

ஹனிமூன் எங்கேன்னு யாரோ கேட்கிறார். ஊட்டிக்குப் போறதாக ஏற்பாடுன்னு கங்காதரன் இரைஞ்சு எல்லாருக்கும் கேட்கறாப்பல சொல்றார்...என்ன, அவா பேசறதெல்லாம் கூட கேட்கிறதே. ரொம்ப அதிசயம் இது!''

"போங்கோ! ரொம்ப தமாஷ் பண்றேள். இத்தனையும் இந்த சின்னக் கப்புக்குள்ளே உங்க கண்ணுக்குத் தெரியறதாக்கும்? பரிகாசம் பண்றதிலே ரொம்பக் கெட்டிக்காரர் நீங்க!'' மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டு அவள் உள்ளே போக எழுந்தாள்.

"அட, கடைசியா தெரியறதைச் சொல்லாட்டா இந்த டீ கப் ஆருடத்துக்குப் பலன் இல்லையே?''

"பெங்களூருக்கு காசிநாத் வேலை உயர்விலே போறாப்பல தெரியறது. இது என்ன ஒரு அழகான வீடு? கம்பெனி லோன் வாங்கி வீடு கட்டிக்கொண்டு விட்டான் போலிருக்கு. மங்களா செட்டும் கட்டுமா குடித்தனம் பண்ணிப் பணத்தைச் சேர்த்துக்கொடுத்துருக்கா. வீடு சின்னதா இருந்தாலும், அழகான ஒரு தோட்டம் கூட இருக்கு தோட்டத்திலே பசும்புல் தரை மேலே ஒரு நாய்க் குட்டி விளையாடறது.

அட, அதைத் தூரத்திண்டு நான்கு குழந்தைகள். இரண்டு பெண்கள் ரெண்டு பிள்ளைகள். இந்தக் காசிநாத் இத்தனை சுருக்கா பெரிய சம்சாரியாயிட்டானே?"

"போதும் ஜோசியம்"—வெட்கத்துடன் சிரித்துக் கொண்டு அவன் உள்ளே ஓட முயன்றபோது வாயிலில் அழைப்பு மணி கிணுகிணுத்தது.

முகம் சிவந்து போன மங்களா ஓடிச் சென்று திறந்தாள். "என்ன மங்களா, வெள்ளிக்கிழமை கார்த்தாலே கல்யாணமாமே?

பெண்ணும் மாப்பிள்ளையும் எங்களுக்குத் தெரியாம என்னவோ ரகசியத் திட்டம் வகுத்துண்டு இருக்காப் பல இருக்கு...'' கலகலவென்று சிரித்தபடி உள்ளே நுழைந்த லதா, தன் தோழியை நெஞ்சோடு இறுகத் தழுவிக் கொண்டாள்.

''இன்னிக்கு சமையல் எதுவும் நடக்காதுன்னு தெரியும். அதனாலே வழியிலேயே கொஞ்சம் சப்பாத்தியும், சப்ஜியும் வாங்கிண்டு வந்துட்டேன், நல்லாதாப் போச்சு.'' காமு அம்மாள் சந்தோஷமாகச் சொல்லிக் கொண்டு உள்ளே வந்தாள்.

"இதெல்லாம் கொண்டு முதல்லே உள்ளே வச்சுட்டு வரேன்." கைகளில் சுமையாகத் தூக்கிக்கொண்டு வந்த சாமான் பார்சல்களை வைக்க எதிர்ப்பக்கத்து அறைக்குள் சென்றார் கங்காதரன்.

"இங்கே வாங்கோ எல்லோரும் இந்தப் பெண்கிட்ட கேட்க வேண்டிய முக்கியமான கேள்வி இருக்கு..." லதா உரத்த குரலில் சொன்னாள்.

"காசிநாத்துக்கு யாரும் இல்லேன்னு மங்களா நினைக்க வேண்டாம். நானும் என் கணவரும் பிள்ளை வீட்டுக்காரர்களாக கட்சி மாறிவிட்டோம். இந்தக் கல்யாணத்திலே வரதட்சிணை சீர் இதைப் பத்தி ஒண்ணுமே எங்களுக்குத் தெரிவிக்கலியே!" புடவைத் தலைப்பை இழுத்துச் செருகிக்கொண்டு முன் வந்தாள்-



லதா. "நான் என் மனதிலே ஒரு லிஸ்ட் தயார் பண்ணியிருக்கேன்· சொல்லட்டுமா?' சிரித்தாள்.

''மங்களாவுக்கு யாரும் இல்லேன்னு நீயும் நினைக்க வேண்டாம். நான், இதோ அவள் தாயார் இருக்கேன், என்கிட்டே கேள்.'' காமு அம்மாள் போலியான கோபத்துடன் மகள் முன்னால் நின்றாள்.

காசிநாத் விரும்பி என் பெண்ணைக் கேட்டுக் கல்யாணம் செய்துக்கிறார். அதனாலே வரதட்சிணை சீர் என்கிற அமிட்டங்கள் அடிபட்டுப் போயிட்டது. இந்தப் பெண்ணை நானே கொள்வேன்னு வந்து மாப்பிள்ளை நிக்கணும்... அதனால் பெண்ணுக்குப் பெருமை ஏற்படணும்னு நம்பறவ நான். அதனால இங்கே வரதட்சிணை கிடையாது-சீர் கிடையாது. தங்க விக்கிரகம் போல இருக்கிற இந்தப் பெண் தான் அவரது வருங்காலத்து சகல சம்பத்துக்களும்னு நினைக்கணும். சொல்லப் போனா கல்யாணச் செலவு முழுவதும் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்ததுன்னுதான் சொல்வேன். போனாப் போறதுன்னு நாங்களும் எங்களால் ஆனதை ஏதோ செய்யறோம்...அவ்வளவுதான். இந்தக் கல்யாணத்திலே இரண்டு வீட்டுக்காரர்களும் சமம்...ஒருத்தர் உயர்ந்தவா. இன்னொருத்தர் அவாளுக்குத் தாழ்ந்து படிஞ்சு போகணும்கிற கதையெல்லாம் மூட்டை கட்டி வச்சாச்சு...

இந்தக் கல்யாணத்தினாலே காசிநாத் எப்படி மங்களாவுக்கு ஒரு நல்ல கணவனாக அமைகிறாரோ-அதைப்போல மங்களாவும் அவருக்கு ஒரு நல்ல மனைவியாக அமைகிறாள். இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் துணை— வாழ்வின் கால முழுவதும் துணைவர்கள், புரிஞ்சுதா?" காமு அம்மாளும் சந்தோஷத்துடன் ஆர்ப்பரித்தாள்

"போதும் சம்பந்திச் சண்டை...சாமான்கள் எல்லாம் சரியா வாங்கியாச்சான்னு கொஞ்சம் எண்ணிப் பார்க்கலாமா...?" மனைவியிடம் கேட்டார் கங்காதரன்.

அதற்குப் பின் அந்தப் பிளாட்டே சிரிப்பில் குலுங்கியது.

மங்களாவின் திருமணம்... திருத்தணியில் விமரிசையாக, அந்த வெள்ளிக்கிழமை விடியற்காலை முகூர்த்தத்தில் இனிதே நடந்தேறியது. அவளது அண்ணாவும் மன்னியும் வந்திருந்து சிறப்பாக நடத்திக் கொடுத்து தம்பதிகளை ஆசீர்வதித்தது ஒரு விசேஷ நிகழ்ச்சி.

அதைவிட அதிசயமான சம்பவம்—அவளுடைய இரு சகோதரிகளும் தங்கள் கணவர்களுடன் வந்து கல்யாணத்தில் கலந்து கொண்டு அதை நிறைக்கச் செய்தது. டைரக்டர் பிரசாத் மணமக்களுக்கு க னி ச மா ன தொகையைக் காசோலை வடிவில் மணப்பரிசாகத் தந்து வாழ்த்துக் கூறினார். பதஞ்சலி ஏற்பாடு செய்த ரிசப்ஷனில் மணமக்கள் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர்.

தேன்நிலவுக்குக் கிளம்புமுன் தான் வசித்த வீட்டின் விளக்கை ஏற்றி வைக்க மனைவியை அழைத்துக் கொண்டு சென்ற காசிநாத் மகிழ்ச்சியின் எல்லையில் இருந்தான்.

பளபளவென்று புது மெருகில் மின்னிய குத்து விளக்கை ஏற்றி விட்டு—குருநாதர் படத்திற்கு இருவரும் விழுந்து நமஸ்கரித்து எழுந்தனர்.

"மங்களா! அந்தத் தவறான நம்பிக்கைகளை மனத்திலிருந்து உதறிவிட்டு இனி என் மேலே பூரண நம்பிக்கை வச்சுண்டு என்னோட சந்தோஷமா வாழ விருப்பந்தானே...?" கேட்டான் காசிநாத்

"கட்டும் செட்டுமாக வாழ்ந்து... நீங்கள் கற்பனை செய்த அந்த வீட்டைக் கட்டி... அரிகான தோட்டம் பயிரிட்டு... அதில் நம் குழந்தைகள் விளையாடறதைப் பார்க்க ரொம்ப விருப்பம்... நாலு குழந்தைகள் வேண்டாம்... ரெண்டு போதும்..." மகிழ்ச்சியோடு சிரித்த மனைவியை நெஞ்சோடு தழுவிக்கொண்டு இன்பப் பெருமூச்செறிந்தான், மங்களாவின் கணவன்.

முற்றும்

LENDING LIBRARY
DIRECTOR (OT) CHENNAI-63